ஓம்

தத்ஸத்

பரப்பிரஹ்மணே நம:

கோவிந்ததீர்த்தஸ்வாமிகள்

சிஷ்யர்களுளொருவராகிய

சந்திரசேகரஸ்வாமிகள்

சம்ஸ்கிருதத்தினின்றும் தமிழில்

மொழிபெயர்த்தருளிய

# வேதாந்தசாரம்.

(வினாவிடை.)

மகாமகோபாத்யாய, ட
வே. சாமிநாதையர் நூல்
இது சென்னை-20.

சென்னை, இந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்,

தமிழ்ப்பண்டிதர்,

கோ. வடிவேலுசெட்டியாரவர்களாலும்,

மங்கலம். சண்முகமுதலியாரவர்களாலும்

சோதிக்கப்பட்டு,

சென்னை, வேப்பேரி,

கமலநாயகி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

**Copy-Right Registered.**

1905.

ஓம்

தத்ஸத்

பரப்பிரஹ்மணே நம:.

# முகவுரை.

ஒவ்வொரு பிராணியும் சர்வதுக்க நிவிர்த்தியும் பரமாநந்தப் பிராப்தியும் விரும்புவது இயற்கையாம். அவ்வாறு விரும்பினும் தனுகரணங்கள் தத்தம் விருப்பத்திற் கேற்குமாறு அமையாவிடத்துத் துக்கத்தொகுதி பெருகுதலும் பிரசித்தமாம். மக்களே சர்வதுக்க நிவிர்த்தியும் பரமாநந்தப் பிராப்தியும் பெறுதற்கின்றியமையாச் சாதனமாய (செவியாதி ஐயறிவிற்கும் வேறாய) மனவுணர்வையும் பெற்றிருத்தலின், அவர்களே துக்கத்தையும் அதன் சாதனத்தையும், பரமாநந்தத்தையும் அதன் சாதனத்தையும் ஐயந்திரிபற அறிவதற்கு சாட்சாத்தாகவேனும் பரம்பரையாகவேனும் உரியவராமென்பது எஞ்ஞான்றும் சிதையாத சித்தாந்தமாம். துக்கமென்பது அந்தக்கரணத்தின் பதைப்பும், அதன் சாதனம் தாம் விரும்பிய விஷயங்களுக்குக் கேடுண்டாதலுமாம். பரமாநந்தமென்பது தடைகளற்றுத் தானே தானாய் விளங்குதலும், அதன்சாதனம் சத்துவகுணவாயிலாக அந்தக்கரணமொருமுகப்படுதலுமாம். இவற்றினையே சுருதி ஸ்மிருதி புராணேதிகாசங்களும் அவற்றிற்கு விரோதமின்றிக் காலதேச நிமித்தங்களுக் கேற்றவாறு மகான்களருளிச் செய்த நூல்களும் விரித்தும் சுருக்கியும் (மக்கள் சர்வதுக்க நிவிர்த்தியும் பரமாநந்தப் பிராப்தியும் அடையுமாறு) கூறுகின்றன. அவ்வாறு கூறுதலே அவற்றின் முக்கியகருத்தாம். சுருதி ஸ்மிருதி புராணேதிகாசங்களுக்கு விரோதமின்றி வெளிப்போந்த நூல்களுள் வேதாந்தசார மென்பது மொன்றாம். வேதாந்தசார மென்றதனாலேயே பிரஸ்தானத்திரய மென்னும் உபநிஷத்து, கீதை, வேதாந்த சூத்திரங்களிலும் அவற்றை அனுசரித்து ஸ்ரீமத். சங்கரபகவத்பாதாசாரியசுவாமிகள்முதலியபிரம்ஞானிகள் அருளிச்செய்தசாஸ்திரங்களிலும் மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இன்றியமையாதறிதற்குரிய முக்கியவிஷயங்களையே இந்நூல்கூறுகின்றதென்பது தெள்ளிதின் விளங்கும். இந்நூல் தன்பெயருக் கேற்றவாறே சர்வ

துக்கநிவிர்த்திக்கேதுவையும் பரமானந்தப் பிராப்திக்கேதுவையும் ஒவ்வொருவரும் நன்கறிந்து சர்வதுக்கநிவிர்த்திபெற்றுப்பரமானந்த வடிவமாய் விளங்கும் நிலையைத் தெளிவாகக் கூறுகின்றதென்பது இதனது இரண்டொரு பக்கத்தைப் படித்தமாத்திரத்திலேயே நன்குவிளங்கும். இந்நூல் சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் கோவிந்த தீரசுவாமிக ளென்னும் மகாத்துமாவின் சிஷ்யகோடிகளுள் ஒருவராய சந்திரசேகர சுவாமிகளால் செவ்விய வசனநடையில் வினாவிடை வடிவமாக மொழிபெயர்த்தருளப்பட்டது.

இந்நூலிலுள்ள விஷயம் மனிதராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் அறிந்துய்வதற்குப் பரமசாதனமாயுள்ளதென்பது இதன்பின்னுள்ள (இந்நூலின் விஷயத்தைச் சுருக்கி யெழுதியுள்ள) அநுக்கிரக மணிகையினாலே செவ்வனே விளங்கும். இந்நூல் வெகுகாலத்திற்கு முன்னர் அச்சிடப்பட்டிருப்பினும் அது பெரிதும் பிழைபட்டிருந்தமை நோக்கியும், கிடைத்தலினருமை நோக்கியும், சுத்தபாடமாகக் கூடியவாறு திருத்தி அவசியமாய் வேண்டுமிடங்களில் இருதலைப்பிறைக்குள் அருத்தமும் விளக்கவேண்டிய விடங்களை வேண்டியவளவு சுருக்கமாகக் குறிப்புரையுமெழுதி இஃதச்சிடப்பட்டது. இதிற் பிழையுளதாயின் உலகம்பொறுக்க.

சென்னை, கோமளேசுவரன்பேட்டை.

கோ. வ.
மு. ஞ.

ஓம்

தத்ஸத்

பரப்பிரஹ்மணே நம:

# வேதாந்தசாரம்.

## அனுக்கிரமணிகை (பொருளட்டவணை).


பக்கம்.

தெய்வ வணக்கம்.
குரு வணக்கம்.
கிரந்தம் செய்ததன் கருத்து. } ... ... ... 1

### அனுபந்த சதுஷ்டயம் (1-3)

அனுபந்த சதுஷ்டயத்தின் வகை.

1. அதிகாரி 2. விஷயம் 3. சம்பந்தம் 4. பிரயோசனம். 2,3

### சாதன சதுஷ்டயம். (4-28)

#### முதற்சாதனம். (4-5)

நித்தியாநித்தியவஸ்து விவேகம்.

1. பிரமமேநித்தியம்; தேகேந்திரியாதி சகலசகத்தும் அநித்தியம். 4
2. தேகாதி ஜகத்தெல்லாம் அநித்தியம்; பிரமத்தின் (விவர்த்த) காரியமானபடியினால். 5
3. பிரமம் நித்தியம்; எல்லாவற்றிற்கும் (விவர்த்த) காரணமாயிருத்தலால்.
4. சாவயவமெல்லாம் அநித்தியம்.

#### இரண்டாஞ்சாதனம். (6-14)

இகமுத்திரார்த்த பலபோகவிராகம்.

இகலோக பரலோகபோகங்கள் வெறுக்கத்தக்கவை; அநித்தியமாயிருத்தலால். 6

நித்தியாநித்திய வஸ்துவிவேகிக்குச் சகல போகங்களிலும் துச்சபுத்தியுண்டாம்.

போகபோக்கியங்களைத் தோஷதிருஷ்டியாய்ப் பார்க்கிறதே தீவிர விரக்தியாம். 6

தீவிர விரக்தியுண்டாகுங் கேது (6-8)

1. ஜனனமரணவடிவ துக்கவிசாரம் 7
2. நரை திரை மூப்புப்பிணி இகபரலோக தண்டனைமுதலியவற்றாலுண்டாம் துக்கவிசாரம்
3. கிருகதார புத்திர மித்திராதிகளாலுண்டாந் துக்கவிசாரம் 8

சகல போகபோக்கியங்களும் விவேகிக்கு அத்திப்பழத்தைப் பிட்டுப்பார்ப்பதுபோலத்தோன்றும்

அவிவேகியானவன் நண்டைப்போலவும், கோசாகாரப்புழுவைப் போலவும் கிருகதாராதிகளாலே துக்கமடைகிறான்

கிருகாதிகளும் காராக்கிருகமும் சரியே; காராக்கிருகம் புருடப்பிரவிர்த்திக்கு விக்கினமாதல்போன்று கிருகாதிகளும்மோட்சமடைதற்குத் தடையாம். 9

ஸ்திரீ லட்சணம்.

விட்டிலைப்போன்று மனிதரும் காமாக்கினியில் ஸ்திரீயை ரமணியமாகக் கண்டு மூடதிருஷ்டியினால் மிகவும் துக்கித்திறக்கிறான் 10

காமனேயமன், ஸ்திரீசரீரமேயாலயம்.

யமனுக்கும் காமனுக்குமுள்ள தாரதம்மியம்.

முத்தி சாதகமேது.

1 ஆசையை யொழிக்கல்
2 காமபாசத்தினின்றும் விடுபடல்
3 விஷயங்களிற் றோஷதிருஷ்டியைக் கொண்டல்

காமனைசயித்தற்குபாயம்.

சங்கற்பத்தை விடுதலும், விஷயசிந்தனையை யதார்த்தமாய்க் காண்டலும், அனாத்தமாயெண்ணுதலுமாம்.

தனலட்சணம். 11,12

தனவந்தன லட்சணம்

தனமில்லான லட்சணம். 13

தார புத்திர தனங்களை வெறுத்தொழித்தவர்களுக்கே மோட்சம் சித்திக்கும்.

காந்தை, கனகம், சிங்கையென்கிற மூன்று வாசல்களையும் அடைக்கிறவனுக்கே ம்ருத்தியுபயமில்லை. 14

மோட்ச லட்சுமி நகரத்திற் பிரவேசித்தற்குத் தடையாய தனம் ஸ்திரீயென்னுந்தாழ்களாற் பூட்டப்பட்டிருக்கும் முதல்வாசலைப் பிளந்தெறிந்து போகிற தீரனே மோட்சத்தை யடைதற்கு யோக்கியன். 14

மோட்சவிச்சையுடையவர் முன்னர்த் தீவிர வைராக்கியத்தைப் பிரயத்தன பூர்வகமாக அத்தியாவசியம் சம்பாதித்தல் வேண்டும்.

## மூன்றாஞ்சாதனம். (14-26)

**சமாதிஷட்க சம்பத்தி.** இவைகளின் பெயர்.

1. **சமம்**-பகிர்ப்பிரவிர்த்தியின்றியிருத்தலாம் 15

(1) உத்தமசாந்தி (2) மத்திமசாந்தி (3) அதமசாந்தி (A) முன்னங்கம்-தீவிரவைராக்கியம் (B) பின்னங்கம்-ஜீவகாருண்ணியமுதலானவை.

2. **தமம்**-சித்தசாந்திக்குச் சாதனமாம். 16-17

அஃது இந்திரியநிக்கிரகத்தாலும் ஈசுரப்பிரசாதத்தினாலும் குருப்பிரசாதத்தினாலும் சித்திக்கும்.

3. **உபரதி**-சன்னியாசமாம் (விஷயங்களில் அபிமானம்விடல்). 18

(1) இதன்சத்தார்த்தம் சகலகன்மத்தியாகமாம். 18-20
(2) முமுட்சுவின் சாதனங்கள். 21
(3) கன்மாதிகாரி ஞானாதிகாரிகளின் லட்சணம். 21,22
(4) கன்ம ஞானங்களின் பேதம். 23
(5) கன்மம் கர்த்துருதந்திரம், ஞானம் வஸ்துதந்திரம்.

A. முக்கிய உபரதி-விருத்திக்குத் திரிசியமான விஷயங்களைப் பரித்தியாகம் பண்ணல். B. கௌணோபரதி-வேதவிகிதமான கன்மங்களைவிடல்

விரத்தியின்றியவன் சன்னியாசம் செய்தல்கூடாது. 24

4. **திதிட்சை** - தாபத்திரயங்களைச் சகித்துக்கொள்ளுதல். இது முமுட்சுக்களுக்கு முக்கிய அங்கரட்சையாயுள்ளது. இஃது உத்தம சாதனமென்றுஞ் சொல்லப்படுகிறது. 17,18

5. **சிரத்தை** - குருவேதாந்த வாக்கியங்களில் பூரண நம்பிக்கை யுடைத்தாயிருத்தல். சிரத்தை யில்லாதவனுக்குச் சன்மார்க்கப் பிரவிர்த்தி யுண்டாகாது. 25

6. **சமாதானம்** - சொரூபத்தினிடத்தில் சித்தத்தை நன்றாய்நிறுத்துதல். இதன் காரணம் தீவிரவைராக்கியமும் பிரமத்தையடைய வேண்டுமென்கிற விச்சையுமாம். 25,26

## நான்காஞ்சாதனம். (26-29)

**முமுட்சுத்துவம்.**


*சம்சாரபந்தத்தை விடவேண்டு மென்றெண்ணுவதே முமுட்சுத்துவமாம்.* 27

*இது நான்குவகைப்படும். அவை தீவிரம், மத்திமம், மந்தம், அதிமந்தமென்பனவாம்.*

*புருஷ ஜன்மமே மோட்சமடைதற்குச் சிறந்தகருவி.* 28

*நான்கு சாதனங்களின் உருவகம்.* 29

**ஆசாரிய லட்சணம்.** 30

*அவித்தியா ரூபமான இருதயக்கிரந்தியாகிற பந்தங்கள் எவரால் விமோசனமாகின்றனவோ அவரே குரு.*

**சிஷ்ய லட்சணம். (30-31)**

*சம்சார வர்ணனை.* 31

*பிராந்தியே மிருத்தியுபய முண்டாதற்குக் காரணம்.*

*ஆன்மாவுக்கு ஜனன மரண வியாதியாதி துக்கங்கள் உண்மையில் பொய்.* 32

*ஆத்மானாத்ம விசாரம். அதுபற்றிய சங்கை சமாதானம்.* 32-34

**குருபதேசம்.**

*ஆத்மானாத்ம விவேகம்.* 35,36

*அத்தியாச லட்சணமும் அதன் காரணமும்*

*அஞ்ஞான ஆசிரயமும் அதன் லட்சணமும்* 36

*அஞ்ஞானம் அநிர்வசநீயம்.* 37

*சமஷ்டி அஞ்ஞான லட்சணம்; வியஷ்டி அஞ்ஞான லட்சணம்* 37,38

*ஈசுவரன் ஜகத்துக்கு நிமித்தோபாதான காரணன்* 39

*சூட்சும பஞ்சபூத வுற்பத்தி.* 40

*சூட்சுமதேக வுற்பத்தி. இலிங்க சரீரத்தின் 17 தத்துவங்களும் அவற்றின் லட்சணமும்.*

*அந்தக்கரண சொரூபம்.* 41

*பஞ்சகோச லட்சணம். மனத்தின் தொழில்* 42

*பந்தமோட்ச காரணம் மனமே. கன்மேந்திரிய பஞ்சக வுற்பத்தி.* 43

*பிராணாதி பஞ்சக வுற்பத்தியும் அவற்றின் லட்சணமும்.*

*நாகாதி உபவாயுக்களின் தொழில்.*

*ஜீவேசவர்ணனை. குணத்திரய லட்சணம்.* 44

**ஸ்தூலப்ரபஞ்சம்.** 45

*பஞ்சீகிருத லட்சணம்.* 46

*(1) அமிர்த திரவியம் (2) மிர்த திரவியம்*

திரிவிர்த்கரணம். ஆகாசாதிகளின் குணம் 46
ஞானேந்திரியங்களின் தொழில்
ஞானேந்திரிய முதலியவற்றின் அதிதெய்வம். 47
ஆன்மா அகர்த்தா, அபோக்தா; ஆன்மா சாட்சி. 48
நால்வகைப் பிராணிகளின் ஜீவனவகை நால்வகை யோனி. 49
அன்னமய கோசலட்சணம்.
போக்தாவின் லட்சணம் 50
ஆன்ம லட்சணம். சட்பாவவிகாரம் ஆன்மாவுக்கில்லை. 51
அனாத்மதர்மம் ஆத்மதர்ம மாகா தெனல். 52
ஆன்மா வுண்டென்பது பிரசித்தம்.
ஆன்மாவின்கண் அனான்மாவின் அத்தியாசம். 53
புத்தியாதிகளுக்கு இயற்கை விளக்கமின்று.
அத்தியாசத்தின் உத்ரோத்ர காரணம். 54
1. அவித்தை (அஞ்ஞானம்) 2. ஆவரணம் (மறைப்பு) 3. விட்சேபம (தோற்றம்) இவைகளின் தர்மம்.
அனான்மாவான தேகாதிகளிடத்தில் மோகத்தினால் நானென்கிற ஆன்மபுத்தி கற்பிக்கப் படுகின்றது. 55
அத்தியாச லட்சணம். சம்சாரபந்தத்திற்கு ஆதிகாரணம் அத்தியாசமே.
பிரவிர்த்தி பந்தத்திற்குக் காரணம்; நிவிர்த்தி மோட்சத்திற்குக் காரணம் 55
ஆன்மாவின்கண் அத்தியாசம் வந்ததற்கேது
ஈசுவரவுபாதி, ஜீவவுபாதி.
ஈசுவரனை ஆவரண விட்சேபசத்திகள்ஒன்றுஞ் செய்யமாட்டா 56
ஜீவனுக்கு ஆவரண விட்சேப சத்திகளால்பந்தமும் சம்சாரமு முண்டாயின
அஞ்ஞானம் ஞானத்தினாலன்றிக் கர்மத்தினால் நிவிர்த்தியாத வில்லை.
கன்மத்தினால் ஜன்மமும் மரணமுமுண்டாம்
கர்மம் அஞ்ஞான காரியம்
ஞானத்தைச் சம்பாதிக்கும் விதம் 57

## பலமதசித்தாந்தம் (57-61)

1. புத்திரனே ஆன்மா
2. தேகமே ஆன்மா (சார்வாகன்.) 58
3. இந்திரியங்களே ஆன்மா 59
4. பிராணனே ஆன்மா
5. மனதே ஆன்மா 60
6. புத்தியே (விஞ்ஞானமயனே) ஆன்மா (பௌத்தன்)

7. அஞ்ஞானமாகிய ஆனந்தமயனே ஆன்மா (பிரபாகரன், தார்க்கிகன்)

8. ஞானஞ்ஞானங்கள் கூடினதே ஆன்மா (பாட்டன்) 61

சூனியமே ஆன்மா (சூனியவாதி) 61-63

ஆன்மா ஜாக்கிரத்தில் வியாகிருதமாயும் சுழுத்தியில் அவ்வியாகிருதமாயு மிருக்கின்றதன்றி சூனியமாயில்லை.

சுழுத்தி சூனியமன்று 64

சுழுத்தியில் நிர்விகாரமான ஆன்மாவுண்டு 64,66

சகலத்தையும் ஆன்மாவிளக்குகிறது 66

சச்சிதானந்த லட்சணம் 66,67

ஆனந்த லட்சணம் 68

ஆன்மா எல்லாவற்றினும் பிரியமானது 69

1. ஆன்மா பரம சுகசொரூபி 2. ஆன்மாவுக்குச் சுகம் அன்னியமாகவில்லை; அஃது ஆனந்தசொரூபமாகவே யிருத்தலால். 70

விஷயானந்தங்களெல்லாம் துக்கத்திற் சேதுவாம். 71

ஆனந்த தாரதம்மியம்.

விஷயங்களில் உண்மையில் ஆனந்தமின்று. துக்காபாவமே சுகமென்பதன் கண்டனம். 72

விஷயானந்தமும் பரப்பிரமானந்தத்தின் லேசமாம் 73

ஆன்மாவுக்குச் சச்சிதானந்த மூன்றும் சுபாவம்.

ஆன்மாவின்கண் விசாதி பேதமின்று. 74,75

பிரமான்ம அபேதம் யதார்த்தம்; பேதங்கற்பிதம். 75

பிரமான்ம ஐக்கியம். லட்சியார்த்தங்களுக்கு ஐக்கியமன்றி வாச்சியார்த்தங்களுக்கு ஐக்கியமின்று. 76

மகா வாக்கியத்தின் வாச்சியார்த்தம், லட்சியார்த்தம். 77,78

வாக்கியநிர்ணயம். 79

சம்பந்தத்திரயம்.

1 சமானாதிகரண்ய சம்பந்தம்

2 விசேஷண விசேஷிய சம்பந்தம்

3 லட்சிய லட்சணபாவ சம்பந்தம்

வாச்சியார்த்தங்களிலுள்ள பிரத்தியட்ச பரோட்சத்துவாதி விரோததன்மம் 80

விருத்ததர்மங்களைப் பொருந்தின தத்துவ பதார்த்தங்களாகிய ஜீவேசுவரர்களுக்கு ஏகத்துவம் கூடாது.

இலக்கணை

1. விட்டலக்ஷணை. 2. விடாதலக்ஷணை 3. விட்டுவிடாதலக்ஷணை 81

(1) விட்டலக்ஷணையால் ஐக்கியங்கூடாது.

(2) விடாதலக்ஷணையால் ஐக்கியங்கூடாது.

(3) விட்டுவிடாதலக்ஷணையால் ஐக்கியங்கூடும். 82

சொப்பனத்திற் கண்டதும் கண்டவிடயமும் பொய்க்குமாறு போன்று, ஜாக்கிரத்தில் கண்டதும் கண்டவிடயமும்பொய்யாம். ஜாக்கிரமும் சொப்பனம்போலே பொய்யாம்; அவித்தியா காரியமானதால்.

பிரமத்தின் லட்சணம். 83,84

பிரமத்தைத் தவிர அன்னியமாக வொருவஸ்துவுமில்லை. பிரமமே நீ; நீயே பிரமம்; நீ சாட்சி.

குருபதேசம். சமாதி— முக்கியம், கௌணம். 85

அதிகாரி—முக்கியம், கௌணம். 86

அகண்டாகார விருத்தியினால் அஞ்ஞானமும் அதன் காரியமான தேகாதிப் பிரபஞ்சமும் நசித்துப்போம்.

அந்தக்கரண கற்பிதனான சிதாபாசன் சுயம்பிரகாசமா யிருக்கிற பரப்பிரமத்தைத் தலக்குவிக்கமாட்டான். 87

பிரஞ்ஞாமந்திகளா யிருக்கிறவர்கள் சிரவண, மனன, நிதித்தியாசனங்களைச் செய்யவேண்டும் 88

சிரவணாதிகளை யெவன் நிரந்தரம் செய்கிறானோ அவனுக்கே முத்தி கூடுமாகும்.

சிரவணலட்சணம். சிரவணத்தின் லிங்கதாற்பரியம். ஆறுலிங்கவகை.

(1) உபக்கிரம உபசங்காரம். (2) அப்பியாசம் (3) அபூர்வதை (4) பலம் (5) அர்த்தவாதம் (6) உபபத்தி. 89

மனனம்-சிரவணாதியினால் நிரூபிக்கப்பட்டபொருளை யனுகூலமாய யுக்தியினால் சிந்தித்தலேயாம்.

நிதித்தியாசனம்.-இடைவிடாமல் அகண்டாகார விருத்தியோடு கூடி நிரந்தரம தியானம்பண்ணுகிறதேயாம். 90

சிரவணத்தின் அளவு, மனனத்தின் அளவு, நிதித்தியாசனத்தின் அளவு.

மோட்சவிச்சையுள்ளவன் தியானசமாதியை அப்பியசித்தல் வேண்டும்.

1. சவிகற்ப சமாதி:—திரிபுடிக் குலயம் வாராமல் ஞேயமாகிய கேவல பரப்பிரமவஸ்துவினிடத்தில் நிலைத்ததான பிரமாகாரமாயிருக்கிற சித்தவிருத்தியாம்.
2. நிர்விகற்ப சமாதி:—திரிபுடியுமொழிந்து ஞேயமாத்திரமான பரப்பிரமசொரூபம் தானாய்விளங்குவதேயாம். 91

## சட்விதசமாதிலட்சணம். 91,100.

1. அந்தர் திரிசியானுவித்த சவிகற்பசமாதி, அதன் அநுபவம் 91-95
2. அந்தர் சத்தானுவித்த சவிகற்பசமாதி, அதன் அநுபவம் 95,96

3. அநதர் நிர்விகற்பசமாதி 96,97
4. பாகியநிர்சியானுவித்த சமாதி, அதன் அநுபவம் 97,98
5. பாகிய சத்தானுவித்த சவிகற்பசமாதி, அதன் அநுபவம 98,99
6. பாகிய நிர்விகற்பசமாதி. 99,100

## அஷ்டாங்கம் 100,102

அவைகளின் பெயர். 100

1. இயமம் 2. நியமம் 3. ஆசனம் 4. பிராணயாமம் 101

(A) அகற்பம்—பிரணவத்தின் உச்சாரணமின்றி வாயுவை நிறுத்துகிறது.

(B) சகற்பம்:—பிரணவததின் உச்சாரணத்தோடுகூடி வாயுவை நிறுத்துகிறது.

(a) ரேசகம் (b) பூரகம் (c) கும்பகம்.

5. பிரத்தியாகாரம் 102

6. தாரணை, 7. தியானம் 8 சமாதி.
நிர்விகற்ப சமாதியை யடைநதவனே பவபந்தத்தினின்றும் விடுபடுவன். 103

சமாதி விகாதங்கள்-நான்கு.

(1) லையம் (2) விட்சேபம் (3) கஷாயம் (4) ரசாஸ்வாதம்.
மேஷ் விகாதஙகளை யொழிக்கும் வகை. 104

உன்மன்னியாவஸ்தை. 105
பிரமநிஷ்டனுக்கு யாதொருகருமமுமில்லை 106
பிரவிர்த்தி நிவிர்த்திகளின்காரணம்
ஞானி அஞ்ஞானிகளின் லட்சணம் 107,108
பிரமநிஷ்டனுக்கு யதேசச சஞ்சாரமின்று 109
ஆத்மஞானிலட்சணம் 110
பநதமும்முத்தியு மனேசஙகற்பமே. 111

பந்தமுத்திலட்சணம். மனத்தின் லட்சணம்.
பிரமநிஷ்டாப்பியாசிகள் ஒருவிடத்திலேயே வாசம்பண்ணல் கூடாது. 112

பிரமநிஷ்டன் துவநதுவஙகளில் சமபுத்தியா யிருப்பன்.
துவந்துவம்-மானபிமான முதலானவை.
சமாதி விர்த்தியாவதற்கேது 113

சும்மாயிருக்கச் சுகமுதயமாகும். சொரூபநிஷ்டனுக்கு மிருத்திய பயமில்லை.

சம்பிரஞ்ஞாத சமாதியுள்ளவன் தன்மை. 112,113

சிஷ்யனுடைய அநுபவமகிழ்ச்சி. 114-116

# வேதாந்தசாரம்.

## பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 5 | 13 | சாவயமா | சாவயவமா |
| „ | 15 | சாவயமுடைய | சாவயவமுடைய |
| 7 | 14 | சாங்குன்மம்லயம சூலே சேஷ்டப | கபம், குன்மம், க்ஷயம், சூலை, சுரம் |
| 7 | 20 | சேஷ்டபத்தில் | யபத்தில் |
| 8 | 15 | கிரக | கூருக |
| 9 | 17 | (மிருகம்) | (மிருகம்)க் |
| 14 | 10 | அடைகிருமே | அடைக்கிருமே |
| 16 | 24 | யேகாச்கிரமா | ஏகாக்கிரமா |
| 19 | 8-34 | நிர்குண | நிர்க்குண |
| „ | 10-11 | (கேட்கப்படுவதா யிருக்கி) | (கேட்கப்படுவதா)யிருக்கிற |
| „ | 19 | சாதிக்கப் (அடைய) | சாதிக்க (அடைய)ப் |
| 21 | 1 | யாது | யா |
| 41 | 28 | புகிற | புசிக்கின்ற |
| 43 | 10 | மும் | [illegible] வாயுவில் பாணீந்திரியமும், |
| 46 | 7-13 | திரிவிருத்கரண | திரிவிர்த்கரண* |
| 50 | 15 | கதிதேவதைகளோதும | கதிதேவதைகளும் |
| 69 | 3 | விரண்டிலிலும் | விரண்டிலும் |
| 90 | 3 | அகண்டாகாரவிருத்தி யோடுகூடி நிரந்தரந | நிரந்தரந் |
| 93 | 33 | அஃதப்படி | அஃதெப்படி. |
| 108 | 17 | விரோசனங | விரேசனங் |
| „ | 19 | தர்ம்மானது | தர்மமானது |

* மூன்றுவகையாகக் கலத்தல்.

உ

# சிறப்புப்பாயிரம்.

திருவருட்பிரகாச வள்ளலார் மரபு,

காஞ்சீபுரம்

## மகான். நிச்சல - இராமாநந்தசுவாமிக ளியற்றியருளிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்பூத்த மறையமுதை யுபநிடதத் தெளிதேனைத் திரட்டி முன்னோ, ரேர்பூத்த வடமொழியில் வேதாந்த சாரமென வெழிற் பேரிட்டுப், பார்பூத்த வுயிர்க்கிரங்கிக் கருணையினா லளிக்கவதைப் பரம ஞானப், போர்பூத்த வருட்குருவாங் கோவிந்த தீரவரன் பெற்று வாழ்ந்தான்.

மெய்யன்பர்க் குயிர்த்துணைவன் சந்திரசேகரமுனிவன் மேக மேழும், பெய்யலுற்றா லெனவின்ப மழைதமிழின் மொழிபெயர்த் தான் பெரும்பே றுற்ற, வையின்ப நெறியுணர்சை யிரத்தினமே வருண்மொழிபெற் றவனி யெங்குஞ், செய்யின்பத் திருக்குறட்குத் தெளியுரையா தியபலவுந் தெளித்த மேலோன்.

தெளிந்திடநா ஞசீவ வாதக்கட் டளையுமிகச் சிறப்புற் றோங்கத், தெளிவித்தோ னருளுரைகொண் டுணர்வுருவா யொளிர்கின்ற திறத்தின் மிக்க, தெளிவுடையான் வடிவேலு சிரேட்டியெனச் செப்புமொரு திருநா மத்தான், றெளிதலிலார்க் கினிதிரங்கிக் கருணையினால் விவேகமதைத் தெரிப்பான் போன்று.

சீரிலகு விஞவிடையார் வேதாந்த சாரமெனச் செப்பந் நூலைப், பாரிலகு மன்பதைகள் பவக்கடலே றும்வண்ணம் பல்வே தாந்தப், பேரிலகு நூல்களொடு மாராய்ந்து சண்முகப்பேர்ப் பிரிய னேய, னேரிலகு முதலிகொடு வெளியிட்டான் கைம்மாறொன் றிகழ்ந்து மாறே.

ஸ்வகீயானந்த யோகிகளெனும்
பொதியமலைச்சித்தர் பொன்னடிக்காளாகிய
**ஞானாநந்த நாதமுனி சுவாமிகள்**
மாணவர்களு ளொருவராகிய
ஸ்ரீமத். வேதாந்த வித்வசிரோமணி
**ஸ. நாராயணசாமி நாயகரவர்க ளியற்றிய**
ஆசிரியப்பா.

---

பூந்துணர்க் கற்பகப் பொழினிழ லமர்ந்தகன்
றுந்துணை பலவா னளிகருப்பா நிலாப்பொரு
டெள்ளிதின் விளக்குந் தினகரன் றேனெனக்
கல்லாமையாசெயுங் காண்டகு திரிசியத்
தோற்ற விகற்பினைத் தொல்வழி வாகியே
யாற்றல்சா லழிவி னகன்றமெய்ஞ் ஞானத்
தியல்புற் றுணரவு னெழுந்திருட் கடிந்தான்
சுபங்கோ விந்த வீரா வேதியன்
வியா மறைபுகழ் வியநா ராயணற்
றேயா தொளிர்தரு முபவான் மணியொளி
போற்றி யிருட்கடி பூரண மதிநிகர்த்
தேற்றிலர் கருதரெனு மிருங்கரு மாதியாற்
போந்தசந் தேகப் பொய்யிருட் கடிந்திடு
சாந்தனுஞ் சந்திர சேகர சற்குரு
வேதாந்த சார மெனும்வட மொழிநூல்
காதார்ந்து திராவிடங் கற்றவர் தெளிய
வெங்குரு பரம்பரைக் கெழில்சிகா மணியாய்த்
தங்கிய பொதிகைத் தனிமுதல் விரித்த
செந்தமி ழாலே தெளிவுற விளைவிடை
பந்த மிரிக்கும் பரமா சிரியனே
யாக மொழிபெயர்த் தப்பெய ரளித்தன
னேகமாம் பொருளே யிதுதரும் பயனெனி
லற்புதம் விரித்தற் காங்கொலோ புலவீர்
சொற்பிழை யாதிய தொலைத்தச் சேற்றின
னைப்பணி ரீணை பி லணிதே செம்பபின்

தற்பூரு சண்முக னாய்ந்த னுதவியால்
காரியம் விளக்கிக் காரண மறையா
தாரிய ரன்றி யாவரு மறியொணா
திருக்குந் சதோதய வெழிற்பரம் பொருளெனத்
தருக்கிய மதத்தினர் தம்மத மிரித்துயர்
மூவா மறையின் முடிவினின் விளங்குறாஉ
மாவாக் கியமா ணிக்க மதிப்பிடு
மிரத்தின செட்டியா ரெனுஞ்சற் குருவடி
சிரத்தினில் வகித்த சொற்றமிழ் நாவலன்
போதகா சிரியனைப் போந்தருந் தமிழொடு
வேதாந்த சாத்திரம் விளக்குவா னெவர்க்கு
நல்லோ னெனப்பெயர் நாளும் வளர்ப்பவன்
வல்லோ னங்கோ வடிவேற் செட்டி
பக்குவர் யாவரும் பரமாய்த்
துக்கப் பிறப்பிற் சுழலா திருக்கவே.

---

ம-ா-ா-ஸ்ரீ. வித்வான்,

## ம. இராஜகோபாலப்பிள்ளை யவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இரண்டறநின் றொழுகியுய ரின்பநிலை யெய்துமத ரிருள்சேர் ஞாலத், திரண்டறநின் றோர்க்குமருள் கோவிந்த திரனெனுமிறைவ னொரின், சரண்டுணைபெற் றாறுதிதரு நூல்கள்வழ தபமுணர்ந்து தகைத்தா னோர்ந்தோன், றிரண்டபெரும் புகழாளன் சந்திரசேகர னெனுமோர் சிரி யோனே.

வேதாந்த மதம்பிணக்கத் தீர்ந்திணக்க மருளியினு மாய வஞ்சச், சூதார்ந்த தொல்லுலகத் தீதியாத வழிகாணத் துணையா யிப்பார், மீதார்ந்த கருணைநனி விளங்கவட மொழியினின் றாம் விளக்க மாக, வேதாந்த சாரமெனு மோரருநூ றென்மொழியில் விளம்பி னுறைல்.

அவ்வரிய நூலினைக்கன் பர்புவியோ ருய்வினுக்கா காரண மான, தெய்விகந் தெருளிக்கர் சிறந்தசொன் மெனக்கருதிச்

சிரத்தை கொண்டிங், கொவ்வரிய வேதாந்த நூல்கள்பல வற்றுட னாய்ந் துதவி யச்சிற், செவ்வரிய விழியணங்கே சீருற்று ரென்ற னுயிர்ச் செல்வ நேயர்.

அன்னவரா ரென்னினருந் தமிழ்க்கலைக ணெறிமுறைதேர்ந் தறம்வ ழாது, முன்னவர்போம் வழியினின்று வேதாந்த நிலை யுணர்ந்த முமுட்சு மேலாந், தன்னிகர்வா ணிபகுலத்தோன் சாந்த குணா திபனெனநேர் தன்மை யோர்க்கும், பன்னுமிதம் பகர்ந்து வரும் வடிவேலென் றுரைசெய்தமிழ்ப பாவ லோனும்.

ஆங்கிலத்தோ டருந்தமிழு மினிதறிந்து நற்குணங்க ளமையப் பெற்றோ,யோங்கிலத்தேயிருந்துநிதம் வேதாந்த வாராய்ச்சி யுவந்து செய்வோன், றீங்குலவா வகையுயிர்கட் குதவிபுரி வதின்மகிழுஞ் செழுங்கா ராளப், பூங்குலத்தோன் சண்முகப்பேர்ப் புனிதனுமாம் புண்ணியத்திற் பொலிவுற் றோரே.

---

வித்வான்,

## ஸ்ரீமான். ஆ. மே. சென்னகேசவுலு நாயுடவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

---

மாமேவு கோவிந்த தீரசுவா மிகடமது மலர்த்தாட் கன்பார்
தூமேவு சந்திரசே கரசாமி செய்தளித்த சிறப்பி னாய .
பூமேவு வேதாந்த சாரமெனும் வினாவிடையைப் பொருத்த மாகப்
பாமேவு நற்புலவர் மனங்களிக்க வாராய்ந்து பதிப்பித் தாரால்.

கல்வியுட னல்லறிவு பொறைவாய்மை மிகத்தூய்மை காசி னிக்க
ணில்லையிவர்க் கிணையெனவே யெல்லோருங் கொண்டாடு மீறில்
[லாதோர்
நல்லரிய கோமளேச் சுரன்புரிவாழ் வடிவேலு சிரேட்டி யோடு
மியலார் சண்முகவே ளாயமேன் மக்கடா நயந்து மாதோ.

---

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணேநம:

---

# தியானசுலோகம்.

ப்ரஹ்மாநந்தம் பரமசுகதம் கேவலம் ஜ்ஞாநமூர்த்திம்
விசுவா தீதம் ககந ஸத்ருசம் தத்வ மஸ்யாதி லக்ஷ்யம்
ஏகம் நித்யம் விமல மசலம் ஸர்வதீ ஸாக்ஷி பூதம்
பாவாதீதம் த்ரிகுண ரஹிதம் ஸத்குரும் தம்நமாமி. (க)

அஜ்ஞான திமிராந்தஸ்ய
ஜ்ஞா நாஞ்சந சலாகயா
சக்ஷுருன் மீலிதம் யேந
தஸ்மைஸ்ரீ குரவேநம: (உ)

குருர் ப்ர்ஹ்ம குருர் விஷ்ணு
குருதேவோ மஹேச்வர:
குருஸாக்ஷாத் பரப்பிரஹ்ம
தஸ்மைஸ்ரீ குரவேநம: (ங)

அகண்ட மண்டலாகாரம்
வ்யாப்தம் யேந சராசரம்
தத்பதம் தர்சிதம் யேந
தஸ்மைஸ்ரீ குரவேநம: (ச)

ஜ்ஞாநசக்தி ஸமாருஹ்ய
தத்வமாலா விபூஷிணே
பக்தி முக்தி ப்ரதாத்ரேச
தஸ்மைஸ்ரீ குரவேநம: (ரு)

அநேகஜந்ம ஸம்ப்ராப்த
கர்ம தர்ம விதாஹிநே
ஜ்ஞாநா நலப்ரபாவேந
தஸ்மைஸ்ரீ குரவேநம: (சா)

மந்நாதஸ்ரீ ஜகந்நாதோ
மத்குருஸ்ரீ ஜகத்குரு:

ஸ்வாத்மாயமா ஸர்வபூதாத்மா
தஸ்மைஸ்ரீ குரவேநம:. (எ)

சைதந்யம் சாஸ்வதம் சாந்தம்
வ்யோமாதீதம் நிரஞ்சநம்
நாதபிந்து கலாதீதம்
தஸ்மைஸ்ரீ குரவேநம:. (அ)

குருச்சிவோ குருர்தேவோ
குருர்பந்துச் சரீரிணாம்
குருராத்மா குருர்ஜீவோ
குரோரன்யம் நவித்யதே. (௯)

## குருவணக்கம்.

தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானு
மந்தமிலா வின்பமக் காவானு - மெந்தமுயிர்
தானாகு வானுஞ் சரணாகு வானுமருட்
கோனாகு வானுங் குரு.

## சொரூப வணக்கம்.

பொன்னுல கத்தினிற் புவியி லந்தரத்
தென்னுடை யுட்புறத் திலங்கு கின்றது
மன்னுசிற் சோதியே வடிவ மியாவுமாய்த்
துன்னுவ தப்பொரு டொழுதி றைஞ்சுவாம்.

மகாமகோபாத்யாய,
வே. சாமிநாதையர்
நூல் நிலையம்

ஓம்

பரப்பிரம்மணே நம:

# வேதாந்தசாரம்.

## (வினா விடை.)

தெய்வவணக்கம்.

சுலோகம்.

அகண்ட சச்சி தாநந்த மவாங்மாநச கோசரம்
ஆத்மாந மகிலாதார மாசிரயே பீஷ்டசித்தயே.

ஸ்ரீஅகண்ட பரிபூரண சச்சிதானந்தமாகியும் அவாங்மனோ கோசரமாகியு (மனோவாக்கிற் கெட்டாததாயு)ம் சமஸ்தத்திற்கும் ஆதாரமாகியுமிருக்கிற ஆத்மாவைச் சர்வாபீஷ்டசித்தியின்பொருட்டு ஆசிரயித்து, அனேககோடிப்பிரமாண்டங்களையும் உதரத்தில் (வயிற்றில்) வைத்திருக்கிற விக்கினேசுவரருடைய பாத பதுமங்களை வணங்கிப், பரமார்த்தராயும் அத்துவிதானந்த ஸ்வரூபராயும் அத்வைதத்தைக்கடந்தவராயும், ஆத்மார்த்தமாயும், சிவசொரூபமாயுமிருக்கிற ஸ்ரீ குருமூர்த்திகளுக்கு நமஸ்காரஞ்செய்து, சகலவேதாந்த சாத்திரங்களினாலும் நிச்சயிக்கப்பட்ட சித்தாந்த சாரங்களையெல்லாஞ் சங்கிரகித்து முமுட்சுக்களுக்கு அனுயாசமாய் (வருத்தமின்றி) ச்சுப (தத்துவ) ஞானம் பொருந்தும் பொருட்டு இது சொல்லப்படுகிறது. மேலும் இச்சாத்திரமானது மூலசாத்திரார்த்தங்களை யனுசரித்திருப்பதால் அச்சாத்திரத்திற்சொன்ன அனுபந்தசதுஷ்டயங்களைச் சொல்லுகிறோம்.

### அனுபந்த சதுஷ்டயம்.

வினா:—*அவ்வனுபந்த சதுஷ்டயமாவது யாது?

விடை:—அது: அதிகாரி, விடயம், சம்பந்தம், பிரயோசனமென்று நான்குவகையாம். இந்நான்குஞ் சாத்திரார்த்தபலத்துக்குப் பலம்.

---

* அதிகாரி, சம்பந்தம், விஷயம், பயன் என்னு மிந்நான்குங்கூடி நிற்றலுக்கு அனுபந்த சதுஷ்டயமென்று பெயர். சதுஷ்டயம் - நான்கு. அநுபந்த

வினா:—அஃதெப்படி?

விடை:—இச்சாத்திரத்தின் பொருட்டுப் பிரவிர்த்திக்கும்புருடனுக்குப் பல லட்சணமாயிருக்கிறதே பிரயோசனம். அந்தப்பிரயோசன மில்லாதவிடத்தில் மூடனுக்குக்கூடப் பிரவிர்த்தியுண்டாக மாட்டாது.

வினா:—ஆனாலிச்சாத்திரத்திற்கு (1) அதிகாரி யார்?

விடை:—சாதனசதுஷ்டயசம்பத்தியுள்ளவனும், யுக்திசாமர்த்தியமுள்ளவனும், வித்வானும், மேதாவியுமாயுள்ள புருடனே † அதிகாரியாம்.

வினா:—(2) விடயமாவது யாது?

விடை:—எந்தச்சொரூபத்தினிடத்தில் சகலவேதாந்த அர்த்தங்களும் கூடியிருக்கின்றனவோ, அந்தவேதாந்த அர்த்தங்களிற் சீவப்பிரம ஐக்கிய சொரூபமாயிருக்கிற சுத்தசைதன்னியமே விடயமாம்.

வினா:—(3) சம்பந்தமாவது யாது?

விடை:—சீவப்பிரமஐக்கியமான வத்துவைச்சொல்லுகிற சாத்

---

அநு என்பது உபசர்க்கம்; எனவே, அனுபந்தசதுஷ்டயமென்பது நான்கோடுகூடி நிற்றலென்றாயிற்று. ஈண்டுச் சதுஷ்டயமென்பது தொகைக் குறிப்பாய் அதிகாரி முதலியவற்றை யுணர்த்திநின்றது. இவ்வனுபந்த சதுஷ்டயத்தை யறியாவிட்டால் விவேகிக்கு அத்தியான்ம (ஞான) சாஸ்திரத்தின்கண் பிரவிருத்தியில்லாதொழிதலின் இதனை அவசியம் விசாரித்தல்வேண்டும். எது தன்னை யுணர்ந்தபின்னர் முமுட்சுவை ஞான சாஸ்திரத்துடன் சம்பந்தப்படுத்துகின்றதோ அஃதநுபந்த மெனப்படும். நான்குகால்களின்றிக் கட்டில் எங்ஙனம் நிற்காதோ அங்ஙனமே அனுபந்தசதுஷ்டயமில்லாத நூலுமாமென்க. அனுபந்தசதுஷ்டயமுள்ள நூலே நூலென்று பெறப்படுதலின், நூலாராய்ச்சிசெய்யு மொவ்வொருவரும் அனுபந்தசதுஷ்டயத்தை விசாரித்தறிதல் அத்தியாவசியமா மென்க.

† இராஜசூயயாகத்திற்கு க்ஷத்திரிய னதிகாரியாயும் மற்றவர்களல்லராயும், பிரகஸ்பதிசவனமென்னும் யாகத்திற்குப் பிராமண னதிகாரியாயும் மற்றவர்களல்லராயு மிருத்தல்போன்று அந்தக்கரணத்திலுள்ள மலம் (பாவம்) நிஷ்காமகர்மத்தினாலும், விட்சேபம் (புடைபெயர்ச்சி) ஈசுவரோபாசனையினாலும் ஒழித்துத் தனதெதார்த்தவடிவத்தை (கற்பனையாக) மறைத்திருக்கின்ற அஞ்ஞானத்தோடும் நான்குசாதனங்களோடுங் கூடியிருக்கின்றவனே ஈண்டதிகாரியாவன்; மற்றவர்களதிகாரிகளல்லர்.

திரத்திற்கு அதனுடன் *போதகபோத்திய (சொல்லுதல் சொல்லப்படுதல்) லட்சணமாவதே சம்பந்தமென்று சற்புருடர்களாற் சொல்லப்படும்.

வினு:—(4) பிரயோசனமாவது யாது?

விடை:—பிரத்தியகான்மாவும் பிரமமும் ஐக்கியாநுபவமாவதே ஆனந்தம்; அவ்வானந்தானுபவத்தினுல் சகல சம்சாரபந்தமுமொழிகிறதே பிரயோசனமாம். இவ்வாறு அனுபந்த சதுஷ்டயஞ் சொல்லப்பட்டதில் எந்தப்புத்திசாலியாயிருக்கிற புருடனுக்குச் சாதனசதுஷ்டய சம்பத்தி பொருந்தியிருக்கிறதோ அவனுக்கே மேற்சொல்லிய பிரயோஜனஞ் சித்திக்கும். இவற்றுளொன்று குறைந்தாலும் பலனில்லை. இந்தஅர்த்தத்தில் மகரிஷிகளும் சாதனமாவது நான்குவிதமாயிருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் அந்நான்குசாதனமும் பொருந்தினவனுக்கேமுத்தி; அவற்றுள் ஒன்றுகுறைந்தாலும் முத்தியுண்டாகாது.

---

* கிரந்தத்திற்கும் விஷயத்திற்கும் அறைதல் அறையப்படல் என்னும் பிரதிபாதக பிரதிபாத்திய சம்பந்தமிருக்கிறது. பிரதிபாதனம் (அறைதல்) செய்தலெதுவோ அது பிரதிபாதகமெனப்படும். இந்நூல் பிரமத்தைப் பிரதிபாதனஞ்செய்வதாயிருத்தலால் பிரதிபாதகமாம். எது பிரதிபாதனம் செய்யப்படுகின்றதோ அது பிரதிபாத்தியமாம். பிரமம் இந்நூலாற் பிரதிபாதனஞ் செய்யப்படுவதாயிருத்தலால் பிரதிபாத்தியமாம். எந்தவஸ்துவிற்கு எதனோடு சம்பந்த மிருக்கிறதோ அந்தவஸ்துவிற்கு அதன்கண் சம்பந்தமிருக்கிறது. குயவன் முதலியோருக்குக் குடத்துடன் சம்பந்தமிருக்கிறது; அதனால் அவர்கள் குடத்தில் உபயோகமாகின்றார்கள். எந்தவஸ்துவிற்கு எதனோடு சம்பந்தமில்லையோ அந்த வஸ்துவிற்கு அதனிடத்து உபயோகமுண்டாகிறதில்லை. நேத்திரத்திற்கு வாயுவினோடும் ஆகாயத்தினோடும் சம்பந்தமில்லை; அதனால், நேத்திரத்திற்கு வாயுவினிடத்தும் ஆகாயத்தினிடத்தும் உபயோகமுண்டாகிறதில்லை. அதுபோல கிரந்தத்திற்கும் பிரமத்திற்கும் பரஸ்பரம் (ஒன்றற்கொன்று) சம்பந்தமில்லாவிட்டால் கிரந்தத்திற்குப் பிரமத்திலும் பிரமத்திற்குக் கிரந்தத்திலும் யாதொரு உபயோகமும் சித்தியாது. ஆகையால் பரஸ்பரத்தின் உபயோகம் பரஸ்பரத்தில் நிச்சயிக்கும்பொருட்டு அவற்றின் சம்பந்தம் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

பிதாவிற்குப் புத்திரன் ஜன்னியனுதலின் பிதாவிற்குத் தனது ஜன்னியனை புத்திரனோடு ஜன்னியத்தன்மைச் சம்பந்தமிருக்கிறது. அதுபோலக் கிரந்தத்திற்குத்தனது பிரதிபாத்தியமாகிய பிரமத்தோடு பிரதிபாத்தியத் தன்மைச் சம்பந்தமிருக்கிறது.

### சாதனசதுஷ்டயம்.

வினா:—சாதனசதுஷ்டயமாவது யாது?

விடை:—நித்தியாநித்தியவஸ்துவிவேகம் முதற்சாதனமென்றும், இகமுத்திரார்த்தபலபோகவிராகம் இரண்டாஞ்சாதனமென்றும், சமாதிசட்கசம்பத்தி மூன்றாஞ்சாதனமென்றும், முமுட்சுத்துவம் நான்காஞ்சாதனமென்றுஞ் சாத்திரங்களிற்சொல்லப்பட்டிருக்கின்றன.

### முதற்சாதனம்.

வினா:—நித்தியாநித்தியவஸ்துவிவேகமாவது யாது?

விடை:—அது: பிரமமே நித்தியம்; தேகேந்திரியாதிசகலசகத்தும் அனித்தியமென்றறிவது.

வினா:—இதற்குத் திருஷ்டாந்தமெப்படி?

விடை:—மிருத்திகையானது காலத்திரயத்திலும் மண்ணாய்க்

---

புத்திரனுக்குப் பிதா ஜனகனாயிருத்தலால் புத்திரனுக்குத் தனது ஜனகனாகிய பிதாவோடு ஜனகத்தன்மைச் சம்பந்தமிருக்கிறது. அங்ஙனமே பிரமத்திற்குக் கிரந்தம் பிரதிபாதகமாம். அதனால் பிரமத்திற்குத்தனது பிரதிபாதகமாகிய கிரந்தத்தோடு பிரதிபாதகத்தன்மைச் சம்பந்தமிருக்கிறது. எப்படி பிதாவிற்கும் புத்திரனுக்கும் ஒருவர்க்கொருவர் ஜன்னிய ஜனகத்தன்மைச் சம்பந்தமிருக்கிறதோ அப்படியே கிரந்தத்திற்கும் பிரமத்திற்கும் ஒன்றற்கொன்று பிரதிபாத்திய பிரதிபாதகத்தன்மைச் சம்பந்தமிருக்கின்றதென்பது சித்தித்ததென்க. இச்சம்பந்தம்போல் அதிகாரிக்கும் பலத்திற்கும், அதிகாரிக்கும் ஆராய்ச்சிக்கும், கிரந்தத்திற்கும் ஞானத்திற்கும் சம்பந்தங்களிருக்கின்றன.

அதிகாரிக்கும் பலத்திற்கும் பிராப்பியப் பிராபகபாவ சம்பந்தமுண்டு. பயன் - பிராப்பியம்; அதிகாரி - பிராபகன். எது அடையப்படுகிறதோ அது பிராப்பியமென்றும், எவன் அதை யடைகின்றானோ அவன் பிராபகனென்றும் சொல்லப்படும். அதிகாரிக்கும் ஆராய்ச்சிக்கும் கர்த்துரு கர்த்தவ்விய பாவசம்பந்தமுண்டு. அதிகாரி - கர்த்தா, ஆராய்ச்சி - கர்த்தவ்வியம். ஒன்றைச் செய்பவனைக் கர்த்தாவென்றும், செய்யப்படுவதைக் கர்த்தவ்வியமென்றும் சொல்லப்படும்.

கிரந்தத்திற்கும் ஞானத்திற்கும் ஜனக ஜன்னியபாவசம்பந்தமுண்டு. ஆராய்ச்சி வாயிலாகக் கிரந்தம் (நூல்) ஞானத்திற்கு ஜனகமாயிருக்கிறது. ஞானம் ஜன்னியமாயிருக்கிறது. எதனை யெஃதுற்பத்தி செய்கின்றதோ அது ஜனகமென்றும், எதனாலெஃதுற்பத்தி செய்யப்படுகின்றதோ அது ஜன்னியமென்றும் சொல்லப்படும். இதுவேயுமன்றிச் சிரவணாதிகளுக்கும், தத்துவ ஞானத்திற்கும், மோட்சத்திற்கும் சாதகசாத்திய பாவசம்பந்தமுண்டென்று மறிக.

காணப்படுகிறபடியினால் நித்தியமென்றும் அதன்காரியமான கடாதிகள் அழிந்து போகின்றபடியினால் அனித்தியமென்றுங் கண்டாற்போலத், தோன்றுகிற தேகாதிசகத்தெல்லாம் பிரமத்தின்காரியமானபடியினால் அனித்தியமென்றும் இவ்வநித்தியமான சகத்திற்குப் பிரமங் காரணமானதால் (கடத்தைநோக்க மண்ணைப்படி நித்தியமோ அப்படி பிரமமே) நித்திய மென்றுங்காணல்வேண்டும்.

வினா:—ஆனால் இத்தேகாதிசகத்து பிரமத்தின் காரியமென்பதற்குப்பிரமாணம் யாது?

விடை:—*ஆத்மாவினின்றும் ஆகாசாதிபஞ்சபூதசகத் துண்டானதென்று யசுர்வேதோபநிஷத்திலே வருணன் பிருகுவுக்குச் சொல்லியிருக்கிறார். ஆதலால் சகத்து பிரமத்தின் காரியமானபடியினால் அநித்திய மென்பதிற் சந்தேகமில்லை. மேலும், சகல சகத்தும் †சாவயமா (உறுப்புடையதா) னபடியினால் ‡அனித்தியமென்று (காரணகாரியங்களின் தன்மையையறிந்த) ஒவ்வொருவரும் கண்டிருப்பதால் (சாவயமுடைய) வைகுண்டாதிகளை நித்தியமென்றெண்ணியிருப்பது புத்திப்பிரமமே (மயக்கமே) யொழியவேறன்று; ஆகையால் நித்திய அநித்தியங்களிரண்டையுஞ் சுருதியினாலும் யுத்தியினாலும் பகுத்தறிகிறதே நித்தியாநித்திய வஸ்துவிவேகமென்று சொல்லப்படும்.

---

* முண்டகோபநிஷத் 2-1-1.

"எரிந்து கொண்டிருக்கிற அக்கினியிலிருந்து அதே ரூபமாய் அனேக பொறிகள் எப்படி யுண்டாகின்றனவோ, அப்படியே அக்ஷர (பிரமம்) த்திலிருந்து பலவித தேகத்தை யுபாதியாயுடைய ஜீவர்களுண்டாகின்றார்கள்; அதனிடத்திலேயே இலயமடைகின்றார்கள்" என்றும்,

யோகசிகோபநிஷத் 4-வது அத்தியாயம்.

"பிரபஞ்சத்திற்கு உபாதன காரணம் பிரமத்தைத்தவிர வேறில்லை. ஆகாசத்தில் நீலத்தன்மையும், பாலை நிலத்தில் ஜலத்தோற்றமும், கட்டையிற் புருஷனென்கிற பிராந்தியும்போலச் சிதாத்மாவிடத்தில் பிரபஞ்சந் தோன்றுகின்றது. வேதாளமென்பதும், கந்தர்வ நகரமென்பதும், ஆகாசத்திலிரண்டு சந்திரனும் எப்படி யில்லையோ, அப்படியே சத்தியமான பிரமத்தினிடத்தில் ஜகத்தினிருப்பு" என்றும் கூறுவதிங் கறியத்தக்கதாம்.

† உறுப்புடையதும் சடமாயிருப்பதும் அநித்தியமாமென்பது நியமம்.

‡ நாசமாகாதிருப்பது நித்தியமென்றும் நாசமடைவது அநித்தியமென்றும் சொல்லப்படும்.

## இரண்டாஞ்சாதனம்.

வினா:—இகமுத்திரார்த்தபலபோகவிராகமாவது யாது?

விடை:—இகலோக பரலோக போகங்களிரண்டும் அநித்திய மாயிருப்பதால் அவைகளில் துச்ச (அற்ப) புத்திசெய்தவற்றை வெறுப்பதாம்.

வினா:—அஃதெப்படி?

விடை:—விவேகிக்கு நித்தியாநித்தியவஸ்துவிவேகத்தினால் புஷ்ப சந்தன *வனிதாதிகளான (அனித்தியவத்துக்களாயிருக்கிற) சகலவிடயங்களிலும் வைராக்கியம் உடனே யுண்டாகுமென்றறி.

வினா:—அஃதெப்படி?

விடை:—†காக்கையெச்சமாதிகளில் யாவருக்கும் அசங்கித புத்தி யெப்படி தோற்றுமோ அப்படியே விடயபோக்கியங்களிலும் அசங்கிதபுத்தியுண்டாம்; ஆனதால் இதுவே தீவிரவிரத்தியென்று சொல்லப்படும்.

வினா:—தீவிரவிரத்திக் கடையாளமென்ன?

விடை:—போகபோக்கியங்களைத் தோஷதிருஷ்டியாய்ப்பார்க்கிறதே அடையாளமென்று பெரியாரால் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒவ்வொருவனுக்கும் தான் பிரவிர்த்திக்கிற காரியங்களில் தோஷங்கண்டபிறகு திரும்பவும் அவற்றில் பிரவிர்த்தி யுண்டாக மாட்டாது. ஆகையால் இகபரலோகங்களிலிருக்கிற பதார்த்தங்களின் உண்மையை நன்றாய் விசாரிக்கவேண்டும். இவற்றுள் எந்த வஸ்துவினுடைய குணத்தை நிச்சயம்பண்ணி விசாரித்தறிகிறபோதும் அந்தவஸ்துவிலிருக்கிறதோஷங் காணப்படும்.

வினா:—அங்ஙனமாயின் அந்தத்தீவிரவிரத்தியை யடைவதெப்படி?

விடை:—மாதாவினுடைய வுதரத்தின் மலமூத்திரமத்தியிலிருந்து விடக்கிருமிகளாற் கடிக்கப்படுதலையும் மூலாக்கினியினால் தகிக்கப்படுதலையும் விசாரித்தவனெவன்தான் வயிராக்கியத்தை யடையான்; மாதாவினது கற்பம்விட்டுதித்ததும் தன்னுடல் மல

---

* வனிதையென்றது யௌவனமாதை.

† "இங்கே காக்கையின் மலத்தைக்கொள்ளுதலெதுவோ அது மலத்தின்மலவடிவமாயிருத்தலால் மிகுந்த அருவருப்புக்கு விஷயமா மென்பதைக் குறிப்பிக்கும் பொருட்டாம்" என்று பாலபோதம் கூறுகின்றது.

மூத்திரங்களிலே மிதத்தல் மல்லாக்காய்ச்சயனித்தல் பதறிவிழுதல் பாலக்கிரகங்களினாற் பிடிக்கப்படுதலான குழந்தைப்பருவத்தை விசாரித்தவ னெவன்தான் வயிராக்கியத்தையடையான்; இதுவுமல்லாமல் பந்துக்களாலும் அன்னியராலும் அடிபட்டுக்கொண்டும் அஞ்ஞானபாவமாகவும் அதிகசஞ்சலமாகவும் அசத்துக்கிரியைகள் செய்துகொண்டிருக்கிற கௌமாரபருவத்தை விசாரித்தவ னெவன்தான் விரத்தியடையான்; மதத்தினால் உன்மத்தனாகவும் பெரியாரை நிந்திக்கிறவனாகவுங் காமாதுரனாகவும் வேளை தப்பின வேளையில் ஸ்திரீகளுடனனுபோகிக்கிற துன்மார்க்கனாகவும் பொருந்தினயௌவனத்தை விசாரித்தவனெவன்தான் விரத்தியடையான்; ரூபஹீனமு (அழகின்மையு)ம் சர்வாவமானமுஞ் சர்வத்திலுந் தீனத்துவமும் (இஷ்டமும்) புத்திக்குறைச்சலுமா யிருக்கிற மூப்பில்தன்னை வந்தடுத்ததுர்த்தசைகளை விசாரித்தவ னெவன்தான் விரத்தியடையான்; வாத பித்த சுரங் குன்மம் லயம் சூலை சேஷ்ப முதலான ரோகங்களினாற் பிறந்த தீவிரதுக்கமும், சரீரதுர்க்கந்தமும், மனது வசமாகாம லிடைவிடாதலைகிற கவலையுமாகிய மூப்பை விசாரித்தவ னெவன்தான் விரத்தியடையான்; சீவத்துவம் பேதிக்கிறபோது எமனைக்கண்டாற்போலிருக்கிற பயமும், அதனாலுண்டான நடுக்கமும், ஊர்த்துவ (மேல்) சுவாசம் விடுகிறபோது சேஷ்பத்தில் தட்டுப்படுதலா லுண்டாகும்வேதனையும் பொருந்திய பிராணப்பிரயாண காலத்திலுள்ள துக்கத்தை விசாரித்தவ னெவன்தான் விரத்தியடையான்; சகலதத்துவங்களுமொடுங்கி இந்திரியங்கள் வலிகுறைந்து அந்தக்கரணவிருத்தியழிந்து அஞ்ஞானாந்தகாரத்திலமிழ்ந்திச் சுழலுகின்ற மரண வேளையிலுண்டாகும் அவத்தைகளை விசாரித்தவனெவன்தான் விரத்தியடையான்; பிராணன் பிரிந்தபோது நெருப்பாற்றிலுந் தகிக்கப்படாநின்ற பாறையிலும் கும்பிபாகமென்னும் நரகத்திலும் அசிபத்திரமென்னும் வனத்திலும் யமதூதர்களால்தண்டிக்கப்படுதலா லுண்டான வாதனைகளை விசாரித்தவனெவன்தான் விரத்தியடையான்; புண்ணியம் பண்ணினவர்கள் பரலோகமாகியசுவர்க்கத்தில் நக்ஷத்திரரூபமாகவிருந்து அந்தப்புண்ணியம் க்ஷயமானவுடனே தேவதைகளால் தள்ளப்பட்டுத் தேகங்கள்சிதறப் பூமியில் விழுதலை விசாரித்தவனெவன்தான் விரத்தியடையான்; வாயு அக்கினி சூரியன் இந்திரன் முதலாகிய தேவதைகளும் ஈசுவராக்கினை நியமநத்தினால் கலக்க முள்ள மனதோடு கூடினவர்களாய்ச் சத்துருக்களினாலடிபடுகிற துக்கத்தை

விசாரித்தவ னெவன்தான் விரத்தியடையான்; பிரமதேவன்முதல் சக்கிரவர்த்திகள் பரியந்த மிருக்கிற ஆனந்த தாரதம்மியங்கள் உபாதியினாலாக்கப்பட் டிருந்தலால் இவை வாஸ்தவமல்லவென்று ஆலோசித்தவ னெவன்தான் விரத்தியடையான்; சாலோக சாமீப சாரூப முதலாகிய பதவிகள் புண்ணிய கன்மவசத்தினு லுண்டாயின வாதலால் இந்தக்கன்மத்தினுல் கிடைத்த சாலோகாதிகளுக்கும் நித்தியத்துவங் கூடாவென்று விசாரித்தவ னெவன்தான் விரத்தியடையான்; பரலோகத்தில் தாரதம்மிய (ஏற்றக்குறைச்சலான) கதிகளிருந்தாலும் இகலோகத்திலெப்படி துக்கமுண்டோ அப்படியே அந்தப்பரலோகத்திலும் துக்கமுண்டென்று விசாரித்தவனெவன் தான் விரத்தியடையான்; உலகத்தில் விவேகிகளாயிருக்கிற புருடர்களுக்குள் நசிக்கப்பட்டவற்ப சுகங்களாயிருக்கிறகதிகளை நன்று யிடைவிடாமல் அனித்தியமாய்ப்பார்க்கிறவ னெவன்தான் அவைகளிலாசையைவைப்பான்? ஈதறியாமல் அஞ்ஞானிகள் வியர்த்தமாய் மோகத்தினுலவற்றைச் சுகமென்றெண்ணி யிருக்கிறார்கள். கிரக தார தனங்களையுண்மையாய் விசாரிக்கிறபோது அவைகளில் சுகமென்ன விருக்கின்றது? இவற்றினைமாயையென்னும் இருளினுல் மறைபட்டிருக்கிற கண்ணுடைய அவிவேக அஞ்ஞானிகளே மோகிப்பார்கள். ஆகையால் போக்கியங்களான தாரதனுதிகள் அத்திப் பழம்போ லிருக்குமென்றறி.

வினு:—அஃதெப்படி?

விடை:—அத்திப்பழத்தைப் பிட்டுப்பார்க்கிறதற்குமுன்னர் அஃதழகுள்ளதாகவும் புசிக்கிறதற்கு யோக்கியமாகவுமிருக்கிறதெப்படியோ வப்படியே சகலபோகபோக்கியங்களுமாம். ஆனதால் அவை விசாரித்தவிவேகிகளால் ஒருகாலும் புசிக்கப்படுவன வல்ல. நண்டானது தண்ணீர்வற்றிப்போயுந் தானிருக்கிற குழியைவிட்டு அப்புறம்போகமாட்டாமல் அக்குழியில்தானே யெப்படியிறந்துபோகுமோ அப்படியே அவிவேகியும் கிரகாதிசுகங்களிலழுந்தி அவற்றைவிட்டுப் பிரியமாட்டாமல் பிராந்தியினுலிறக்கிறன். கோசாகாரப்புழுவானது தன்னிடத்திலுண்டான நூலாலே தன்னை ரக்ஷிக்கவேண்டிக் கூடுகட்டி வெளிப்படவழியில்லாமல் மூடிக்கொண்டு தானும் அதிலிருந்திறக்கிற தெப்படியோ அப்படியே புத்திர களத்திர மித்திரர்களிடத்தில் சினேகானுபந்தக் கூட்டுறவினுல் மறைபட்ட கிரகத்தனுனவன் ஒருகாலும் இந்தப்

பந்தத்தினின்று விடுபடமாட்டாமல் கிரகாதிகளிலிருந்து வியர்த்தமாயிறந்து போகிறான்; அப்பா! இந்தக்கிரகாதிகளுக்குங்காராகிரகத் (காவற்கூடத்) துக்கும் நன்றாய் விசாரிக்கும்போது வேற்றுமையென்னவிருக்கின்றது? ஆதலால் காராகிரகமுங் கிரகாதிகளுமாய இரண்டுஞ்சரியே (தம்முள் ஒப்பனவே).

வினா:—அஃதெப்படி?

விடை:—காராகிரகமானது புருடப்பிரவிர்த்திக்கெப்படி விக்கினமோ, அப்படியே கிரகாதிகளும் மோட்சத்துக்கு விக்கின (தடை)மாம்.

வினா:—அஃதெப்படி?

விடை:—கிரக ஆசையே காலில் தளையப்பட்டவிலங்கு; ஸ்திரீ ஆசையே கண்டபாசம்; தன (பொருள்) ஆசையே சிரசில் விழுகிற பேரிடியாய்ச் சாட்சாத் பிராணாந்த வேதனையாயிருப்பது. ஆகையால் இவ்வாசைகளாய அனேகபாசங்களினாற்கட்டப்பட்ட (பாசத்தையுடைத்தான) வனெழுந்திருக்கமாட்டாமல் காமக்குரோதாதிகளாகிய காவற்காரர்களாற் சூழப்பட்டு அகோராத்திரமும் மோகமாகிற ஆவரணத்தினால்மறைக்கப்பட்டிருக்கிற சமுசாரமாகிறவிலங்கு(மிருகக்) கூட்டத்தில் இருந்து இடரென்னும் கைகளால் பரவசனாவான். அவனெப்படி வெளியேவருவான்? மேலும், காமாந்தகாரத்தினால் மறைபட்ட கண்ணுடையவன் குரூபியாயிருக்கிற ஸ்திரீயையும் மோகிக்கிறான்.

வினா:—அஃதெப்படி?

விடை:—அந்தகனுடைய திருஷ்டிக்கு நல்லது பொல்லாதது என்பவைகளிலெப்படி விசாரணையில்லையோ அப்படியென்றறி.

வினா:—ஆனால், ஸ்திரீலட்சணமாவது யாது?

விடை:—சிலேஷ்மம் (சளி) ஒழுகுகிற நாசியும், பீளை தள்ளுகிற நேத்திரமும், வேர்வைவடிகிற சந்துகளும், மலமூத்திர நிறைந்து துர்க்கந்தம் வீசுகின்ற வுடலும், மற்றுமுள்ள துர்க்குணங்களும் இத்தன்மையனவென்று மனத்தினால்நினைக்கவுங்கூடா. இப்படிக்கொத்த சொரூபமானது நல்ல புத்தியுள்ளவர்களுடைய பார்வைக்கு எப்படி பாத்திரமாகப்போகின்றது? விட்டிலானது தூரக்கண்ட அக்கினி ஜ்வாலையில் ரமணீயபுத்தியைவைத்து அதில் வந்து விழுந்து எப்படி மடியுமோ அப்படியே மனுஷனும் காமனால் ஸ்திரீயை ரம்மியமாகக்

கண்டு மூடதிருஷ்டியினால் மடிந்து போகிறான்; மாமிசம் அத்தி மச்சை மல மூத்திரங்களினால் நிறைந்தபாத்திரமாயிருக்கிற ஸ்திரீயை ரமணீயமாய்ப்பார்க்கிறான். ஆதலால் அப்படி கண்கெட்டவன் சூட்சும மார்க்கமாயிருக்கிற முத்தியை யெப்படி யறியப்போகிறான்? சாட்சாத் காமனே யமனாகையால் விவேகிகளாயிருக்கிற முமுட்சுக்களுக்கு ஸ்திரீகளே யமாலயமாம். ஆதலால் மனிதர்களுக்கு யமாலயத்திலாவது வீட்டிலாவது தாபத்திரயமாகிற கிலேசங்கள் நிவிர்த்தியாதலில்லை; அதிலும் கிரகத்திலிருக்கிற மனிதன்செத்துப் போகிறபோது தாபத்திரயம் அதிகரித்தலைக்கண்டும் மூடபுத்தியினால் கிரகாதிகளைச் சுகம்போலெண்ணுகிறான். மேலும், உலகத்தில் யமனுக்கும் காமனுக்குந் தாரதம்மியம் விசாரிக்குமளவில் வெகுவித்தியாசமுண்டு.

வினா:—அஃதெப்படி?

விடை:—யமனானவன் சத்துருவாயிருந்துகொண்டு பாவங்களைச் சோதித்து நன்மையைக்கொடுக்கிறான். காமனானவன் பிரியனாயிருந்துகொண்டு அனர்த்தத்தைக்கொடுக்கிறான். அதிலும் யமனானவன் பாபிகளுக்குத் துன்பத்தைக்கொடுத்துப் புண்ணிய புருஷர்களுக்குச் சுகத்தைக்கொடுக்கிறான்; காமனானவன் சற்புருஷர்களுக்குங் கூடப் பிரியனாயிருந்துகொண்டு நன்மார்க்கத்தைக் கெடுக்கிறான். ஆதலால் அசத்தாயிருக்கிறபேரைக் கெடுப்பதுபற்றிக்கேட்கவேண்டியதில்லை. பிரமாவானவர் பிரபஞ்சவிருத்தியைக்கோரிச் சிருஷ்டிவிருத்தியாகக் காமனையுண்டாக்கினார். அந்தக்காமனால் உலகம் மோகிக்கப்பட்டுச் சந்திரனைக்கண்ட கடல் எப்படி பொங்குமோ அப்படியே பிரவிர்த்தியாகின்றது. சகத்தைப் பிரமிக்கச்செய்கிற காமனென்பவன் ஸ்திரீ புருஷர்களுடைய மனத்திற் குடியாயிருந்துகொண்டு சரச சல்லாப லீலைகளைச் செய்வித்து அன்னியோன்னிய மோகமுண்டாக்கிக் காமாந்தகாரத்தினால் ஒருவர்க்கொருவரை ஆசையாகிறகயிற்றினாற் கட்டிப் பிரபஞ்சத்தை விருத்தியடையப் பண்ணிப் பிரமதேவனுக்கிச்சையை நிரப்படுத்துகிறான். ஆதலால் சகல சந்துக்களுடைய மனதிலுங்குடியாயிருக்கிற காமவேகத்தினால் போகத்தினிடத்தில் சதா ஆசையானது சித்தமாயிருக்கின்றது. அப்படியில்லாவிட்டால் அறியாதபதார்த்தங்களி லெப்படி ஒருவன் பிரவிர்த்திக்கப்போகிறான். சகலசந்துக்களுக்கும் ஆசையே மிகுதியாயிருத்தலால் இந்தத்தேகமரித்தாலும் ஆசையானது குறைகிறதில்லை. ஆதலால், விவேகிகளுக்குள் எவன் விடயங்களிடத்தில் தோஷ

மிருத்தலைக்கண்டு அதிலழுந்தின புத்தியையும்விட்டுக் காமபாசத்தில் நின்றும் விடுபடுகிறானோ அவனே முத்திமார்க்கத்திற் கூடுவான்.

வினா:—ஆனால், சற்புருஷர்கள் காமனைச்செயிக்கும் உபாயமெப்படி?

விடை:—நினைப்பாகிற சங்கற்பத்தை விடுகிறதே சுலபமான உபாயம். அப்பா! இதுவல்லாமலும் கேட்கப்பட்டுங் காணப்பட்டுமிருக்கிற எந்தயோக்கிய வஸ்துவினிடத்திலும் நன்மையென்கிறபுத்தியைவிட்டால் காமப்பிரவிர்த்தியுண்டாகிறதற்கேதுவில்லை. காமனுக்கு வித்து சங்கற்பம். அந்தச்சங்கற்பந்தினாற் சகலப்பிரவிர்த்தியு முண்டாகும். ஆதலால் வித்தைக் கெடுத்தால் முளை யெப்படி யுண்டாகிறதில்லையோ அப்படியே சங்கற்பநாசத்தினால் காமனும் நாசமாவான். மனிதனானவன் போகபோக்கியங்களில் நல்லது என்கிற புத்தியினாற் பிரவிர்த்திக்கின்றானே தவிர ஆசையினால் பிரவிர்த்திக்கின்றானில்லை. ஆதலால் காமனைச் சயிக்கவேண்டுமென்கிற இச்சையுள்ளவன் விஷயங்களிடத்தில் நல்லதென்கிற புத்தியைத் தவிர்க்கவேண்டும்.

வினா:—சங்கற்பம் பிறவாதிருக்கிறதற்குக்காரணம் யாது?

விடை:—விஷயத்தினுண்மையை யதார்த்தமாய்க் காண்பதும், அதனை அனர்த்தமாயெண்ணுவதுமான இவ்விரண்டினாலும் காமப்பிரவிர்த்திக்கு அவகாசமில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—மாணிக்கத்தைக் கல்லாய்ப் பார்த்தவனுக்கு அதனால் பயந்தோன்றாது; அது நல்லது என்கிற புத்தியுமுண்டாதலில்லை; அதைக் கிரகிக்கவேண்டுமென்கிற புத்தியுமுண்டாகிறதில்லை. ஆகையால் ஒருவஸ்துவினுண்மையை யதார்த்தமாய்ப் பார்க்கிறதும் அனர்த்தமா யெண்ணுகிறதுமே சங்கற்பரூபமாயிருக்கிற காமன் பிரவிர்த்தியாகாதிருக்கிறதற்கு உபாயமாம்.

வினா:—இனித் தனலட்சணமாவது யாது?

விடை:—அது பயங்களுக்கெல்லாமிருப்பிடமாகவும், சதாகாலமுந் துக்கத்தை வளர்ப்பிக்கிறதாகவும், மிகவுங் கர்வத்தைக்கொடுக்கிறதாகவும், பந்துக்களுடைய பகைப்பையுண்டுபண்ணுகிறதாகவும், சற்குணத்தைக் கெடுக்கிறதாகவும், உலோபிகளுடைய சித்தத்தினால் வணங்குவதாகவும், முத்திவழியைக் கெடுக்கிறதாகவும், அந்தக்கர

ணத்துக்கு மலினத்தைக் கொடுக்கிறதாகவுமிருக்கும்; இதுவேயுமன்றி இராசாக்களால் பயமுஞ்சோரர்களால் பயமும் அசதிமறதியினால் பயமும் தாயாதிகளால் பயமுமாயிருக்கிற தனமானது பயத்தினால் மூழ்கி அனர்த்தத் (துக்கத்) துக்கெல்லா மூலமாயிருக்கிறபடியினால் சற்புருஷர்களுக்குச் சுகங்கொடுக்கமாட்டாது.

வினா:—அஃதெப்படி?

விடை:—தனத்தைச் சம்பாதிக்கிறதினாலும், இரட்சிக்கிறதினாலும், தானம்பண்ணுகிறதினாலும், செலவழிக்கிறதினாலும், மனுஷனுக்குச் சதா துக்கமாம். இங்ஙனம் அது துக்கங்கொடுப்பதால் தனம் சுகத்துக்குச் சாதனமாகமாட்டாது. மேலும், சற்புருஷர்களுக்குக்கூடத் தனலாபம் வருமானால் அஃதவர்களுக்கு லோபத்தைக்கொடுக்கும்; அந்தலோபத்தினால் விவேகங்கெட்டுப்போம்; விவேகங்கெட்டுப்போனால் அவர்கள் நசித்துப்போவார்கள். மேலும், தனமானது கிடையாமற்போனால் மனோதுக்கமுண்டாகும்; கிடைத்ததென்றால் லோபம் அவர்களைத் தகிக்கும்; ஆகையால் சதா விசனத்தைக்கொடுக்கிற தனமானது எவனுக்குத்தான் சுகத்தைக் கொடுக்கப்போகிறது? மனுஷனுக்குத் தனமானது போகத்தினால் மதங்கொடுக்கும்; தானஞ்செய்தால் பிறப்பைக்கொடுக்கும்; இந்த இரண்டுவகையிலுமிவனுக்கு நல்லகதி கூடாமல் வியர்த்தமாய்ப்போகின்றது. ஆகையால் தனத்தினால் மதம்விருத்தியாகும், மதத்தினால் நினைவுகெட்டுப்போம், நினைவுகெட்டால் புத்திகெட்டுப்போம், புத்திகெட்டால் தானுங்கெட்டுப்போவான். தனமானது சுகங்கொடுக்குமென்று ஆசையாகிறபாசத்தினால் திடமா யாலிங்கனம்பண்ணப்பட்டு அந்தத் தனசமீபத்திலே சதாகாலமுமிருந்து பார்த்திருக்கு மூடர்களுடைய பிராணனைத் தனம் போகிறபோது கூடவே கொண்டுபோய்விடும். தனசம்பன்னனானவன் அந்தகன்போல முன்பின் தோன்றாமல் சற்புருஷர்களால் வர்ச்சிக்கப்பட்டுந் துன்மார்க்கங்களிற் சுழன்றும் துன்மார்க்கக் கூட்டுறவோடேகூடி யடிக்கொருமுறை தடுமாறப்பட்டும் முடிவில் அந்தகார கூபத்தில்விழுவான். இப்படிப்பட்ட தன சம்பன்னக்குருடனுக்குக் கண்துலக்கு மவுடதம் தரித்திரமாகிய மையேயாம். மேலும், லோபமுங் குரோதமும் டம்பமும் மத மார்ச்சரியமும் தனங்கிடைத்த மாத்திரத்தினால் வர்த்திக்கும். இப்படி வர்த்திக்கச்செய்யும் தனம் சித்தநிருமலத்தை யெப்படிக்கொடுக்கும்? இந்தத்தனமானது கிடையாமற்போனாலுமிரட்டிப்

புத் துக்கம், கிடைத்த தனஞ் செலவாகக்கண்டால் அதைவிட இரட்டிப்புத் துக்கமாம், விவேகிகளுக்குத் துர்விஷயத்தில் செலவுவந்தால் அதைவிட இரட்டிப்புத் துக்கமாம்; இப்படி சதா கவலையைக் கொடுத்துப் பயத்தை யிடைவிடாமல்செய்கிற தனத்தினால், தன் கிரகத்திலே சர்ப்பமிருந்தால் அந்தவீட்டிற் சஞ்சரிக்கின்றவனுடைய சித்தமெப்படி நிலைக்காதோ அப்படியே, சித்தம் நிலைக்கமாட்டா தென்றறி.

வினா:—இனித் தனமில்லாதவனுடைய லட்சணமெப்படி?

விடை:—மனுஷர் சஞ்சாரமில்லாதவனத்திலும் மனுஷர்வாழ்கிறபட்டினத்திலும் கள்ளர் சஞ்சரிக்கிற விடத்திலும் மனுஷர்கூடியிருக்கிறவிடத்திலும் மனுஷரில்லாதவிடத்திலுந் தரித்திரமடைந்தவன் சௌக்கியமாய்ச் சகலசனங்களாலும் ஆதரிக்கப்பட்டுச் சுகமாயிருப்பான். தனமுள்ளவன் சதாகவலைபொருந்திய புத்தியோடே தான்பெற்ற பிள்ளையினிடத்திலும் பயப்பட்டுச் சதா கிலேசத்தையடைவன். ஆதலால் தனமானது அனந்ததுக்கத்துக்கு இருப்பிடமாகையால் இந்த அர்த்த(தன)த்தினால் பிரதிகூலமே தவிரப் புருஷார்த்த சித்தியில்லையென் றறிந்த ஞானிகளானவர்கள் அர்த்தத்தை விட்டொழிந்து வனமேபோய்விடுவார்கள். இதுவுமல்லாமல் புத்தி விசுவாசகுணம் பொருந்தின கிரியையுடனே பெரியோர்களுக்குச் சம்மதியாய் நடக்கிற புத்திரர்களையும் தானத்துக்கும் போகத்துக்குமனுகூலமாயழியாம லிருக்கிற தனத்தையும் லட்சுமிகடாட்சம் பொருந்திய கிரகத்தையும் சற்புருஷர்கள் சுருதியினாலும் அனுபவத்தினாலும் அநித்தியமென்றெண்ணி விட்டொழிவார்கள். அஞ்ஞானிகள் நித்தியமென்றெண்ணி மோகமாகிற சமுத்திரத்தி லழுந்திப்போவார்கள். எவர்கள் மலக்கூட்டமாயிருக்கிற கிரகத்தைச்சுகமென்றெண்ணி மலத்திலிருக்கிற புழுக்களைப்போல் க்ஷேத்திரபாத்திரவாசையினால் அவற்றைத் தேவதாசரீரம்போலெண்ணி வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு ஒருகாலும் மோட்சமென்கிற சொல் காதிலுங்கேட்கக்கிடையாது. அது திரும்பவுங் கற்பவாசாதி துக்கங்களைக்கொடுக்கும். எவர்கள் தார புத்திர தனங்களிலிருக்கிற ஆசையை யொழிக்கிறார்களோ அவர்களுக்கே மோட்சம் சித்திக்குமன்றி மற்றவர்களுக்குச் சித்தித்தலில்லை. ஆதலால் ஈசுவரார்ப்பண புண்ணியகன்மங்களினால் பாவங்களை யத்தியந்தம் போக்கடிக்கிறவர்களாயும் வேதத்திற்சொன்ன அர்த்தத்திற் பிரவிர்த்திக்கிறவர்களாயும் சித்தசுத்தியுள்ளவர்களாயும் புத்திசாலிகளாயும் நித்தியா

நித்திய பதார்த்தசோதனையை யன்புடனேயடிக்கடி செய்கிறவர்களாயும் அதனாலுண்டாகிற மகாவைராக்கியமென்கிற வாளைப்பொருந்தினவர்களாயும் மோட்சமொன்றே வேண்டுமென்கிற அபேட்சையோடு கூடினவர்களாயுமிருக்கிற சந்நியாசிகளுக்குச் சமஸ்த விஷயங்களிலும் படர்ந்திருக்கிற ஆசையாகிறகொடியை யறுக்கிறது சுலபம். மேலும், பலமாயிராநின்ற இந்தச் சமுசாரமிருத்தியுவான கோட்டைக்குப் பெரிதாகியவாசல்கள் மூன்றுண்டு.

வினா:—அவை யெவை?

விடை:—அவை காந்தை கனகம் சிங்குவை யென்பனவாம். எவன் இந்த மூன்று வாசல்களையும் அடைகிறானோ அவனுக்கு மிருத்தியுபயமில்லை. மோட்சலட்சுமி நகரத்துக்கு ஒருவரும் பிரவேசிக்காதபடிக்கு இருக்கிற முதல்வாசல் ஒன்றுண்டு; அந்த வாசலானது தனம் ஸ்திரீயென்கிறவிரண்டு கதவினால் மூடப்பட்டுக் காமனென்கிற தாழ்ப்பாட்டுப்பூட்டியிருக்கும். எந்தத்தீரன் இந்த மூன்றையும் பிளந்தெறிந்து போகிறானோ அவனே மோட்சலட்சுமியின் சுகபோகத்தை யனுபவிக்கிறதற்கு யோக்கியனாவான். ஆகையால், விவேகமாகிற பரி(குதிரை)யின்மேலேறிக்கொண்டு தீவிரவைராக்கியமாகிற வாளைத்தரித்துக்கொண்டு சுகதுக்கம் லாபநட்டம் முதலியவை வந்தாலுஞ் சமமாய்ப் பொறுத்துக்கொண்டிருக்கிற உபசாந்தனுக்குச் சத்துருவில்லை. விவேகத்தினாலுண்டான தீவிரவைராக்கியந்தானே மோட்சத்துக்குநிலைக்கடை யென்றுசற்புருஷர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், மோட்சம் வேண்டுமென்று இச்சிக்கின்ற புருஷனானவன் முன்னர்த்தீவிரவைராக்கியத்தைப் பிரயத்தனம் பண்ணியாகிலுஞ் சம்பாதிக்கவேண்டும். எந்தப்புருஷனானவன் வைராக்கியமில்லாதிருக்கிறானோ அவன் தேகாதி பந்தங்களை விட்டொழியமாட்டான். ஆதலால், வைராக்கியமானது பந்தங்களை யறுக்கிறதற்கு ஒருவாளாகும். யமாலயம்போலிருக்கிற வீட்டில் மகாபெரியவர்களா யிருந்தாலும் அவர்கள் வைராக்கியமில்லாதபடியினால் தாபத்திரயங்களால் இடைஞ்சல்பட்டுக் கிலேசிப்பார்கள். ஆகையால், பிரயத்தனம்பண்ணியாகிலும் இந்தத் தீவிரவிரத்தியைச் சம்பாதிக்கவேண்டுமென்றறி.

## மூன்றாஞ் சாதனம்.

வினா:—இனிச் சமாதிசட்கசம்பத்தியாவதென்ன?

விடை:—சமம், தமம், உபரதி, திதீட்சை, சிரத்தை, சமாதானமாகிய ஆறுமே சமாதிசட்க சம்பத்தியென்று சொல்லப்படும்.

வினா:—இவற்றுள் சமமாவது யாது?

விடை:—மனது தன்னிட்டத்தி லொருமைப்பாடா யிடைவிடாமல் நிலைத்திருப்பதே சமமென்று சொல்லப்படும். மேலும், இந்தச்சமமானது உத்தமசாந்தி மத்திமசாந்தி அதமசாந்தியென மூன்றுவிதமா யிருக்குமெனப் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

வினா:—இவற்றுள் உத்தமசாந்தியாவது யாது?

விடை:—மனமானது (சங்கற்பவிகற்பவடிவ) விகாரமொழிந்து லட்சியவஸ்துமாத்திரமாய் நிலைத்திருப்பதே பிரமநிர்வாணலட்சணமான உத்தமசாந்தியென்று சொல்லப்படும்.

வினா:—மத்திமசாந்தியாவது யாது?

விடை:—பிரத்யகான்மசொரூப வனுட்டானத்தைச் சதாவனுசந்தானம்பண்ணுவதே சுத்தசத்துவலட்சணமான மத்திமசாந்தியென்று சொல்லப்படும்.

வினா:—அதமசாந்தியாவது யாது?

விடை:—விஷய வியாபாரத்தைவிட்டுச் சிரவணமனனாதிகளைச் செய்துகொண்டிருப்பதே மலினசத்துவலட்சணமான அதம சாந்தியென்று சொல்லப்படும். இச்சமத்திற்கு முன்னங்கமென்றும் பின்னங்கமென்று மிரண்டங்கமுண்டு. அவ்விரண்டங்கமும் பொருந்தினு லிந்தச்சமமானது சித்திக்கும்; பொருந்தாவிட்டால் சித்தியாது.

வினா:—அவை யெவை?

விடை:—தீவிரவைராக்கியமே முன்னங்கமென்றும், சீவகாருண்ணிய முதலானவைகளே பின்னங்கமென்றும் சொல்லப்படும். ஆயினும், இந்தச் சமமானது காமக் குரோத லோப மோக மத மாச்சரியங்களென்னும் ஆறு சத்துருக்களும் எவனால் சயிக்கப்படவில்லையோ அவனுக்குச் சித்தியாகமாட்டாது; சத்தாதிவிடயங்களை விஷம்போலெண்ணி அவற்றைத் தீவிரமோட்சவிச்சையினால் திரும்பிப்பாராதிருத்தலெவனுக்கில்லையோ அவனுக்கும் சித்தியாகமாட்டாது; எவனால் ஈசுவரன் ஆராதிக்கப்படவில்லையோ, எவனுக்குக்குரு கடாட்சமில்லையோ, எவனுடைய சித்தம் நின்மலமாகவில்லையோ, அவனுக்கும் சித்தியாகமாட்டாது. ஆகையால் மனது நிருமலமாகும் பொருட்டுப் பெரியவர்களாற் சொல்லப்பட்டிருக்கிற இந்தச்சமமானது சித்தித்தால் மனது நிருமலமாகும்; சித்தியாவிட்டால் நிருமல

மாகாது. பிரமசரியமும் அயிம்சையும் பூததயவும் வணக்கமும் உடைத்தாயிருத்தலும், விஷயாசக்தியும் அநாசாரமும் டம்பமும் அசத்தியமும் மமதையும் தயிரியமும் தேகாபிமானமு மில்லாதிருத்தலும், ஈசுவரத்தியானம் பண்ணுகிறதும், பிரமவித்துக்களுடன் சாவகாசம் செய்கிறதும், ஞானசாத்திரார்த்தங்களை அருமைப்பாடாய் விசாரிக்கிறதும், சுகதுக்கங்களைச் சமமாய்ப்பார்க்கிறதும், சதா ஏகாந்த விருத்தியாயிருக்கிறதும், மோட்சவிச்சையுமாகிய இவை முதலானவை எவனுக்குண்டாயிருக்குமோ அவனுடைய சித்தம் நிருமலமாகும். எவனுடைய சித்தம் இவையில்லாமல் பலவழியில் சுழலுகின்றதோ அவனது சித்தம் நிருமலமாகமாட்டாது. மேலும், ஸ்திரீகளை நினைக்கிறதும், பார்க்கிறதும், அவர்களுடைய குணதர்மங்களைக் கவனிக்கிறதும், அவர்களை நன்மைக்குணமுடையவர்களென்றெண்ணுகிறதும், அவர்களிடத்திற் பிரீதியும், அவர்களிடத்தில் வசனிக்கிறதும், அவர்களுடைய கூட்டுறவும், அவர்களைக்கலக்கிறதுமாகிய இவ்வெட்டுவிதமும் மைதுனமென்றும் அதற்கு விலட்சணமான சித்தம் நிருமலமான பிரமசரியமென்றும் சொல்லப்படும். ஆகையால், மனோவாக்குக்காயங்களினால் உயிர்களைப்பீடியாமலிருப்பதும், பூததயவும், திரிகரணசுத்தியாய்ச் சதாவணக்கமும், ஐசுவரிய தபசு ரூப குல வர்ணாசிரமாதிகளினால் அகங்காரம் பிரவிர்த்தி யாகாதவாறு அதனை விட்டொழிகிறதும், குரு வேதாந்த வாக்கியார்த்தங்களில் திட நிச்சயமும் எவனுக்கிருக்குமோ அவனுக்கு மனசு நிருமலமாமென்றறி.

வினா:—இனித் தமமாவது யாது?

விடை:—பிரமசரியாதி தர்மங்களில் சித்தம் யேகாக்கிரமாயிருந்து சத்தாதி விஷயங்களில் இந்திரியங்கள் செல்லாதபடி நிறுத்துகிறதே தமமென்று சொல்லப்படும். மேலும், இந்திரியங்களைப் பிரவிருத்திவிஷயங்களிற் செல்லாமல் நிறுத்துகிறதே சித்தசாந்திக்குச் சாதனமான தமமென்று யோகிகளாற் சொல்லப்பட்டிருக்கிறது.

வினா:—அஃதெப்படி?

விடை:—இந்திரியங்கள் விஷயங்களிற் செல்லும்போது மனதும் வாயுவும் அவற்றின் வழியாய்ப்போகும். ஆகையால், இந்திரிய நிக்கிரகம்பண்ணினால் மனம் வெளியிலே போகிற வேகமொடுங்கிச் சாத்விக பரவசத்தையடைந்து நிருமலமாகும். ஆதலால், மனப்பிர

காசத்துக்கடையாளம் இந்திரியங்களை விஷயங்களிற் செல்லாதபடி
நிறுத்துகிறதேயாம். அப்படி நிறுத்தினால் மனதுக்குப் பாகியார்த்த
போகங்களொழியும். அப்போது சித்தமானது தன்னுடைய மலின
பாவங்களொழிந்து மெள்ள மெள்ளச்சாந்தியை யடையும். ஆகை
யால், சித்தத்தினுடைய பாகியார்த்தபோகங்களை விட்டொழிகிறதே
மோட்சமாமென்று மோட்சலட்சணத்தை யறிந்தபெரியோர்கள்
சொல்லுவார்கள். ஆதலால், முமுட்சுக்களுக்கு மனோநிருமலமாகிற
தற்குச் சுலபமானது தமத்தைத்தவிர வேறொன்றில்லை. மேலும்,
இந்தத்தமத்தினால் மனசுக்கு நிச்சலமும் நிருமலமு முண்டாகும்.
மனவொடுக்கத்திற் கேதுவான பிராணாயாமத்திற்குத் திக்குத் தேச
கால முதலான நியமமும்வேண்டும். புத்திமானாயிருக்கிறவன் இதனை
யொழித்துச் சித்தசாந்தி யடைவதின் பொருட்டுச் சோம்பலில்லா
மல் இந்தத் தமத்தையே அப்பியாசிக்கவேண்டும். இந்தத் தமாப்
பியாசத்தால் சகல இந்திரியங்களுடையபோக்கை நிறுத்துகிறதி
னாலும் போகபோக்கியங்களைத் தோஷ திருஷ்டியாய்ப் பார்க்கிறதி
னாலும், சுவாமப்பிரசாதத்தினாலும், குருப்பிரசாதத்தினாலும்
கொஞ்சகாலத்தில் சித்தம் சாந்தியடையும்.

வினா:—இனித் திதிட்சையாவது யாது?

விடை:—பிராரத்தகன்ம வேகத்தினால் ஆதியாத்மீகம் ஆதிபவு
திகம் ஆதிதெய்வீகமாகிய தாபத்திரய துக்கங்கள் தன்னை வந்த
டைந்தாலும் அவைகளை யெண்ணாமல் பொறுக்கிறதே திதிட்சை
யென்று சொல்லப்படும். முமுட்சுக்களுக்குத் திதிட்சைக்குச் சமான
மான அங்கரட்சை (தேகங்காப்பு) வேறொன்றில்லை. ஆகையால் தீர
புருஷர்கள் இந்தத் திதிட்சையைக் கவசமாகத்தரித்துக்கொண்டு
சகல விக்கினங்களையுந் திரணீகரித்து மாயையையச்சயிப்பார்கள். இந்
தத் திதிட்சையுள்ளவர்களுக்கே யோகசித்தியும் மோட்சசாம்பிராச்
சிய லட்சுமீகரபோக சித்தியுமுண்டு. எப்படிப்பட்டவர்களாயிருப்
பினும் அவர்கள் திதிட்சையில்லாதவரையில் விக்கினங்களால் அடி
பட்டு மரத்திலுள்ள இலைகள் பிரசண்டவாயுவினாலே யெப்படி பூமி
யில் உதிர்ந்துபோகுமோ அப்படியே துக்காதீனமாகி விடுவார்கள்.
திதிட்சையுள்ளவன் தபசு யக்கியம் தீர்த்தம் விரதம் கேள்வி ஐசுவரி
யம் சுவர்க்கம் மோட்சமுதலானவைகளில் எவைகளை யிச்சிக்கிறா
னோ அவைகளையடைவான். இதுவன்றியும் பிரமசரியம், அயிம்சை,
சாதுக்களைப் பூசித்தல், பிறர்பழிக்கிறதைப் பொறுத்தலாகிய இவை
களெல்லாந் திதிட்சையுண்டானவனுக்கே சித்திக்கும். இந்தத் திதிட்

சையானது சகல சாதனங்களிலும் உத்தமசாதனமாம். ஆகையால், எந்தத்தாபத்திரய விக்கினங்களும் இதனால் நிவாரணமாம். ஆதலால், தனக்குவருகிற துக்கங்களைத் திதீட்சையினால் பொறுத்துக் கொண்டு சத்தியானுசாரமாய் மெள்ள மெள்ளச்சிரவணாதிகளைப் பிரயத்தனம்பண்ணி யடையவேண்டும்.

வினா:—அப்படி பிரயத்தனம்பண்ணித் திதீட்சை சாதித்ததற்குப் பிரயோசன மென்ன?

விடை:—பிராரத்தகன்மவேகத்தினால் தனக்குவந்த துக்கங்களைப் பொறுக்கிறதே பிரயோசனமாம்.

வினா:—இனி உபரதியாவது யாது?

விடை:—சித்தசுத்திக்குச் சாதனங்களாய்க்கண்ட நித்திய நைமித்தியாதி சகல கன்மங்களையும் வைராக்கியமென்கிற விதியினால் விட்டொழிக்கிறதே சந்நியாசமென்றும், உபாயமென்றும் சற்புருஷர்களுக்குச் சம்மதமாய்ச்சொல்லப்படும். மேலும், உபரதியென்பதன் சத்தார்த்தம் சகல கன்மத்தியாகம்பண்ணுகிறதேயாம். ஆனதால், இதுவே கன்மசந்நியாசமென்றுசொல்லப்படும். வேதத்திலுஞ் சகல கன்மத்தியாகமே சந்நியாசமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதுவன்றியுங் கன்மங்களினாற் சித்திக்கும் லோகாதிகளுக்கும் வேதமூலமாக அனித்தியத்துவங் கேட்கப்பட்டிருப்பதால் நித்திய பலத்தை யிச்சித்திருக்கிற பரமார்த்தனுக்கு இப்படியழிந்து போகின்றபலனுக்கேதுவாய கன்மங்களினாற் பிரயோசனம் யாதிருக்கின்றது? மேலும், கன்மத்தினால் சாதிக்கப்பட்ட பலம் உற்பாத்தியம் (உண்டுபண்ணத்தகுந்தது) என்றும், ஆப்பியம் (அசையத்தகுந்தது) என்றும், சமுற்காரியமென்றும், விகாரிய மென்றும் நான்குவிதமாயிருக்கும். நித்தியமாயிருக்கிற பிரமத்துக்கு இந்நான்குங்கூடா.

வினா:—அஃதெப்படி?

விடை:—சுதசித்தமாயும், சார்வதா தானடைந்ததாயும், நிஷ்களமாயும், நிஷ்கிரியமாயு மிருக்கப்பட்ட பிரமத்தை யுண்டுபண்ணின தொருவஸ்துவு மில்லையென்று வேதத்தில் நிஷேதிக்கப்படுகிறது. ஆகையால், பிரமம் உற்பாத்தியமாக மாட்டாது. போகத்தை யடைகிறவனுக்கும் அந்தப் போகத்துக்கும் பேதமுண்டானால் அப்போது அடையப்படுகிறவனால் அப்போகமடையப்படும். அப்படி பேதமில்லாமல் சர்வதாயத்தனையடைந்திருக்கிற பிரமத்துக் கொருகாலும் ஆப்பியங்கூடாது. மேலும், உல

கத்தில் மலினமாயிருக்கிற கண்ணாடி முதலானவைகளுக்குத் துலக்குவிக்கிறதான சமுற்காரியம்வேண்டும். அப்படியில்லாமல் மகாகாசம்போல் நித்திய சுத்தமாயிருக்கிற பிரமத்திற்கு ஒரு சமுற்காரியமும் வேண்டுவதின்றும். இதுவன்றியும் நிட்களமாயும் நிஷ்கிரியமாயுமிருக்கிற பிரமத்திற்கு எந்தத் தோஷங் கூடப்போகின்றது? கண்ணாடி முதலானவைகளைப்போல உருவமிருந்தா லதிலுண்டான மலினம் போக்க சமுற்காரியம்வேண்டும்; அங்ஙனமின்றி வேதத்தில் கேவலமென்றும் *நிற்குணமென்றும் பிரமத்தைச் சொல்லுவதால், நிற்குணமாயிருக்கிற பிரமத்திற்குச் சமுற்காரியம் போலொருகுணத்தையுண்டுபண்ணக்கூடாது. மேலும், உலகத்திற் சிராவியமா (கேட்கப்படுவதாயிருக்கிற) பால் முதலிய வஸ்துக்களுக்குப் பரிணாமாதி விகாரங்களுண்டாவதுபோல் நிஷ்களமா யிருக்கிற பிரமம் விகாரியமாகமாட்டாது.

வினா:—அஃதெப்படி?

விடை:—சுருதியானது நிஷ்களம், நிஷ்கிரியம், சாந்தம், நிரஞ்சனமென்று வஸ்துவினுடைய தத்துவத்தை யுள்ளபடி சொல்லுகிறது; ஆதலால், கர்மத்தினால் சாதிக்கப்பட்ட உற்பத்தியாதிவிகாரங்கள் பிரமத்திற்கு ஒருகாலுஞ் சொல்லக்கூடாது.

வினா:—பிரமம் கன்மத்தினால்தான் சாதிக்கப் (அடைய) படுவதோ?

விடை:—கன்மம் அசத்தியம், பிரமம் நித்தியமாகையால் அது கன்மத்தினாற் சாதிக்கப்படுவதல்ல.

வினா:—கன்மசாத்தியமானதை அசத்தியமென்பதெப்படி?

விடை:—கன்மத்தினா லுண்டுபண்ணப்பட்டிருக்கிற தேகாதிப் பிரபஞ்சம் இகத்திலெப்படி யழிந்துபோகுமோ அப்படியே புண்ணிய கன்மத்தினாற் சம்பாதிக்கப்பட்ட பரலோகங்களும் அழிந்து போகும். யாவருக்கும் செய்யப்படுகிற கிருத்தியங்களழிந்துபோகுமென்கிற வது ஜாக்கிரதையாய்த் தோற்றிக்கொண்டிருக்கின்றது. ஆகையால், கன்மசாத்தியமானசொர்க்காதி லோகங்களைவித்துவானாயிருக்கிறவன் நித்தியமென்று மோகிக்கமாட்டான். மேலும், ஜகத்

---

* பிரமத்திற்குச் சிருஷ்டியைநோக்கிக் கற்பிக்கப்படும் சர்வஞ்ஞத்வாதி குணங்கள் சிருஷ்டி உண்மையி லின்றென்று துணியப்படுமிடத்து இன்றுயொழிதலின் அது யாதொரு குணமுமுடையதன்றும்; அன்றாகவே அதன்பால் யாதொரு குணமுமின்றும்; இன்றாகவே அது நிற்குணமாம். மேலும், குணமுடையது அநித்தியமாமென்பதும் நியமம்.

காரணமான பிரமம் நித்தியமென்கிறது (ஆஸ்திகராயுள்ள) யாவருக்குஞ் சம்மதம். சுருதியிலும் இந்தப்பிரமந்தானே ஜகத்காரணமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது; அதிலுஞ் சாமவேதோபநிஷத்தானது சகலமும் பிரமமென்றுஞ் சத்தியமென்றுஞ்சொல்லி, அந்த பிரமத்துக்குத்தானே நித்தியத்துவமுஞ் ஜகத்காரணத்துவமுந்திடமாய்ச்சொல்லுகின்றது. ஆகையால், பிரமமேநித்தியமென்பதிற் சந்தேகமில்லை; மேலும், வேதவாக்கியமானது *கன்மத்தினாலும், புத்திரர்களாலும், தனத்தினாலும் மோட்சம் வரமாட்டாதென்று கன்மாதிகளைப் பிரத்தியட்சமாய் நிஷேதிக்கின்றது. ஆதலால், எவனொருவன் பிரத்தியகாத்மாவானது (கூடஸ்தனாய் விளங்குவது தான்) பிரமமித்தென்று (பிரமஞானத்தின்பயனுமென்று) சதாவிசாரித்துச் சகலகன்மங்களையும் நிஷேதம்பண்ணுகிறானோ அவனுக்குப் பரப்பிரம லட்சணமான கைவல்லியஞ் சித்திக்கும். அதுதவிரக் கங்கா ஸ்நானங்களினாலுங் கீர்த்தனங்களினாலுஞ் ஜபங்களினாலுஞ் § சாந்திராயணமுதலான தபங்களினாலும் அசுவமேதாதி யக்கியங்களினாலும் இருக்குவேதாதிகளின் பாராயணத்தினாலும் பிரமத்தையடையமாட்டானென்பது சித்தம். ஞானத்தினால் மோட்சஞ் சித்திக்குமென்றுஞ் சகல கன்மங்களையு நிஷேதித்தஞானமே மோட்சவேதுவென்றுஞ் சுருதியிற் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்பா! விவேகியாகவும், விரத்தனாகவும், பிரமமே நித்தியமென்றறிந்தவனாகவும், பிரமந் தானாகவேண்டுமென்ற இச்சையுடைத்தாயிருக்கிறவனாகவுமிருக்கின்ற புருஷனுக்கு அநித்தியமாயிருக்கிற கன்மசாமக்கிரியைகளில் பிரீதி வரமாட்டாது. ஆதலால், அநித்தியமான சுவர்க்காதிகளை யடைவதற்குச் சாதனங்களாய்ச் சொல்லப்பட்டிருக்கிற நித்திய நைமித்திகாதி சகல கன்மசாதனங்களையும் பிரமபதமடையவேண்டுமென்கிற முமுட்சுவானவன் நன்றாய் விட்டொழிக்கவேண்டும்.

---

* பிரமகீதை "மையலான் றனதிய வறிவினை யறியின் மானுடன் மூத்சனையன்றித், தெய்யகன்மத்தால் மைந்தரால் மற்றோர் பொருளினு லுற்டவந்துடையான்" என்று கூறுகின்றது.

§ சாந்திராயண விரதமாவது பகலில் மூன்றுகாலமும் ஸ்நானஞ்செய்து பௌர்ணமிமுதல் உப்பில்லாத பதினைந்து கவள அன்னம் புசித்து மறுநாள் தொடங்கி யொவ்வொரு கவளமாகக் குறைத்துக்கொண்டுவந்து அமாவாசையில் சுத்தோபவாசமிருந்து மறுநாள் தொடங்கி யொவ்வொரு கவளமாக வளர்த்திக்கொண்டுவந்து மறுபடியும் பௌர்ணமியில் பதினைந்து கவளம் புசிப்பதாம்.

வினா:—முமுட்சுவானவனுக்குச் சாதனங்கள் யாது?

விடை:—இரண்டுகையுடையவனுக்கு எப்படி தன்னுடலால் சகல காரியமுஞ் சாதிக்கப்படுமோ அப்படியே சாதனசதுஷ்டய முடையவனுக்குச் சிரவணாதிகளால் மோட்சம் சாதிக்கப்படுகின்றது. மேலும், தீபத்தைத் தூண்டிக்கொடுத்தா லதெப்படி பிரகாசமா மோ அப்படியேசிரவணத்தினால் ஞானமும்பிரகாசிக்கும். மோட்சத் துக்கு நேர்சாதனம் ஞானமென்று பிரமவித்துக்கள் சொல்லியிருப் பதால் ஞானத்தைச்சித்தமாய் அப்பியாசம் பண்ணவேண்டும். அப்பா! விகிதமாய்ப்பண்ணவேண்டிய கன்மங்கள் முமுட்சுவானவர் களாலே எப்படி விடப்படுமென்று மூடர்களைப்போல் நீயுஞ் சங்கை பண்ணவேண்டாம்.

வினா:—அதெப்படி?

விடை:—கன்மாதிகாரிவேறு, ஞானாதிகாரி வேறு, கன்மத்தினு டையபலம் வேறு, ஞானத்தினுடையபலம்வேறு, கன்மசாமக்கிரியம் வேறு, ஞானசாமக்கிரியம் வேறு என்று பெரியோர்கள் சொல்லு வார்கள்.

வினா:—அதெப்படி?

விடை:—ஆசையுடன் கூடினவன் கன்மாதிகாரி; நிராசையுடன் கூடினவன் ஞானாதிகாரி; ஐசுவரியவானாகவுஞ் சாமர்த்தியவானாகவு மிருத்தல் கன்மாதிகாரியின் இலட்சணம்; சிரவணாதிகளைப் பொருந் தினவனாயிருத்தல் ஞானாதிகாரியின் இலட்சணம். மோட்சத்துக்கதி காரி இகமுத்திரார்த்த பலபோகத்திலே ஆசையில்லாத (ஞானியா கிய) சந்நியாசி, கன்மங்களுக்கதிகாரி கிரகமாதியுடையவன். கன்மிக் குச்சாதனம் ஸ்திரீ யக்கிய பாத்திரங்கள், ஞானாதிகாரிக்குச்சாதனம் குரு சிரவணத்தைத்தவிர வேறு சாதனமில்லை. கன்மத்தினால் திர ளாய் மேன்மேலும் அகங்காரம் விருத்தியடையும். சிரவண ஞானத் தினால் அடிக்கடி அகங்காரமழிந்துபோம். கன்மசாத்திரம் பிரவிருத் தியைக்கொடுக்கும்; ஞானசாஸ்திரம் நிவிர்த்தியைக்கொடுக்கும். ஆத லால், இவற்றையனுட்டிக்கிற அதிகாரிகளும் ஒருவர்க்கொருவர் பின் னராயிருப்பர். பின்னப்பட்டிருக்கும் கன்மிக்கும் ஞானிக்கும் கூட்டு றவுமில்லை. கன்மிக்குச் சாமக்கிரியம் புறம், ஞானிக்குச்சாமக்கிரியம் அகம்; ஞானம் ஊர்த்துவ(மேல்)கதியைக்கொடுக்கும், கன்மம்அதோ (கீழ்) கதியைக்கொடுக்கும். இப்படிப்பட்ட ஞானகன்மங்களிரண்டு மொன்றை யொன்று எப்படி அபேட்சித்திருக்கும்; ஒன்றிலே

யொன்று எப்படிக் கூடியிருக்கும்; அக்கினிக்குந் திரணத்துக்கும் இருட்டுக்கும் பிரகாசத்துக்கு மெப்படி யொன்றுதல் கூடாதோ, அப்படியே ஞானகன்மங்களு மொன்றுதல் கூடாது. கன்மத்திற்கு ஞானம் சத்துருவாயிருத்தலால், ஒன்றுக்கொன்று எப்படி யதிகமாயிருக்கும். ஆகையால், ஞானத்தின் சந்நிதான விசேஷத்தினால் கன்மமானது மறைந்துபோம், கன்மத்தினால் ஞானம் மறைபடமாட்டாது.

வினா:—அஃதெப்படி?

விடை:—அநேகமாயிரங்கோடி விறகுக்கட்டு போட்டெரித்ததனாலுண்டாகிய புகையானது சூரியபகவானுக் கெவ்வளவாகிலும் மறைப்பாகிற உபகாரம்பண்ணமாட்டாத தெப்படியோ அப்படியே சகஸ்த்ர (ஆயிரம்) கோடிகன்மங்கூடியும் ஞானத்தைமறைக்கமாட்டா; அக்கன்மங்களும் ஞானத்துக்குள்ளே யொடுங்கிப்போம். ஒரு புருடனிடத்திலாசிரயித்துக்கொண்டிருக்கிற விரண்டுகைகளும் அவனுக்கு உதவியாய்க்கூடித் தொழிற்செய்யும்; அதுபோல ஞானத்துடன் கன்மம் கூடியிராதபடியினால் ஞானமும் கன்மமுமொன்றாய்க் கூடித்தொழில் செய்யமாட்டா. கன்மம் கர்த்துருதந்திரம்; ஞானம் வஸ்துதந்திரம். கர்த்தாவினாற் கன்மங்கள்செய்யவுஞ் செய்யாதிருக்கவுங்கூடும். அப்படி வஸ்துவுக்கும் ஞானத்துக்குமொருகாலும் கர்த்துரு தந்திரங் கூடாது. ஒருவஸ்துவானது கண்ணுக்கெதிரி லெப்படி காணப்படுகின்றதோ அப்படியே ஞானமும் அனுபவப்பிரமாணங்களினா லுண்டாகுமேதவிரக் கன்மங்களையும், யுக்தி புத்தியையுமபேட்சியாது. ஆதலால், ஞானம் வஸ்து தந்திரமென்பதிற் சந்தேகம் யாதிருக்கின்றது? பெரியவர்களாலும் ஞானம் வாஸ்தவமல்லவென்று சங்கிக்கக்கூடா தென்று சொல்லப்பட்டிருக்கிறது.

வினா:—அஃதெப்படி?

விடை:—உலகத்தில் பிரத்தியட்சப்பிரமாண மூலமாயறிகிற பதார்த்தத்தில் சம்சயாதிகளெப்படி வாஸ்தவமாயில்லையோ, அப்படியே அனுபவப் பிரமாணமாய்க்கண்ட ஞானத்திலும் சம்சயாதிகளில்லை. அது சத்யமாயிருக்கையால் வாஸ்தவமல்லவென்பது கூடாது. நித்தியசித்தமாயும் நிரவயவமாயுமிருக்கின்ற பரப்பிரம வஸ்துவைத் தனது (சத்துவகுணவடிவ) மனத்தினாலே யனுபவிப்பவன் வேறெத்தொழிலை அபேட்சித்துச்செய்வான். ஒருதொழிலும் செய்யமாட்டான்.

வினா:—அஃதெப்படி?

விடை:—கண்ணினாற்பார்க்கிற ரூபஞானமானது நன்றாய்ப் பார்க்கிறபோது மற்றொன்றில் கூடாமல் பிரத்தியட்சமாயெப்படி தோற்றப்படுமோ அப்படியே அநுபவ ரூபமாய்க்கண்ட ஞானமும் சந்தேகமறத் தோற்றுமன்றி வேறொன்றிற்செல்லாது. ஒருபுருடன் ரூபத்தைப்பார்க்கிறதற்கு நயனத்தைத்தவிர வேறொன்றையெப்படி யபேட்சிக்கிறதில்லையோ அப்படியே பரப்பிரமவஸ்துவைப் பார்க்கிறதற்குச் சிரவணாதிகளாலுண்டாகிற ஞானத்தைத்தவிரவேறொரு தொழிலைச் செய்யத்தேவையில்லை. கர்த்துருவினுடைய காரியம் கன்மம்; அதனுடைய காரியங்கள் சுபா சுபங்கள். இவைகளைப் பிரமாணமாயறிகிறது அநுபவமானதால் இந்தஜகத்துமாயாகாரியமென்பதிற் சந்தேகமில்லை. ஈசோபநிஷத்தில் வித்தை யவித்தை யிரண்டையு மொருமித்தறியவேண்டுமென்று சொல்லியிருப்பதுங் கன்மோபாசனையைச் சொல்லியதேதவிர ஞானத்தையுங் கன்மத்தையு மொருமைப்பாடாய்ச் சொல்லவில்லை. ஆகையால், நித்தியா நித்திய வஸ்து விவேகமும், இகமுத்திரார்த்தபலபோகவிராகமும் இல்லாமலிருக்கிற மூடனுக்கே கன்மோபாசனை பண்ணுகிறது சுபாவம்; தீவிர வைராக்கியம்பொருந்திப் புத்திசாலியாய்ப் பிரமானந்தத்தை விரும்பிய முமுட்சுவுக்குக் கன்மங்கள் தேவையில்லை. எவனொருவனுக்கு மோட்ச விச்சையினா லெப்போது தீவிர வைராக்கியமுண்டாகுமோ அப்போதே அவனுக்குக் கன்மசந்நியாசம்பண்ணுகிறது சுபாவம். ஆகையால், புத்திமான்களிதுவே பிரமாணமென்று நிச்சயிக்க வேண்டும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—அபரோட்சஞானத்துக்குக் கன்ம சாதனங்கள் தேவையில்லை யென்றுவேதங்களாலே நிஷேதிக்கப்படுகின்றன. கீதையிலும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூடத்தரானவர் வேதத்தினாலும் தபசினாலும் காணப்படுகிறவ ரல்லரென்று சொல்லியிருக்கிறார். மேலும், சுருதியில் பிரவிர்த்தியென்றும் நிவிர்த்தியென்றுமிரண்டு விதஞ்சொல்லப்பட்டிருக்கின்றன; அவற்றுள் பிரவிர்த்தியினால் மனுஷனுக்குப்பந்தமும் நிவிர்த்தியினால் மோட்சமுமுண்டாகும். ஆகையால், மோட்சத்தைவிரும்பினவர்கள் கன்மசந்நியாசம்பண்ணவேண்டுமேதவிர ஞானகன்மங்களிரண்டையு மொன்றாய் அப்பியசித்தல் ஒருகாலுங்கூடாது. ஆகையால், ஞானம் வேண்டுமென்கிறவன் சகல

கன்மங்களையும்விடவேண்டும். எவனொருவன் கன்மங்களைச்சாதன மென்றும் இட்டமென்றுங்கிரகித்தானோ அவன் அக்கன்மங்களா லுண்டான வத்துக்களழிந்துபோமென்று நன்றாய்த் தெரிந்தபோது அவைகளினாலேயே நாசப்படுவான். உபரதியின் சத்தார்த்த (சொற் பொருள்) மானது முன்கண்டயாதொரு விடயவஸ்துக்களையும் விட் டொழிகிறதென்பதாகையால் அந்த உபரதி முக்கியமென்றும் கௌ ணமென்றும் தொழிலினாலிரண்டுவிதமாகும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—விருத்திக்குத்திரிசியமான விஷயங்களைப் பரித்தியா கம்பண்ணுகிறதே முக்கியோபரதியென்றும், வேதவிகிதமாயிருக்கிற கன்மங்களை விடுகிறதே கௌணோபரதி யென்றுஞ் சொல்லப் படும்.

வினா:—அஃதெங்ஙனம்?

விடை:—ஒவ்வொரு புருஷனும் பிரதானமான உபரதி சித்தி யாகும்பொருட்டு வேதவிகிதமான கன்மங்களைச் சந்நியாசம்பண்ண வேண்டும். அந்தக்கன்மசந்நியாசமானது அங்கஹீனமானால் பிர தானமான உபரதி சித்திக்கமாட்டாது. ஆதலால், இகமுத்தி ரார்த்த பலபோகங்களில் நன்றாய் விரத்தி வந்தவுடன் கன்மசந்நியா சம்பண்ணவேண்டும். அப்படியே வைராக்கியமில்லாமல் கன்மசந்நி யாசம்எவன்பண்ணுகிறானோ அவனுக்குச்சண்டாளனாயிருக்கிறவனி டத்தில் வேதமந்திரங்களுபதேசித்தாலெப்படி நிஷ்பலமாய்ப்போ குமோ அப்படியே அது நிஷ்பலமாய்ப்போகும். மோட்சம்வேண்டு மென்று ஒருதேவதையைக்குறித்துக் கழுத்தையரிந்துகொள்ளு கிறவனெவனோ அவனுக்கும், கங்காப்பிரவேசமாகிறவனுக்கும், புத் திரதேகாதிகளிடத்திலெப்படி வெறுப்போ அப்படி எவனுக்கு விரத் திவருகின்றதோ அவனுக்கும் சந்நியாசங் கூடுமன்றி மற்றவர்களுக் குக்கூடாது. ஆகையால், வைராக்கியம் வந்தவன் சந்நியாசம்பண்ண வேண்டும்; மற்றவன் கிரகத்திலேயிருக்கவேண்டும். சந்நியாசம்பண் ணியும் விஷய விச்சையுடையவனாயிருந்தால் அவன் நரகங்களில் வா தைப்படுவான். ஆதலால், சகலகன்மங்களையும்விட்ட சந்நியாசியான வன் பூர்வங் கிரகஸ்தனாயிருந்தாலும் அப்போதுண்டாகும் விஷயசம் பந்தங்களை வாந்தியசனம் (கக்கியசோறு)போல் வெறுப்பாயெண்ண வேண்டும்.

வினா:—இனிச் சிரத்தையாவது யாது?

விடை:—குரு வேதாந்த வாக்கியங்களில் சத்தியபுத்தியுண்டாயிருப்பதே மோட்சசாதனமான சிரத்தையென்று சொல்லப்படும். இந்தச் சிரத்தையுள்ளபுருடரெவர்களோ அவர்களுக்கே புருஷார்த்த சூட்சுமமாயும் பரமதத்துவமாயுமிருக்கிற சித்தியுண்டாகும்; மற்றவர்களுக்குண்டாகமாட்டாது. சாமவேதோபநிஷத்திலும் உத்தாலகரிஷியானவர் தமது புத்திரனை சுவேதகேதுவைப்பார்த்து அப்பா! நீ சிரத்தையைப்பொருந்தியிருவென்று சொல்லியிருக்கிறார். ஆகையால், யாதொருவனுக்குஞ் சிரத்தையன்றிச் சன்மார்க்கப்பிரவிருத்தியுண்டாகவில்லை; சன்மார்க்கப்பிரவிருத்தி யில்லாதவரையில் அதனாலேசாதிக்கப்படும் புருடார்த்தசித்தியுமுண்டாகவில்லை; அந்தப் புருடார்த்தசித்தியின்றிபின் அசிரத்தையினால் சகல சனங்களும் அடிபட்டுச் சமுசாரசாகரத்தில் முழுகிப்போவார்கள். ஆதலால், வேதத்தினிடத்திலும் குருவினிடத்திலும் தெய்வத்தினிடத்திலும் மந்திரத்தினிடத்திலும் தீர்த்தங்களிடத்திலும் மகாத்துமாக்களிடத்திலும் எப்படியெப்படி விசுவாசமிருக்கின்றதோ அப்படியப்படியே சித்தியுண்டாகும். அப்பா! வஸ்துசற்பாவ நிச்சயத்தினால் பிரமமுண்டென்றறியவேண்டும்; அந்தச்சற்பாவநிச்சயம் சாத்திரசுதசித்தமான சிரத்தையினால்வரும். ஆகையால், குரு வேதாந்த வாக்கியங்களில் சிரத்தையுண்டானமுமுட்சுவுக்கே பலஞ்சித்திக்கும்; அதுவன்றியில் சித்திக்காது.

வினா:—அந்தச்சிரத்தை பிரவிர்த்திக்கிறதற்குக்காரணம் யாது?

விடை:—ஸ்ரீசற்குரு சொன்ன வார்த்தையை யதார்த்தமாயெண்ணுவதே.

வினா:—அஃதெப்படி?

விடை:—வைதிகர்களுக்கு வேதம் ஈசுவரவாக்கியமென்பது யதார்த்தமென்பதில் எப்படி சந்தேகமில்லையோ அப்படியே முமுட்சுவாயிருக்கிறவனுக்குச் சற்குருவும் ஈசுவரசொரூப மானதால் அவர் வசனமும் யதார்த்தமே. சற்குரு வேதாந்த வாக்கியங்களினால் புத்திமான்களாயிருக்கிற சற்புருடர்களுக்குச் சிரத்தையானது சித்திக்கும்.

வினா:—இனிச் சமாதானமாவது யாது?

விடை:—வேதத்திற் சொல்லப்பட்ட அர்த்த மறிவதன் பொ

ருட்டு வித்துவான்கள் அறியவேண்டிய வஸ்துவினிடத்திற் சித்தத்தை நன்றாய் நிறுத்துகிறதே சமாதானமென்று சொல்லப்படும்.

வினா:—இதற்குக்காரண மென்ன?

விடை:—சித்தம் சாத்தியமான பிரமத்தினிடத்தில் நிலைத்திருப்பதே புருடார்த்தமான நியமத்துக்குக்காரணம். அதுவன்றி வேறொன்றினாலுஞ் சாத்தியஞ்சித்தியாது; சாத்தியமானது சித்தியாதபோது மனது சஞ்சலப்படும்; மனது சஞ்சலப்பட்டால் பண்ணின பிரயத்தனம்பலியாது. ஆகையால், சித்தத்தையுந் திருஷ்டியையுங் கரணத்தையும் ஒருமைப்பாடாய் ஒரு விடத்திலே நிறுத்தினால் அந்த லட்சியம்பொருந்தும்; அவற்றுளொன்று குறைந்தாலும் லட்சியம் பொருந்தாது.

வினா:—எப்படி?

விடை:—தனுவின் நாணிலேபூட்டின அம்பானது குறிதப்பினாலெப்படி வியர்த்தமாய்ப்போமோ அப்படியே அது வியர்த்தமாய்ப்போம். வஸ்துசித்திக்குச் சித்தசமாதானமே அசாதாரணகாரணமானதால், முமுட்சுக்களாயிருக்கிறவர்க ளிந்தச்சமாதானத்தில் சதா நிலைத்திருக்கவேண்டும். மிகுந்த தீவிரவைராக்கியமும் பிரமத்தையடையவேண்டுமென்கிற விச்சையுமாகிய இவ்விரண்டுஞ் சமாதானமுண்டாவதற்குக்காரணமாம். மேலும், பிரமத்தையடைகிறதற்குப் பாகியாங்கமென்றும் அந்தராங்கமென்று மிரண்டங்கங்களுண்டு; அவற்றுள் பிரமசரியமாதிகள் பாகியாங்கமென்றும், சமாதிசட்கசம்பத்தி அந்தராங்கமென்றும் பெரியோரால றிந்து சொல்லப்பட்டிருக்கின்றன. பாகியாங்கத்தைக்காட்டிலும் அந்தராங்கம் வலிதானதால் சொரூபத்தையறியவேண்டினவன் அந்தராங்கமான சமாதிசட்க சம்பத்தியையே அவசியம் அப்பியாசிக்கவேண்டும். அந்தராங்கம் அப்பியாசஞ்செய்யாது கோடிதரஞ் சிரவணம்பண்ணினாலும் பண்ணினவனுக்கு அந்தராங்க அப்பியாசமின்மையால் சொரூபநிட்டை பொருந்தாது.

வினா:—அஃதெப்படி?

விடை:—தைரியமில்லாத புருஷனுக்குச் சகலவாயுதங்களிருந்தும் யுத்தமுகத்தில் அவனுக்கெப்படி ஜயம் பலிக்காதோ வப்படி போலென்றறி.

**நான்காஞ்சாதனம்.**

வினா:—இனி முமுட்சுத்துவமாவது யாது?

விடை:—எந்த விவேகியானவன் பிரமாணமாய் வைராக்கியா

னுபவ ஞானத்தினால் சமுசாரபந்தத்தை விடவேண்டுமென்றெண்ணி யிருக்கிறானோ அவனேமுமுட்சுவென்று சொல்லப்படுவான். அப்பா! சகல சாதனங்களுள்ளும் முமுட்சுத்துவமே மூலகாரணம். அந்த முமுட்சுத்வத்திலிச்சையில்லாமலும் அதிற்பிரவிருத்தியில்லாமலும் எவனிருக்கிறானோ அவனுக்கு வேதாந்தசிரவணமும் அதன் பலமும் வரமாட்டா. இந்த முமுட்சுத்துவமானது தீவிரமென்றும் மத்திமமென்றும் மந்தமென்றும் அதிமந்தமென்றும் நான்குவிதமாயிருக்குமென்று பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது.

வினா:—அஃதெப்படி?

விடை:—அநேக ரூபமாயிருக்கிற அதி தாபத்திரயங்களினால் நித்தியமுந்தகிக்கப்பட்டு வெகுவாய் அந்தக்கரணக் கலக்கமடைந்து பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தங்களை யனித்தியமென்றெண்ணிச் சுட்டசட்டி கைவிட்டதுபோல் விட்டொழிகிறவனெவனோ அவனே தீவிர முமுட்சுவென்று சொல்லப்படுவான். மேலு மேலுந் தன்னை வந்தடைகிற தாபத்திரயங்களைக்கண்டும் சொரூபத்தினுடைய நிலவரங்கண்டும் பெண்டுபிள்ளை பண்டபதார்த்தங்களை விட்டொழியமாட்டாமல்சஞ்சலம்பொருந்தியமனதுடன் கூடியிருப்பவனெவனோ அவனே மத்திமமுமுட்சுவென்று சொல்லப்படுவான். மோட்சமடைகிறதற்குக்காலம் இன்னம்பின்னாலேயிருக்கின்றது, இப்போது தீவிரமென்ன, போகங்களை யெல்லாம் புசித்து (அநுபவித்து)ச் சகல பிரபஞ்ச வியாபாரமுஞ் செய்துமுடித்து அதற்குமேல் மோட்ச யத்தனம்பண்ணுவோமென்றெண்ணியிருக்கிறவனெவனோ அவனே மந்த முமுட்சுவென்று சொல்லப்படுவான். வழிமார்க்கம்போகிறவனுக்கெதிரே மாணிக்கங்கிடைத்தாற்போல எனக்குமோட்சம் கிடைத்ததானால் நான் கிருதார்த்தனாகவேண்டும்; அதுவன்றியில் பிரயத்தனம் பண்ணவேண்டியதென்னவென்று மூடபுத்தியாயிருக்கிறவனெவனோ அவனே அதிமந்த முமுட்சுவென்று சொல்லப்படுவான். ஆகையால், அனேகமாயிரஞ்சன்மங்களில் ஈசுவரனை ஆராதித்ததினால் மனோமலங்கள் நிவிர்த்தியாய்ச் சகல சாத்திரங்களையும் நன்றாயறிந்து குணமீதென்றுந் தோஷமீதென்றுந்தெரிந்து போகபோக்கியங்களிலாசையொழிந்து நித்தியா நித்திய வஸ்துக்களின் லட்சணங்களை அறிந்து மோட்சகாமனாய், அக்கினியினால் தகிக்கப்பட்ட பாத்திரத்தைத் தொட்டவன் உடனே சூடு பொறுமலெப்படி யதிவேகமாய் விட்டு விடுகிறானோ அப்படியே தீவிர மோட்சவிச்சையினால் கிரகாதிகளையெவன் விட்டுவிடுகிறானோ அவன் இந்தச் சனனமரணங்

கவென்னுஞ் சமுசாரத்தைக் குரு கடாட்சத்தினால் உடனே விட்டொழிவன். ஆகையால், யாதொருவன் தீவிர முமுட்சுவாயிருக்கிறானோ அவன் அந்தச் சன்மத்திற்றானே சீவன்முத்தனாவான். மத்திமனானவன் சன்ம மூன்றில் மோட்சமடைவன். மந்தனானவன் யுகாந்தத்தில் முத்தியடைவன். அதிமந்தனானவன் கற்பகோடிகாலங்களிலும் முத்தியடையமாட்டான். அப்பா! நால்வகையோனி மூவகைச் சாதியாயிருக்கிற ஜன்மங்களில் மனுஷ சன்மமெடுக்கிறது மகாதுர்லபமென் றுபெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது; அதிலும் ஸ்திரீ சன்மமில்லாமல் புருஷசன்மமெடுக்கிறதும் மகாதுர்லபம்; அதிலும் ஆடுமாடுபோலே இராமல் விவேகத்துடன்வருகிறது மகாதுர்லபம். ஆனதால், எந்த மகாத்துமாவானவன் இந்த மூன்றையும் பொருந்தியிருக்கிறானோ அவன் தீவிர வைராக்கியத்துடனேகூடி முத்தியடைகிறதின்பொருட்டு இந்தத்தீவிர மோட்சவிச்சையை யத்தனம்பண்ணவேண்டும். அப்பா! புத்திர மித்திர களத்திராதி சுக போகங்கள் சன்மங்கடோறு முண்டாகும். அவற்றுள் மனுஷசன்மமும் மனுஷசன்மத்தில் புருஷசன்மமும் அதில்விவேகமுங் கிடைக்கமாட்டா. ஆதலால், அரிதாயிருக்கிற மனுஷசன்மமெடுக்கிறதிலும் புருஷ சன்மமெடுத்துப் புருஷசன்மத்திலும் நித்தியா நித்திய மீதென் றுபகுத்தறிகிற விவேகத்தையடைந்தவன் நித்தியத்தைப் பொருந்தாமல் இகலோக விச்சையைப் பொருந்திவிட்டானானால் அப்படிக்கொத்த துர்ப்புத்தியோடேகூடின புருடனது சன்மத்தைச் சுடவேண்டுமென்பதிற் சந்தேகமில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—மிருகபட்சியாதிகள் தினந்தோறும் பெண்டுபிள்ளைகளுடனே கூடிப் போகமாகிய விஷயாதி யசனங்களைப் புசித்துக் கொண்டிருக்கின்றன. அந்தச் சன்மங்களும் இகலோக சுகத்தையிச்சிக்கிற துர்மார்க்கர்களுடைய சன்மங்களும் சரியானதால் தீவிரமோட்சவிச்சையுள்ளவர் திரும்பவும் இகலோக சுகத்தை இச்சிக்கலாகாது. அப்பா! சரீரத்தில் ரோகம் விருத்தாப்பியம் வந்தடுக்கிறதற்குமுன்னும் புத்திசீரணமாகிறதற்கு முன்னும் மிருத்துவைப் பார்க்கிறதற்கு முன்னும் இந்த நானாவான சஞ்சலமில்லாமல் வேதாந்த சாரத்தைக் கிரகிக்கிறதில் வேகமுள்ளவனான விவேகி சீக்கிரமாக முத்தியடைகிறதின்பொருட்டுத் தீவிரமோட்ச விச்சையில் பிரயத்தனம் பண்ணவேண்டும். உலகத்தில் தேவர்களெண்மர்; ரிஷிகளெண்மர்; பிதிர்க்களெண்மர்; இதுவுமன்றி மனுஷர்கள் அனந்தங்

கோடியுண்டு. அவர்களுள் சனனமாகிற பந்தத்தை நன்றாய் விட்டு விட்டுப் பிரமநிஷ்டனாயிருக்கிறவ னொருவனிருப்பானென்றறி. அப்பா! அந்தர்ப்பந்தத்தினால் கட்டுப்பட்டிருக்கிறவனுக்குப் பாகிய பந்தம்விட்டதினால் பிரயோசனம்யாதிருக்கிறது? ஆனதால், அந்தர்ப் பந்தத்தை விட்டுவிடுகின்றதின்பொருட்டு எந்தத்தொழில் செய்ய வேண்டுமோ அந்தத்தொழில் செய்கிறவர்களோடே கூடி அது செய்யவேண்டும். அந்தத்தொழிலினுடைய ஒருமிப்பே தீவிர மோட்சவிச்சையென்று சொல்லப்படும். அதைவிட அன்னியமான வையெல்லாஞ் சொல்லுக்கு யோக்கியமானதேதவிரச் சுருதி சம் மதமல்ல. ஆனதால், கிரக புத்திர தனாதிகளை யெல்லாம் அனித்த மென்றெண்ணிவிட்டுப் புருடசவுக்கிய விச்சையினால் மிர்தமாய் (இறந்து)போன புருடனோடேகூட அக்கினிப்பிரவேசம்பண்ணுகிற ஸ்திரீகளுக்குத் திடவைராக்கிய மெப்படி பொருந்திற்றோ அப்படி தீவிரவைராக்கியம் பொருந்தியிருக்கிறவனுக்கே மோட்ச இச்சை யின் பலன் சித்திக்கும்.

வினா:—இந்த மோட்சவிச்சாபலன் சித்திக்கிறதற்குக் காரணம் யாது?

விடை:—நித்தியா நித்திய வஸ்து விவேகமும், தேகத்தினிடத் தில் அனித்தியத்துவ புத்தியும், மிருத்துவினிடத்தில்வருகிற பய மும், பயத்தினாலுண்டானதாபமு மறிகிறதேகாரணம். ஆயினும், வைராக்கியம் வருகிறதற்குக்காரணம் நித்தியாநித்திய வஸ்துவிவே கம்; சந்நியாசத்துக்குக்காரணம் தீவிரவைராக்கியம்; சிரவணாதிக ளுக்குக்காரணம் சந்நியாசம்; ஞானத்துக்குக்காரணம் சிரவணாதிகள் என்றறிந்த இந்த ஞானமானது மோட்சத்துக்கேதுவானதால் இதற்குமுன்சொன்ன இலட்சணங்களைப்பொருந்தின விவேகிகளைச் சதாகாலமும் பசனைபண்ணவேண்டும். அப்பா! நித்தியாநித்தியவஸ் துவிவேகமே சிரசு; இகமுத்திரார்த்த பலபோகவிராகமே கழுத்து; வைராக்கியமே சரீரம்; சமாதிசட்கசம்பத்தியே அங்கங்கள்; முமுட் சுத்துவமே பிராணனென்றுசொல்லப்படும். இப்படிக்கொத்த வடி வுடனே கூடிய சொரூபத்தை அறியவேண்டுமென்று புத்திசாலியா னவன் ஞானகுரு வேதாந்த வாக்கியங்களென்னுஞ் சாணையில் தீட் டப்பட்டநல்லஞானமென்னும்வாளினால் மிருத்துவைச்சங்கரிப்பன். ஆனதால், இப்படி சொல்லப்பட்ட சாதனசதுட்டய சம்பத்தியுள்ள வனாய் ஆன்மாவை யடையவேண்டுமென்கிறபுருடன் தன்னையறிகிற

தின்பொருட்டுக் குருவைக்குறித்து உபசாரபாணியாக வொடுக்க வணக்கத்துடன் போகவேண்டும்.

## ஆசாரியலட்சணம்.

வினு:—அந்தக்குருவானவ ரெப்படியிருத்தல்வேண்டும்?

விடை:—சகலவேதார்த்தங்களை யறிந்தவராயும், பிரமநிஷ்டரா யும், சாந்தியுடையவராயும், சத்துருமித்துரு சமசம்பன்னராயும், மதவகங்கார மில்லாதவராயும், சீதோஷ்ண சமத்துவம்பொருந்தின வராயும், விடயாசக்தியில்லாதவராயும், ஒன்றையு மபேட்சியாதவரா யும், ஆசார சாமர்த்தியமுள்ளவராயு மிருக்கிறவரெவரோ அவரே சிரேஷ்டமான சற்குருவாவர். தன்னையறியவேண்டினவன் அது சித் திக்கும்பொருட்டு அவரிருக்குமிடம் விசாரித்து அந்தக் குருவி னுடைய சரணமடையவேண்டும். அனந்தங்கோடி சன்மங்களிலும் அன்புடனே கூடி வைதிகலட்சணம்பொருந்தி மிகுந்த பத்தியோடே கூடின சீடனால் பூசைபண்ணப்பட்டுச் சந்தோஷித்த ஈசுவரன் தய வினால் பிரத்தியட்சமாகக் குருரூபங்கொண்டு சீடன் பார்வைக்கெ திர்ப்பட்டுத் தத்துவத்தை நேராகப்போதித்து அந்தச்சீடனைச் சம் சாரமாகிறதுக்கசமுத்திரத்தைக் கடக்கப்பண்ணுவார். ஆனதால், சாட்சாத் சிவமே குரு; குருவே சிவம். ஆகையால், முமுட்சுக்கள் இந்தவிருவரையும் பேதபுத்தியாய்ப் பார்க்கலாகாது. அப்பா! அவித் தியா ரூபமான இருதய கிரந்தியாகிறபாசபந்தங்கள் எவரால் விமோ சனமாகின்றனவோ அவரே குருவென்று குருசத்தார்த்தத்தை யறிந்த பெரியவர்கள் சொல்லுவார்கள். ஆதலால், கிருதகிருத்திய னையும் பந்தமுத்தனையும் பிரமநிட்டனையுமிருக்கிற குருவையேயடுக்க வேண்டும். ஸ்ரீசற்குரு கடாட்சத்தினால் கரைகாணுதிருக்கிற சம்சார சாகரமானது பசுவினுடைய குளம்படிபோலேயாகும். ஆகையால், பணிவிடையினாலும், சதாபத்தியினாலும்,வந்தனைவழிபாட்டினாலும், வணக்கமுள்ள உத்தரவினாலும் குருவைத்தன்னிடத்தில் பிரீதியுள்ள வராக்கிக்கொண்டு அறியவேண்டிய சொரூப நிச்சயத்தைக் கேட்க வேண்டும்.

## சிஷ்யலட்சணம்.

வினு:—ஓ கருணைக்கடலாயிருக்கிற சுவாமி! பவமாகிற சமுத் திரத்தைக்கடக்கிறதற்குத் தேவரீர் நாவே ஒருகப்பலாக விருக்கின் றது. ஓ சுவாமி! பெரியவர்களும் உங்களைப்போலிருக்கிறசற்குருவை ஆசிரயித்ததினால் சம்சாரசாகரத்தைக் கடந்தார்கள். சன்மார்க்கரத்

தில் நான் செய்த அனந்த புண்ணியபலத்தினு லின்றைக்கு நீர் எனக்கெதிராகப்பிரத்தியட்சமானீர். அடியேனும் தேவரீருடைய கிருபைக்குப்பாத்திரனுனேன். பிரமவித்துக்களாயிருக்கிற உங்கள் பார்வையானது நேத்திரங்களுக்குச் சந்தோஷமும் அந்தக்கரணத்துக்கு ஆனந்தமுங்கொடுத்து மோக பாசத்தையுமறுத்து நற்கதியையுங் கொடுக்கும். பதினுயிரஞ்சந்திரர் பதினுயிரஞ்சூரியர் பதினுயிரமக்கினிகள்கூடினுலும் அவர்கள் அந்தமில்லாதிருக்கிற அஞ்ஞானமான உள்ளிருளை நீக்கமாட்டார்கள். உங்களைப்போல ஆன்ம சொரூபத்தையறிந்த பெரியோர்கள் ஒருகால் கருணுநோக்கத்தினுல் இந்த அஞ்ஞானமானவிருளை நீக்குவார்கள். ஆகையால், ஆசைகளாகிற பிரவாகங்களனேகம் வந்தடைந்தாலும் பூரணமில்லாதிருக்கிற சன்மக்கடலில் வியாதியாதி துக்கங்களாகிற ஜந்துக்கள் மேலுமேலுந் திரளாய்க்கடிக்கக் கோரமான புத்திர மித்திர களத்திராதி பாசங்களான முதலைகள் விழுங்கக் காமங்களாகிற வுன்னத அலைகளாலிழுக்கப்பட்டுப் போக்குவரத்துமாய்ச் சுழன்றுக்கொண்டிருக்கிற வென்னை அதை விட்டுக்கரையேற்றி யிரட்சிக்கிறதற்கு இதுவரையில் ஒருவரையுங்காணேன். நான் இப்போது என்ன புண்ணியஞ் செய்தேனே? அந்தப்புண்ணிய பலத்தினுல் உங்கள் பாதார விந்தத்தைக்காணப்பெற்றேன். இப்படிக்கொத்தவனுயிருக்கிற வென்னைக் கருணுநோக்கத்தினுல் மிருத்துவினுடைய பயமில்லாம லிரட்சிக்க வேண்டும்.

விடை:—அப்படிச் சொன்ன சீடனைப்பார்த்து குருவானவர் கிருபையினுல் அடிக்கடி பயப்படாதே என்று அபயப்பிரதானம் பண்ணினவாராய் விவேகமுள்ளசீடனே! அத்வைதனுயும் பரமானந்தனுயும்நித்தியனுயும் பரப்பிரமமாயுமிருக்கிற உனக்கு மிருத்தியுபயமொருகாலுமில்லை. மயக்கத்தினுலே மிருத்தியுவின் பயமுண்டென்றெண்ணி அந்தப்பயத்தினுல் என்னையிரட்சியுமென்று பொய்சொல்லுகிருய். அஃதேதெனென்ருல் நித்திரை போனவன் புலம்பின தெப்படி சூனியார்த்தமோ அப்படியே நீ புலம்புவதுஞ் சுத்தப்பொய் யென்றறி.

வினு:—அஃதெப்படி?

விடை:—காடாந்தகாரமான நித்திரைபோகிறவன் சொப்பனத்திலே தன்னை ஒருசர்ப்பந்தீண்டக்கண்டு அந்தப்பயத்தினுல் நானிறந்தேனென்றுளறினதை அவனுக்கு ஆப்தனுயிருக்கிறவன்கண்டு

அவனைக்கைபிறல் தட்டியெழுப்பி யென்னவென்று கேட்குமிடத்தில் அவனென்றுமில்லை யென்று சொன்னதுபோல, நீ சொன்ன சொல்லுமப்படியே பொய்யென்றறி. மேலும், ஒரு புருஷனானவன் இரச்சுவினிடத்தில் மயக்கத்தினால்தோன்றிய பாம்பைக்கண்டு சப்தித்துப் பயந்துநடுங்கித் திரும்பி விசாரிக்குமளவி லவனுக்கெப்படி பாம்பென்கிறது பொய்யாய்ப்போச்சுதோ அப்படியே ஆன்மாவாயிருக்கிற உனக்குச் சனனமரண வியாதியாதி துக்கங்களும்பொய். உன்னால் பிரம(மயக்க)மாய்ச் சொல்லப்பட்ட வார்த்தைகளும் பொய். ஆதலால், உன்னுடைய ஆன்மாவை நன்றாய் விசாரித்துப் பயத்தை விட்டொழி. அப்பா! நீ அனாத்துமாவாயிருக்கிற தேகாதி தர்மங்களை ஆன்ம சொரூபமான உன்னிடத்தி லாரோபித்துக் கொண்டு கிலேசிக்கிறாய். அந்த அஞ்ஞான கிருதங்களானபயத்தை விட்டுச் சுகமாயிரு.

வினா:—என்றிப்படி குருவானவர் சொல்லச் சீடன் கேட்டுச் சுவாமி! மோட்சலட்சுமி கடாட்சம்பொருந்தின உங்களால் சகலமும் பொய்யென்று திருஷ்டாந்தத்துடன் சொல்லப்பட்டதைத் தாஷ் [illegible] பிறவிமுதலான துக்கங்கள் சகல சனங்களுக்கும் பிரத்தியட்சமாய்ப் பிரசித்தமாய்க்காணப்படுகின்றன. இப்படி பிரத்தியட்சமாய்க் கண்டபதார்த்தமானது எப்படி பொய்யாய்ப்போகும்? பிரத்தியட்சமாய்க்கண்ட கடத்தை எப்படி பொய்யென்றெண்ணுவேன்? நிசமாயிருக்கிற பதார்த்தத்தைப் பொய்யென் றெண்ணுவதெப்படிகூடும்? இது சகல சனங்களுக்கும் பிரத்தியட்சப்பிரமாணமே. சன்மாதி துக்கமுடையவனும் அற்பாயுசாயுமிருக்கின்ற எனக்குப் பிரமத்துவமும் நித்தியத்துவமும் பரமானந்த சொரூபத்துவமு மெப்படிகூடும்? ஆத்மாவாவது யாது? அனாத்துமாவாவதெது? இந்த ஆத்துமானாத்துமாக்களுடைய லட்சணமெப்படி? அனாத்துமாவாயிருக்கிற தேகாதிகளிலே ஆன்ம தர்மங்களையாரோபிக்கிறதெப்படி? அஞ்ஞானமாவது யாது? அந்த அஞ்ஞானத்தினாலுண்டாகிற பயம்யாது? அந்தப்பயத்தை விடுகிறதெப்படி? இவற்றையெல்லாம் தற்பூர்வமாகக் கரதலாமலகம்போல் எனக்குத்தெரியக் கருணைக்கடலாயிருக்கிற தேவரீரனுக்கிரகஞ் செய்ய வேண்டும்.

விடை:—வாராய் சீடனே! நீயே தன்னியன்; நீயே கிருதார்த்தன்; நீயே விவேகி. உனக்குச்சிவகடாட்சம் பெருகவுண்டாயிருக்கின்றது.

வினா:—அஃதெப்படி?

விடை:—பிராகிருதர்களாயிருக்கிறவர்கள் சஞ்சரிக்கிற மார்க்கங்களைவிட்டு மர்மத்தையறிகிறதின்பொருட்டு யத்தனம்பண்ணுகிறதால் நீதன்னியனே. மேலும், சிவகடாட்சத்தைத்தவிரச் சித்தி வரமாட்டாது; சிவப்பிரசாதந்தவிர நற்புத்தி வரமாட்டாது; சிவப்பிரகாசந்தவிர மோட்சங்கிடையாது. சிவகடாட்சத்தினால் சுகர் வாமதேவராதியோர் அஞ்ஞானம் நீங்கிச் சனனமரணரூபமான சம்சார பந்தங்களை விட்டொழிந்தார்கள். அப்படிக்கொத்த சிவகடாட்சமானது அனந்த சனனமெடுத்துப் பத்திசெய்ததினாலே பிறவி விடுகிறதற்கு ஏதுவாகவரும். அப்பா! உலகத்திலே மனுஷர்களுக்கு வெகு சன்மங்களில் ஈசுவரார்ப்பிதமாய்ச்செய்த தபசுகளினாலும் ஈசுவரப் பிரசாதத்தினாலும் விவேகம்பிறக்கும். ஆனதால், நீயும் பரமார்த்தத்தையடைகிறதன்பொருட்டு ஆரம்பம்பண்ணினாலல்லவோ விவேகம் வந்ததற்குப் பலன். அப்பா! மனுஷசன்ம மெடுக்கிறதிலும் புருஷ சன்மமாகவும் அதிலும் பிராமணசன்மமாகவும் அதிலும் விவேகம் பொருந்தினவனாகவுமிருக்கிறது மோட்சத்துக்கு முக்கிய பலமென்று பெரியவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் விவேகமில்லாமற்போனால் எல்லாம் வியர்த்தமாய்ப்போம்; மோட்சமுமில்லை. ஆனதால், நீகேட்டசங்கைகள் நல்லனவே. ஆன்மதத்துவத்தை யடைவதில் இச்சையோடு கூடியிருக்கிற உனக்குண்டாயுள்ள சங்கைகளையும் ஆதிமுதற்கொண்டு நன்றாய்த்தெரியும்படி சொல்லுகிறோம்; சந்தோஷத்துடன்கேட்பாயாக. அப்பா! மனுஷத்துவமுன்னிடத்தில் மயக்கத்தினால் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. அதனாற் பிறப்பிறப்பு முதலான துக்கங்களுண்டாயின. அவற்றாலுண்டான துக்கங்களுனக்கில்லை. அந்தத்துக்கங்கள் சுத்தப்பொய். அஃதெப்படி யென்றால், நித்திரா மோகத்தினாலடையப்பட்டிருக்கிற சுகதுக்கங்கள் நித்திரை தெளிந்தெழுந்தபோது ஒருவிடத்திலாகிலும் மெய்யாகக்கண்டதுண்டோ? அப்படியிருக்கச் சமஸ்த ஜனங்களாலும் பிரத்தியட்சமாய்க் காணப்பட்டிருக்கிற இந்தப் பிரபஞ்சத்தைப் பொய்யென்றெப்படி சொல்லலாமென்று நீ மோகத்தினால் விசாரணையில்லாமற்சொன்னசங்கை கூடாது.

வினா:—அஃதெப்படி?

விடை:—கூகையி(கோட்டா)னுடைய திருஷ்டிக்குப் பிரகாசமான பகல் எப்படி யிருளாகத்தோற்றுகிறதோ அப்படியே மயக்

கத்திஞலடையப்பட்ட பிரத்தியட்சாதி விவகாரங்களெல்லாம் பிராந் தனுக்குச் சத்தியமாய்த்தோற்றும்.

விஞ:—அஃதெப்படி?

விடை:—இது கடமென்கிறபோது அந்தப்பெயருடனே அது பிரத்தியட்சமாய்க் காணப்படுகிறது. பரமார்த்தமாய் விசாரிக்கும் போது அந்தக்கடமென்கிற நாமமில்லாமல் கடபாவத்துக்கு விலட் சணமான மிருத்திகையாய்க்காணப்படுகின்றது. இதுவன்றியும் சூரி யனைப்பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறவர்களுக்கு அச்சூரியன் ஒருசா ணளவாய்க்காணப்படுகின்றது; சாத்திரத்திலோ லட்சம்யோசனை விஸ்தாரமுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இப்படி பிரத்தியட்சப் பிரமாணத்திற்கும் சாத்திரப்பிரமாணத்திற்கும் சரிபார்க்கிறபோது பிரத்தியட்சப்பிரமாணம்பிறழ்ச்சி யுடையதாய்ப்போவதால் நீ இப் போது கூறிய பிரத்தியட்சப் பிரமாணம் ஒப்பத்தக்க தென்பது கூடாது. ஆதலால், உன்னிடத்தில் இத்தேகாதிப் பிரபஞ்சங்களெல் லாம் பிராந்தியினுல் காணப்படுகின்றன. இந்த மித்தியாவஸ்துக்களை சத்தியமென்றெண்ணுதே. பரமாநந்தசொரூபமான பரப்பிரமம் நீயேயாகுல் உனக்குப்பின்னமான வஸ்து வேருென்றில்லையென்று புத்தியினுல் நன்ருய்விசாரித்தறி; லோகாந்தரங்களிலும் பர்வதாந் தரங்களிலும் தீர்த்தாந்தரங்களிலும் கன்மபாவாந்தரங்களிலும் சாத்திராந்தரங்களிலும் பிரமத்தைக்காண்டல்கூடாது. அப்படிக் கொத்த பிரமத்தை நன்ருய்விசாரிக்கிறபோது தானே பிரமமா வான். அப்பா! தனக்குள்ளிருக்கிற தத்துவத்தையறியாது மூடனு யிருக்கிறவன் சாத்திரங்களைப்பார்த்துச் சுழலுகிருன்.

விஞ:—அஃதெப்படி?

விடை:—தனக்குளிருக்கிற தத்துவத்தை யறியாமல் மூடனுயி ருக்கிறவன் சாஸ்திரங்களைப்பார்த்துச் சுழலுதல், இடையனுனவன் கக்கத்தில் ஆட்டுக்குட்டியைபிடுக்கிக்கொண்டுகூபத்தை(கிணற்றை)ப் பார்க்கிறபோது அந்தக்கூபநீரிற் பிரதிபலித்த அக்குட்டியைக்கண்டு நாம்கொண்டுவந்த ஆட்டுக்குட்டியானது கூபத்தில் விழுந்ததென்று தானுங் கூடவிழுந்தாற்போலாகும். மேலும், ஆத்மாவாயிருக்கிறவர் தம்மைப் பரமாத்மாவென்றும் அந்தப்பரமாத்மாவே தாமென்றுந் திடமாயுணர்ந்திருக்க, அஞ்ஞானிகளாயிருக்கிறவர் வெளியிலிருக்கிற பஞ்சகோசங்களிலும் ஆத்துமாவிருக்கிறதென்று தேடுகிருர்கள். அப்படியே நீயும் பரமார்த்தமாயிருக்கிற வஸ்துநிச்சயத்தைமறந்து

அந்த வஸ்துவினிடத்தில் அவஸ்துவான தேகாதி தர்மங்களை யா ரோபித்துக்கொண்டு வியர்த்தமாகக் கிலேசிக்கின்றாயேயொழிய வேறொன்றில்லை. ஆனதால், ஆத்துமாநாத்தும விவேகத்தையுனக் குச்சொல்லுகிறோம்; அன்புடனே கேள். இதைச்சிரவணஞ்செய்கி றதினால்நீ அநான்மாவாகியதேகாதிகளை விட்டொழிவாயென்று குரு வானவர் சீடனைத் தம்வயப்படுத்திக்கொண்டு கருணையினால் அதிசீக் கிரமாக அத்தியாரோப அபவாதயுக்திகளிரண்டினாலும் நிஷ்பிர பஞ்சமான பிரமத்தைச் சொல்லுகிறவராய்ச் சாத்திரத்திற்கண்ட வழியாய்ப்போதிக்கத் தொடங்கினார்.

## குருவுபதேசம்.

வினா:—ஆத்மாநாத்ம விவேகமாவது யாது?

விடை:—வாராய் சீடனே! வஸ்துவான பரப்பிரமத்தினிடத் தில் அவஸ்துவான நாமரூபவடிவ தேகாதிப்பிரபஞ்சத்தைக் கற்பிக் கிறதெதுவோ அதுவே அத்தியாசமென்று சொல்லப்படும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—(பாம்பன்றியிருக்கிற) பழுதையினிடத்திற் பாம்புகற் பிக்கப்பட்டிருக்கிறதுபோலவும் ஆகாயத்தில் கறுப்புக் கற்பிக்கப் பட்டிருக்கிறதுபோலவும் சச்சிதானந்தலட்சணமான பரப்பிரமத் தில் நாமரூபாதிப்பிரபஞ்சங் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

வினா:—இப்படி கற்பிக்கப்பட்டதற்குக் காரணம் யாது?

விடை:—அஞ்ஞானமே காரணம். அவ்வஞ்ஞானம் சத்தினு டைய காரியமாயிருந்தாலும் சத்துலட்சணமுடையதல்ல. அது ஞா னத்தினாலழிந்துபோவதால் அவஸ்துவென்று பெரியோர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது.

வினா:—அஃதெப்படி?

விடை:—சுத்தியினிடத்தில் வெள்ளி யாரோபமானதைத் திரும்பிவிசாரிக்குமளவில் அதன் பின்புறங்கறுப்பும் முக்கோணமு மாயிருக்கிறதைக்கண்டு இது சிப்பியென்று நிச்சயித்தபின்பு வெள் ளியுருவெப்படிவாதிக்கப்படுகிறதோ அப்படியே சுருதியுத்தி அனுப வத்தினால் பிரமத்தைக்கண்டபின்பு அவஸ்துவான அஞ்ஞானமு மழிந்துபோம். மேலும், எப்படி திரிகாலங்களிலேயுஞ் சுத்திக்கழி வின்றி அதிலாரோபிதமான வெள்ளியுருவுக் கழிவுண்டாகின்றதோ அப்படியே அஞ்ஞானமழிந்துபோம்; பிரமம் மூன்றுகாலத்திலு மழி யாமல் நித்தியமாயிருக்கும்.

வினு:—அப்படிக்கொத்த அஞ்ஞானமான அத்தியாசத்துக்குக் காரணம் யாது?

விடை:—அது சத்தோவென்றால் சத்துமல்ல; அசத்தோவென்றால் அசத்துமல்ல; சதசத்தோவென்றால் சதசத்துமல்ல; ஆனதால், அநிர்வசநீய மென்றுந் திரிகுணங்களைப் பொருந்தினதென்றும் வஸ்து தத்துவத்தை யறிந்ததினால் வாதிக்கப்பட்டுப் போமென்றும் அபாவ லட்சணமென்றுஞ்சொல்லப்படும். அவ்வஞ்ஞானம் பொய்யான கூட்டுறவினால் பிரமத்தினிடத்தில் ஆசிரயித்துக்கொண்டிருக்கிறது.

வினு:—பிரமத்தில் அஞ்ஞானம் ஆசிரயித்துக்கொண்டிருந்தால் ஆசிரயதோஷம் வராதோ?

விடை:—சுத்தியில் வெள்ளியாசிரயித் திருந்ததினால் சுத்திக்கெப்படியாசிரயதோஷம் வரவில்லையோ அப்படியே பிரமத்திற்குமாசிரயதோஷமில்லை.

வினு:—இப்படி சொன்னால் பிரமமென்று மஞ்ஞானமென்று மிரண்டுவித இருப்பு ஏற்படுமன்றோ?

விடை:—அவ்வஞ் ஞானத்திற்குப் பிரமத்தைத்தவிரச் சுதாசத்தையில்லாதபடியினால் இரண்டிருப்பு ஏற்படமாட்டாது.

வினு:—ஆனால் அஞ்ஞானமுண்டென்கிறதில் அடையாளம் யாது?

விடை:—சராசரமான சகத்திருக்கிறதும், வேதசாத்திரங்களிருக்கிறதும் நானஞ்ஞானி என்கிற வனுபவமிருக்கிறதும் அடையாளம். ஆனதால் அந்தஅஞ்ஞானம் மூலப்பிரகிருதியென்றும், சத்தியென்றும், அவித்தையென்றுஞ் சொல்லப்படும். அது சத்துமல்ல; சத்தைத்தவிர பின்னமுமல்ல; அபின்னமுமல்ல.

வினு:—ஆனால், தீபமும் பிரகாசமும்போற் சாவயவமாகுமா?

விடை:— சாவயவமுமல்ல.

வினு:—வித்து முளையும்போல் நிரவயவமாகுமா?

விடை:—நிரவயவமுமல்ல. ஆனதால், அநிர்வசநீயமென்றே பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இப்படிக்கொத்த அஞ்ஞானம் சமஷ்டி வியட்டி யென்றிருவிதமாகச் சொல்லப்படும்.

## சமஷ்டி.

வினு:—அஃதெப்படி?

விடை:—நானாவிதமாய்த் தோற்றப்பட்ட அஞ்ஞானங்களை

ஒன்றாய்க்கூட்டிச் சமட்டியென்றும் தனித்தனியே பிரித்து வியட்டியென்றுஞ் சொல்லப்படும்.

வினா:—சமட்டியாவது யாது?

விடை:—நானாவிதமாய்த் தோற்றுகிற மரங்களை எல்லாம் ஒன்றாகக்கூட்டி ஒரு தோப்பென்பதுபோல, நானாவிதமான அஞ்ஞானாதிகளை அபேதமாய் ஒன்றாகக்கூட்டுகிறதே சமட்டிஎனப்படும். இந்தச் சமட்டி அஞ்ஞானமானது சுத்த சாத்விக குணம்பொருந்திச் சிரேஷ்டமானதால் மாயையென்றுசொல்லப்படும். அந்தமாயையில் பிரதிபிம்பித்தசைதன்னியம் சர்வஞ்ஞத்துவாதிகுணங்களும் சிருஷ்டிஸ்திதி சம்மாரமும் பொருந்தினதால் அவ்வியாகிருதனென்றும், அவ்வியக்தனென்றும், ஈசுவரனென்றுஞ் சொல்லப்படும். இந்த மாயாப் பிரதிபிம்பமான ஈசுவரனுக்குச் சர்வசத்திகுணங்களும் சகல அஞ்ஞானங்களை விளங்கச்செய்கிறதும் சுதந்தரத்துவமும் சத்திய சங்கற்பத்துவமுஞ் சத்திய கர்மத்துவமு மிருக்கையால் ஈசுவரனென்றும், இந்த ஈசுவரனுக்குச் சர்வஞ்ஞத்துவமு மீசுரத்துவமும் சத்திய சங்கற்பத்துவமுஞ் சுதந்தரத்துவமு முண்டாகிறதற்குக்காரணமான சுத்த சாத்தீகம் பொருந்தின சமட்டியஞ்ஞானமாகிய மாயையே அவனுக்குக்காரணசரீரமென்று பெரியவர்களால் சொல்லப்படும். இந்த மாயையானது ஈசுவரனுக்குமிகவுமானந்தம் பொருந்தச்செய்து கத்தியை யுறையானது மறைத்ததுபோல ஆவரணமாக ஈசுரசொரூபத்தை மறைக்கையால் ஆனந்த மயகோசமென்றும், இப்படிப்பட்ட மாயைதானே ஈசுவரனுக்குச் சர்வசங்காரத்துவ காரணமான சுழுத்திஸ்தானமென்றும், பிராகிருதப பிரளயமென்றும் சொல்லப்படும். இந்த மாயையாகிய அஞ்ஞானத்தை வியஷ்டியபிப்பிராயமாய் விசாரிக்கும்போது அநேகவிதமாய்ப் பின்னமாயிற்று. அந்தவஞ்ஞான விருத்திகளுமொன்றுக்கொன்று குணவிலட்சணமானதால் நானாவிதமென்று சொல்லப்படும்.

## வியஷ்டி.

வினா:—வியஷ்டியாவது யாது?

விடை:—வனத்தை வியஷ்டியாய் விசாரிக்கும்போது மரங்கள் அநேகவிதமானதெப்படியோ அப்படியே அஞ்ஞானமும் வியஷ்டியினால் அநேகவிதமாகவிருக்கும். இந்த அஞ்ஞானம் குணத்திரயங்களில் வியாபித்திருப்பதால் இதற்குச் சமட்டி வியட்டி என்னும்பேருண்டாயிற்று. இனி வியட்டியஞ்ஞானமானது மலினசத்துவப் பிர

தானமாகையாலும் இராசத தாமதங்களைப் பொருந்தியிருப்பதாலும் நிக்ருஷ்டமாய்ப் பிரத்தியகாத்மாவுக்கு உபாதியாயிற்று. இந்த மலினசத்துவப்பிரதானமான வியஷ்டியஞ்ஞானத்துக்கு அதிஷ்டானமான சைதன்யமே பிரத்தியகான்மா. இந்த வவித்தையில் பிரதிபிம்பித்த சைதன்யமே பிராஞ்ஞனென்று சொல்லப்படும். இந்த வவித்தையானது பிராஞ்ஞனுக்கு மிகவுமானந்தத்தைக் கொடுத்து, கத்தியை யுறைமறைத்ததுபோலத் தனக்கதிஷ்டானமான பிரத்தியகான்மாவை மறைத்ததாலிதனை யானந்த மயகோசமென்றும், வியஷ்டி ஸ்தூல சூட்சுமங்களுக்குக்காரணமானதால் காரண சரீரமென்றும், இந்தப் பிராஞ்ஞனுக்குத் தேகேந்திரியாதி வியாபாரங்களையொடுக்கி யானந்தமாத்திரங்கொடுப்பதால் சுழுத்தியவத்தை என்றுஞ் சொல்லப்படும்.

வினா:—இதற்கனுபவம் யாது?

விடை:—ஒவ்வொருவனும் நான் சுகமாய் நித்திரைபண்ணினேன் ஒன்றுமறியேனென்று நித்திரை தெளிந்தெழுந்தபோது ஆனந்தானுபவத்தைச் சொல்லுகிறதே யனுபவமென்பது நிச்சயம். மேலும், வனவிருட்சங்கள் போலிருக்கிற சமட்டி வியட்டிக்கு ஒரு சாதி வஸ்து இரண்டிலும் பேதமில்லாமலெப்படி அபேதமோ அப்படியே அவற்றுள் பிரதிபிம்பித்த சீவேசுரர்களுக்கும் அபேதமே.

வினா:—அஃதெப்படி?

விடை:—சமுத்திரசலத்தையும் அலையையுமொன்றாகப் பார்க்கிறபோது அவற்றுள் பிரதிபிம்பித்த சூரியனுமொன்றாகி யெப்படி தோற்றுகிறதோ, அப்படியே யுபாதிகளாய சமஷ்டி வியட்டி ஞானமிரண்டும் அபேதமாகிறபோது அவற்றுள் பிரதிபிம்பித்த சீவேசுரர்களுக்கும் அபேதந்தவிரப் பேதமில்லை. மேலும், இந்த வியட்டி சமட்டியாய அஞ்ஞானங்களுக்கும் அவற்றுள் பிரதிபிம்பித்த ஆபாசருக்கும் ஆதாரமான சுத்த சைதன்யமெதுவோ அதுவே துரியமென்றும், அந்தத்துரியவுபாதிகளாய குணங்களுடனே கலந்து பிரியாமலிருந்தபோது மகாவாக்கியத்திற்கு வாச்சியார்த்தமென்றும், பிரிந்தபோது இலட்சியார்த்தமென்றுஞ் சொல்லப்படும். இதுவுமல்லாமல் மாயோபாதிகரான ஈசுவரன் அனந்த சத்திகளுடனே கூடிக்

கொண்டு பார்வையினால் சராசரமான சகத்தைச் சிருஷ்டிக்கிறார். ஆதலால், ஆன்மாவாகியும், அத்துவைதராகியும், வேறே அன்னிய வத்துவில்லாமல் தானாயிருக்கிறவராகியும், சிருட்டியாதி சாதனங்கள் தன்னைவிடவேறில்லாதவராகியுமிருக்கிற ஈசுவரன் தனக்குத் தானே யெப்படி யிந்தச்சகத்தைச்சிருட்டித்தாரென்று சங்கை செய்யவேண்டாம்.

வினா:— அஃதேதன்?

விடை:—பிரபுவான ஆன்மாவாகிய ஈசுவரன்றானே இந்தச் சகத்துக்கு உபாதானகாரணமும் நிமித்த காரணமுமாயிருந்து இந்தத் தாபர சங்கமமான பிரபஞ்சத்தைச் சிருஷ்டி திதி சங்காரம் பண்ணுகிறார்.

வினா:—அஃதெப்படி?

விடை:—இந்தச் சகத்தினுடைய சிருஷ்டிக்குத்தானே முக்கியமாயிருப்பதால் நிமித்தகாரணமாகவும் தன்னையாசிரயித்த வுபாதிப் பிரதானமான மாயையினால் உபாதான காரணமாகவுமிருந்தது ஆன்மாவன்றி வேறில்லை.

வினா:—அப்படியொன்றாயுள்ள ஆன்மாவுக்கு நிமித்தகாரணமாகவும் உபாதான காரணமாகவுமிருத்தல் கூடுமோ?

விடை:—பட்டுநூற்புழுவானது நூல் பிரதானத்தினால் நிமித்த காரணமும் சரீரப்பிரதானத்தினாலுபாதான காரணமுமா யெப்படி யிருக்கிறதோ அப்படிபோலவே ஈசுவரனுக்கு நிமித்தகாரணமும் உபாதானகாரணமுங் கூடுமென்றறி. அதற்குமேல் சுத்த தாமத குணம் பொருந்திய விகாரசத்தியோடே கூடிய ஆன்மாவினின்று ஆகாசம் பிறந்தது. அவ்வாகாசத்தில் வாயு பிறந்தது. அவ்வாயுவில் அக்கினி பிறந்தது, அவ்வக்கினியில் அப்பு பிறந்தது. அவ்வப்புவில் பிருதிவிபிறந்தது. இப்படி தாமத விகாரமான சத்தியினாலுண்டாக்கப்பட்ட பஞ்சபூதங்களி லொருபூதமாகிலுமசைய மாட்டாமலறிவில்லாமற் சடமாயிருப்பதால் அந்தச்சத்திக்குத் தாமதம் பிரதானமென்பதிற்சம்சயமில்லை. ஆனதால், சடமாயிருக்கிற பஞ்ச பூதங்களுக்குக்காரணமான தாமதசத்தியுஞ் சடமே. காரணத்தி

---

* அந்தத்துளதன்சத்தியையடையுற்றுளதாமிச்
செந்துக்கள்செய்கருமந்திகழ்காலம்பருவஞ்செய்
தெந்தப்பொருள்களுமாக்குவனெனவேயிறையுன்னுப்
பந்தப்படமுன்போற்பலவுலகங்கள்படைத்தான்
என்று பிரமகீதை கூறுவதறிக.

லிருந்தகுணத்தைக் காரியத்திலுஞ் சடமாய்க்கண்டதால் காரணமுங் காரியம்போற்சடமென்றறி. இப்படியுண்டான பஞ்சபூதங்கள் சூட்சுமமாயிருப்பதால் சூட்சுமபூதங்களென்றும் தன்மாத்திரைகளென்றும் சொல்லப்படும். இந்தத்தன்மாத்திரைகளோடு கலந்தசைதன்னியத்திற்குச் சதாசிவனென்றும், மயேசுவரனென்றும், உருத்திரனென்றும், விஷ்ணுவென்றும், பிரமாவென்றும் பேராயிருக்கும். இப்படிக்கொத்த சூட்சுமபூதங்களினின்றும் சூட்சுமதேகங்களுண்டாயின.

வினா:—அஃதெப்படி?

விடை:—இந்தச் சூட்சும பூதங்களைந்தும் ஒன்றோடொன்று கலந்து ஸ்தூல பூதங்களாகிறதற்குமுன் அபஞ்சீகிருத பூதகாரியமகப் பதினேழுதத்துவத்தைப் பொருந்தினதே சூட்சும தேகமென்றும், சம்சாரகாரணமானதால் இலிங்கசரீரமென்றும், சீவர்களின் போகத்துக்குச் சாதனமானதால் போகசாதனமென்றுஞ் சொல்லப்படும்.

வினா:—இலிங்க சரீரத்தின் பதினேழுதத்துவங்கள் யாவை?

விடை:—சுரோத்திராதி ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாக்காதிகர்மேந்திரியங்கள் ஐந்தும், பிராணாதிவாயுக்கள் ஐந்தும், மனம் புத்தியிரண்டும் ஆகப்பதினேழுதத்துவமுங் கூடினது இலிங்க சரீரமென்று சொல்லப்படும்.

வினா:—இந்தப்பதினேழு தத்துவத்தினுடையலட்சணம் யாது?

விடை:—சுரோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணமென்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், தனித் தனியே நின்ற சூட்சும ஆகாசாதி பூதங்களோடு சத்துவகுணங்கலந்ததில் நின்றும் பிரகாசம்பொருந்தித் தனித் தனியே யுண்டாயின. இந்தச் சூட்சுமாகாசாதி பஞ்சபூதங்களில் கலந்த ஐந்து சாத்நிகாங்கிசங்களொன்றோடொன்று கலந் தொருமித்துச் சகலத்திற்குங்காரணமான அந்தக்கரணம்பிறந்தது. இப்படிப்பிறந்த ஞானேந்திரியங்களும் அந்தக்கரணமும் பிரகாசசொரூபமானதால் சாத்நிகாங்கிசத்துவமென்று சொல்லப்படும். அந்தச் சாத்துவிகமுஞ் சொச்சதிரவியமானதால் அந்தக்கரண ஞானேந்திரியங்களும் பிரகாசசொரூபமென்பதிற் சந்தேகமில்லை. இப்படிக்கொத்த அந்தக்கரணம் விருத்தி பேதங்களினால் நான்குவிதமாய் மனம் புத்தி சித்தம் அகங்காரங்களென்று சொல்லப்படும்.

வினு:—அஃதெப்படி?

விடை:—சங்கற்பத்தினுல் மனமென்றும் நிச்சயிக்கிறதினுல் புத்தியென்றும் சிந்தனையினுல் சித்தமென்றும் அபிமானத்தினுல் அகங்காரமென்றுஞ் சொல்லப்படும். ஆதலால், பதினேழுதத்துவத் தோடேகூடின இலிங்கசரீரம் சித்திக்கிறதின்பொருட்டு மனேபுத்தி களினுற் சித்தவகங்கார பாவங்களை நன்ருயறி.

வினு:—அஃதெப்படி?

விடை:—ஒருமனமே சங்கற்பமுஞ் சிந்தனையுஞ்செய்வதால் மனத்தினிடத்திற் சித்ததன்மமும், புத்திக்குத் தேகாதிகளிடத்தில் நானென்கிற வபிமானந் திடசித்தமாயிருப்பதாற் புத்தியிலகங்கார தன்மமும், புத்திக்குக் கர்த்தத்துவமும், புத்தியினுலேவப்பட்ட இந்திரியங்களுக்குக் காரணத்துவமுஞ் சித்தித்தன. இந்தப்புத்தி யானது ஞானேந்திரியங்களுடன் கூடுவதாலும், மிகவும் அறிகிறதே பிரதானமானதாலும், ஆன்மாவை மறைப்பதாலும் வித்துவான் களால் விஞ்ஞானமயகோசமென்று சொல்லப்படும். இந்தக்கர்த் தத்துவ லட்சணம்பொருந்தின அகங்கார விருத்தியுடன் கூடினவன் சகல சம்சாரங்களையும் வகித்துக்கொண்டிருக்கிற விஞ்ஞான மயனுவன்.

வினு:—அஃதெப்படி?

விடை:—நானெனதென்று சதாகாலமுந் தேகேந்திரியாதிகளி டத்திலும் கிரகாதியினிடத்திலும் அபிமானத்தை வைத்திருப்பதால் விஞ்ஞானமயனென்றும், சீவனென்றும், புருடனென்றும் சொல்லப் படும். ஆனதால், அவனேகர்த்தா; அவனேபோக்தா; அவனேதுக்கி யென்றறி. அந்தச்சீவன் தன்னுடைய பூர்வவாசனைகளோடேகூடி யேவப்பட்டவனுய்த் தினந்தோறும் புண்ணியபாபரூபமான கன்மங் களைச்செய்து அந்தக் கன்மங்களினுல் வரப்பட்ட சுகதுக்கங்களை இக லோகபரலோகங்களில் புசிக்கின்ருன். இன்னும் அந்தச்சீவனுனவன் ஆயிரங்கோடிசன்மங்களில் பிறந்துமிறந்தும் புகிறதாயிருக்கின்ற சம்சாரமண்டலத்திற்கிடந்து சுழலுகின்ருன். அப்படிப்பட்ட சங் கற்பரூபமான மனது ஞானேந்திரியத்துடன் கூடினுல் மனேமய கோசமென்று சொல்லப்படும்.

வினு:—அஃதெப்படி?

விடை:—எது மனேமயகோசமென்று சொல்லப்படுகிறதோ அதில் மனதே பிரபலமானதால் அது மனேமயகோசமென்று

சொல்லப்படும். கவலை கிலேசம் தோஷம் காமக்குரோதாதிகளெல்லாம் இந்த மனோமயகோசத்தின் தொழில்களாகும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—மனத்தினாலெந்த வஸ்துவையுமெண்ணுகிறான்; மனத்தினாலெந்த பலத்தையுமிச்சிக்கின்றான்; மனத்தினால் எந்தக்காரியத்தையுஞ்செய்ய யத்தனம்பண்ணுகிறான்; மனத்தினால் சகல தொழிலையுஞ்செய்கிறான். மனத்தினால் சகலபோகங்களையும் புசிக்கிறான். ஆதலால், மனமே சகலத்துக்குங்காரணமென்றறி. இந்தச் சகல விவகாரங்களுக்கும் ஏதுவான மனமே அந்தர் பாகியங்களிலிருக்கிற விஷயங்களையெல்லாமறியும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—*கேட்கிறது மனத்தினால், பார்க்கிறது மனத்தினால், கந்தத்தை அறிகிறது மனத்தினால், வசனிக்கிறது மனத்தினால், பரிசத்தை அறிகிறது மனத்தினால், சகலதொழில்களும் மனத்தினால், புருடனுக்குப்பந்தமோட்சமும் மனத்தினால், அர்த்தமும் அனர்த்தமும் மனத்தினாலென்றறி.

வினா:—அஃதெப்படி?

விடை:—மனோசுத்தியினால் மோட்சமும், மனோமலினத்தினால் பந்தமும், விவேகத்தினால் அர்த்தமும், மனோ அவிவேகத்தினால் அனர்த்தமும்வரும். இந்தமனம் இராசதகுணத்துடன் கூடினதால் விடய சொரூபமான காமக்குரோதாதிகளாகிற சத்துருக்களால் அடிபட்டுச் சஞ்சலமாய்ச் சூட்சுமார்த்தமாயிருக்கிற சொரூபத்தையறியமாட்டாமல் மிகவும் பிரமித்துக்கெடும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—பெருங்காற்றில் வைத்த தீபமானது சஞ்சலித்தலால் அதன் பிரகாசமானமகிமையெப்படியணைந்துபோகுமோ அப்படிப்போலென்றறி. ஆனதால், முமுட்சுவானவன் பிறவியாகிறபந்தத்தையொழிக்கிறதின்பொருட்டு இராசத தாமதங்களையும் அவற்றின் தொழில்களையும் விட்டொழித்துச் சித்தத்தைச் சுத்தசத்துவத்துடன்கூட்டிப் பரிசுத்தமாக்கிப் பிரயத்தன பூர்வகமாய் நிர்விடயம் பண்ணவேண்டும்.

---

* மனத்தின் சம்பந்தமில்லாவிடத்துச் சுரோத்திராதியிந்திரியங்கள் சத்தாதி விஷயங்களையறிகிறதற்கு யோக்கியமில்லாதிருப்பதுபற்றி இவ்வாறு கூறப்பட்டது.

வினா:—அஃதெப்படி?

விடை:—மனோநிருமலமில்லாதது புருடனுக்குப் பந்தத்திற்கேது; மனோநிருமலமானது முத்திக்கேது. ஆனதால், மனது நிருமலமாம்பொருட்டு விவேகியானவன் சதாமனோநிக்கிரகம் பண்ணவேண்டும். முன்சொல்லப்பட்டதனித்தனியேயிருந்த சூட்சுமபஞ்சபூதங்களில் இராசதாங்காரங்கலந்ததினின்று வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தமென்னுங் கன்மேந்திரியங்களுண்டாயின.

வினா:—அஃதெப்படி?

விடை:—இரசோகுணங் கலந்த ஆகாசத்தில் வாக்கிந்திரியமும், அவ்வக்கினியிற் பாதவிந்திரியமும், அவ்வப்புவில் பாயுரிந்திரியமும், அப்பிருதிவியில் உபஸ்தேந்திரியமு முண்டாயின. அந்தச்சூட்சும பஞ்சபூதங்களில் தனித்தனியேகலந்த இரசோகுணங்களைந்தும் ஒன்றோடொன்று கலந்து சமட்டியாய்க்கூடி யொருமித்ததினால் கிரியாரூபமான பிராணாதிவாயுக்களுண்டாயின. இந்தப் பிராணாதிபஞ்சவாயுக்களை யேவுகிற தேவதைகள் விசிட்டனென்றும், விசுவகர்த்தாவென்றும், விசுவயோனியென்றும், அஜனென்றும், ஜயனென்றுஞ் சொல்லப்படும்.

வினா:—இந்தப் பிராணாதிவாயுக்களின் லட்சணம் யாது?

விடை:—ஊர்த்த முகமாய் (மேல்நோக்கி)ப் புறப்பட்டதாற் பிராணனென்றும், அதோமுகமாய் (கீழ்நோக்கி)ப் புறப்பட்டதினால் அபானனென்றும், உள்ளே வியாபகமாயிருப்பதால் வியானனென்றும், புசிக்கிறபதார்த்தங்களைக் கண்டத்திலிருந்து இறக்குகிறதினால் உதானனென்றும், அப்படியிறங்கிய அன்னசாரத்தை நாடிகள்தோறுங் கலக்கச்செய்கிறதினால் சமானனென்றுஞ் சொல்லப்படும். இவையேயுமன்றி ஐந்து உபவாயுக்களுமுண்டு.

வினா:—அவை யாவை?

விடை:—விக்கல் பிறப்பிக்கிறது நாகனென்றும், கண்ணை இமைத்து விழிப்பிக்கிறது கூர்மனென்றும், தும்மலுண்டுபண்ணுகிறது கிரிகரனென்றும், கொட்டாவியுண்டாக்குகிறது தேவதத்தனென்றும், சரீரத்தைப் படுக்கப்பண்ணுகிறது தனஞ்செயனென்றுஞ்சொல்லப்படும். இந்தவுபவாயுக்களும் முன்சொன்னபிராணாதி பஞ்சகத்திலொடுக்கமாம். இந்தப்பிராணாதியும் கன்மேந்திரியங்களும் கிரியைசெய்கிறதே பிரதானமானதால் இவை இரசோகுண அம்சத்திற்பிறந்தனவென்று பெரியோர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்தஇராசதசத்தியானது கிரியைபண்ணுகிறதே பிரதானமாயிருக்குமென்றும், தாமதசத்தியானது சடரூபமாயிருக்குமென்றும், சாத்திகசத்தியானது பிரகாச சொரூபமாயிருக்குமென்றும் மகரிஷிகளாற்சொல்லப்படும். இந்தப்பிராணாதி பஞ்சகங்களுங் கர்மேந்திரியமுங்கூடித் தூலதேகஞ் சிருட்டிக்கிறதற்கு யோக்கியமாயிருப்பதாற் பிராணமயகோசமென்றும், இந்தக் கன்மேந்திரியங்களினாலெந்தப்புண்ணிய பாபாதி* கன்மங்கள் செய்யப்படுகின்றனவோ அவை பிராணமயகோசகாரியமென்றுஞ் சொல்லப்படும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—வாயுவினாற் சலிக்கப்பட்ட விருட்சமானது நானாரூபமாய்ச் சேட்டிக்கும். அந்த வாயுவில்லாதவரையில் அசையாமலிருக்கும். அதுபோலப் பிராண கன்மேந்திரியங்களினால் தேகமானது அலேக்கப்பட்டு விகிதாவிகிதங்களான நானாவிதகிரியைகளைச்செய்துகொண்டுவரும். அந்தப் பிராணகன்மேந்திரியங்க ளில்லாவிட்டாற் சேட்டியாமலிருக்கும். முற்கூறிய விஞ்ஞானமயகோசம் மனோமயகோசம் இந்தப் பிராணமயகோசமுங்கூடி ஆன்மாவுக்குள் சூட்சுமமாய் இலயித்திருப்பதாலும் ஆன்மப்பிரதி பிம்பத்துக்கு யோக்கியமாயிருப்பதாலும் இவற்றை இலிங்கசரீரமென்றும் தூலத்தைக்காட்டிலுஞ் சூட்சுமமாயிருப்பதால் சூட்சும சரீரமென்றுஞ் சொல்லுவார்கள். இப்படி சமஸ்தலிங்கசரீரங்களையும் ஒன்றாய்க்கூட்டினதால் மரக்கூட்டத்தை வனமென்பதுபோற் சமட்டி சூட்சும சரீரமென்றும், இந்தச் சமட்டி சூட்சும சரீரத்துடன் கலந்த பிரதிபிம்ப சைதன்னியத்தை இரணியகற்பரென்றும், சூத்திரான்மாவென்றும், மகாப்பிராணனென்றும் பெரியவர்களாற் சொல்லப்படும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—சொர்ணம்போற் பிரகாசமாயிருக்கிற புத்திக்குள்ளே ஆன்மா பிரதிபிம்பித்துச் சொர்ணம்போல விளங்குகையால் இரணியகற்பரென்றும், சமஸ்த லிங்கசரீரங்களிலும் மணியில் நூல் கோக்கப்பட்டிருப்பதுபோல ஆன்மா வியாபிததிருப்பதால் சூத்திரான்மா வென்றும், சகல சரீரங்களையுஞ் சிருஷ்டிபண்ணுகிறதால் மகாப்பிராணனென்றுஞ் சொல்லப்படும். இப்படிக்கொத்த சமஷ்டி சூட்சும சரீரமானது தனித்தனியாய்ப்பிறந்ததால் வியட்டி

* ஆதியென்றதினால் சொறிதல் வினையுங்கொள்க; அவை: நீரடித்தல், துரும்புகிள்ளல், அழுச்சுருட்டல் முதலியவைகளாம்.

சூட்சும சரீரமென்றும், இந்தவியட்டி சூட்சுமசரீரங்களிற் சிதாபாச ஞய்ப்பிரதிபிம்பித்த சைதன்னியத்துக்குத் தைசதனென்றும் பெரியவர்களால் சொல்லப்படும்.

வினு:—அஃதெப்படி?

விடை:—தேஜோமயமான அந்தக்கரண*உபாதியோடேகூடினதால் தைசதனென்றும், தூலத்தைக் காட்டிலுஞ் சூட்சுமமானதால் வியட்டி சூட்சும சரீரமென்றும், இந்தச் சூட்சும சரீரமானது சாக்கிரத்தினுடைய வாசனைகளைச் சூட்சுமமாய்க்காண்பதால் சொப்பனுவஸ்தையென்றும், சீவனுனவன் அந்தச் சொப்பனத்திற் செய்கிற கிரியைகளைச் சூட்சுமமாயறிகிறதால் பிராதிபாசிகனென்றுஞ் சொல்லபபடும். இந்தத் தைசதனுனவன் சொப்பனத்தில் சாக்கிரகாலத்தில் கற்பிக்கப்பட்ட வாசனைகளோடுகூடிய சூட்சும புத்திவிருத்திகளினுற்சூட்சும விடயங்களைப் புசிக்கிருன். இந்தச் சமட்டி சூட்சும சரீரங்களும் வியட்டி சூட்சும சரீரங்களும் முன்சொன்ன காரண சரீரத்தைப்போலச் சாதிவஸ்து ஏகமானதால் அபேதமென்றறி. இந்தச் சூட்சுமவியட்டி சமட்டியிரண்டும் வேற்றுமையுடையனவன்றுதலால் இவற்றை அபிமானித்த சூத்திரான்மா, தைசதன் என்னும் இருவருமே முன்சொன்னகாரணசரீர அபிமானியாகிய பிராஞ்ஞேசுரர்களெப்படியபேதமோ அப்படியே அபேதமென்றறி. இந்தப்படி சூட்சுமப் பிரபஞ்சத்தினுடைய லட்சணம் சாஸ்திரசம்மதமாய்ச் சொல்லப்பட்டது. இனி ஸ்தூலப் பிரபஞ்சத்தினுடையவழிசொல்லுகிருேம்.

## ஸ்தூலப்பிரபஞ்சம்.

வினு:—அஃதெப்படி?

விடை:—முன் சூட்சுமமாயிருந்த ஆகாசாதி பஞ்ச பூதங்களொன்றுேடொன்று பஞ்சிகிருதமாய்க்கலந்து ஸ்தூலபூதங்களாயின.

வினு:—அஃதெப்படி?

விடை:—ஆகாசாதி பூதங்களைந்துள் ஒவ்வொன்றுமிரண்டிரண்டாய்ப்பிரிந்தன; அதில் தன்னுடையசுபாவாம்சம் படுபாதிவேருய் வைத்து மற்றப்படுபாதியைந்தும் ஒவ்வொன்றும் நந்நான்காய்ப்

---

* ஒருவஸ்துவைப் பலவஸ்துவைப்போலத் தோன்றச்செய்வதற்கு ஏதுவாயிருப்பது உபாதியாம்.

பிரிந்து சுபாவாங்கிசம் நிற்க மற்ற நான்கு பூதங்களிலும் ஒன்றோ டொன்று அரைக்கால்பங்காய்ச்சேர்ந்தன. இப்படிபிரிந்த ஆகாசாதி யைந்தும் தன்னுடையசுபாவாங்கிசமான படுபாதியும் மற்றநான் காய்ப்பிரிந்த பூதங்கள் படுபாதியும் ஒருமித்துக்கூடி ஒவ்வொன்றும் ஐந்து பாகமாய்க் கலந்து ஸ்தூலபூதங்களாயின. இந்தப் பஞ்சீகர ணத்தை அப்பிரமாண்யமென்று சங்கிக்கவேண்டாம்.

வினா:—சாமவேதோபநிஷத்தில் திரிவிதகரணமாய்ச் சொல்லி யிருக்கின்றதெப்படி?

விடை:—வாயுவாகாசங்களிரண்டும் அமிர்த திரவியங்களான தாலும், மிர்த்திரவியங்களான பிருதிவி அப்பு தேயுக்கள் அவற்றுள் ஒடுக்கமாகையாலும், இந்தப்பஞ்சீகரணம் பிரமாண்யமென்று பெரி யவர்களாற்சொல்லப்படும். இப்படி சொல்லப்பட்டபஞ்சீகரண மன் றித்திரிவிதகரணஞ்செய்தாற் பிரத்தியட்சாதிவிரோதம்வரும். ஆன தால், இந்த ஆகாசவாயுக்களுடைய தன்மம் வன்னியாதிகளில் காணப்பட்டிருக்கிறது. அந்தவாகாசவாயுக்களில் வன்னியாதி தன் மங் காணப்படவில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—இந்த வன்னியாதியங்கிச வியாப்தியானது கொஞ்ச மாய்க்கலந்ததினால் இவற்றின் தர்மம் ஆகாசவாயுக்களில் காணப்பட வில்லை. சமஸ்தத்திலுங் காரணத்தைப்போற் காரியமுங் காணப்பட் டிருப்பதால் இந்தப் பஞ்சீகரணம் பிரமாணமென்றே பெரியவர்கள றிந்திருக்கிறார்கள். ஆனதால், இந்தப் பஞ்சீகரணத்தினாலுண்டான ஸ்தூலபூதங்களுடைய கிரமமுங்கேட்பாயாக.

வினா:—அஃதெப்படி?

விடை:—ஆகாசத்துக்குக்குணம் சத்தம், வாய்வுக்குக்குணம் சத்தபரிசம், தேய்வுக்குக்குணம் சத்தபரிசரூபம், அப்புவுக்குக் குணம் சத்தபரிசரூபரசம், பிருதிவிக்குக்குணம் சத்தபரிசரூபரசகந் தங்களென்று சொல்லப்படும். இந்த வாகாசாதியங்கிசகுணங்கள் ஞானகர்மேந்திரியங்களில் காணப்பட்டிருக்கின்றன.

வினா:—அஃதெப்படி?

விடை:—சுரோத்திரம் ஆகாசாங்கிசமானதால் சத்தத்தையும், தொக்கு வாயுவங்கிசமானதால் பரிசத்தையும், சட்சு அக்கினியங் கிசமானதால் ரூபத்தையும், சிங்குவை அப்புவினங்கிசமானதா லிர

சத்தையும், ஆக்கிராணம் பிருதிவியம்சமானதால் கந்தத்தையுங் கிரகிக்கின்றன. வாக்கும் ஆகாசாம்சமானதால்வசனிக்கும், பாணியும் வாயுவம்சமானதா லிடுதலேற்றல் செய்யும், பாதமும் அக்கினியம்சமானதால் கமனாதிதொழில்களைச்செய்யும், பாயுரு அப்புவினம்சமானதால் மலவிசர்க்கஞ்செய்யும், உபஸ்தம் பிருதிவியினம்சமானதால் அஞ்ஞானானந்தத்தைச் செய்யுமென்றறி.

வினா:—இவற்றிற் கதிதெய்வம் யாது?

விடை:—சுரோத்திரத்துக்குத் திக்கும், தொக்குக்கு வாயுவும், சட்சுவுக்குச் சூரியனும், சிங்குவைக்கு வருணனும், ஆக்கிராணத்துக்கு அசுவனிதேவதைகளும், வாக்குக்கு அக்கினியும், பாணிக்கு இந்திரனும், பாதத்துக்குத் திரிவிக்கிரமனும், பாயுருவுக்கு மிருத்தியுவும், உபஸ்தத்துக்குப் பிரசாபதியும், மனதுக்குச் சந்திரனும், புத்திக்குப் பிதகனும், அகங்காரத்துக்கு உருத்திரனும், சித்தத்துக்குக்ஷேத்திரஞ்ஞனும் அதிதேவதைகளாம். இந்தத்திக்காதிதேவதைகள் ஆகாசாதிபஞ்சபூதங்களினின்றும் சத்துவரசோகுணாம்சங்களிற்பிறந்த இந்திரிய ஸ்தானங்களிலிருந்து அந்தந்தப் பிராணிகளுடைய கன்மானுசாரமாக நிக்கிரகா நிக்கிரகங்கள் செய்துகொண்டு சரீரகரணப்பிராண கூட்டங்களுக்கு அதிதேவதையா யிருப்பதால் சகல கன்மங்களுடைய பிரவிர்த்திக்கும் ஏதுவாக விருப்பார்கள். ஆகையால், கன்மத்துக்குத்தக்கபடி குணமுண்டாகும்; குணத்துக்குத் தக்கபடி மனது பிரவிர்த்திக்கும். சீவன் மனத்தை யாசிரயித்துக் கொண்டு ஞானேந்திரிய கன்மேந்திரியங்களோடேகூடிப் புண்ணிய பாவங்களைச் செய்துவருகிறான். இப்படிச்செய்துவருகிற விஞ்ஞானமயனான சீவன் ஜகமே தானாகவிருந்து கர்த்தா நானென்று தேகத்தையபிமானிக்கிறான். ஆன்மாவோவென்றால் சாட்சியாயிருந்து கொண்டு ஒன்றுஞ்செய்யாமலுஞ் செய்விக்காமலுந்தடஸ்தமாயிருக்கிறது. அகங்காரியே பார்க்கிறதும், கேட்கிறதும், வசனிக்கிறதும், கர்த்தாவாயிருந்து கிரியைபண்ணுகிறதும், போக்தாவாகிப் புசிக்கிறதுமாயிருக்கிறான். ஆன்மா இந்தவிவகாரங்களிலே யொட்டாமல் சாட்சியாகத் தானேயிருக்கிறது. ஆனதால், ஆன்மாவுக்குக்கர்த்தத்துவமும் போக்தத்துவமுமில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—உலகத்தில் பிராணிகளுடைய சேஷ்டைக்குச் சாட்சியாயிருக்கிற சூரியனைப்போலாம்.

வினா:—அஃதெப்படி?

விடை:—சூரியன் தானொருதொழிலுஞ் செய்யாமலும் ஒருத்தரைக்கொண்டு செய்வியாமலுமிருக்கப் பிராணிகள் தங்கள் சுபாவ குணங்களினாற் பிரவிர்த்திக்கிறதுபோல நிஷ்கிரியமான பிரத்தியகான்ம சந்நிதானத்தினின்றுந் தேகேந்திரியாதிகள் சேஷ்டிக்க அவர் அவைகளுக்கெல்லாஞ் சாட்சியாயிருக்கிறார். இப்படிக்கொத்த பரமதத்துவத்தை அறியமாட்டாமல் மாயையினால் மோகிக்கப்பட்ட புத்தியையுடைத்தானவர்கள் தமக்கன்னியமான தேகேந்திரியாதிகள் செய்கிறதொழிலே ஆன்மாவாயிருக்கிற தம்மிடத்திலாரோபித்துக்கொள்ளுகிறார்கள்.

வினா:—மூடனாயிருக்கிற புருடனானவன் அசங்கமாகவுஞ் சித்துரூபமாகவுமிருக்கிற ஆன்மசொரூபத்தைக் காணாமல் ஆன்மாவினிடத்திலே அனான்மகாரியமான தொழில்களை யாரோபித்துக் கொள்ளுகிறதெப்படி?

விடை:—ஆகாசத்தில் சந்திரனை யொட்டாமலிருக்கிற மேகமோடுகிறதைக்கண்டு சந்திரனோடுகிறானென்பதுபோலாம். ஆதலால், அப்பா! ஆன்மானான்ம விவேகமுனக்குத் தெரியும்படி முன்னைச் சகத்துண்டானவழியை அன்புடனே சொல்லுகிறோம்; விவேகியாயிருக்கிற சீடனே நீகேட்பாயாக.

வினா:—அவ்வழி யெங்ஙனம்?

விடை:—ஈசரலட்சணம் பொருந்தின பஞ்சீகிருதமான ஆகாசாதி யைம்பெரும்பூதங்களினால் இந்தச் சராசரமான பிரபஞ்சங்களுண்டாயின. இந்தப் பிரபஞ்சத்துட்பட்ட நால்வகையோனியிற் பிறந்த சகல சரீரங்களுக்கும் நெல்லுமுதலாகிய சகல ஔஷதிகளும் வாயு தேஜஸ் அப்பு பூமிகளும் அன்னமாயின.

வினா:—அஃதெப்படி?

விடை:—சிலசெந்துக்கள் வாயு பட்சணம்பண்ணுகிறதும், சிலசெந்துக்கள் சந்திரகிரணஞ் சூரியகிரணங்களைப் பட்சணம்பண்ணுகிறதும், சிலசெந்துக்கள் மேகத்திலே நீரைப் பட்சணம்பண்ணுகிறதும், சிலசெந்துக்கள் மண்ணைப் புசிக்கிறதும், சிலசெந்துக்கள் கற்களைப் புசிக்கிறதும், சிலசெந்துக்கள் பழுப்பிலைகளைப் புசிக்கிறதும், சிலசெந்துக்கள் புல்லைப் புசிக்கிறதும், சிலசெந்துக்கள் மாமிசாதிகளைப் புசிக்கிறதும், சிலசெந்துக்கள் நெல்முதலியவைகளைப் புசிக்கிறதுமாய்ச் சீவிக்கின்றன.

வே. சாமிநாதையர் நூல்



வினா:—நால்வகை யோனியாவது யாது?

விடை:—அவை சராயுசம், அண்டசம், சுவேதசம், உற்பீசமென்பனவாம். நால்வகை யோனியிலிருந்து தத்தங் கன்மானுசாரமாய்ச் செந்துக்கள்பிறக்கின்றன. அவற்றுள் சராயுசமாவது தோற்பையினின்றும்பிறந்த மானுடர்முதலான செந்துக்களாம்; அண்டசமாவது முட்டையினின்றும் பிறந்த பறவைமுதலான செந்துக்களாம்; சுவேதசமாவது வேர்வையினின்றும் பிறந்த பேன் ஈர் முதலானவைகளாம்; உற்பீசமாவது பூமியைப்பேதித்துக்கொண்டுபிறந்த விருட்சமுதலானவைகளாம். இந்த நான்குவிதமான பௌதிகங்களே ஸ்தூலசரீரமாயின. இந்த ஸ்தூல சரீரங்களைத் திருஷ்டியேகசித்தமாய்ப் பார்க்கிறபோது சமட்டியென்றும், இந்தச்சமட்டி ஸ்தூலசரீர அவிச்சின்னமாகியும் பிரதிபிம்பமாகியுமிருக்கிற சைதன்னியமெதுவோ அந்தச் சைதன்னியம் உலகத்திலுள்ள மனுஷாதி செந்துக்களில் நானென்கிற அபிமானத்துவம் வைத்ததால் அதனை வைசுவானரனென்றும், நானாவித ரூபங்களாய் விளங்குகிறதால் விராட்டென்றும், இந்தச்சதுர்விதங்களாய ஸ்தூலபௌதிக சமஷ்டிகளில் அதனதன் சாதிவிசேடங்களாய்ப் பிரித்துப் பின்னபின்னமாய்ப் பார்க்கிறபோது வியஷ்டியென்றும், இந்தவியஷ்டி ஸ்தூலசரீரத்தில் அவிச்சின்னமாகவும் பிரதிபிம்பமாகவுமிருந்த சைதன்யமெதுவோ அது விசுவமாயிருக்கிற ஸ்தூலதேகத்தில்நானென்னும் அபிமானம் வைத்திருப்பதால் அதனைவிசுவனென்றும், அந்த வியஷ்டியான விசுவனுக்கு இந்த ஸ்தூலசரீரமானது அன்னவிகாரமானபடியினால் அன்னமய கோசமென்றுஞ் சொல்லப்படும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—இந்த ஸ்தூலதேகமானது பிதாப்புசித்த அன்னவிகாரத்தினாலுண்டான சுக்கிலசுரோணிதங்களால் பிறந்து அன்னத்தினால் விருத்தியடைகின்றது; அன்னசாரமில்லாதபோது நசித்துவிடுகின்றது; ஆதலால், ஸ்தூலதேகம் அன்னவிகாரமானபடியினால் அன்னமயமென்றும், ஆனந்தமயகோசமுதலான நான்குகோசங்களையும் வாளாயுதத்தை உறைமறைத்ததுபோல மறைத்திருப்பதால் அன்னமயகோசமென்றும், இந்த ஸ்தூலதேகமானது ஆன்மாவுக்கு ஸ்தூல போகங்களைப் புசிக்கிறதற் கிருப்பிடமென்றும் பெரியவர்களாற் சொல்லப்படும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—ஆன்மாவானது சரீரத்திலிருந்து ஸ்தூலமான சப்

தாதி விஷயங்களைப் புசித்துக்கொண்டு போக்தாவாயிருப்பதால் ஸ்தூலதேகம் போகமனுபவிக்கிறதற்கு இருப்பிடமென்று மகான்களால் சொல்லப்படும்.

வினு:—போக்தாவென்பது யாது?

விடை:—இந்திரியங்களினுற் கிரகிக்கப்பட்ட சப்தாதிவிஷய போகங்களை ஆன்மாவானது தேகேந்திரிய மனதுடனேகூடி அனுபவிப்பதால் போக்தாவாமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

வினு:—எப்படி அனுபவிக்கிறது?

விடை:—ஏகாதசவாசல் (11) பொருந்தின தேகமான மேடையில் இந்திரிய மனேவர்க்கங்களென்னும் பரிவாரங்கள்சூழ ஆன்மாவானது மகாராஜாவாய் அஞ்ஞானமென்னும் சிங்காதனத்திலிருந்து விஷய போகங்களைப் புசித்துக்கொண்டிருக்கிறது. இப்படிக்கொத்த ஆன்மாவை ஞானேந்திரியங்களைந்தும், அவற்றிற் கதிதேவதைகளைந்தும், கர்மேந்திரியங்களைந்தும், அவற்றிற் கதிதேவதைகளைந்தும், மனம்முதலானவைகளும், அவற்றிற் கதிதேவதைகளைந்தும், அதன தன்தொழில்களினுல் நியமித்த பிரகாரமாயிருந்துகொண்டு ஊழியக்காரர்போல் சாக்கிரதையாய்ப் பஜனைபண்ணுகின்றன. இந்த ஆன்மாவானது ஸ்தூலதேகத்தோடேகூடித் தூலவிஷயங்களைப் புசித்துக்கொண்டு நானெனதென்று விவகாரம் பண்ணுகிறதால் இதுவேசாக்கிர அவத்தையென்றும், இப்படிச்சொல்லப்பட்ட சமட்டி வியட்டியான சரீரங்களுக்கு அபிமானிகளான விசுவ வைசுவானரர்களுக்கும் சாதிவஸ்து முன் சூட்சுமகாரண வியட்டி சமட்டிக்குச் சொன்னதுபோலப் பேதமில்லாமலிருப்பதால் அபேதமென்றும், இப்போதுனக்குச்சொன்ன ஸ்தூல சூட்சும காரணப் பிரபஞ்சங்களெல்லாம் ஒன்ருய்க்கூட்டி மகாப்பிரபஞ்சமென்றும், இந்த மகாப்பிரபஞ்சத்துக்கு அவிச்சின்னமாகவும் விஸ்வப்பிரஞ்ஞாதிலட்சணமாய்விராட்டு முதல் ஈசுரபரியந்தமும்நின்ற சைதன்னியம் ஒன்றேயென்றும், எந்தச்சைதன்னியம் அனுதியாகவும் அனந்தமாகவும் அவ்யத்தமாகவும் அஜமாகவும் அட்சரமாகவுமிருக்கின்றதோ அதுவே யிந்தமகாப்பிரபஞ்சத்துடன் தப்தாயபிண்டம்(நெருப்பிற்காய்ச்சியஇரும்பு)போற் கலந்திருப்பதால் சர்வம்பிரமமென்றும் மகாவாக்கியத்திற் சொல்லப்படுகின்றன. இந்த வாக்கியார்த்தம் பெரியவர்களால் வாச்சியார்த்தமென்றும் இதனை விட்டுப்பிரிந்த ஆன்மா லட்சியார்த்தமென்றும் காரியகாரண லட்சணமான ஸ்தூலமுதல் ஞானபரியந்தங் காணப்பட்ட சகலமும் அனுன்மாவென்றுஞ் சொல்லப்படும்.

வினு:—ஆன்மலட்சணம் யாது?

விடை:—அந்தக்கரணத்தையும் அதனுடைய தொழிலான மனோபுத்திசித்தவகங்காரங்களையுங் கண்டுகொண்டு தானுய் அழியாதபடி விகாரமின்றியிருந்த சைதன்யமெதுவோ அதுவே ஆன்மாவென்று சூட்சுமபுத்தியினுலறிந்துகொள். மேலும், இந்தப்பிரத்தியகான்மாவானவர் சுயம்பிரகாசர் நிரங்கிசர் அசங்கர் சர்வகாலத்திலும் ஏகரூபமாயிருக்கிறவர் நித்தியர் அகண்டானந்த சொரூபர் சகல வாசையுமற்றவர் சாட்சி நிர்க்குணரென்றும், இவர் பிறக்கவுமில்லை இறக்கவுமில்லை வளரவுமில்லை குறையவுமில்லை; ஆனதால் நித்தியர் சாசுவதர் புராணரென்றும், இவர் சரீரங்கள் கொல்லப்பட்டு மரித்துப்போகிறபோதுந் தாங்கொல்லப்பட்டவருமல்ல மரித்தவருமல்லவென்றும் அறிவாயாக.

வினு:—அஃதெப்படி?

விடை:—கர்ப்பத்தி லுண்டாயிருக்கிருன், பிறந்தான், வளர்ந்தான், ஓடியாடித் திரிந்தான், ஒருநாளைக்கொருநாள் குறைந்தான், இறந்தானென்னும் ஆறுவிகாரங்களுந் திரிசியமாயிருக்கிறதேகத்துக்கேயன்றி ஆன்மாவுக்கில்லை. இதுவன்றியுந் தூலமென்கிறதுங் கிருச(இளைப்பு)மென்கிறதுங் கறுப்பென்கிறதும் சிவப்பென்கிறதும் வர்ணுச்சிரமங்களும் அவற்றின் தர்மங்களும் சரீரத்திற்கேதவிர இந்த விகாரங்களெல்லாம் சாட்சியாயிருக்கிற ஆன்மாவுக்கில்லை. இப்படிக்கொத்த பிரத்தியகான்மாவினிடத்தில் அனுன்மத்துவமும் அனுன்மாவாயிருக்கிற தேகாதிகளிடத்தில் ஆன்மத்துவமும் விபரீதமாகக் கற்பித்துக்கொண்டு மோகத்தினுல் அஞ்ஞானி சம்சாரசாகரத்திற் சுழலுகிருன்.

வினு:—அஃதெப்படி?

விடை:—பிராந்தியினுலே நான் மனுஷன், நான் பிராமணன், நான்விவேகி, நான்மகாபாவி, நான்பிரஷ்டன், நானல்லவன், நான் துக்கி, நான்சுகியென்னுமிவை முதலா அனுன்மத்துவங்களை ஆன்மாவினிடத்திற் கற்பிக்கிருன். மேலும், அனுன்மாவினுடைய தர்மமான சன்ம சராமரணங்களும் பசிதாக துக்கமுதலானவைகளும் விபரீதமாக ஆன்மாவினிடத்திற் புத்திப்பிரமத்தினுல் ஆரோபிக்கிருன். அப்பா! பிராந்தியினுலெதனிடத்தில் எது கற்பிக்கப்படுகிறதோ அதனுடைய குணதோஷங்களில் அணுமாத்திரமும் ஆன்மாவினிடத்தில் கூடவுமில்லை கலக்கவுமில்லையென்றறி.

வினா:—அஃதெப்படி?

விடை:—பொட்டலான (கரம்பான) பூமியிற் கானல்பறக்கிறதைச் சலமென்று சொன்னதால் அந்தப்பூமியீரமாயிற்றோ? நேத்திராதிகளுடைய தோஷத்தினாற் சங்கைப்பார்த்துப் பச்சையென்பதால் சங்கு பச்சையாயிற்றோ? பாலர்களால் ஆகாசங்கறுப்பென்று கற்பிக்கப்பட்டதினால் ஆகாசங் கறுப்பாயிற்றோ? அப்படிப்போல அனாத்மதர்மம் ஆத்மதர்மமாகுமோ?

வினா:—என்றிப்படிச்சொன்ன குருவைப்பார்த்துச்சீடன்கேட்கிறான்:— சுவாமி! சட்சுவுக்கும்மனசுக்கும் விடயமன்றாயிருக்கிற பிரத்தியகான்மாவினிடத்தில் அனான்மாவாகிற தேகாதி தர்மங்கள் எப்படி யாரோபிக்கப்படும்? பிரத்தியட்சமாய்க்கண்ட விஷயத்தினிடத்தில் விஷயாந்தரமான வேறொன்றை யாரோபிக்கலாம். அதுவும் ரச்சுசுத்திகளிடத்தில் ஒப்பனையாகக் காணப்பட்டிருக்கிறது. மனதிற்குப் பூர்வங்கண்ட வொரு பதார்த்தத்தை நினைத்திருந்து வேறொரு பதார்த்தங்கண்டபோது அந்தப்பதார்த்தமே இதுவென்று நினைப்பு முண்டாகும். இப்படி சட்சு மனங்களுக்கு அகோசரமான ஆன்மாவினிடத்தி லெப்படி அத்தியாசங்கூடும்? ஆன்மா வொருகாலு மனுபவிக்கப்படவில்லை. அப்படி அனுபவிக்கப் படாத வஸ்துவுக்கு விலட்சணமான அனான்மாவினிடத்தி லெப்படி யொப்பு சொல்லப்படும்? அனான்மாவினிடத்தி லான்மாத்தியாசமெப்படி வந்தது? இதற்கு நிவிர்த்தி எந்தவுபாயத்தினாற் சித்திக்கும்? சீவேசுரர்களுக்கு உபாதிகள் சமமாயிருக்கச்சீவனுக்குமாத்திரம் பந்தமெப்படி வந்தது? ஈசுவரனுக்குப் பந்தமெப்படியில்லாமற் போயிற்று? அடியேனுக்கு இந்தச்சம்சயங்களைத் தீர்த்துக் கருணைக் கண்ணாற் பார்த்துக் கரதலாமலகம்போல நன்றாய்த்தெரியும்படி சொல்லவேண்டும்.

விடை:—என்றிப்படி கேட்ட சீடனைப்பார்த்துக் குருவானவர் சொல்லுகின்றார்:— வாராய் சீடனே! ஆன்மாவானது மனோவாக்காதிகளுக்கு விடயமாய்க்காணப்படுவதல்ல. அப்படிக்கிருந்தாலும் நானென்கிற அனுபவம் அபரோட்சமாய்ச் சகலருங்கண்டிருப்பதால் ஆன்மாவிருக்கின்றதென்பது பிரசித்தமே. இஃது ஆன்மாவிருக்கிறதென்பதற் கடையாளமாயிருக்கிறது. ஒவ்வொருவரும் நானில்லையென்று சொல்லுகிறதில்லை. நானிருக்கிறே னென்பதில் ஒருவரும் சாட்சியொப்பனை தேடுகிறதில்லை. இப்படி பிரமாணங்களுக்

கெல்லாம் பிரமாண்ய மென்தமூலமென்று விசாரித்தறி. மேலும், இவ்வான்மாவானது மாயா காரியங்களால் (கற்பனையாக) மறைக்கப் பட்டதால் மனத்தினுல் பிரத்தியட்சமா யனுபவிக்கப்படவில்லை.

வினு:—அஃதெப்படி?

விடை:—மேகங்கள் சூரியனைமறைத்தாற்போல இந்தவான்மா வையும் அகங்காராதி விடயங்கள் மறைத்தன. ஆதலால், விடயத் தைப் பிரத்தியட்சமாய்க்கண்டு அதனிடத்தில் மற்றொருவிடயத் தை யாரோபிக்கவேண்டுமென்று நீகேட்டசங்கை பெரியவர்களாற் செய்யப்படவில்லை. இப்படி லபித்ததற்கும் பிராந்தியேகாரணம்.

வினு:—அஃதெப்படி?

விடை:—ஆகாசத்தில் கறுப்பு முதலானவை பிராந்தியினுற் கற்பிக்கப்பட்டனபோன்று ஆன்மாவினிடத்திலும் புத்திப்பிரமத் (மயக்கத்) தினுல் அனுன்மாக்கள் கற்பிக்கப்பட்டன. அனுன்மாவின் கண் ஆன்மாவின் (சொரூப) அத்தியாசம் பண்ணுகிறதற்கு ஒரு வொப்பனையும் அபேட்சிக்கவேண்டியதில்லை.

வினு:—அஃதெப்படி?

விடை:—இந்தச்சங்கு பச்சை யென்றறிவதி லெந்த வொப்பனை வேண்டும்? இதுவன்றியும் உபாதிகளுடன் கூடின பிராந்திகளுக்கு வேறொப்பனை வேண்டுமென்பது காணப்படவில்லை. நிருபாதிகமா யிருக்கிற ரச்சு முதலானவை பிராந்தியிற் காணப்படவில்லை. ஆனு லும், கொஞ்சமொப்பனை காண்பித்துச் சொல்கிறேன்கேட்பாயாக. இவ்வான்மாவானது அத்தியந்தநிர்மல சூட்சும சுயம்பிரகாசமாயுள் ளது. இப்படி புத்தியும் ஆன்மாவைப்போற் பிரகாசமானதால் ஆன் மப் பிரகாசத்துடன் கூடி நிர்மலமாய் விளங்கும்.

வினு:—அஃதெப்படி?

விடை:—சூரியன்முன்னேயிருக்கிற படிகக்கல்லானது எப்படி பிரகாசிக்குமோ அப்படியே ஆன்மப்பிரகாசத்தினுற் புத்தியும், அந் தப்புத்திப் பிரகாசத்தினுல் மனமும், அந்தமனட்பிரகாசத்தினுல் இந் திரியங்களும், அந்த இந்திரியப் பிரகாசத்தினுல் தேகமும்விளங்கும். ஆகையால், தேகேந்திரியாதிகளாயிருக்கிற அனுன்மாக்களிடத்தில் ஆன்மாவென்கிற புத்தி கண்ணுடியிற் காண்பித்த நிழலைப் பாலர்கள் நிசமாகக்கண்டாற்போல மூடர்களுக்கு நிசமாய்க்காணப்பட்டிருக் கிறது. அப்பா! ஆன்மாவின்(சம்பந்த) அத்தியாசகாரணமான புத்தி யினிடத்தில் இப்படி ஒப்பனை கண்டிருக்கிறது. அனுன்மாவான

தேகத்தினிடத்தில் நானென்னும் எவ்வத்தியாசம் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தப் பூர்வபூர்வ (முன்முன்) அத்தியாசத்துக்கு உத்தரோத்தர (பின்பின்) அத்தியாசமேகாரணம்.

வினு:—அஃதெப்படி?

விடை:—சுழுத்தி மூர்ச்சைகளினின்று மெழுந்திருந்தவர்களிடத்து அத்தியாசவாசனை காணப்பட்டிருக்கின்றது.

வினு:—அப்படி காணப்பட்ட அத்தியாசத்துக்குக் காரணம் யாது?

விடை:—அனுதியாயிருக்கிற அவித்தை யென்றறி.

வினு:—இந்த அத்தியாசபந்தம் வந்ததற்குக் காரணம் யாது?

விடை:—சென்மசராமரணவியாதியாதி துக்கங்களாகிறஅனர்த்தங்கள் பிரவாகவனுதியா யிருக்கின்றன. அந்த ஆன்மாவுக்குபாதியாய அவித்தைக்குப் பெரிதாயிரண்டுசத்திகளுண்டு.

## ஆவாண விட்சேபம்.

வினு:—அவை யெவை?

விடை:—அவை ஆவரணசத்தி விட்சேபசத்தியென இரண்டு சத்திகளாம். இந்தச் சத்திகளுடனேகூடி ஆன்மாவுக்குச் சம்சாரபந்தம் வந்தது. இந்த ஆவரணசத்தியானது சுத்த தாமதகுணப்பிரதானமானதா லாவரணத்துக் கேதுவாயிற்று. அது மூலாஞ்ஞான மூலவிருளென்றும் சொல்லப்படும். அதனுல் சகல செகத்து மோகிக்கப்பட்டது. அப்பா! விவேகியாயிருந்தாலும், ஆன்மதத்துவத்தை நன்றாய்க்கேட்டுள்ள பண்டிதனுயிருந்தாலும், ஆவரணசத்தியினுல் மறைபட்ட கண்ணுடைத்தானவன் தன்தேகத்திலிருக்கிற ஆன்மாவை யறியமாட்டான். விட்சேபமென்கிற இராசதசத்தியானது புருஷனுடைய பிரவிர்த்திக்கேதுவாய் ஸ்தூலமுதல் சூட்சுமவரைக்குமுண்டான அசத்தாயிருக்கிற சகல பிரமாண்டங்களையும் ஆன்மாவினிடத்திற் கற்பிக்கும். இவற்றுள் முற்கூறிய ஆவரணசத்தியானது புருஷனுயிருக்கிறவனை நித்திரையானதுசரீரத்தைமறந்துபோக எப்படி மூடுகிறதோ அப்படியே யிந்தப்பிரத்தியகான்மாவை உள்ளேநன்றாய் மறைத்துக்கொண்டு வெளியிலிருந்த விட்சேபசத்தியைக் காண்பிக்கும். இந்த ஆவரணமென்னும் பெரிதான சத்தி நிர்மலமாயிருக்கிற ஆன்மாவை மறைக்கிறபோது புருஷனுனவன் அனுன்மாவான தேகாதிகளிடத்தில் மோகத்தினுல் நானென்கிற ஆன்மபுத்தியை வைக்கிறுன்.

வினு:—அஃதெப்படி?

விடை:—நித்திரைபோகின்றவன் சொப்பனங்காண்கிறபோது பொய்யான அந்தச் சொப்பனதேகத்தில் தானென்கிற புத்தியை யெப்படிவைத்தானே அப்படியே அஞன்மாவினுடைய பிறப்பி றப்பு பசிதாகம் பிரம்ம(மயக்க) முதலான தேகதர்மங்களை ஆன்மாவி னிடத்திற் கற்பிக்கிறுன். இப்படிக்கொத்த புருஷனுனவன் விட்சேப சத்தியினுல் ஏவப்பட்டுப் புண்ணிய பாப ரூபமான கர்மங்களைச் செய்துகொண்டு அதனுல் வரப்பட்ட சுகதுக்கங்களைப் புசித்துக் கொண்டு சம்சார சாகரத்திற் சுழலுகிறுன். அதனுல், பிரத்திய கான்மாவுக்குச் சம்சாரபந்தமானது அத்தியாச தோஷத்திறுற் பிரபலமாகவுண்டாயிற்று. ஆனதால், அந்த அத்தியாசபந்தத்தோ டேகூடி கர்ப்பவாசம் பிறப்பிறப்புமுதலான துக்கங்களினுலே யன வரதமுங் கிலேசிக்கிறுன்.

வினு:—அத்தியாசமாவது யாது?

விடை:—வஸ்துவை யவஸ்துவாகக்கிரகிக்கிறதே அத்தியாசம்; இது பிராந்தி மூல சுபாவமானதால் சம்சார பந்தத்துக் காதி கார ணம்; ஆன்மாவுக்கு அத்தியாசத்தினுல் சம்சாரம் வந்தது; அந்த அத் தியாசம்போனுல் சம்சார பந்தமில்லை. ஆகையால், பந்தமோட் சங்களிரண்டையும் நன்முயறி.

வினு:—அஃதேன்?

விடை:—புருஷனுக்குப் பிரவிர்த்தியே பந்தம்; நிவிர்த்தியே மோட்சம். இந்தப்பிரவிர்த்தி நிவிர்த்திகளினுல் பந்தமோட்சங்க ளுண்டாயின.

வினு:—ஆன்மாவுக்கத்தியாசம் வந்ததற்கேது யாது?

விடை:—அது காலகர்மாதிரூபங்களாம். இவ்வத்தியாசமானது தனக்குக்கர்த்தாவாகியஈசுரனுக்கு உபாதியாகப்பரிணமித்துத் தான் பொய்யாயிருந்தும் ரச்சுவில் சர்ப்பம்போற் சம்சாரத்தைக் கூட்டு கிறது. சீவனைப்போல ஈசுரனுக்கு உபாதி கூட்டுறவு சமமாயிருந்தா லுஞ் சுத்தசத்துவ மலினசத்துவ மென்கிறவுபாதி பேதமாயிருத் தலால் சீவனுக்குப் பந்தமேயன்றி ஈசுரனுக்குப் பந்தமும் அதன் காரியமுமில்லை.

வினு:—ஈசுரவுபாதி யாது? சீவவுபாதி யாது?

விடை:—சுத்த சத்துவப்பிரதானமானமாயையே ஈசுரவுபாதி; மலினசத்துவப் பிரதானமான அவித்தையே சீவவுபாதி; இவற்றுள்

சுத்தசத்துவப் பிரதானமான ஈசுவரனுக்குப் பந்தமுமில்லை; அதனு லுண்டான விட்சேபகாரியமுமில்லை.

வினா:—அஃதேன்?

விடை:— அவர் தமக்கு உபாதியானமாயையைத் தம்வயப்படுத்திக்கொண்டு சர்வஞ்ஞராயு மறைப்பில்லாத ஞானமுள்ளவராயுஞ் சஞ்சலமில்லாதபடி சுதந்தரராய்ச் சிருட்டி திதி சங்காரப் பிரவேசங்களாகிற கிரியைகளைத் தம்மிச்சைக்கேற்றபடி செய்து ராசத தாமதங்களிரண்டையுந் தமக்குக் கீழ்ப்படுத்தி விளையாடிக்கொண்டிருக்கிறார். ஆதலால், ஆவரண விட்சேபமிரண்டு மீசுரனையொன்றுஞ் செய்யமாட்டா. வேதமும் ஈசுரன் தனக்குத்தானே சுதந்தரனாய்ப் பிரவிர்த்திகளை யொடுக்கிக்கொண்டு மகா மகிமையைப் பொருந்தியிருக்கிறானென்று சொல்லுகிறது. மலினசத்துவப் பிரதானமான சீவனுக்குப் பந்தமும் சம்சாரமும் பொருந்தின; இந்தச் சீவனுக்கு முன்சொல்லப்பட்ட விட்சேபங்கள் மிகவுந்திரளாய்க் காணப்பட்டிருக்கின்றன. இந்தச் சம்சாரத்துக்கு மூலம் விபரீதமான அத்தியாசம்; இந்த அத்தியாசத்துக்கு மூலம் ஆவரணமாகியவஞ்ஞானம். இந்த வஞ்ஞானநிவிர்த்தி ஞானத்தினால்தவிரக் கர்மத்தினாலாகமாட்டாது.

வினா:—கர்மத்தினால் நிவிர்த்தியாகாதோ?

விடை:—கர்மத்துக்கும் அஞ்ஞானத்துக்கும் விரோதமில்லாதபடியால் கர்மம்அஞ்ஞானத்தைக்கெடுக்கமாட்டாது. கன்மத்தினாலே சன்மமும் சன்மத்தினாலேயே மரணமுமானதால் சனனமரணரூபங்களுங் கர்மிகளுக்கே. இந்தக் கன்மிகளுக்குக் கன்மவிலட்சணமான ஞானமில்லை. அஞ்ஞான காரியமே கன்மமானதா லிந்தக்கன்மமும் அஞ்ஞானத்தினால் விருத்தியடையும். அஃது எதனால் விருத்தியடைகிறதோ அதனால் நாசமாகாததாதலால் கன்மத்துக்கு அஞ்ஞானம் விரோதமாகாது; ஞானமே அஞ்ஞானத்துக்குவிரோதம். ஆதலால், அஞ்ஞானத்தைப் போக்குவது ஞானமேதவிர வேறொன்றில்லை யென்றறி.

வினா:—அஃதெப்படி?

விடை:—பிரகாசத்துக்கு மிருட்டுக்கு மெப்படி விரோதமோ அப்படியே ஞானத்துக்கும் அஞ்ஞானத்துக்கும் விரோதங்காணப்பட்டிருப்பதால், ஞானத்தினால் அஞ்ஞானத்தைப் போக்குநிமித்தம் புத்திமானாயிருக்கிறவன் அதனைச் சம்பாதிக்கவேண்டும்.

அந்தஞானமும் ஆன்மானன்ம விவேகத்தினல் சித்திக்குமன்றி மற்றொன்றினலுஞ் சித்திக்கமாட்டாது.

வினு:—முமுட்சுவானவன் ஞானத்தைச்சம்பாதிக்கிற விதமெப்படி?

விடை:—புத்தியினலே ஆன்மா இன்னது அனன்மாவின்னதென்று வேறுபடுத்தி யறியவேண்டும்; அப்படி வேறுபடுத்தியறிந்தால் ஆன்மாவினிடத்தில் அனன்மபுத்தியாகிற முடிச்சவிழ்ந்துபோய் ஆன்மத்துவமு முண்டாகும். இப்படியிருக்க, மூடர்கள் வேதாந்தங்களை விசாரியாமல் தாமே பெரியவர்களென்றெண்ணிக்கொண்டு ஈசுரகடாட்சங் குருகடாட்ச மில்லாதபடியால் ஆன்மசொரூபத்தை நானவிதங்களாகச் சொல்லுகிறார்கள்.

## பலமதசித்தாந்தம்.

வினு:—அஃதெப்படி?

விடை:—அத்தியந்த பரமமூடராயிருக்கிறவர்கள் புத்திரனே ஆன்மாவென்றெண்ணியிருக்கிறார்கள்.

வினு:—அஃதெப்படி?

விடை:—ஆன்மாவினிடத்தில் என்ன பிரீதியிருக்கிறதோ அது புத்திரனிடத்தில் மிகவுங்கண்டிருப்பதாலும், புத்திரன் பெருத்தான் இளைத்தானென்னும் அனுபவத்தினலும், ஆன்மாவே புத்திரனென்னும் சுருதியினலும், தீபத்தினின்றுந் தீபம் பிறந்ததுபோல் பிதாவினிடத்தினின்றும் புத்திரனுண்டானனென்பதினலும், தகப்பன் குணங்கள் பிள்ளையினிடத்திற் *பீஜாங்குர நியாயம்போற் காணப்பட்டிருக்கிறபடியினலும் சுத்த மூடனயிருக்கிறவன் புத்திரனே ஆன்மாவென்றெண்ணுகிறான். இப்படி புத்திரனே ஆன்மாவென்னும் மதக்காரனை மற்றொரு மதக்காரன் தூஷித்துச் சொல்லுகிறான்:—புத்திரன் ஆன்மாவென்ப தெப்படிக்கூடும்? பிரீதி மாத்திரமே யல்லாமல் புத்திரனெப்படி ஆன்மாவாவான்? பிரீதியேயான்மாவாகிறபோது க்ஷேத்திர பாத்திர தனங்களிலும் பிரீதியிருப்பதால் அவைகளும் ஆன்மாவாகவேண்டும்? அப்படியில்லை.

---

* பீஜம் - வித்து, அங்குரம் - முளை, நியாயம் - திருஷ்டாந்தம். வித்தினின்று முளையும் முளையி (மாமுதலியவற்றி) னின்று வித்தும் தொடர்ச்சியாய் உண்டாகிக்கொண்டு வருதலைத் திருஷ்டாந்தமாக வெடுத்துக் கூறுதல் பீஜாங்குர நியாயமாம்.

ஆகையால், புத்திரனைக்காட்டிலும் விசேஷமாய்ச் சகலப் பிராணிகளுக்கும் தேகத்தினிடத்தில் பிரீதிகாணப்படுகின்றது. அதுவே ஆன்மாவாகவேண்டும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—ஒருவன் வீடுவேகிறபோது புத்திரன் போனாலும் போகட்டுமென்று தன்தேகந் தப்பிப்பிழைக்க ஓடுகிறான். இதுவேயுமன்றித் தன்தேகத்தைச் சவரட்சணை பண்ணிக்கொள்கிறதற்குப் புத்திரனையும் விற்கிறான். அவன் பிரதிகூலனாய்ச் சொல்வழிகேளாதபோது சங்கரித்துப்போடுகிறான். ஆகையால், தேகமே ஆன்மாவன்றிப் புத்திரன் ஆன்மாவாகமாட்டான். திரணரூபாதி யொப்பனைகளுந் தீபத்தைப்போல் புத்திரனிடத்திலில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—சகல அவயவங்களும் நன்றாகப் பொருந்தின பிதாவினிடத்தினின்று நொண்டிமுடங்கூன் குருடாகவிருக்கிற புத்திரன் பிறக்கிறான். சற்குணனாயிருக்கிற தகப்பனிடத்தில் துர்க்குணமுள்ள புத்திரன் பிறக்கிறான். ஆனதால், நீசொன்ன புத்திரர்களாபாசமே. இந்தத்தேகமானது கிரகத்திற் புத்திரனுக்குப் பிதாவைப்போலிருந்துகொண்டு சகல காரியங்களிலும் சகலவஸ்துக்களிலும் யஜமானத்துவங் கண்டிருப்பதால் தேகமே யான்மாவென்று சொல்லவேண்டும். புத்திரனே ஆன்மாவென்னும் சுருதி முக்கியமாய்ப் புத்திரனை ஆன்மாவென்று சொல்லவில்லை; உபசாரமாக ஆன்மாவென்று சொல்லிற்று. மேலும், நானென்கிற அகப்பதத்துக்கு லட்சியமாய்க் கண்டது தேகமே தவிர வேறொன்றுமில்லை. சகல செந்துக்களுக்கும் தேகமே நானென்கிற நிச்சயம் பிரத்தியட்சமாய்க் காணப்பட்டிருக்கிறது. சுருதியிலும் இந்தப்புருஷன் அன்னரசமயனென்று தேகத்துக்கே புருஷத்துவஞ் சொல்லப்பட்டிருப்பதால் தேகமான புருஷனே ஆன்மாவாகவேண்டும்; புத்திரன் ஆன்மாவாகமாட்டான். இப்படி தேகமே யான்மாவென்று சொன்ன சார்வாகமதத்தனுடைய நிச்சயத்தை யற்றொரு மதக்காரன் கேட்டுப் பொறுக்கமாட்டாமல் தூஷித்துச் சொல்லுகிறான்:—தேகமெப்படியான்மாவாகும்? தேகமானது அசேதனமா யொன்றினால் ஏவப்படுகிறதுமாய் இந்திரியங்களினால் சரிக்கப்பட்டுச் சேட்டிக்கிறதே தவிரச்சுதந்தரமாய்ச் சேட்டிக்கவில்லை. கிரகஸ்தனுக்கு வீடு ஆசிரயமாயிருப்பதுபோல் இந்தச் சட்சுவாதி யிந்திரியங்களுக்கெல்லா

மிருப்பிடமாகியும், பாலிய முதலான நாலு அவத்தைகளோடே கூடினதாகியும், சுக்கில சுரோணிதத்தா லுண்டானதாகியும் இருப்பதால் தேகத்துக்கு ஆன்மத்துவமொருகாலுஞ் சொல்லக் கூடாது. நான் குருடன், நான் செவிடன், நாலூமையென்னும் அனுபவத்தினால் இந்திரியங்களே ஆன்மாவாகவேண்டும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—இந்திரியங்களுக்கு விடயங்களையறிகிற சத்தியிருக்கிறது. அதுவேயுமன்றி யுபநிடதத்திலும் இந்திரியங்களே சேதனமென்று சொல்லப்பட்டிருப்பதால் இந்திரியங்களுக்கே ஆன்மத்துவங்கூடுமென் றிப்படிச்சொன்ன மதஸ்தனுடைய நிச்சயத்தைக் கேட்டுப் பொறுக்கமாட்டாமல் மற்றொருமதஸ்தன் தூஷித்துச் சொல்லுகிறான்:—இந்திரியங்களெப்படி ஆன்மாவாகும்? அவை யொன்றினாலேவப்பட்டுக் கோடரியைப்போல் தொழிலைச்செய்கின்றனவேதவிர அவற்றிற்குச் சுதா சேதனத்துவமில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—காரணமாயிருக்கிற கோடரிக்கெப்படி சுதா சேதனத்துவங் காணப்படவில்லையோ அப்படியே இந்திரியங்களுக்குச் சுதா சேதனத்துவங் காணப்படவில்லை. இந்திரியங்கள் ஆன்மாவென்று சொன்னசுருதியின்பொருள் இந்திரியங்களினதிதேவதைகளைச் சொல்லியதே தவிரப் பிரசித்தமாய் இந்திரியங்களுக்குச் சேதனத்துவஞ் சொல்லவில்லை. அசேதனமாயிருக்கிற தீபாதிகளுக்கு வெளியிலிருக்கிற பதார்த்தத்தைத் துலக்குவிக்கிற சாமர்த்தியமெப்படியில்லையோ அப்படியே சடங்களாயிருக்கின்ற சுரோத்திர சட்சுவாதிகளுக்கும் அசேதனத்துவஞ் சித்திக்கும். ஆனதால், இந்திரியங்களைச் சேட்டிக்கப்பண்ணுகிற பஞ்சவிருத்தியாயிருக்கின்ற பிராணன் அவத்தாத்திரயங்களிலுமிருப்பதால் அந்தப்பிராணனே யான்மாவாகவேண்டும். இஃதன்றியும் நான் பசிகொண்டேன், தாகங்கொண்டேனென்னும் அனுபவமிருக்கின்றது. சுருதியிலும் பிராணனேயான்மாவென்று சொல்லப்பட்டிருப்பதால் பிராணனுக்கே யான்மத்துவம் உசிதமாமன்றி இந்திரியங்களுக்கு ஆன்மத்துவமொருகாலுங்கூடாது என்றிப்படிசொன்னமதஸ்தனுடைய நிச்சயத்தைக்கேட்டுமற்றொரு மதக்காரன் தூஷித்துச் சொல்லுகிறான்:—பிராணனெப்படி ஆன்மாவாகும்? வெளியிலே திரிகிற வாயுவைப்போல உள்ளிலுஞ் சஞ்சரித்துக்கொண்டு துருத்தியைப்போலல்லது பொல்லாதென்று ஒன்றை

யுமறியாது சடசுபாவமாய்ப் பிராணன் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. சுழுத்தியிற் பிராணனிருந்தது மனதுக்குக் காணப்படவில்லை. ஆனதால், மனதானது சகலத்தையு மறிந்துகொண்டு காரணமாயிருக்கின்றமையால் அம்மனதே யான்மாவாக வேண்டுமென்றிப் பிராணன் ஆன்மாவாகமாட்டாது.

வினு:—அஃதெப்படி?

விடை:—நான் சங்கற்பித்தேன், நான் விகற்பித்தேன், நான் சிந்தனைபொருந்தினேனென்னும் அனுபவத்தினாலும், மனோமயனே ஆன்மாவென்று சுருதி சொல்வதினாலும், மனதே யான்மாவாக வேண்டும். பிராணன் ஆன்மாவல்ல வென்றிப்படிச் சொன்னமதஸ்தனுடைய நிச்சயத்தைக்கேட்டு மற்றொருசடனுனமதக்காரன் தூஷித்துச் சொல்லுகிறான்:—மனதுக்கு ஆன்மத்துவ மெப்படிக்கூடும்? இந்திரியாதிகள் மனதினால் ஏவப்பட்டுக் காண்டலாதித் தொழில்களைச் செய்வதுபோல் மனதும் கர்த்தாவாகியிருக்கிற புத்தியினால் ஏவப்பட்டுப் பிரவிருத்திக்கிறபடியினால் கரணங்களையெல்லா மேவுகிறவனெவனோ அவனே யான்மாவாகவேண்டும். மேலும், ஆன்மாவானவன் சுதந்தரனாகவும் புருஷனாகவு மொன்றினு லேவப்படாதவனாகவுமிருக்கவேண்டும். ஆதலால் நான் கர்த்தா, நான் போக்தா, நான் சுகியென்கிற அனுபவம் புத்தியினிடத்தி லிருப்பதினால் புத்தியே யான்மாவாம். அகங்காரதர்மம் புத்திதர்மமானதாலும், புத்தியாகிய விஞ்ஞானமயனே யான்மாவென்று வேதஞ்சொல்லியிருப்பதாலும், மனதைக்காட்டிலும் கர்த்தாவாய்ச் சகல காரியங்களையுஞ்செய்து முடிக்கையாலும் புத்தியாகிய விஞ்ஞானமயனே யான்மாவாகவேண்டுமென்று நிச்சயம் பண்ணின பௌத்தனுடைய மதத்தைக்கேட்டுப் பிரபாகரனுந் தார்க்கிகனும் பொறுக்கமாட்டாமல் இவனுடைய நிச்சயத்தைத் தூஷித்துச் சொல்லுகிறார்கள்:—புத்தியெப்படி ஆன்மாவாகும்? புத்தி அஞ்ஞான காரியமாய்க் கடிதில் தோன்றி மறைவதால் புத்தி ஆன்மாவாகமாட்டாது. புத்தியாதி சகல காரணங்களுக்கும் அஞ்ஞானத்திலே லயங்கண்டிருப்பதாலும், பாலர்முதல் விருத்தர்கள்வரை நானஞ்ஞானியென்று அனுபவஞ்சொல்லுகிறதினாலும், அஞ்ஞானமே யான்மாவாகவேண்டுமன்றிப் புத்தியானது ஒருகாலும் ஆன்மாவாகமாட்டாது. விஞ்ஞானமயனைக் காட்டிலும் ஆனந்தமயன் வேறென்று சுருதியிற்சொல்லப்பட்டிருக்கிறது. இதுவேயுமன்றிச் சுழுத்தியி லொருதுக்கமுமில்லாமல் சுகமாயிருப்பதாலும் ஆனந்தமயனே யான்மாவாம்.

வினா:—அஃதெப்படி?

விடை:—சுழுத்தியில் புத்தியாதி யிந்திரியங்களெல்லாம் அஞ்ஞானத்தில் லயித்திருப்பதாலும், மனக்கூட்டுற வில்லாததினாலும், தூக்கங் காணப்படவில்லை யென்பதினாலும், தூங்கியாயிருந்தவர்களுக்குக்கூடச் சுழுத்தியில் சுகங்கண்டிருப்பதாலும், நானொன்று மறியேனென்னுமனுபவங் கண்டிருப்பதாலும் அஞ்ஞானமாகிய ஆனந்தமயனே ஆன்மாவாகவேண்டுமன்றி விஞ்ஞானமயன் ஆன்மாவாகமாட்டானென்று நிச்சயித்த மதஸ்தர்களைப் பாட்டமதக்காரன் மதாபிமான யோசனையினால் தூஷித்துச் சொல்லுகிறான்:—அஞ்ஞானமெப்படி ஆன்மாவாகும்? ஞானமுங்கூடியிருக்கவேண்டும்; ஞானமில்லாமற்போனால் நான் அஞ்ஞானியென்று அஞ்ஞானத்தையெப்படியறிவான். சுகமாய் நித்திரை போனேன் ஒன்றுமறியேனென்று தன்னுடைய அஞ்ஞானமும் ஞானமும் நித்திரை தவிர்ந்தெழுந்திருக்கிறவனிடத்திற் காணப்படுகின்றன. சுருதியிலும் பிரஞ்ஞானகனமாயிருக்கிற ஆனந்தமயனையே ஆன்மாவென்று சொல்லப்பட்டிருப்பதால் இந்த ஞானாஞ்ஞானங்கள் கூடினதற்கே யான்மத்துவஞ் சொல்லப்படுமன்றி அஞ்ஞானமட்டுக்கும் ஆன்மத்துவங் கூடாது.

வினா:—அஃதேன்?

விடை:—ஆன்மாவானது மின்மினிப் பூச்சிபோல் சித்துஞ்சடமுங் கூடினது. ஆதலால், கல் குட்டியாதிகள்போற் கேவலசடமான அஞ்ஞானத்துக்கு ஆன்மத்துவங் கூடாது. ஞானாஞ்ஞானமே ஆன்மாவாகவேண்டுமென் றிப்படிசொன்ன பாட்ட மதஸ்தனுடைய நிச்சயத்தை மற்றொரு சூனியமதக்காரன் தூஷித்துச் சொல்லுகிறான்:—ஞானாஞ் ஞானங்களிரண்டுக்கும் ஆன்மத்துவ மெப்படிக் கூடும்? ஞானாஞ்ஞானங்களிரண்டும் பிரகாசாந்தகாரங்கள்போல விருத்தமானதால் இரண்டுக்குஞ் *சமானாதி கரணியமும் †சையோகமு . மொருகாலுங்கூடா. ஆகையால், ஆன்மப்பிரகாசங்கள் போலிருக்கிற ஞானாஞ்ஞானங்களிரண்டுக்கும் ஆன்மத்துவஞ் சித்தியா, அஞ்ஞானந்தான் ஞானந்தான் புத்திதான் குணந்தான் இவைகளெல்லா மெவ்வளவாகிலும் நித்திரையில் ஒன்று மனுபவிக்கப்படாமல் சூனியமே யனுபவிக்கப்படுகின்றது. சுழுத்தியி லொருவஸ்துவுமில்லை. நான் எனதென்கிறதுந் தோன்றவில்லை

---

*சமானாதி கரணியம்—ஒரு நிலைக்களத்திருத்தல்.

†சையோகம்—கூட்டம்.

யென்று நித்திரை விழித்தெழுந்திருந்த சகல சனங்களாலும் சூனியம் நினைக்கப்படுகின்றது. ஆனதால், சூனியமே யான்மாவாக வேண்டுமென்றி ஞாறுஞ்ஞானங்களிரண்டும் ஆன்மாவாக மாட்டா. வேதத்திலும் அசத்தே முன்னுற் பிறந்ததென்று நன்றாய்ச் சொல்லப்பட்டிருப்பதால் சூனியத்துக்கே ஆன்மத்துவம் உசிதமாம்.

வினா:—அஃதெப்படி?

விடை:—கடமானது முன்னில்லாமலிருந்து பிறந்ததின்பிறகு கடமென்று காணப்படுவதுபோல் அசத்திலே நின்றுஞ் சத்தான சகல சகத்தும்பிறந்தன. ஆனதால், சூனியமே ஆன்மாவாகவேண்டுமென்றான். இந்தப் பிரகாரம் தாங்களே விவேகிகளென்று மதாபிமானத்தோடு தங்கள்தங்கள் மதங்களுக்குத் தகுந்தயோசனைகள் செய்து அததற்குத்தக்க சுருதிகளையுஞ் சங்கிரகித்துக்கொண்டு புத்திரன்முதல் சூன்னிய பரியந்தமும் ஆன்மாவென்றெண்ணின மதங்களெல்லாம் அனான்மாவென்றே நிரூபிக்கப்பட்டன.

வினா:—அஃதெப்படி?

விடை:—இப்படிக்கொத்த மதஸ்தரது சுருதி யுத்தி யனுபவங்கள் ஆபாச மாத்திரை யாகையாலும், அவர்களது பூர்வாபூர்வ யுத்திகள் உத்தரோத்தரயுத்தியினால் வாதிக்கப்பட்டுப்போவதாலும், புத்திரன் முதல் சூனியாந்தமட்டும் அனான்மாக்களென்று சுருதி யுத்தி அனுபவங்களினால் நிச்சயிக்கப்பட்டன. மேலும், பிரமாணாந்தரத்தினால் வாதிக்கப்பட்டுப்போன வத்துப் பெரியவர்களால் யதார்த்தமாயங்கீகரிக்கப்படவில்லை. ஆனதால், புத்திராதி சூனியாந்தமும் அனான்மாவென்றுன் புத்தியினால் நன்றாய்த் தெரிந்து கொள்வாயாக.

வினா:—இப்படிசொன்ன குருவைப்பார்த்துச் சீடனானவன் கேட்கின்றான்:—ஐயா! சுழுத்தி காலத்தில் தேகேந்திரியாதியாவும் லயமாய்ப் போனபோது சூனியத்தைத் தவிர வேறொன்றும் அனுபவிக்கப்படவில்லை? சூனியம் ஆன்மாவல்லவென்றால், அந்தச் சூனியத்தைத்தவிர ஆன்மாவென் றொருபதார்த்தம் வேறாயிருந்து அனுபவிக்கப்படவில்லை? அப்படியே சுழுத்தியில் ஆன்மாவிருந்ததென்றால் ஏன் அனுபவிக்கப்படவில்லை? ஆன்மா எப்படியிருக்கின்றது? இருக்கிறதற்குப் பிரமாணமென்ன? லட்சணமென்ன? அகங்காராதிகளெல்லாம் வாதிக்கப்பட்டுப் போனாலும் ஆன்மா அப்படி வாதிக்கப்படவில்லையே; இப்படிக்கொத்த இருதயக்கிரந்தி லட்சணமான

சம்சயங்களெல்லாம் *யுக்தியென்னும் வாளினால் அறுத்துத்தேவரீர் கிருபை கூர்ந்து அடியேனை யிரட்சிக்கவேண்டும்.

விடை:—வாராய் சீடனே! நீ உன்னுடைய புத்திக்குச் சம்மதமாயிருக்கிற சூட்சுமமான சங்கையைக் கேட்டாய். அது சூட்சுமமான ரகசியம். அது சூட்சும புத்தியுடைய மகாத்துமாக்களிடத்தில் காணப்பட்டிருக்கின்றது. ஆயினும், நீ நம்மை யேதேது கேட்டாயோ அவைகளையெல்லாம் நன்றாய் உனக்குத் தெரியச்சொல்லுகிறோம்; கேட்பாயாக. அதிரகசியமாகியுஞ் சிரேஷ்டமாகியுஞ் சூட்சுமமாகியும் முமுட்சுக்களினாலே அறியப்படுகிறதாயுமிருக்கிற ஆன்மாவானது காரியமாயிருக்கின்ற புத்தியாதி இந்திரியங்களெல்லாந் தமக்குக் காரணமான சுழுத்தி யஞ்ஞானத்தில் லயமாயிருக்கிறபோது ஆலமரம் வித்திற் காணுத்படி யொடுங்கி யிருந்ததுபோல அவ்வியாகிருதமாயிருந்தது. அவ்வான்மாவானது சாக்கிரத்தோடே கூடியிருக்கிறவனிடத்தில் வியாகிருதமாகியும் சுழுத்தியை யடைந்திருக்கிறவனிடத்தில் அவ்வியாகிருத சொரூபமாகியு மிருக்கின்றதன்றிச் சூனியமாயில்லாமற் போகவில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—ஆலமரமானது ஒரு விடத்தில் அங்குர(முளை)மாயு மொருவிடத்தில் வித்தாகவுங் காரிய காரணமாய் அரூபமாயிருக்கிறதுபோல்ஆன்மாவுஞ்சுழுத்தியில் அவ்வியாகிருதமாயிருக்கின்றது. ஆனதால், சுருதியு மிந்தஅவத்தையை அவ்வியாகிருதமென்று சொல்லுகிறது. இந்த அர்த்தத்தை யறியாமல் அஞ்ஞானிகள் சுருதி யுக்தியினாற் சகத்தைக் காணுதலே சூனியமென்றறிந் திருக்கிறார்கள். இதுவன்றியும் அசத்தினிடத்திலிருந்து சகத்துண்டாயிற்றென்பது ஓரிடத்திலுங் கேள்விப்படவுமில்லை, காணப்படவுமில்லை. மனுடக்கொம்பினின்றும் ஆகாசபுரத்தினின்றும் பதார்த்தமொன்றுண்டாயிற்றென்றால், அசத்திலிருந்து சத்துண்டாயிற்றென்பது கூடும். மண்ணையன்றிக் கடம் வேறே பிறந்ததென்றால் மணலினாலுந் தண்ணீரினாலுங் கடமுண்டாக வேண்டும்? அப்படியொருவிடத்திலுந்தண்ணீர் மணலிரண்டினாலுங்கடமுண்டாயிருக்கிறது காணோம். சத்தாயிருக்கிற மிருத்திகையே யேகரூபமாயுண்டான கடத்துக்குக் காரணமேயல்லாது வேறில்லை. இப்படியல்லவென்றால் காரிய

*இது கூடும் இதுகூடாதெனத் தன்னிடத்தே தோன்றுவது யுக்தியெனப்படும்; யுக்தியெனினும் பொருந்துமாறெனினும் ஒக்கும்.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

காரண லட்சணத்திற்கு விபரீதமாகும். ஆனதால், சகலலோகத்திலுஞ் சகல சாத்திரத்திலும் சத்தினிடத்திற் சகலமுமுண்டாயிற்றென்று சொல்வதே சம்மதம். அசத்திலிருந்து சத்துண்டாயிற்றென்ற சுருதிக்கு மேல் சுருதியானது *அசத்திலிருந்து சத்துண்டாகுமோவென்று சங்கித்து அசத்தைப்பொய்யென்று நிஷேதித்துச் சத்தினின்று அசத்துண்டாயிற்றென்று சொல்லுகிறது. ஆனதால், வாராய் பிராந்த சிரோமணியே! சுழுத்தியிற் பிரஞ்ஞானனானவன் அவ்வியத்த சத்தத்தைப் பொருந்திச் சாக்கிரதையாய்ச் சாட்சியாகப் பார்த்திருப்பதால் சுழுத்தியைச் சூனியத்துவமென்பதெப்படி சித்திக்கும்? அப்படி சுழுத்தியைச் சூனியமென்று எதினாலே சொல்லப்பட்டது? எந்த வினாவினால் நிச்சயம் பண்ணினாய்? அதையெப்படி சூனியமென்றறிந்தாய்? அதனைச் சொல்லென்று கேட்டவிடத்தில் மூடர்களுக்குள்ளே சிரேஷ்டனாயிருந்தவனானாலும் அதற்கேற்ற வுத்தரமென்னென்று சொல்லப்போகிறான். இப்படிக்கேட்கின்றவருக்கு அனுகூலமான வுத்தரஞ் சொல்லுகிறவனொருத்தனுமில்லை. ஆனதால், நாமே சொல்லுகிறோம். தன் சுழுத்தியிலே கண்ட சூனியபாவத்தைச் சூனியமென்றறிந்தவனானவன், அவன் நித்திரை போகிறபோது சூனியமென்று சூனியபாவமாகத் தன்னாலனுபவிக்கப்பட்ட சூனியத்தைத் தானே சொல்லுகிறான். ஆதலால், அந்தச் சூனியமென்கிற வுத்தரத்தில் தான் கெடாமலிருந்துகொண்டு சூனியத்தைப்பார்க்கிறோமென்னும் தன் சத்தையைமறந்து மூடனானவன் தன்னையுங்கூட்டிச் சூனியமாகச் சொல்லுகிறான். ஆகையினால், ஒவ்வொரு புருஷனுக்கும் நித்திரையிற் சகலமும் லயித்திருப்பதால் தான் ஒன்றையும் அறியாதபடி சுழுத்தி தர்மத்தை யடைந்திருக்கிறான். இந்தப்புத்தியாதி இந்திரியங்களில்லாதிருக்கிற சுழுத்தியை யறிந்து கொண்டிருக்கிறதெதுவோ அதுவே நிர்விகாரமான ஆன்மாவென்றறி. இப்படிக்கொத்த சுயஞ்சோதியான ஆன்மப்பிரகாசத்தினாற் பிரமாண்டத்திலுள்ள சூரியசந்திராதிகளும் பிண்டாண்டத்திலிருக்கிற தேகேந்திரியாதிகள் சகலமும் விளங்குகின்றன.

---

*அசத்தென்பது வான்மலர்போன்று அபாவபதார்த்தமாம். முதற்காரணமாயிருப்பதியாவும் திரவியமாயிருக்க வேண்டுமென்பது நியமமாயிருத்தலின் அசத்து முதற்காரணமாகாதென்று மறுத்துரைக்கப்பட்டதென்க.

வினா:—அஃதெப்படி?

விடை:—பிரகாசமான சூரியனைத் துலக்குவிக்கிறதற்கு பிரகாசாந்தரமான வேறு வஸ்து பூமியிலெப்படி காணப்படவில்லையோ அப்படியே ஆன்மாவைத் துலக்குவிக்கிறதற்கு வேறொரு வஸ்துவுமில்லை. சாக்கிர சொப்பன சுழுத்திகள் எதனாலறியப்படுகின்றனவோ அதுவே ஆன்மா; அப்படியறிந்துவருகிற ஆன்மா வெவனாலறியப்படும்.

வினா:—அஃதெவ்வாறு?

விடை:—சகலத்தையுந்தகிக்கிறது அக்கினி. அந்த அக்கினியைத்தகிக்கிறபதார்த்தம் வேறொன்றெப்படியில்லையோ அப்படியே சகலத்தையுமறிகிறது ஆன்மா. அந்த ஆன்மாவை யறிகிறவன் ஒருவனுமில்லை. ஆனதால், அனுபவரூபமாய்ச் சுயம்பிரகாசமாய்த்தானேயடைந்திருக்கிற ஆன்மாவானது தன்னைவிட அறிகிறதற்கு வேறேயொரு அறிவில்லாததால் தன்னாலேயே தன்னையறியவேண்டும். திரிசியமாயிருக்கிற புத்தியாதிகளெல்லாம் சுழுத்தியிலே லயமானதால் தான் ஒருத்தனாயிருந்துகொண்டு காணாதவன்போலவுங் கேளாதவன்போலவும் அறியாதவன்போலவு மிருக்கிறான். இந்தச்சுழுத்திரூபமான அந்தகாரத்துக்குத் தானே சாட்சியாய் நிருவிகற்பமாய்ச் சுகமாயிருக்கிறான். ஆதலால், சுழுத்தியில் ஆன்மா வுண்டென்பது பிரமாணந்தானே.

வினா:—அஃதெப்படி?

விடை:—நித்திரைபோய் எழுந்திருந்த தன்னாலேயே தானிருந்த நிலையை நினைத்துக்கொள்ளுகிறான்.

வினா:—அஃதெப்படி?

விடை:—ஒவ்வொருவனும் நான்சுகமாய் நித்திரைபோனேன் நானொன்று மறியேனென்று கூறும் அனுபவமே ஆன்மாவிருத்தற்குப்பிரமாணமாம். மேலும், சுழுத்தி ஆனந்தமயமென்றும், அதில் அன்னிய வஸ்துக்களில்லையென்றும், நானென்கிறதில்லையென்றும், சுழுத்தியி லனுபவித்ததை எழுந்திருந்தவனினைத்துச் சொல்லுகிறான்.

வினா:—அஃதெப்படி?

விடை:—எவனாலே எது அனுபவிக்கப்படுகிறதோ அவனால் அது நினைக்கவுஞ் சொல்லவுங்கூடும். அது தவிர அன்னியனால் அனு-

வித்த பதார்த்தத்தினுடைய நினைவு வேறேயொருத்தனுக்குத் தோற்றமாட்டாது. ஆனதால், சுழுத்தியிலே தானென்கிற ஆன்மா விருக்கிறதென்பது பிரமாணமாகப் பெரியோர்களாலும் பால விருத்தாதியராலும் அறியப்பட்டிருக்கிறது.

வினா:—இதற்கடையாளம் யாது?

விடை:—முன்னிருந்த நினைப்பே பின்னும்வருகிறது சுகமாய் நித்திரைபோனே னென்பதே யடையாளம். பூர்வமொன்றை யனுபவித்ததில்லாமற்போனால் பின்பு முன்பனுபவித்த நினைப்புப்பிறக்க மாட்டாதென்கிற யுக்தியும் ஆன்மாவுண்டென்பதிற் பிரமாணமாம். மாண்டூக்கிய உபநிடதத்திலும் ஆன்மாவானது நித்திரையிலொரு காமியங்களுங் கோரவில்லை. அது பிரஞ்ஞானகனனாய் ஆனந்தமயனாய் ஆனந்த போக்தாவாயிருக்கிறதென்று சொல்லப்பட்டிருப்பதால் சுழுத்தியில் ஆன்மாவிருக்கிறதென்பதிற் சந்தேகமில்லை.

வினா:—சுழுத்தியென்பது யாது?

விடை:—ஆன்மாவானது ஒன்றுங் கோராதபடி சொப்பனமுமில்லாதபடி யிருக்கிறதே சுழுத்தி. அந்தச் சுழுத்தியில் ஆன்மா விருக்கிறதென்று சுருதியாதிகளில் சொல்லப்பட்டிருப்பதால் ஆன்மா அழியாமல் சுழுத்தியிலிருக்கிறதற்குச் சாஸ்திரங்களே பிரமாணமாம். அனுபவத்திலும் சுழுத்தியிலொன்றுங் கோராதபடி சொப்பனத்தையுங் காணாதபடி யிருந்தோமென்கிறதற்குத் தானில்லாவிட்டாலிவைகள் கூடா. ஆகையால், ஆன்மாவிருக்கிறதென்று அனுபவிக்கப்பட்டது. இதற்குமுன் சாட்சிப்பிரமாணங்களாகச்சொன்ன சுருதி சாஸ்திரங்களினால் ஆன்மா சாட்சியாகப் பெரியவர்களால் அறியப்பட்டிருக்கிறது. ஆனதால், இந்த ஆன்மா கேவலமென்றும், சுத்தமென்றும், சச்சிதானந்த லட்சணமென்றும், பிரத்தியகான்ம சொரூபமென்றுஞ் சொல்லப்படும்.

வினா:—சச்சிதானந்த லட்சணத்துவமாவது யாது?

விடை:—ஆன்மா காலத்திரயங்களிலும் அவத்தாத்திரயங்களிலும் அழியாதபடி யிருக்கின்றதால் சத்ரூபத்துவமும், காலத்திரயத்திலும் பிரகாசமான அறிவைப்பொருந்தின சைதன்னியமாயிருப்பதால் சித்ரூபத்துவமும், அகண்டமாய்த்தடையற்ற ஆனந்தகனமாயிருப்பதால் ஆனந்தத்துவமுமாம்.

வினா:—இவற்றுள் சத்தாவது யாது?

விடை:—ஒவ்வொரு மனுஷனுக்குஞ் சாக்கிர சொப்பன சுழுத்

தியி லிடைவிடாமலான்மாவினுடைய சத்தையானது நானென்றிருப்பதால் காலத்திரயத்திலும் ஆன்மா சத்தாயிருக்கின்றது. ஆன்மாவாகிற நான் சதாகாலத்திலு மிருக்கிறேனென்பதி லிடைவிடாமலடையாளங்கள் காணப்பட்டிருக்கின்றன. இல்லையென்ப தொருகாலுமில்லை. ஆனதால், ஆன்மாவாகிற தனக்கு நித்தியத்துவஞ் சொல்லப்பட்டது. வரும்போதும் போம்போதும், பாலயௌவன முதலான அவத்தைகளிலும், சாக்கிரமுதலான அவத்தைகளிலும், அன்னியமாயிருக்கிற விருத்திகளிலும், நற்புத்தியாயிருக்கும் போதும் துர்ப்புத்தியாயிருக்கிறபோதும், கங்கையானது தன்னிலே யுண்டான அலைகள்தோறுந் தான் விடாமலிருக்கிறதுபோல் ஆன்மா சதாகாலமும் சகல அவத்தைகளிலும் நானென்று சாட்சியாய் ஏகரூபமாய்ச் சத்ரூபமாயிருக்கின்ற தென்றறி. இவ்வகங்காராதிகள் ஒவ்வொரு நிமிஷந்தோறும் ஒவ்வொரு பதார்த்தத்திலும் பரிணமிக்கிறதும் அஃதில்லாதபோது போகிறதுமாயிருக்கிற விகாரங்களைப் பொருந்திப் பின்னமாகின்றன. சத்ரூபமான ஆன்மா நிஷ்களமாயிருப்பதால் சதா நித்திய சொரூபமென்றறி. எந்த நான் சொப்பனத்தைக் கண்டதோ அந்தநானே சுகமாய் நித்திரைபோய்ச் சாக்கிரத்தில் விழித்தேனென்கையாலும், இந்த அவத்தாத்திரயங்களிடத்திலுஞ் சத்தா மாத்ரமாய்த் தானிருக்கிறதினாலும் அது சத்ரூபமென்பதிற் சந்தேகமில்லை. சுருதியில் சோடச கலையுடையவன் சிதாபாசனன்றி ஆன்மாவல்லவென்று சொல்லப்பட்டிருப்பதாலும் ஆன்மா நிட்களமாகையாலும் லயமில்லை; லயமில்லாமையால் ஆன்மா நித்தியமென்றறி.

வினா:—சித்தாவது யாது?

விடை:—ஜடமாயிருக்கிற பிரபஞ்சத்தைத் துலக்குவிக்கிற சூரியன் பிரகாச சொரூபமன்றி ஜடசுபாவமா யெப்படியில்லையோ அப்படியே புத்தியாகிய ஜடத்தைத் துலக்குவிக்கிற ஆன்மா சித்ரூபமென்றறி. சீவர்கள் முதலான பதார்த்தங்களுடைய துலக்கத்துக்குச் சூரியாதிப் பிரபையைத் தவிர வேரிடத்திலுஞ் சுதா துலக்க மெப்படியில்லையோ அப்படியே புத்தி இந்திரிய தேகாதிகளுக்குஞ் சுதா துலக்கமில்லை. ஆதலால், எந்தச் சித்பிரகாசத்தை முன்னிட்டு இந்தத்தேகேந்திரியங்கள்விளங்குமோ அப்படி விளக்குவிக்கின்றதற்குக்காரணமான அதுவே சின்மய சொரூபம். அப்படிக்கொத்த சின்மயசொரூபத்தைச் சுருதிசம்மதமாகத் திருஷ்டாந்தத்தில் ஜடபதார்த்தங்களுக்குச் சூரியனெப்படியோ அப்படியே தாஷ்

டாந்தத்திலும் புத்தியர்த்திகளைத் துலக்குவிக்கிற ஆன்மா சின்மய மென்றே சொல்லப்படுகிறது. எப்படி சூரியனானவன் தன்னைத் துலக்குவிக்கிறதிலும் தனக்கு அன்னியமான பிரபஞ்சத்தைத் துலக்குவிக்கிறதிலும் தன்னைத்தவிர வேறேயொரு அன்னியப் பிரகாசத்தை யெப்படி யபேட்சிக்கவில்லையோ அப்படியே ஆன்மாவும் தன்னைத் துலக்குவிக்கிறதிலுந் தனக்கன்னியமான தேகேந்திரியாதிகளைத் துலக்குவிக்கிறதிலும் தன்னைத்தவிரப் பிறிதொன்றுமில்லையால் அது சின்மயமென்றேயறி. ஆன்மப்பிரகாசமானது வேறொரு பிரகாசத்தை அபேட்சிக்கவில்லை.

வினு:—அஃதெப்படி?

விடை:—தன்னுடையை பிரகாசத்தினால் தானே விளங்குகிற சுயஞ்சோதியாகையால் இச் சகத்ரூபமான ஆன்மாவிற்குப் பரப்பிரகாசத்தை அபேட்சிக்கத்தேவையில்லை. ஆகையால், அந்தச் சிவப்பிரகாசத்தைச்சந்திர சூரியாக்கினி மீன் (நட்சத்திரம்) முதலானவைகள் எள்ளளவாகிலுந் துலக்குவிக்கமாட்டா. இந்தச்சந்திர சூரியாதி சகத்துஞ் சித்ரூபப்பிரகாசத்தினாலே விளங்கப்பட்டு வருகிறது. ஆதலால், இவ்வான்மாவே பாலியாதி சாக்கிரமாதி சகலாவத்தைகளிலுமிருக்கின்றதென்றறி. இவ்வான்மா சுயசொரூபியானதால் ஆனந்த பரிபூரணமே அதனுடைய லட்சணம்.

வினு:—அஃதெப்படி?

விடை:—தனக்கன்னியமாகிய பதார்த்தங்களிடத்திலேயும் சுகமென்று பிரீதிவைப்பதால் ஆன்மா சுகவேதுக்களாயிருக்கிற சகல விஷயங்களிலும் அவதியோடேகூடின ஆனந்தங் காணப்பட்டிருக்கிறது. ஆன்மா ஆனந்தமாகையால் ஒருகாலும் அவதி(எல்லை) யில்லாத அந்தப் பிரமானந்தமே தன்னுடைய ஆனந்தமென்றறி.

வினு:—அஃதெப்படி?

விடை:—பிராணிகளுக்கு இந்திரிய நஷ்டமாகியும், தேக சீரணமாகியும், பிராணன்போகிறதருணத்திலுமின்னம்பிழைத்துக்கொள்வோமென்கிற ஆசையிருப்பதால் ஆன்மா பிரியவத்துவென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால், சகலசரீரங்களுக்கும் ஆன்மா பரமானந்த சொரூபம். எந்த ஆனந்தத்தினால் சகல விடயானந்தங்களும் பிறக்குமோ அந்த விடயானந்தங்களும் ஆன்மானந்தத்தைத்தவிர வேறில்லை. ஆதலால், ஆன்மாசுகசொரூபமென்றேயறி. புத்திரதனாதி

களைக் காட்டிலும் அன்னியமான தேகேந்திரியாதிகளைக் காட்டிலும் ஆன்மா பிரியவஸ்துவாகையால் ஆன்மா பரமாநந்த சொரூபியென்றறி. உலகத்தில் ஆபத்து சம்பத்துக்களிரண்டிலிலும் பிரியமாயிருக்கிற வஸ்து பிரியமாயிருக்குமே தவிர வொருகாலும் அப்பிரியமாக மாட்டாது; அதுபோல, ஆன்மா வொருகாலும் அப்பிரிய வஸ்துவல்லவென்றறி. சகலபிராணிகளுக்கும் ஆன்மா அதிகப்பிரியவஸ்து வேதவிர அப்பிரியவஸ்துவன்று.

வினா:—அஃதெப்படி?

விடை:—புத்திர மித்திர களத்திராதிகளையும், தனதான்னிய முதலாகிய பதார்த்தங்களையும், கிரகாதி வியாபாரம் உழவு பசுக்கள்சம்ரட்சணை ராஜசேவைமுதலாகிய கிரியையாதிகளையும் ஆன்ம சுகத்தை இச்சித்தே யிச்சித்திருக்கிறார்கள். பிரவிர்த்தி நிவிர்த்தி முதலாகிய தொழில்களெல்லாந் தன் சுகத்துக்கே தவிர அன்னியனுக்காகச்செய்யவில்லை. ஆகையால், ஆன்மா பரமசுகசொரூபி யென்றறி. வாராய் சீஷனே! முன் சொன்ன ஆன்மா ஆனந்தசொரூபியானதால், சகலவஸ்துக்களைக் காட்டிலும் சிரேஷ்ட மென்றுசொல்லப்பட்டது. எவன் இப்போது நாம்சொன்ன ஆனந்தசொரூபமான ஆன்மாவைத்தவிர ஆனந்தம் வேறேயொன்றிருக்குமென்றெண்ணுகிறானோ அவன் சகல துக்கத்தையு மடைவானென்றறி.

வினா:—இப்படிசொன்ன குருவைபார்த்துச் சீஷன் கேட்கிறான். வாரும்சுவாமி! அடியேன் அறியாமையினால் எக்கேள்வி கேட்கினும் அந்தக் கேள்வியினாலுண்டான குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளல்வேண்டும். மகாததுமாக்களுக்கு அஞ்ஞானிகளுடைய வாக்கு அபராதத்துக் கிடமாகாது. ஆனதால், ஆன்மாவும் சுகமும் அன்னியமானதால் ஆன்மா சுகவடிவமல்லவென்று நினைத்து அவ்வான்மாவுக்குச் சுகத்தைக்கோரிச் சகல ஜனங்களும் பிரயத்தனம் பண்ணுகிறார்கள். சகலதேகிகளும் ஆன்மாவுக்குச் சுகந்தேடுகையிற் பிரயத்தனமும் பண்ணுகிறதென்ன? இந்தச் சம்சயங்களைத் தேவரீர் கிருபையினால் தீர்த்து இரட்சிக்கவேண்டும்.

விடை:—இப்படிச் சொன்ன சீஷனைப் பார்த்துக் குருவானவர் சொல்லுகின்றார்:—மூடனாயிருக்கிறவன் ஆனந்தசொரூபமாயிருக்கிற தன்னை யறியாமல் வேறாக வெளியிலே சுகமிருக்கிறதென்று அனந்த சுகத்தைத் தேடப்பிரயத்தனம் பண்ணுகிறான்: அறிந்தவன் யத்தனம் பண்ணுகிறதில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—கிரகாதிகளிற் புதைத்திருக்கிற தனத்தை அறியா திருக்கிறவன் புறத்திலே பிச்சை தேடுகிறான். அந்தப் புதையலை அறிந்தவனெப்படி பிச்சையெடுப்பான்? ஆகையால், அஞ்ஞானியா யிருக்கிறவன் துக்கரூபமான ஸ்தூல சூக்குமசரீரங்களைச் சுபாவமாகத் தானென்று கிரகித்துச் சுகசொரூபமான தன்னைமறந்து தனக்குத் துக்கங்களைக் கொடுக்கிறதாயிருக்கின்ற விடயங்களைச் சுகமென்று இச்சிக்கின்றான். ஞானியாயிருக்கிறவன் ஒருகாலுமிவைகளை யிச்சி யான்.

வினா:—அஃதெப்படி?

விடை:—துக்கத்தைக் கொடுக்கிறதாயிருக்கின்றவஸ்து வொரு காலுஞ் சுகத்தைக் கொடுக்கமாட்டாது; துக்கமே கொடுக்கும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—துக்கத்தைக் கொடுக்கிற விஷத்தைப் பானம் பண் ணினவனுக்கு அந்த விஷமானது மரணத்தைக் கொடுக்குமன்றி பிழைப்பையுண்டுபண்ணாது. அதையறிந்த ஞானியானவன் துக் கத்தை கொடுக்கின்றதாயிருக்கிற விஷயங்களை இச்சியான். பாமரர் கள் ஆன்மாவேறு சுகம் வேறு என்று நிச்சயித்து வெளியிலிருக்கிற விடயசுகத்தின் பொருட்டு நிச்சயமாக யத்தனம் பண்ணுகிறார்கள்; சந்தேகமில்லை. உலகத்தில் தமக்கிஷ்டமான வஸ்துவைக்கிரகிக்கிற திற் சகல சனங்களுக்குந் தோற்றுகிற ஆனந்தமெதுவோ அவ்வா னந்தம் வஸ்துவினுடைய தொழிலே யல்லாது மனதிற்காணோம். வஸ்துதர்மமானல் மனதிலெப்படித் தோற்றும். அன்னியமான வஸ்துவினுடைய தர்மம் மனதில் தோற்றுமென்ப தெங்குங் காணோம்.

வினா:—ஆனல், அந்த வஸ்துதர்மந்தான் ஆனந்தமாமோ?

விடை:—அது சடரூபமானதால் அதற்கு ஆனந்தமுண்டென் பது கூடாது.

வினா:—ஆனல், மனதினுடைய தர்மந்தான் ஆனந்தமாமோ?

விடை:—மனதுஞ் சடரூபமானதால் அதற்கும் ஆனந்தமுண் டென்பது கூடாது. ஆதலாற் சுகம் சடதர்மமென்பது ஓரிடத்தி லுங் காணப்படவில்லை; அனுபவிக்கப்படவுமில்லை.

வினா:—ஆனல், ஆன்மாவினுடைய தர்மம் ஆனந்தமோ?

விடை:—ஆன்மா நிர்க்குணமானபடியினால் ஆன்மா வேறென்பதும் ஆனந்தம் வேறென்பதுங் கூடா. ஆகையால், ஆனந்தமே ஆன்மாவென்றறி. பூர்வபுண்ணிய பலத்தினால் இஷ்டவஸ்துக்களைப் பார்க்குமிடத்தில் சுத்தசாத்விகம் பொருந்தின சித்தத்தில், சொச்ச திரவியமான சலத்திற் பிரதிபிம்பிக்கிற சந்திரனைப்போல ஆனந்த லட்சணமான ஆன்மா பிரதிபிம்பிக்கின்றது. மேலும், அந்தச் சித்தத்திற் பிரதிபிம்பிக்கிற ஆபாசாநந்தமானது மிகுந்த புண்ணிய பலத்தினாலும் குறைந்த புண்ணிய பலத்தினாலும் மிகுந்துங் குறைந்துங் காணப்படும். சுருதியில் சார்வபௌமானந்த முதல் பிரமானந்தம் வரையில் எவ்வானந்தங்கள் தாரதம்மியமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவ்வானந்தங்களநிசயமாகவும் முடிவில் அழிந்துபோவனவாகவு மிருக்கின்றனவாகையால் அவ்வானந்தங்கள் புண்ணிய சாதனமாய்வருகிறவிடயானந்தங்களாம். அவை புண்ணியம்பண்ணுகிறவர்களால் புசிக்கப்படுகின்றன. இப்படிப் புசிக்கப்படுகிற விடயானந்தமானது புசிக்கிறபோதும் புசியாமலிருக்கிறபோதுந் துக்கத்தையே கொடுக்குமென்று சொல்லப்படுகின்றது.

வினா:—அஃதெப்படி?

விடை:—விஷங்கலந்த அன்னமானது புசிக்கிறகாலத்திலும் புசித்தபிறகுந் துக்கத்தையே கொடுக்குமன்றிச் சுகத்தைக் கொடுக்கமாட்டாது. அதுபோல் உலகத்தில் பிரமாதிலோகங்களையடைந்த புருஷர்களுக்கும் போகாந்தரத்திலே அழிந்துபோகின்ற துக்கமிருக்கும். இதுவன்றியும் இராஜசன்னிதானத்திற் போகின்ற மந்திரி தளவாய் பிரதானிகளுக்கும் ஒருவர்க்கொருவர் தாரதம்மிய பேதமெப்படியோ அப்படியே பிரமாதி பேதங்களையடைகிற செந்துக்களுக்குந் தாரதம்மியமான துக்கமிருக்கும். ஆதலால், விவேகியானவர்கள் பிரதிபிம்பமாயிருக்கிற விடயானந்தங்களை ஆசிரயிக்காமல் பிம்பபூதமாயிருக்கிற ஆனந்த லட்சணமான ஆன்மாவை ஆசிரயிக்க வேண்டும். இந்தப் பிம்பபூதமான ஆனந்தம் சாசுவதம், தொய்தமில்லாத அத்துவைதம், நித்தியம், ஏகம், நிர்ப்பயம் என்று சொல்லப்படும். பிரதிபிம்பமாயிருக்கின்ற ஆபாசானந்தமும் அந்தப் பிம்பானந்தம் போலவே காணப்படுகின்றது.

வினா:—அஃதெப்படி?

விடை:—பிரதிபிம்பானந்தமானது பிம்பானந்த மூலமாகையாலும், பிம்பானந்தத்தைத் தவிரப் பிரதி பிம்பானந்தஞ் சித்தியாகா

தாகையாலும், பிம்பானந்தம்போல் பிரதிபிம்பானந்தமுங் காணப் படுகின்றது. அந்த நிர்விகாரமான பிம்பானந்தம் விகாரமான பிரதி பிம்பானந்தத்தில் காணப்படுகின்றது. ஆகையால், பெரியவர்களா யிருக்கிறவர்களாலும் யுக்தியினால் சாக்கிர சொப்பனங்களில் ஒரு காலும் ஆன்மானந்தம் அனுபவிக்கப்படவில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—அவித்தியா காரியமான தேகேந்திரிய கரணக்கூட் டுறவினால் ஆனந்த சொரூபமான ஆன்மா சாக்கிர சொப்பனங்களிற் காணப்படவில்லை. இந்தத் துக்கரூபமான சாக்கிர சொப்பனங்களா கிய தூலசூட்சுமங்கள் சுழுத்தியில் லயமாய்ப்போகையால் பிரத்திய கானந்த லட்சணமான ஆன்மானந்தஞ் சுழுத்தியிற் காணப்படுகின் றது. அந்தச் சுழுத்தியிற் புத்திமுதலாகிய கருவிகரணாதிகளொன்று மின்மையால் ஆன்மா கேவலானந்த மாத்திரமாய்த்தன்னைவிட அன் னியமில்லாத அத்துவைதமாயிருக்கின்றது. ஆதலால் நித்திரை தவிர்ந்தெழுந்த சகல சனங்களும் ஆன்மா சுகமென்றறிகிறார்கள். ஆகையால், ஆன்மா ஆனந்த சொரூபமென்பதிற் சந்தேகந் தேவை யில்லை. அப்பா! நித்திரை தவிர்ந்தெழுந்திருந்த உனக்கும் சுகமாய் நித்திரைபோனேனென்கிற நினைவிருக்கையால் ஆன்மா சுகசொரூபி யென்றும், உபநிடதார்த்த வாசனையை ஆக்கிராணியாதபடிக்கிருக் கிற பூர்வவாதிகளினால் துக்கமில்லாததே சுகமென்றுசொன்ன உப சாரமானவார்த்தை சுத்தப்பொய்யென்றும் அறிவாயாக.

வினா—அஃதெப்படி?

விடை:—துக்கமில்லாமை ஓடுமுதலானவைகளிற் காணப்பட்டி ருக்கின்றது. அவற்றிலானந்தங் காணப்படவில்லை. ஆகையால் அந்த யுக்தி செய்யக்கூடாது. ஆன்மா கேவலானந்த மென்பதில் நீ சந்தே கப்படத்தேவையில்லை. பிரமாமுதலிய சகல சீவர்களுந்தங்கள் தங்க ளுபாதியனுகுணமாய் ஆனந்த லேசத்தை அனுசரித்துக்கொண்டு ஆனந்திகளாயிருக்கிறார்கள். இந்த ஆனந்தம் பிம்பானந்த மூலமென் பதிற் சந்தேகந்தேவையில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—ஒருவன் பட்சணங்களிற் சுகத்தைக்கொடுக்கிற மதுர மானரசத்தை ருசியார்க்கிறான். அந்த ரசமானது வெல்லத்தி னுடைய மதுரமல்லாமல் பட்சணங்களுடைய மதுரமன்று. அப்

படியே விடயசந்நிதானத்திலே எவ்வானந்தந் தோன்றுகின்றதோ அது பிம்பானந்தப் பிரகாசமன்றிச் சடமான விடயானந்தமன் றென்றறி. எவனுக்கு எங்கெந்த விடயங்களோடே கூடுகிறபோது எங்கெந்த ஆனந்தங்காணப்படுகின்றதோ அவனுக்கு அவ்வவ்வானந் தம் பரப்பிரமானந்தமே யென்றறி.

வினா:—அஃதெப்படி?

விடை:—சந்திரப்பிரகாசத்தினால் ஆம்பல்புஷ்ப மெப்படி மலர் கின்றதோ அப்படியே ஆன்மானந்தத்தினால் விடயானந்தம் பிரகா சிக்கின்றதென்றறி. இப்போது சொல்லிவந்த சச்சிதானந்த ரூபத் துவம் ஆன்மாவுக்குச் சுபாவமே தவிர அன்னியமன்று.

வினா:—அஃதெப்படி?

விடை:—ஆன்மா நிர்க்குணமாயிருத்தலால் நிர்க்குணவஸ்துவிற் குக் குணமொருகாலுங்கூடாது. இதுவன்றியும், ஆன்மாவைத்தவிர அன்னிய அவஸ்தைநிசமாயிருந்தால் அதனால் ஆன்மாநிவிர்த்தியாம். அப்படியில்லாமல் அன்னிய அவஸ்தையாகிய பிரபஞ்சம் பொய் யாய்ப்போகின்றபடியினால் ஆன்மா ஒருகாலும் நிவிர்த்தியாவதன்று; சுருதியில் கேவலரென்றும் நிர்க்குணரென்றுஞ் சொல்லப்பட்டிருப் பதால் ஆன்மாவுக்கு ஒரு குணமுங்கூடாது. ஆகையால், அக்கினிக்கு உஷ்ணப்பிரகாசங்களெப்படி சுபாவமோ அப்படியே ஆன்மாவுக் குச் சச்சிதானந்த மூன்றுஞ் சுபாவமென்றறி. இப்படிக்கொத்த அத்துவைதமாகிய பரமான்மாவினிடத்தில் சுசாதிகவிசாதிகபேதமு மில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—விசாதிகமாய்க் காணப்படுகிற பிரபஞ்சம் நிவிர்த்தி யாகிறபடியினால் ஆன்மாவினிடத்தில் விசாதிகாதிபேதங் காணப்பட வில்லை; அஃதெப்படியென்றால், ரச்சு சொரூபத்திற்கு விபரீதமான சர்ப்ப சொரூப மெப்படி தள்ளப்படுகின்றதோ அப்படியே சத்தினி டத்தில் தோற்றின சகத்தைத்தள்ளிச் சன்மாத்திரமாய் விளங்கு கின்றது யாதோ அஃது அபவாதமென்று அத்துவைதத்தையறிந்த பெரியவர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படி சூட்சும புத்தி யுள்ளவர்கள் பிரபஞ்சத்தினுடைய உற்பத்தி சத்தாயிருக்கிற பிர மத்தினிடத்தில் விளங்குகின்றதென்று அறிந்திருக்கையால் பிரபஞ் சம் சன்மாத்திரமென்று யுத்தியினாலறி. மேலும், நால்வகையோனி யிற் பிறந்த ஸ்தூலசரீரங்களும் அவைகளின் புசிப்புக்கு யோக்கிய

மான அன்னபானாதிகளும் அவற்றிற்கிருப்பிடமான இந்தச் சகல பிரமாண்டங்களும் பஞ்சீகிருதமான ஸ்தூலபஞ்சபூதமென்றேயறி. இந்தப் பிரபஞ்சமானது பிரமத்தினுடைய காரியமாய்க் காணப்பட்டபடியினால் விசாரித்தறிகிறபோது மண்ணின் காரியமான கடகலசாதிகள் மண்ணைத்தவிர வேறாகாததுபோல் பிரமமாத்திரமாய்க் காணப்படுகின்றது.

வினா:—அஃதெப்படி?

விடை:—அந்தக் கடகலசாதிகளை யுள்ளும் புறம்பும் நன்றாய் விசாரித்துப் பார்க்கிறபோது மிருத்திகையைத் தவிரக் கடாதிகளில்லை; ஆகையாலிந்தக்கடம் கழுத்தோடேகூடி வாய்குவிந்திருக்கிறதென்று சொல்லக்காரியமில்லை; இதுவும் சொன்மாத்திரமேயல்லாது மிருத்திகையைத்தவிர வேறன்று. இந்தக் கடகலசாதிகளைக் கடமென்றும் சார்வ (சட்டி) மென்றும் நாமரூபபேதமாக மூடர்களாலே யொருமண்ணே சொல்லப்படுகின்றது. அவற்றிற்கு நாமரூப பேதமேதவிர விசாரிக்கிறபோது வஸ்துபேதமில்லை; அதுபோல் பிரமத்தின்(விவர்த்த)காரியமாயுள்ள நால்வகையோனிகளாகிய சகலபூத உபாதிகளென்கிற பிரபஞ்சமும் பிரமத்தைத்தவிர வேறன்று. காரணத்தைவிடக் காரிய மொருகாலும் பேதமில்லாததுபோல் தோற்றப்பட்ட இந்தச் சகலத்துக்கும் பிரமத்துக்கும் பேதமில்லை யென்றறி.

வினா:—அஃதெப்படி?

விடை:—தத்தங்குணமான சத்ததாதுக்களோடேகூடினபஞ்சீகிருத பூதங்களானசரீரங்களும் பஞ்சீகிருதபூதகாரியமான சூட்சுமசரீரங்களும் சத்துவாதிகுணங்களோடேகூடித் தத்தமக்குக் காரணமான அவ்வியத்த மாத்திரமாய் ஆன்மாபாசத்துடன் கூடி விளங்குகின்றன. இப்படி விளங்குகின்ற சரீரத்திரயங்களுக்கு ஆதார பூதமாய் அகண்டமாய் அனாதியாய்ச் சுத்தமாய் ஏகமாய்ச் சத்தாயிருக்கிற பரப்பிரம வஸ்துவைத்தவிரச் சரீரத்திரய விகற்பங்களில்லை. அப்பா! ஒருபுருஷனுக்கு நேத்திர தோஷத்தினால் எப்படி சந்திரன் இரண்டாய்க்காணப்படுகின்றதோ அப்படியே ஒன்றாயிருக்கிற பிரமமும் புத்திதோஷத்தினாற் பின்ன பின்னமாய்க் காணப்படுகின்றது. அந்தநேத்திர தோஷமில்லாதவர்களுக்குச் சந்திரனொன்றாயெப்படிக் காணப்படுகின்றதோ அப்படியே புத்திமுதலான தோஷந்தீர்ந்தவர்களுக்குப் பிரமமொன்றாய்க்காணப்படும். பழுதையினிடத்திற் பாம்

பென்று பிரமித்தறிந்தவன் தீபங்கொண்டுவந்து பழுதையைப் பார்த்ததன் பின்பு பாம்பென்கிறபுத்தி பழுதையினிடத்திலெப்படி லயமாயிற்றோ அப்படியேபிரமத்தினிடத்தில் பிரமத்(மயக்கத்)தினாற் பிரபஞ்சத்தைக்கண்டவன் குரு வேதாந்த வாக்கியரகசியங்களினால் பிரமானுபவத்தைக்கண்டு பிராந்தி தீர்ந்தால் அவனுக்குப் பிரபஞ்சம் பிரமத்தினிடத்தில் ஐக்கியமாம். இப்படி பிராந்தியினாற் பிறந்ததொய்த புத்தியானதொழிந்துபோகிறபோது பரப்பிரமவஸ்து சத்தாய் அத்துவிதமாய் ஏகமாய்விளங்குவதால், நிர்விகற்பமான பிரமத்தினிடத்தில் விசாதிகபேதமில்லை யென்றறி. உபாதியான மாயாவித்தைகளுள்ளபோது அபின்ன மாயிருக்கின்ற ஆன்மாவானது சுசாதிகபேதமுடையதுபோல் தோற்றுகிறது. அந்த உபாதிகளைச் சொப்பனம்போற் பொய்யென்று தள்ளுகிறபோது அந்த உபாதி தோற்றர வில்லாதபடியினால் ஆன்மாவுஞ் சுசாதிகபேதமில்லாமல் பிரமப் பிரதிபாதகமாக விருக்கும்.

வினா:—அஃதெப்படி?

விடை:— கடாகாசமானது கடமுடைந்தபோது மகாகாசத்துடன் கடாகாசமென்கிறதுபோய் ஒன்றானதுபோல் ஸ்தூல சூட்சும உபாதிகளெல்லா மொழிந்தபோது ஆன்மா பிரமமாகவேயிருக்குமென்றறி. கடமிருந்தபோதும் இல்லாதபோதும் மகாகாசமெப்படி யொன்றாயிருக்கிறதோ அப்படியே உபாதியிருந்தபோதும் இல்லாதபோதும் பரிபூரணமாயிருக்கிற ஆன்மாவொன்றாகவேயிருக்கின்றதன்றிப் பின்னமென்று ஒருவராலுஞ் சொல்லுதல்கூடாது.

வினா:—அஃதெப்படி?

விடை:—மண்ணைத்தவிர வேறில்லாதிருக்கிற கடாதிகள் பாமரர்களுக்குப் பேதமாகக்காணப்படுவது போலவும், ஒரு பூமியே கிராமமென்றும் க்ஷேத்திரமென்றும் பின்னமாய்த்தோற்றுகின்றது போலவும், மகத்துக்கு மகத்தாயிருக்கின்ற பரப்பிரமவஸ்து பிராந்தியினாலே கற்பிக்கப்பட்ட வஸ்துக்களோடேகூடிப் பரிச்சின்னமாகத் தோற்றுகின்றது; அந்தப் பிராந்தியைத் தவிர்த்தாலொழிய வொருகாலும் ஆன்மாவுக்குப்பேதமென்கிறதில்லை. ஆதலால், ஆன்மா பரிபூரணமாம்; பின்னமென்பதொருகாலுங்கூடாது. பிரமத்திற்கும் ஆன்மாவுக்கு முள்ள பேதங் கற்பிதமேதவிர வாஸ்தவமன்று. சுருதியிலும் பிரமத்துக்கும் ஆன்மாவுக்கும் ஐக்கியந் திரளாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

வினா:—அதனைக்கிருபைசெய்து கூறல்வேண்டும்.

விடை:—சாமவேதோபநிடதத்தில் உத்தாலகர் சுவேதகேதுவுக்கு அத் தொய்தத்துவம் பொருந்தவேண்டித் தத்துவமசியென்னும் வாக்கியமுபதேசித்திருக்கின்றார்; அதையுனக்குச் சொல்லுகிறோம் சாவதானமாய்க்கேள். அந்த உபதேசவாக்கியம் வாச்சியார்த்தமென்றும் லட்சியார்த்தமென்று மிரண்டுவிதமாயிருக்கும். அவற்றுள் வாச்சியார்த்தமானது பிரத்தியட்ச விரோதமாயிருக்கையால் வாச்சியார்த்தங்களுக்கு ஐக்கியங்கூடாது; அவ்விரோதங்களெல்லாமொழிந்த தத்துவபதார்த்தங்களுடைய லட்சியார்த்தங்களுக்கே ஐக்கியங்கூடும்.

வினா:—என்றிப்படி சொன்ன குருவைப்பார்த்து சீஷன் கேட்கிறான்:—சுவாமி! தத்துவபதங்களுடைய அர்த்த மெத்தனைவிதம்? வாச்சியார்த்தமாவதென்ன? லட்சியார்த்தமாவதென்ன? லட்சியார்த்தத்துக்கு ஐக்கியங்கூடுகிறபோது அந்தவிரோத மெப்படியில்லாமற்போகும்? தத்துவமசியென்கிற வாக்கியத்திற்கு லட்சியார்த்தமான சீவப்பிரமாயிக்கியங் கூடுகிறதில் எந்த லட்சணை சொல்லப்பட்டிருக்கின்றது? இவைகளைக்கருணையினால் அடியேனுக்கு நன்றாய்த்தெரியச் சொல்லல்வேண்டும்.

விடை:—வித்துவானாயிருக்கிறசீஷனே! இன்றைக்குன்னுடைய தபசானது நிறைவேறியது. இந்தவாக்கியார்த்த சிரவணத்தினால் மிகவுஞ்சிறந்த ஞானமுண்டாம். எவர்கள் இந்தத் தத்துவபதங்களுடைய அர்த்தத்தைத் தெரிந்துவிசாரியாமல் எவ்வளவுகாலமிருக்கிறார்களோ அவ்வளவுகாலமும் அவர்களுக்குச் செனன மரணரூபமான சம்சாரசாகரமுண்டு. ஆதலால், சற்புருஷர்களுக்குச் சச்சிதானந்த அகண்டாகார ரூபாவஸ்தையான இந்தவாக்கியார்த்த சிரவணத்தினாலுண்டான அபரோட்ச ஞானத்தினால் மோட்சசாதனஞ் சித்திக்கும். முமுட்சுவாயிருக்கிற புருஷன் செனனபந்தமொழிவதன்பொருட்டு இந்தவாக்கியத்தை நன்றாயறியவேண்டும். ஆகையால், நீயும் சாவதானமாய்க்கேள். உனக்குத்தெரியும்படி நன்றாய்ச் சொல்லுகிறோம்.

வினா:—தெரியும்படி கூறல்வேண்டும்.

விடை:—மகாவாக்கியங்களுக்கு வாச்சியார்த்த லட்சியார்த்த பேதமாக அர்த்தங்கள் வெகுவிதங்களாகப் பெரியவர்களால் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றை உனக்குச் சொல்லுகிறோங்கேள்.

தத்துவமசியென்கிற வாக்கியம் தத் தொம் அசி யென்று மூன்றுபத மாயிருக்கும். அவற்றுள் முந்தினதான தத்பதத்தினுடைய அர்த்த மிங்கே சொல்லுகிறோம்.

வினா:—அவ்வர்த்தம் யாது?

விடை:—அது சாஸ்திரார்த்தங்களை யுணர்ந்தபெரியோர்களால் தத்பத வாச்சியார்த்தமென்றுந் தத்பதலட்சியார்த்தமென்றுஞ் சொல்லப்படும். அவற்றுள் பெரியோர்களாற் சொல்லப்பட்டுள்ள வாச்சியார்த்தத்தை முந்திச்சொல்லுகிறோம்.

வினா:—சொல்லல்வேண்டும்.

விடை:—சத்துவகுணமிகுத்துச் சிற்பிரதிபிம்பத்தோடே கூடிச் சமஷ்டி ரூபவஞ்ஞானமாகிற ஆகாசாதி விராட்புருஷானந்த மான காரியத்துடன்கூடின பிரதி பிம்பாவிச்சின்ன சைதன்னியமா னது சச்சிதானந்த லட்சணத்தைப் பொருந்தியதாயுஞ் சர்வஞ்ஞத் துவம் ஈசுரத்துவம் அந்தரியாமித்துவமாதிய குணங்களோடேகூடிக் கொண்டிருக்கிறதாயுஞ் சிருட்டி ஸ்திதி சங்கார தர்மங்களுடன் கூடினதாயுஞ் சகலப் பிரபஞ்சத்தையுந் துலக்குவிக்கிறதாயுங் குணங் களினால் எண்ணத்தொலையாததாயு மிருக்கின்றது; அந்த அவ்வி யத்தமான பிரமமே வாச்சியார்த்தமென்று சொல்லப்படும். இனிச் சுருதிசம்மதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிற தத்பத லட்சியார்த் தத்தைச் சொல்லுகிறோங்கேள்.

வினா:—அஃதெப்படி?

விடை:—சத்த பரிச ரூப ரச கந்தங்களில்லாததாயும் வாக்கி னால் வசனிக்கப்படாததாயும் மனதினால் எண்ணப்படாததாயும் பாணியினால் கிரகிக்கப்படாததாயும் ஒன்றினாலுந் தள்ளப்படாத தாயும் ஒருதொழிலிலு மொட்டாததாயும் ஏகலட்சணத்தைப் பொ ருந்தினதாயும் அமநஸ்கமாயு மிந்திரியாதீதமாயுஞ் சத்துவாதி குணங் களில்லாத தாயும் விலட்சணமாயும் பிராந்தியினால் ஆரோபிக்கப் பட்ட வஸ்துக்களுக்கு அதிட்டானமாயுஞ் சத்தாயும் அத்தொய்த மாயும் சுத்த புத்த கேவலானந்த லட்சணமாயுமிருக்கின்ற நிர் விசேஷ பரப்பிரமமே தத்பதலட்சியார்த்தமென்று சொல்லப்படும். இனித் தொம்பதத்துக்கும் வாச்சியார்த்த லட்சியார்த்தமென்று இரண்டுவிதமாகச் சொல்லப்பட்டுள்ளவற்றுள் தொம்பத வாச்சி யார்த்தத்தை முந்திச்சொல்லுகிறோம்.

வினா:—அஃதெப்படி?

விடை:—மலினசத்துவம்பொருந்திச் சிற்பிரதிபிம்பத்துடனே கூடிப் புத்திமுதல் தூலசரீராந்தமாய்க் காரியகாரணலட்சணமாகிய வியஷ்டி ரூபமான அவித்தையிற் பிரதிபிம்பித்துச் சீவனென்கிற பேரைப்பொருந்தியும், சட்பாவவிகாரங்களுடன் கூடி நான் பாலன் நான் கௌமாரன் நான் யௌவனன் நான் பெருத்தேன் நான் சிறுத்தேனென்கிற தூலசரீர தன்மங்களுடனேகூடியும், பசி தாக சோக மோகசாரமான *சடூர்மிகளைப்பொருந்தியும், நானூமை நான் செவிடன் நான் குருடன் நான் மூக்கறையன் நான் போகிறேன் நான் வருகிறேனென்கிற இந்திரியதர்மங்களுடனேகூடியும், காமம் சங்கற்பம் பொறுமை சந்தோஷம் பயம் கவலை மறதி இவை முதலான மனோதர்மங்களுடன் கூடியும், நான் கர்த்தா நான் போக்தா நான் சுகி நான் துக்கியென்கிற அகங்கார தர்மங்களுடன்கூடியும், திரிகரணத்தினாற் பண்ணப்பட்ட புண்ணியபாவ பலபோகத்தின் பொருட்டுச் சுவர்க்க நரகங்களையடைந்து அவற்றாலுண்டான சுகதுக்கங்களைத் தன்னுடைய கர்மத்துக்கீடாய்ப் புசித்துக்கொண்டு பிராந்தியோடுகூடிய புருஷனே தொம்பத வாச்சியார்த்தமென்று சொல்லப்படும். இனித் தொம்பத லட்சியார்த்தம் சொல்லக்கேட்பாயாக.

வினா:—அஃதெப்படி?

விடை:—அவித்தியாலட்சணமான தேகேந்திரிய கரண மனோ புத்திப் பிராண அகங்காரரூபமான வுபாதிகளில் ஒட்டாததாயும் மண் ஓடு கல்லுகளுடைய மத்தியிலிருக்கிற ஓர்மாணிக்கக்கல்லானது அவைகளையெப்படி துலக்குவிக்கின்றதோ அப்படியே இந்தப் பிராணேந்திரியாதி தேகத்துக்குள்ளே சோதியாயிருந்து துலக்குவித்துக்கொண்டு அந்தத் தேகாவத்தைகளுக்கெல்லாஞ் சாட்சியாய்ப் பிரத்தியகான்மாவாயும் தேகேந்திரிய வியாபாரங்களைப்பார்த்துக் கொண்டிருக்கிறதாயும் அறிகிறதாயும் ஏகமாயும் சத்தியமாயும் நிர்விகாரமாயும் பூரணமாயும் சூட்சுமமாயும் சர்வப்பிரகாசமாயும் தடஸ்தமாயும் கூடஸ்தமாயுமிருக்கிற ஆன்மாவே தொம்பதத்துக்கு லட்சியார்த்த மென்று சொல்லப்படும். அப்பா! தத்துவபதங்களுடைய அர்த்தம் இப்படிசொல்லப்பட்டது. இனிவாக்கியார்த்தத்தினுடைய நிண்ணயத்தைச் சொல்லுகிறோம்.

---

* பசி, தாகம், சோகம், மோஹம், ஜரை (கிழத்தனம்), மரணம் ஆகிய இவைகள் சடூர்மிகளாம்.

வாக்கியநிர்ணயம்.

வினு:—அஃதெப்படி?

விடை:—தத்துவமசியென்கிற வாக்கியமானது சம்பந்தத்திரயங்களுடன் கூடியிருந்தால் தத்துவபதார்த்தங்களிரண்டுக்கும் அசிபதத்தினுல் ஐக்கியங்கூடும்.

வினு:—ஆனுற் சம்பந்தத்திரயங்க ளெத்தனைவகைப்படும்?

விடை:—அவை சமானுதிகரண்ய சம்பந்தமென்றும், விசேஷண விசேஷிய சம்பந்தமென்றும் லக்ஷியலக்ஷணபாவ சம்பந்தமென்றும் மூன்றுவிதமாம். அவற்றுள் தத்பதந் தொம்பதங்களிரண்டுக்குஞ் சமானுதிகரண்ய சம்பந்தமென்றும் தத்பத தொம்பதார்த்தர்களாயிருக்கிற ஈசுவரர்களுக்கு விசேஷண விசேஷிய சம்பந்தமென்றும் அதிஷ்டானமான பிரத்தியகான்மா பரமான்மாக்களுக்கு லக்ஷிய லக்ஷணபாவ சம்பந்தமென்றும் அறிஞர்களாற் சொல்லப்படும்.

வினு:—சமானுதிகரண்ய சம்பந்தமாவது யாது?

விடை:—பரோட்சத்துவ முதலான தர்மங்களுடன் கூடின சைதன்னிய மெதுவோ பிரத்தியட்சத்துவாதிதர்மங்கள் பொருந்தின சைதன்னியமெதுவோ அவ்விரண்டுக்குந் தத்துவபதங்களினுல் ஐக்கியங்கூட்டுகிறதே சமானுதிகரண்ய சம்பந்தமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தத்பதார்த்தமான அபரோட்சத்துவாதி தர்மங்களுடன்கூடின சித்துக்கும் தொம்பதார்த்தமான அபரோட்சத்வாதி தர்மங்களுடன்கூடினசித்துக்கும் ஒன்றுக்கொன்றுபேதமாயிருக்கிற வாச்சியார்த்தத்தைத் தள்ளவேண்டித் திடமாக விசேஷண விசேஷிய சம்பந்தஞ் சொல்லப்பட்டிருக்கிறது. தத்துவபதார்த்தங்களிரண்டுக்கும் ஐக்கியங் கூடுகிறதில் விருத்தாங்கிசமெது காணப்பட்டிருக்கிறதோ அதைத்தள்ளி அவிருத்தமாயிருக்கின்ற சித்தோடே சித்தைக்கூட்டுகிறதே லக்ஷிய லக்ஷணபாவ சம்பந்தமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

வினு:—விருத்தாங்கிசங்களைத் தள்ளுகிறதற்கு விசேஷண விசேஷிய சம்பந்தங்கூறுவதேன்?

விடை:—நீலோற்பலமென்கிறபோது வாக்கியார்த்த சங்கதியெப்படிக் காணப்பட்டிருக்கின்றதோ அப்படியே தத்துவமசியென்கிறபோது வாக்கியார்த்தசங்கதி கூடாது.

வினு:—அஃதேன்?

விடை:—நீலத்துவம் படத்தைவிட்டு நீங்கி விசேடமா யுற்பல த்தில் கூடினதுபோல் தத்துவபதங்களிலும் அன்னியோன்னிய பேதத்தைத்தள்ள விசேஷண விசேஷியத்துவம் ஒரு பிரகாரமாய்க் கூடுகிறது. ஆதலால், அந்த விசேஷண விசேஷியத்துவம் நீலோற் பலமென்கிற வாக்கியத்தில் பொருந்தினதுபோல் தத்துவமசி யென் கிற வாக்கியத்திற் பொருந்தாது.

வினு:—அஃதெப்படி?

விடை:—வாக்கியார்த்தமாயிருக்கிற தத்துவபதங்களில் பிரத்தி யட்ச பரோட்சத்துவாதி விரோதங்காணப் பட்டிருக்கின்றது; ஆத லால் கூடாது.

வினு:—அந்த விரோத தர்மம் யாது?

விடை:—தத்பதார்த்தமாயிருக்கிற ஈசுரனிடத்தில் சர்வஞ்ஞத் துவம் சர்வேசுரத்துவஞ் சர்வ உத்தமோத்துவம் சத்திய கர்மத்து வம் சத்தியசங்கல்பத்துவம் பரோட்சத்துவ முதலானவைகள் கா ணப்பட்டிருக்கின்றன. தொம்பதார்த்தத்தில் சீவத்துவங் கிஞ்சிக் ஞத்துவந் துக்கசீவனத்துவம் அவித்தியாவசத்துவம் இந்தவிரோதங் கள் காணப்பட்டிருக்கின்றன. ஆதலால், அந்தவிருத்ததர்மங்களைப் பொருந்தின தத்துவ பதார்த்தங்களாகிற சீவேசுரருக்கு ஏகத்துவ மெப்படிக் கூடும்? சீவேசுரர்களிருவரும் ஒருவர்க்கொருவர் விருத்ததர்மங்களுடன் கூடி விலட்சணர்களாய்ப் பாணியும் நெருப் பும்போலிருப்பதால் இவர்களுக்கு முக்கியமாய் ஐக்கியங் கூட் டுகிறபோது சுருதிஸ்மிருதி விரோதமும்வரும். சுருதி இந்தத் தத்துவபதார்த்தங்களுக்கு அசியென்று ஐக்கியத்தைத் தாற்பரி யமாய்ச் சொல்லியிருப்பதால் அந்தச்சுருதி வசனத்தை அங்கீகாரம் பண்ணவேண்டும். இப்படி வாக்கியார்த்தங்களை அங்கீகரிப்போ மென்ருல் ஒன்றுக்கொன்றுவிருத்த மிருப்பதால் அங்கீகரித்தல் கூடாது. ஆகையால், லட்சணையை அங்கீகரித்தல்வேண்டும். அது விட்டலக்கணையென்றும் விடாதலக்கணையென்றும் விட்டு விடாத லக்கணையென்றும் திரிவிதமாயிருக்கும்.

வினு:—ஆனுல் விட்டலக்கணையாகிய "கங்காயாங்கோஷப்பிர வசதி" யென்கிறதினுல் தத்துவ பதார்த்தத்துக்கு ஐக்கியங் கூடுமோ?

விடை:—கங்கையிலிடைச்சேரியிருக்கிறது என்பதில் முக்கியமாயிருக்கிற கங்காசலத்தைத்தள்ளிக் கரையைக் குறிக்கையாலும், தத்துவமசியென்கிற வாக்கியத்திற்கு அப்படியொன்றைவிட் டொன்றைக் குறிப்பதில்லாமல் ஐக்கியப்படுவதாலும் விட்டலக்கணையினால் ஐக்கியங்கூடாது.

வினா:—"சோணஃதிஷ்டதி சுவேதோதாவதி" யென்கிற விடாதலக்கணையைக்கொண்டு ஐக்கியங்கூடுமோ?

விடை:—சிவலை நிற்கின்றது வெள்ளைபோகின்ற தென்று பொதுவசனமாய்ச் சொன்னதேதவிர இன்னதென்று குறித்துச் சொல்லாததால் விடாதலக்கணையினாலும் ஐக்கியங்கூடாது.

வினா:—பின்னை யாதினால் தான் ஐக்கியங்கூடும்?

விடை:—சோயந்தேவதத்த னென்கிறதில் விட்டுவிடாதலக்கணையினால் ஐக்கியமெப்படிக்கூடுமோ அப்படியே தத்துவமசியென்கிற வாக்கியத்திற்கும் ஐக்கியங்கூடும்.

வினா:—அஃதெப்படி?

விடை:—சோயந்தேவதத்தனென்கிற வாக்கியார்த்தத்தில் தேவதத்தனிடத்தில் முன்காணப்பட்ட துரைத்தனம் தண்டிகைமுதலானவைகளும், அப்போதிவனுண்ட தேசகால முதலானவைகளும், பின்பு சுயம்பாகியாயிருந்த போதுண்டான சட்டுவமுதலானவைகளும், இப்போதிருக்கும் தேசகால முதலானவைகளும் ஒன்றுக்கொன்று விருத்தமானதா லிவ்விரண்டுவிரோதத்தையுந்தள்ளி அந்த தேவதத்தனுடைய சரீரமாத்திரம் அர்த்தமாகக்கொண்டு அவனேயிவன் இவனேயவனென்று ஐக்கியப்படுத்துவதுபோல் தத்துவமசியென்கிறதில் தத்பத வாச்சியார்த்தமாகிய சர்வஞ்ஞத்துவ மீசுரத்துவமுதலான விருத்தாங்கிசத்தையுந் தொம்பத வாச்சியார்த்தமாகிய கிஞ்சிக்ஞத்துவமுதலான விருத்தாங்கிசத்தையுந் தள்ளித் தத்பத லட்சியார்த்தமாகிய சின்மாத்திரமான பரமான்மாவுக்கும் தொம்பத லட்சியார்த்தமாகிய சின்மாத்திரமான பிரத்திய கான்மாவுக்கும் அசிபதத்தினால் அதுவேநீயானுயென்று ஐக்கியங்கூடும். இப்படி லட்சணையினால் ஐக்கியானுபவமாய்க் கூடப்பட்ட சொரூபம் சர்வோபாதிகளை யொழித்ததாயுஞ் சச்சிதானந்தமாகியும் அத்துவைதமாகியும் நிர்விசேடமாகியும் நிராபாசமாகியும் வாக்கினால் அப்படிக் கொத்த திப்படிக்கொத்த தென் றுவமித்துச் சொல்

லப்படாததாகியும் ஒன்றைக்கொண்டு காட்டப்படாததாகியும் ஆனந்தமாகியுஞ் சாந்தமாகியுஞ் அச்சுதமாகியும் அதர்க்கியமாகியும் அபிஞேயமாகியும் நிர்க்குணமாகியும் அகண்டேகரசப் பிரமமாகியுமிருந்ததே அசிபதாயிக்கானுபவமாம். அப்பா! தத்துவபத லட்சியார்த்தமான பிரத்தியகான்மாப் பிரமங்களுக்கு ஏகத்துவம் பொருந்துகிறதற்கு உபாதிவிசேஷங்களில் விரோதங் காணப்பட்டிருக்கின்றது. இப்படிக் காணப்பட்டிருக்கின்ற உபாதிவிசேடங்களைத் தள்ளுகிறபோது தத்துவபதார்த்தங்களான பிரத்தியகான்மப் பிரமாயிக்கத்துக்கு ஒரு விரோதமுமில்லை. இந்தப் பிரத்தியகான்மா பரமான்மா வென்னுமிரண்டன்கண்ணும், உபாதியும் உபாதிகளுடைய கூட்டுறவும் உபாதிசெய்கிற தொழில்களும் தொழில்களின் விலட்சணமும் பிராந்தியினாற் பண்ணப்பட்டதா யிருக்கின்ற சகலப் பிரபஞ்சமும் கற்பிதமானதால் பொய்யாய்ச் சொப்பனத்திற் கண்ட பொருள்போல் சாக்கிரத்திலும் சத்தியமாய்க்காணப்படுகின்றன. நித்திரையினால் உண்டான சொப்பன சரீரதர்மங்களான சுகதுக்காதிப் பிரபஞ்சங்களுஞ் சீவேசுராதிபேதங்களுஞ் சத்தியமென்று நிச்சயம் செய்வதற்கு ஒருகாலுங்கூடாது.

வினா:—அஃதெப்படி?

விடை:—மாயையினால் கற்பிக்கப்பட்ட தேசகால ஜெகதீசுராதிகற்பனைகளும் அந்தச் சொப்பனம்போலவே பொய்யானதால் அதில் கற்பிதர்களான சீவேசுவரர்களுள் எவன் மெய்யன்? எவன் பொய்யன்? ஆகையாலிருவரும் பொய்யேயாம். சொப்பன சாக்கிரங்களாய இரண்டவத்தையிலும் பிராந்தியினால் உண்டான விகற்பங்களினாற்செய்கிற தொழில்களைத் தாரதம்மியமாய்க் காணவேண்டாம்.

வினா:—அஃதெப்படி?

விடை:—சொப்பனத்திற் காண்டலுங் கண்டவிடயமு மெப்படிப் பொய்யாய்ப்போகுமோ அப்படியே சாக்கிரத்திற் காண்டலுங் கண்ட விடயமும் பொய்யென்றறி. இந்தச் சாக்கிர சொப்பனங்களிரண்டும் அவித்தியா காரியமானபடியினால் சொப்பனம்போலவே சாக்கிரமுமாம்.

வினா:—அஃதெப்படி?

விடை:—காண்பானுங் காண்பனவுங் காட்சியுமாகிய திரிபுடி சாக்கிர சொப்பனங்களிரண்டுக்குஞ் சரியாயிருத்தலால், இரண்டிற்

கும் தாரதம்மியமில்லையென்றறி. சுழுத்தியில் சொப்பன சாக்கிரங்களில்லாமை எல்லாராலும் அனுபவிக்கப்படுகின்றது. ஆதலால், இந்தச் சாக்கிர சொப்பனங்களிரண்டும் பொய்யானதால் இவ்விரண்டுக்கும் பேதமில்லை. வாராய்விவேகியான சீடனே! பிரமத்தினிடத்திற் சுசாதியாதிலட்சணபேதம் பிராந்தியினால் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. அது காலத்திரயங்களிலும் பரமார்த்தமாகவில்லையென்றறி. பிரகதாரண்ய வுபநிடதத்தில் ஜனகரைக் குறித்து யாஞ்ஞவற்கமகரிஷியானவர் சச்சிதானந்தத்தைத் தவிர வேறே யன்னியமொன்றுங் காணப்படவுமில்லை கேட்கப்படவுமில்லை ருசிக்கப் படவுமில்லை யென்றும், பிரமத்துக்கு அன்னியமானவஸ்து ஒன்றுமில்லையென்றும் தொய்தத்தை நிஷேதித்திருக்கிறார். ஆதலால், பிரமத்தில் கற்பிதமான ஜெகத்தைப் பொய்யென்றறி. பிரமத்துக்கன்னியமெல்லாங் கற்பிதமானதால், பிரமம் சதா அத்துவிதம், சங்கற்ப விகற்ப சூனியம், நிருபாதிகம், நிருமலம், நிரந்தரானந்தகனம், நிரதிசயமாயிருக்கின்ற சொரூபம் ஒன்றென்றறி. ஆதலால், இந்தப் பிரமத்தைத்தவிர வேறே யன்னியமா யொருவத்துவுமில்லை. குணத் தோற்றரவுமில்லாமல் வாக்குப்பிரவிர்த்தியு மில்லாமல் மனப்பிரவிர்த்தியுமில்லாமல் கேவலமாய்ச் சாந்தமாய் அனந்தமாய் ஆனந்தமாத்திரமாய்ச் சதா அத்தொய்தமாய்ப் பிரமமாத்திரமிருக்கின்றதென்றறி. வாராய் சீடனே! இப்போதுனக்குச்சொன்ன தத்துவமான சத்திய சச்சிதானந்தாத்மக ஜராமரணமற்ற நித்திய வஸ்து எதுவோ அதுவே நீயானாய். நம்முடைய வசனத்தைச் சத்தியமாக வெண்ணிக்கொள். நீ அன்னமயகோசமான தூலதேகமுமல்ல, பிராணனுமல்ல, இந்திரியங்களுமல்ல, வாக்குமல்ல, மனதுமல்ல, புத்தியுமல்ல, அகங்காரமுமல்ல, இந்தத் தேகேந்திரியாதி கூட்டுறவுமல்ல. ஆதலால், அந்தத்தேகேந்திரிய மனோபுத்தி யகங்காராதிகளெல்லாவற்றையுந் துலக்குவித்துக்கொண்டு அவைகளுக்கெல்லாஞ் சாட்சியாயிருக்கிற யாதொரு சுயம்பிரகாசமான வஸ்துவுண்டோ; அதுவே நீயானாய். உலகத்தில் யாதொருவஸ்து பிறக்கின்றதோ அந்த வஸ்துவே விர்த்தியடைகிறதும் காலம் வந்தபோது அழிந்துபோகிறதுமாயிருக்கும். உனக்குப்பிறப்பும் இறப்புமில்லை. இந்தப் பிறப்பிறப்பு இரண்டுமில்லாததால் நீ நித்தியனாமென்றறி. இந்தத்தேகமானயாதொன்றுபிறந்ததோ அதுவே விர்த்தியடைந்து கர்மக்ஷயத்தினால் நாசமடையும். நீயே இந்தப் பிறப்பு வளர்ப்பு முதலாகிய அவத்தைகளிலிருக்கிறாய்; இருந்தும், இந்த அவத்தைகளெல்லாமறிந்து கொண்டிருக்கிற அறிவாகிய சாட்சியே யானாய்.

சுயம் பிரகாசமாய்ச் சகலாத்மகமாகியுஞ் சாக்கிராதி அவத்தை களிலும் அகம் அகமென்றழியாம லனுபவிக்கப்பட்டு விளங்கியும் புத்திமுதலான சமஸ்தவிகாரங்களினும் அவிகாரமாயிருந்துகொண்டு அந்த விகாரங்களையறிந்துவருகிற பிரமமெதுவோ அந்தக்கேவல ஞானமாத்திர சொரூபமே நீயாளுய். உள்ளும்புறம்புங்கண்ட ஞான மெதுவோ அதுவே மூடபுத்தியுள்ளவர்களுக்கு ஆரோபிதமாய் நாமரூபப் பிரபஞ்சம்போலக் காணப்படுகின்றது.

வினு:—அஃதெப்படி?

விடை:—மிருத்திகையே கடகலசாதிகள் போலவிருந்தும்விசாரிக்கிறபோது அந்த மிருத்திகை நிர்விகாரமாயிருக்கிற தெப்படியோ அப்படியே சகல விகாரங்களுமற்றுத் தன்னிலேகாணப்பட்டுக்கேவலபோதமாத்திரமான யாதொருபிரமமுண்டோ அதுவே நீயாளுய். அழிவில்லாதபடி சுத்தஞானமாகிய ஆன்ம சொரூபத்தினிடத்தில் கற்பிதமான ஆகாசாதி பஞ்சபூதங்களுக்கெல்லாஞ் சிரத்தையைக் கொடுத்துக்கொண்டு தன்னுடைய பிரகாசமகிமையினுல் சகலத்தையுமறிந்துகொண்டு கேவல ஞானமாத்திரமான பிரமமெதுவோ அதுவே நீயாளுய். நிருமலமான அந்தக்கரணத்தைப் பொருந்தித் திடசமாதியிலிருக்கும் பெரியவர்களாலுங்கரைகாணப்படாதிருக்கிற ஆனந்தத்தைப் பிரத்தியட்சமாகக்கண்டுபரமாம்சக்கூட்டங்களினுல் சந்தோஷப் பட்டிருக்கிற கேவலஞானமாத்திரமான பிரம சொரூப மெதுவோ அதுவே நீயாளுய். சுருதியில் அவ்வியமென்றும், அபார மென்றும், அனந்தமென்றும், அமித்தியமென்றும், அவ்வியத்த மென்றும், அட்சரமென்றும், அனுசிரயமென்றும், அப்பிரமேய மென்றும், ஆனந்தமென்றும், சற்கனமென்றும், அனுமயமென் றும், அத்தொய்தமென்றுஞ் சொல்லப்பட்டகேவலபோத மாத்திர மானபிரமமெதுவோ அதுவே நீயாளுய். வாராய் சீடனே! சொரூப மாகிய உன்னிடத்தில் சரீரக் கூட்டுறவும் அந்தச் சரீரத்தி னுடைய தொழில்களும் பிராந்தியினுலே யாரோபிக்கப்பட்டிருக் கின்றன; பரமார்த்தமாய் விசாரிக்குமிடத்தில் இவ்வாரோபங்க ளெள்ளளவு முன்னிடத்திலில்லை. ஆதலால், உன்னைப்பிராணனுகப் பார்த்துக்கொண்டு மிருத்தியுவினுடைய பயத்தைவிட்டுவிடு. பிராந் தியினுலே யாரோபிக்கப்பட்ட தேகாதிப் பிரபஞ்சங்களைப் பிரபஞ்சமாகத்தானே பார்த்த பிராந்தியைத்தள்ளி வஸ்து திரு ஷ்டியாய்ப் பார்க்குமிடத்தில் அந்த வஸ்துவே நீயாளுய். உன்

னைத்தவிர வேறே அன்னியமான வஸ்து உலகத்திலே லேசமு மில்லை. ஆதலால், அத்தொய்தனு யிருக்கிறவுனக்குப் பயமென்ன? இந்தச் சகலப் பிரபஞ்சமும் பிரம சொரூபமாயிருக்கிற நானே யென்று பார்க்கிறவனுக்குப்பயமெங்கிருந்து வரப்போகிறது? ஆகை யால், கேவலானந்தலட்சண அபயரூபமான பிரமமே நீயானுய். நிட் களமாகவும், நிட்கிரியமாகவும், சாந்தமாகவும், சத்தாகவும், அத் தொய்த மாகவுமிருக்கிற பிரமமே நீயானுய். ஞாதுரு ஞானஞேய மல்லாததாகவும், ஞாதாவுக்கு அபின்னமாகவும், அகண்ட ஞான மாகவும், அறியப்பட்ட தறியப்படாததென்கிற விரண்டுமில்லாததா கவுமிருக்கிற யாதொரு சுத்தபோதமுண்டோ அதுவே நீயானுய். அந்தர்ப்பிரக்ஞை பகிர்ப்பிரக்ஞை யென்னும் சொற்களுக்கெட்டாத தாகவும், பிரத்தியகான்ம சொரூபமாகவும், சுயம்பிரகாசமாத்திரமா கவும், ஆகாசம்போல நிர்விகாரமாகவும், சத்தாமாத்திரமாகவும், சமரசமாகவும், ஏகமாகவுமிருக்கிற யாதொரு சுத்தபோதமுண்டோ அதுவே நீயானுய். சர்வாகாரமாகவும், சர்வ மல்லாததாகவும், சர் வத்திற்கு மப்பாற்பட்டதாகவும், சாசுவதமாகவும், சத்திய மாகவும், ஏகமாகவுமிருக்கிற யாதொரு சுத்தபோதமுண்டோ அதுவே நீயா னுய். நித்தியானந்த அகண்டைகரசமாகியும், நிட்களமாகியும், நிட் கிரியமாகியும், பிரத்தியக் அபின்னமாகியும், அவியத்தமாகியுமிருக் கிற யாதொரு சுத்தபோத முண்டோ அதுவே நீயானுய். ஆத லால், நிர்க்குணமாகியும் நிர்விகற்பமாகியுமிருக்கிற பிரமமே நானெ ன்று அகண்டாகார விருத்தியோடுகூடிப் பிரமத்தினிடத்தில் நிட்கிரியனுய் சுகத்திலேயிரு. அப்பா! தொய்தத்தோற்றா வைத் தள்ளுகிறதாயும், பரமானந்தலாகரியைக் கொடுக்கிறதாயும், நிர்மலமாயும் இருக்கிற அகண்டாகாரசுகவிருத்தியை உவமையில் லாத பிரமானந்த பரமசுகத்தில் அகோராத்திரமுஞ் செலுத்திக் கொண்டு பிராரத்தத்தினுல் வருகிற போகங்களைப் புசித்துக் கொண்டு சுகத்திலேயிரு. வாராய் சீடனே! பிரமானந்தரசத்தை யருந்தின சந்தோஷபுத்தியினுலே ஏகாக்கிரசித்தனுயிருந்து கொண்டு சதாகாலமும் சமாதிநிஷ்டனுய் மனனசீலனுய்ச் சுகமா யிரு.

வினு:—என்றிப்படிச்சொன்ன குருவை நமஸ்காரம்பண்ணிச் சுவாமி! இந்த மகாவாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தினுல் புருஷ னுக்கு அகண்டாகாரவிருத்தி பிறக்குமோ? அல்லது அவன் ஒரு தொழில் யபேட்சிப்பானே? சமாதியாவதென்ன? அஃதெத்தனை

விதம்? அந்தச்சமாதி சித்திக்கும் பொருட்டுச் செய்யவேண்டிய சாதனமென்ன? அதற்கு விகாதமென்ன? இவைகளை யெனக்குத் தெரியும்படி அனுக்கிரகம்பண்ணவேண்டும்?

விடை:—அப்பா! இப்போது நீகேட்கின்ற சமாதி முக்கிய மென்றும் கௌணமென்று மிருவகையாம். அதிகாரிகளும் முக்கியாதிகாரியென்றுங் கௌணாதிகாரியென்று மிரண்டுவிதமாயிருப் பர். இந்த முக்கியகௌணாதிகாரிகளுடைய விவேகானுசாரமாக அகண்டாகாரவிருத்திபிறக்கும்.

வினா:—இவ்விரண்டதிகாரிகளுள் முக்கியாதிகாரி யாவன்?

விடை:—எந்தப் புருஷன் சிரத்தாபத்தியுடன் விகித கர்மத்தினால் ஈசுவரனைச் சந்தோஷிப்பித்து அந்தப்புண்ணிய பலத்தினால் சம்பாதிக்கப்பட்ட மகிமையைக்கொண்டு நித்தியா நித்திய விவேக தீவிர வைராக்கிய சந்நியாசாதி சாதனங்கள்செய்து சற்புருஷர்களுக்குச் சம்மதமாகச் சிரவணத்தைப்பண்ணுகிறானோ அவனே முக்கியாதிகாரியாவன்.

வினா:—இனிக் கௌணாதிகாரி யாவன்?

விடை:—அத்தியாரோப அபவாதக் கிரமத்தையனுசரித்திருக்கிற ஆன்மாவையறிந்த தேசிகோத்தமனால் வாக்கியார்த்தம்போதிக்கப் பெற்று அந்தப் போதனார்த்தத்தினாற்பிறந்த சுத்த புத்தியோடேகூடி நித்தியமாயும், ஆனந்தமாயும், அத்தொய்தமாயும், உபமானமில்லாததாயும், ஏகமாகியுமிருக்கிற பிரமம் நானென்று அனுபவித்துக் கொண்டிருக்கிறவனெவனோ அவனே கௌணாதிகாரி யாவன்.

இனி அகண்டாகார விருத்தியானது சிதாபாசனோடேகூடிப் பிரத்தியகான்மாவுக்கு அபின்னமாயிருக்கிற பரப்பிரமத்தைத் தானே விஷயீகரித்து அதனாற்பிறந்தஞானப் பிரகாசத்தினால் ஆவரணலட்சணமான அஞ்ஞானத்தை நாசமடையப்பண்ணுவிக்கும். இந்த அகண்டாகார விருத்தியினால் அஞ்ஞானம் நாசமடைகிற போது அஞ்ஞானகாரியமான தேகாதிப்பிரபஞ்சமும் நசித்துப் போம்.

வினா:—அஃதெப்படி?

விடை:—படத்துக்குக்காரணமான நூல்வெந்துபோகிறபோது புடவைக்கெப்படி நாசங்காணப்பட்டிருக்கின்றதோ அப்படியே

காரணமான மூலாஞ்ஞானத்துக்கு நாசம்வருகிறபோது காரியமாயிருக்கிற தேகாதிப் பிரபஞ்சத்துக்கும் நாசம்வருமென்றறி. தீபப்பிரபையானது சூரியனை யெப்படி துலக்குவிக்க மாட்டாதோ அப்படியே அந்தக்கரண கற்பிதனான சிதாபாசன் சுயம்பிரகாசமாயிருக்கிற பரப்பிரமத்தைத் துலக்குவிக்கமாட்டான்.

வினா:—அஃதேன்?

விடை:—பிரசண்டகிரணங்களுடன்கூடிய சூரியன் பிரகாசிக்கின்றபோது தீபப்பிரபையானது தன்னுடைய வொளி மழுங்கி அந்தச்சூரியக்கிரணத்தில் எப்படி அடங்கிப்போகிறதோ அப்படியே சிதாபாசனும் பரப்பிரமப் பிரகாசத்தினால் தன்னுடைய பிரகாச மழுங்கித் தானும் உபாதியோடுகூட மலினமாய்ப்போவதால் ஆன்மாவைத் துலக்குவிக்கமாட்டான். ஆதலால், பிம்பபூதமான பரப்பிரமமே சேடித்திருக்குமென்றறி. உபாதியான அந்தக்கரணம் போகிறபோது அதிற்பிரதிபிம்பித்த ஆபாசனும் அதிட்டான மாத்திரமாயிருப்பன்.

வினா:—அஃதெப்படி?

விடை:—முகத்துக்கெதிராகக் காண்பித்த கண்ணாடியை யெடுத்துவிடும்போது அந்தக்கண்ணாடியிற் பிரதிபலித்துள்ள ஆபாச முகமானதொழிந்து யதார்த்த முகமாயிருக்கிறதெப்படியோ அப்படியே உபாதியழிகிறபோது அதிற் பிரதிபிம்பாபாசனும் அதிட்டான மாத்திரமாயிருப்பனென்றறி.

வினா:—இந்தச் சிதாபாசனானவன் அந்தக்கரண விருத்தியிற் கூடிவெளியிலிருக்கிற கடத்தையறிகிறபோது அந்தக்கடாஞ்ஞானத்தைப்போக்கிக் கடத்தைத்துலக்கு விக்கின்றதுபோல உள்ளேயிருக்கிற சுயம்பிரகாசமான பிரத்தியகான்மாவைத் துலக்குவிப்பானோ?

விடை:—சிதாபாசனானவன் பலவியாப்தியானதாற் பிரத்தியகான்மாவைத் துலக்குவிக்கமாட்டான். ஆதலால், பிரத்தியகான்மாவை யறிகிறதற்கு அந்தக்கரணவிருத்தி வியாப்திக்கவேண்டுமே தவிரப் பலமான சிதாபாசவியாப்திவேண்டியதில்லை. சுருதிகளிலும் மனதினால் அறியப்படாதென்று பலவியாப்தியும் சொல்லப்பட்டிருப்பதால் நன்றாய்ப்பகுத்தறிந்து சூட்சுமபுத்தியினாற் பிரமத்தையறியவேண்டும். எவன் பிரஞ்ஞாமந்தனாயிருக்கிறானோ அவனுக்குச் சுருதியைக் கேட்டமாத்திரத்தினால் அகண்டாகாரவிருத்தி

பிறக்கமாட்டாது. சிரவண மனன நிதித்தியாசனங்கள் யாதொருத்தன் நிரந்தரஞ்செய்து வருகிறானோ அவனுக்கே புத்தி சூட்சுமமாகும்; அதனால், அவன் சூட்சுமவஸ்துவையறிந்துகொள்வான். ஆதலால், பிரஞ்ஞாமந்திகளாயிருக்கிறவர்கள் பரப்பிரமவஸ்துவை நன்றாய் அறிகிறதின் பொருட்டுச் சிரவண மனன நிதித்தியாசனங்களைச்செய்யவேண்டும்.

### ஷட்லிங்கதாற்பரியம்.

வினா:—அஃதேதன்?

விடை:—சகலவேதாந்த வாக்கியங்களுக்குஞ் சத்தாகவும் அத்தொய்தமாகவுமிருக்கிற பரப்பிரமத்தினிடத்தில் ஷட்விதலிங்கங்களால் தாத்பரிய நிச்சயம்பண்ணுவதே சிரவணமென்று சொல்லப்படும்.

வினா:—அவை யாவை?

விடை:—உபக்கிரமம் உபசங்காரமென்னுமிரண்டுமொரேலிங்கம்; அப்பியாசமிரண்டாம் லிங்கம்; அபூர்வதை மூன்றும் லிங்கம்; பலம் நான்காம் லிங்கம்; அர்த்தவாதம் ஐந்தாம்லிங்கம்; உபபத்தி ஆறும் லிங்கமென்று அவை சொல்லப்படும்.

வினா:—இவற்றுள் உபக்கிரமம் உபசங்கார மென்பவை யாவை?

விடை:—உபக்கிரமமாவது சச்சிதானந்த அகண்டமாயிருக்கிற பரப்பிரம சொரூபத்தினிடத்தில் அத்தியாரோபமாக இந்தச் சகல பூத பிரமாண்ட பிண்டாண்டங்களாகிய ஜெகத்துண்டாயிற்று; இந்த ஜெகத்துச் சிருஷ்டியாகிறதற்குமுன் பிரமம் சத்தாமாத்திரமாகவே யிருந்ததென்று பிரதிவாதிக்கிறதும், உபசங்காரமாவது இந்த உற்பத்தியான சகல ஜெகத்தும் அபவாதக்கிரமமாயொடுங்குகையாலிதிற்பிரமாண்ட பிண்டாண்டமென்கிற உபாதியிற்கூடஸ்த பிரமங்களுக்கு அந்தஉபாதியையொழித்துவேகத்துவ (ஐக்கிய)த்தைக் கூறுகிறதுமாம்.

வினா:—அப்பியாசமாவது யாது?

விடை:—சாந்தோக்கியோபநிஷத்து நீயே பரப்பிரமம் நீயே பரப்பிரமமென்று ஒன்பது பிரகாரமாக வுபதேசிக்கையாலும்அதுவே தன்னைக்கூட்டிச் சொல்வதாலும் சேதனனுடைய சொரூபத்துக்கே அத்துவைத ஆன்மத்துவம் போதிப்பதாலும் அவ்வாறு போதிப்பதே அப்பியாசமென்று சொல்லப்படும்.

வி:—அபூர்வதையாவது யாது?

விடை:—ஆன்மலட்சணம், அஷ்டப் பிரமாணங்களுள், உபநிஷதப்பிரமாணத்தினாலன்றி இதரப் பிரமாணங்களினால் அறியப்படாதென்பதே அபூர்வதையாம்.

வி:—பலமாவது யாது?

விடை:—இந்த ஜெகத்தாதி சகல வஸ்துக்களிலும் ஒரு வஸ்துவை யறிந்த மாத்திரத்தினாற் சகலமுமிப்படியே யிருக்குமென்றறிவதுபோல ஆத்மஞானத்தை யறிந்த மாத்திரத்திலிந்தச் சகல பிரமாண்ட பிண்டாண்டங்களிலும் தானாய் விளங்காநின்ற பிரமம் நாமே; நாமே சகலாத்ம சொரூபமாய் விளங்குகிறோம். இந்தத் தேகேந்திரியாதி சகல ஜெகத்தும் பிராரத்துவமிருக்கையால் ஆரோபமாகத்தோற்றுகிறது. அந்தப் பிராரத்துவத்திற்கு நிச்சயமாக நாசமெப்போதுவருகின்றதோ அப்போது ஜெகம் சர்வாத்துமனாத் (முற்றும்) தோற்றாமல் அத்தொய்தாத்துமக சொரூபமாக விருக்குமென்று பிரதிபாதிக்கிறதே பலமாம்.

வி:—அர்த்தவாதமாவது யாது?

விடை:—எந்தவஸ்துவைக் கேட்டதினால் கேள்விக்கெட்டாத வஸ்து கேட்கப்படுகின்றதோ எந்தவஸ்துவை மனனம் பண்ணினதினால் மனனம்பண்ணப்படாதவஸ்து மனனம் பண்ணப்படுகிறதோ எந்த வஸ்துவையறிந்த மாத்திரத்தினால் அறியப்படாதவஸ்து அறியப்படுகிறதோ அதுவே பஞ்சகர்த்திருத்துவத் தொழில்களுக்கும் ஆதாரமாய் விளங்குகின்றதென்று சொல்லுகிறதே அர்த்தவாதமாம்.

வி:—உபபத்தியாவது யாது?

விடை:—கடத்துக்கு மண்ணும் பட்டுநூற்குக் கோசகாரப்புழுவும் ஆபரணத்துக்குப் பொன்னும் ஆயுதாதிகளுக்கு இரும்பும் எப்படிக்காரணமாயிருக்கின்றனவோ அப்படியே தோற்றப்பட்ட சகல ஜெகத்துக்கும் பிரமமேகாரணமென்று செகத்துக்கும் பிரமத்துக்கும் அபின்னத்துவம் பிரதிபாதிக்கின்றதே உபபத்தியென்று சொல்லப்படும்.

இப்படி வேதாந்தவாக்கியங்களினாற் சிரவணம் பண்ணப்பட்ட அத்துவைதமான பிரத்தியகான்மவஸ்துவை யனுகூலமான யுத்திகளினால் அளவிட்டு நிச்சயிக்கின்றதே மனனமென்றும்,

விசாதிகமான தேகேந்திரியாதிகளைத்தள்ளிச் சுசாதிகமான அகண்டாகார விருத்தியோடேகூடி, மாலையினுச்சியில்விட்ட தயிலதாரை போன்று,இடைவிடாமல் அகண்டாகாரவிருத்தியோடுகூடி நிரந்தரந் தியானம்பண்ணுகிறதே நிதித்தியாசனமென்றும் சொல்லப்படும். எவனுக்குச் சிரவணத்திலுற் சம்சயமெவ்வளவுகாலம்வரை தீரவில்லையோ அவ்வளவுகாலம்வரை அவன் சிரவணம்பண்ணவேண்டும். சிரவணம்பண்ணி நிச்சயித்தசொரூபத்தில் சம்சய மெவ்வளவுகாலம் வரை தீரவில்லையோ அவ்வளவுகாலம்வரை யுக்தி தருக்க அனுமானங்களினுல் மனனம்பண்ணவேண்டும். தேகமே நானென்னும் விபரீத பாவனையானது மனதில் எவ்வளவுகாலம்வரைநாசமடையவில்லையோ. அவ்வளவு காலம்வரை மோட்சம்வேண்டுமென் றிச்சித்தவன் நிரந் தரந் தியானம்பண்ண வேண்டும். அபரோட்ச சாட்சாத்காரத்தில் குதர்க்கங்களுடன்கூடின கிரியைப் பிரபஞ்சமானது எந்தமட்டும் நாசமடையவில்லையோ அந்தமட்டும் அஞ்ஞானம் நீங்காது. ஆதலால், மோட்சத்திலே யிச்சையுள்ளவன் தியானசமாதிகளை அவசியம் செய்யவேண்டும்.

வினு:—தியானசமாதியாவ தென்ன?

விடை:—அது சவிகற்பசமாதியென்றும் நிர்விகற்ப சமாதியென்றும் இரண்டுவிதமாகவிருக்கும். அவற்றுள் சவிகற்ப சமாதி லட்சணத்தை முந்திச்சொல்லுகிறேம் கேட்பாயாக.

வினு:—சொல்லல்வேண்டும்?

விடை:—ஞாதுரு ஞான ஞேயங்களான திரிபுடிக்கு லயம் வாராமல் ஞேயமாகிய கேவல பரப்பிரமவஸ்துவினிடத்தில் நிலைத்ததான பிரமாகாரமாயிருக்கிற சித்தவிருத்தியே சவிகற்ப சமாதி யென்று பெரியவர்களால் அறியப்பட்டிருக்கின்றது. ஆதலால், அந்த ஞாதுரு ஞான ஞேயமாயிருக்கிற திரிபுடியும் ஞேயமாத்திரமாயிருக்கிற சத்தாகிய பரப்பிரமத்தினிடத்தில் அசத்தாய் விளங்குகின்றது.

வினு:—அஃதெப்படி?

விடை:—மிருத்திகையினுல் பண்ணப்பட்ட பானையானது மிருத்திகையாயிருந்தும் பார்க்கிறவர்களுக்குப் பானையென்றெப்படி தோற்றுகின்றதோ அப்படியே ஞாதுரு ஞான ஞேயமான திரிபுடியுஞ் சன்மாத்திரமான பரப்பிரமவஸ்துவினிடத்தில் சன்மாத்திரமாகவே விளங்குகின்றது. ஆதலால், இப்போது சொல்லிய

சமாதி சவிகற்பமென்று சொல்லப்படும். இதற்குமேல் ஞாதுரு ஞான ஞேயமான திரிபுடியுமொழிந்து ஞேயமாத்திரமான பரப்பிரமசொரூபந் தானனதே மனதுக்கு நிர்விகற்பமானதால் அது நிர்விகற்பசமாதியென்று சொல்லப்படும்.

### சட்விதசமாதிலட்சணம்.

வினு:—அஃதெப்படி?

விடை:—சலத்திற்கலாந்த லவணமானது வேருகாமல் சலமாத்திரமாயானதுபோலப் பிரமாகாரமான விருத்தியானது பிரமமாத்திரமாக நிலைத்தபின்பு அத்தொய்தப் பிரமமாகவே காண்கிறதினலும் ஞாதுரு முதலான விகற்பங்களில்லாததாலும் நிர்விகற்பமென்று சொல்லப்படும். விருத்தியினுடைய பாவாபாவங்களிரண்டுக்கும் பேதங்காணப்பட்டிருக்கிறது. அதுவன்றியும் விருத்தி அபாவம் சமாதி சுழுத்தியிரண்டிலுஞ் சமமாய்க் காணப்பட்டாலுஞ் சுழுத்தியில் அஞ்ஞானங் காணப்பட்டிருக்கின்றது; சமாதியில் அது காணப்படுதலின்று. ஆதலால், அஞ்ஞானமும் அஞ்ஞானத்தினல் உண்டான விபரீதபாவனையும்போக்கவேண்டி முமுட்சுவானவன் இந்தச்சவிகற்ப நிர்விகற்ப சமாதியிரண்டையும் பிரயத்தனம்பண்ணிச்சாதிக்கவேண்டும். இந்த இரண்டு சமாதியும் சாதிக்குமளவில் விபரீதபாவனை நிவிர்த்தியாய்ச் சொரூபஞானத்துக்கு ஒரு விக்கினமுமில்லாமல் சதா சொரூபானந்தஞ் சித்திக்கும். இந்தச் சமாதி: அந்தர்திரிசியானுவித்த சவிகற்பம், அந்தர்சத்தானுவித்த சவிகற்பம், அந்தர் நிர்விகற்பம், பகிர்திரிசியானுவித்த சவிகற்பம், பகிர்சத்தானுவித்த சவிகற்பம், பகிர்நிர்விகற்பம் என ஆறு வகைப்படும். அவற்றுள் முதலில் அந்தர் திரிசியானுவித்த சவிகற்பத்தைச்சொல்லுகிறேம் கேட்பாயாக.

### (1) அந்தர் திரிசியானுவித்தம்.

வினு:—அஃதெப்படி?

விடை:—சுயம்பிரகாசமானஅறிவைத் திரிசியங்களான காமக்குரோதாதி விருத்திகளோடேகூட்டி அந்த விருத்திகளுக்குச் சாட்சியாகவிருக்கிற சொரூபானுசந்தானமே திரிசியானுவித்த சவிகற்ப சமாதியென்று சொல்லப்படும்.

வினு:—அஃதேன்?

விடை:—நானெனக்கென்னும் காமக்குரோத விருத்திகளெந்த அறிவினால் காணப்படுகின்றனவோ அந்த அறிவுக்கு அகங்காரமுதலான காமாதிகள் திரிசியமாமென்றறி. இந்தக்காமாதி சகல விருத்திகளையும் அவிகாரியாகப்பார்க்கிற சாட்சியான தன்னைப் பார்க்கிறவன் நிட்கிரியனாகவேயிருப்பான். காமாதி விருத்திகளுக்கெல்லாம் நான் சாட்சி, என்னால் இந்த விருத்திகள் காணப்படுகின்றனவென்று தன்னைச்சாட்சியாக அறிந்தவன் சாட்சியாகவேயிருப்பான். திரிசியமாகவிருக்கிற சகல தேகாதிப்பிரபஞ்சத்தையும் ஆன்மாவாயிருக்கிற தன்னிடத்திலே லயம்பண்ணவேண்டும்.

வினா:—இதற்கனுபவம் யாது?

விடை:—தேகம் நானல்ல, இந்திரியம் நானல்ல, பிராணன் நானல்ல, அகங்காரமனோபுத்திகளும் நானல்ல இந்தத் தேகேந்திரியப் பிராண மனோபுத்தியகங்காராதி விகாரங்களுக்கெல்லாம் அப்பாற் பட்டுச் சாட்சியாய் நித்தியனாயிருக்கிற பிரத்தியகான்மாவே நானானேன்; வாக்குக்குச் சாட்சியாகியும், பிராணவிருத்திக்குச்சாட்சியாகியும், புத்திவிருத்திக்குச் சாட்சியாகியும், சட்சு சுரோத்திராதியிந்திரியங்களுடைய கிரியைகளுக்குச் சாட்சியாகியும், நித்தியமாகியுமிருக்கிற பிரத்தியகான்மாவே நானானேன்; நான் ஸ்தூலமுமல்ல, நீண்டவனுமல்ல, குறுகினவனுமல்ல, பாலனுமல்ல, யௌவனனுமல்ல, விருத்தனுமல்ல, ஊமையுமல்ல, மூக்கறையனுமல்ல, நொண்டியுமல்ல இவைகளுக்கெல்லாஞ் சாட்சியாய்ச் சத்தியமாயிருக்கிற பிரத்தியகான்ம சொரூபமே நானானேன்; நான் வந்தவனுமல்ல, போனவனுமல்ல, கொன்றவனுமல்ல, கொல்லப்பட்டவனுமல்ல, கர்த்தாவுமல்ல, சொல்லுகிறவனுமல்ல, சொல்லப்படுகிறவனுமல்ல, சுகியுமல்ல, துக்கியுமல்ல இவைகளுக்கெல்லாஞ் சாட்சியாயிருக்கிற பிரத்தியகான்மாவே நானானேன்; நான் யோகியுமல்ல, வியோகியுமல்ல, ராகியுமல்ல, காமியுமல்ல, குரோதியுமல்ல, லோபியுமல்ல, பந்தனுமல்ல, முத்தனுமல்ல இவைகளுக்கெல்லாஞ் சாட்சியாயிருக்கிற பிரத்தியகான்மாவே நானானேன்; நான் உட்பிரஞ்ஞனுமல்ல, வெளிப்பிரஞ்ஞனுமல்ல, பிரஞ்ஞனுமல்ல, அப்பிரஞ்ஞனுமல்ல, சிரவணப்படுகிறவனுமல்ல, மனனப்படுகிறவனுமல்ல, அறியப்படுகிறவனுமல்ல இவைகளுக் கெல்லாம் சாட்சியாய் நித்தியனாயிருக்கிற பிரத்தியகான்மாவே நானானேன்; எனக்கிந்தத் தேகேந்திரியாதிகளின் கூட்டுறவுமில்லை, புண்ணியபாவலேசமுமில்லை, பசிதாக

முதலான சரீரங்களுக்கும் அப்புறப்பட்டுச் சதா விமுத்தமான கேவலசித்துரூபமேநானேனென் என்றிப்படி தன்னுடைய சொரூபத்தைத் தானேகண்டுகொண்டு காணப்பட்டதிரிசியத்தையெல்லாந் தன்னிலே லயம்பண்ணிக்கொண்டு பிராந்தியினால் தன்னிடத்தில் காணப்பட்ட சுபாவீகமாக விபரீத பாவமானதை வித்துவானயிருக்கிறவன் விட்டொழிவான்.

வினா:—அஃதெப்படி?

*விடை:—தேகத்துக்கு விபரீத பாவமாகிய சுயம்பிரகாச ஆன்மப்பிரகாசமே முத்தியென்று சொல்லப்பட்டிருப்பதால், சதாகாலமும் மனதையடக்குகிறவனுக்கே யிந்தச் சமாதி சித்திக்கும்; இல்லாவிட்டால்சித்தியாது.ஆனதால்,சதாகாலமும்மனதையொடுக்கவேண்டும். அப்படிக்கின்றி யெந்தவேஷத்தினாலும் எந்த பாஷையினாலும் இந்த அகண்டசச்சிதானந்த ஆத்துமானுபவநிலைசித்திக்கமாட்டாது. அது வருகிறதின்பொருட்டுச் சச்சிதானந்தமான தன்னிடத்தில் அகங்காரங்களையும் அகங்காரங்களுடைய விகாரங்களையும் நிவிர்த்தி பண்ணவேண்டும். எந்தப் புருஷன் ஆன்மதத்துவத்தை யவலம்பித்துக்கொண்டு பிரகிருதியை நாசம்பண்ணுகிறானே அவனே முத்தனாவான். அஃதன்றிக் கோடிகர்மங்களைப் பண்ணினாலும் முத்தனாகமாட்டான். சுவேதாசுவதர வுபநிஷதத்தில் சுயம்பிரகாசமான ஆத்மாவை யறிந்தவன் சகல அஞ்ஞானபாசங்களையும்அறுத்துச்சென்மமிருத்துக்களான சகல கிலேசங்களையும் விட்டொழிவானென்று சொல்லப்பட்டிருப்பதால் சகலகிலேசங்களையும் விட்டொழிகிறதே சென்ம மொழிகின்றதற்கேதுவாம். ஆனதால், அந்த நிலைமையே ஜீவன்முத்தியென்று சொல்லப்படும். முத்தியென்பது திரும்பச் செனனமில்லாமலிருக்கிற தாகையால் அந்தச் செனனமின்மையுங் கிலேசங்களொழிகிறதினால் சித்திக்கும். கிலேசங்களின் நாசம் ஆத்துமநிட்டையினாற் சித்திக்கும். ஆதலால் முமுட்சுவானவன் ஆத்துமநிட்டையைச் சதாகாலமும் செய்யவேண்டும். எந்த மனுஷனுக்குஞ் சென்மத்துக்குக் காரணமானது கிலேசவாசனையே தவிர பிறிதொன்றன்று. ஆகையால், அந்தவாசனாரூபமாகிய கிலேசங்களை ஞானநிஷ்டையாகிற அக்கினியினால் தகித்துப்போடும்போது அந்தவாசனைகள் சென்மத்துக் கேதுவாகமாட்டா.

வினா:—அஃதப்படி?

விடை:—அக்கினியினால் வறுத்தவித்தானது முளைக்கின்றதற் கேது வெப்படியாகமாட்டாதோ அப்படியே ஞானக்கினியினால் தகிக்கப்பட்ட வாசனரூபமான கிலேசங்கள் புனர்ஜென்மத்திற் கேதுவாகமாட்டா. ஆகையால், முமுட்சுவானவன் அசேஷ வாசனுட்சயமாய் விபரீதபாவனை நிவிர்த்தியாகும்பொருட்டுப் பிர யத்தனம் பண்ணியாகிலும் ஞானநிஷ்டை செய்யவேண்டும். இந்த ஞானநிஷ்டா பரனாயிருக்கிற புருஷனுக்குக் கர்மங்களைச் செய்யக் கணக்கில்லை. கர்மத்திற்கும் ஞானத்திற்கும் ஒன்றாய்க் கூட்டுறவு சித்தியாது. இப்படி ஒன்றற்கொன்று கூட்டுறவில்லாததால் பின்ன சுபாவங்களாயிருக்கிற கர்மஞானங்களுக்கு ஐக்கியங்கூடாது.

வினா:—ஏன் கூடாது?

விடை:—தேகாத்தும புத்தியோடேகூடின கர்த்திருத்துவ பாவனை யுடையது கர்மம்; அந்தக் கர்த்திருத்துவபாவனையைக் கெடுப்பது ஞானம்; கர்மம் அஞ்ஞானத்திற்கு மூலம். ஆகையால், அந்தக் கர்மாஞ்ஞானங்களைக் கெடுக்கிறதே ஞானம். ஆதலால், ஒன் றுக்கொன்று மாறாயிருக்கிற ஞானகர்மங்களுக்கு ஐக்கிய மெப்படி சித்திக்கும்? தேஜசுதிமிரங்களுக்கும் கண் இமைத்து விழிக்கிறதற்கும் எப்படி கூட்டுறவில்லையோ அப்படியே ஞானகர் மங்களுக்குங் கூட்டுறவில்லை யென்றறி. மேற்குமுகம் பார்க்கிறவ னுக்குக் கிழக்குமுகம் பார்க்கிறதற் கெப்படிகூடாதோ அப்படியே அந்தர்முகமான ஞானநிஷ்டையைப் பொருந்தினவனுக்குக் கர்மத் தினிடத்தில் எப்படி யோக்கியமுண்டாகப் போகின்றது? ஆதலால், ஞான நிஷ்டா நிரந்தரனாயிருக்கிற முமுட்சுவுக்குக் கர்ம தந்திரத் தொழிலில் அவகாசமில்லை.

வினா:—பின்னெதினால்?

விடை:—ஞானநிஷ்டையே கர்மம்; ஞானநிஷ்டையே சந்தியா வந்தனம்; ஞானநிஷ்டையே சகலகர்மமும்; ஞானநிஷ்டையைத் தவிர வேறேயொரு கிருத்தியமுமில்லை. மனோவாக்குக்காயங்களி னால் சாதிக்கப்படுகின்ற கர்மமெதுவோ அஃது அசத்தானதால் சுத் தப்பொய்யென்று சகலகிரியைத்தையு மொழித்துத்திருக்காகிய சிற் சொரூபமான நிலையெதுவோ அதுவே சந்தியாவந்தனம், அதுவே அனுஷ்டானம், அதுவே ஸ்நானம், அதுவே கொடை, அதுவே போசனம். ஆனதால், சுத்தசத்துவம் பொருந்திய பரமார்த்தத்தை யறிந்திருக்கிற சற்புருஷர்களுக்குச் சகலமும் சொரூபநிஷ்டை

யென்றறி. சகலத்தையும் விட்டொழிந்து ஞானநிஷ்டாபரர்களா யிருக்கிற சந்நியாசிகளுக்கு ஞானநிஷ்டையைத் தவிர வேறெச்செய் கையுமில்லை. மேலும், கிரியாந்தரங்களான தொழில்களெல்லா மொழிந்து ஞானநிஷ்டா பரனுயிருக்க வேண்டும். ஞானமாகிற மேடையின் மேலேறவேண்டு மென்று இச்சித்திருக்கிற முமுட்சு வானவன் ஆத்மநிஷ்டையாகிற கர்மஞ் செய்துகொண்டு சஞ்சலமில் லாமல் சதா தியானபாராயணனு யான்மாவினிடத்தில் நிலைத்திருக்க வேண்டும். ஆதலால், ஞானமாகிற உப்பரிகைமே லேறுகிற அப்பி யாசிக்கு ஞானநிஷ்டா சாதனங்களே கர்மங்கள். யோகமாகிற மேடையின்மே லேறவேண்டு மென்கிற முமுட்சுவுக்கும் யோகத்தைத் தவிரக் கிரியாந்தர மென்பளவுமில்லை. எவன் யோகி யாயிருந்தும் யோகத்தைத் தவிர கிரியாந்தரங்களை நினைக் கிறுனே அவன் மரத்தின்மேலேறிவிழுந்தவ னெப்படி படுகாயம்படு வானே அப்படியே அதோகதியில் விழுந்துபோவான். ஞானமாகிற மேடைமே லேறியிருக்கிற கிருதகிருத்தியனுன புத்திசாலிக்கு வெளியில் செய்யவேண்டியகாரியமொன்றுமில்லை;வெளிப்பார்வையு மில்லை. ஆதலால், கர்மவாசனை யவனுக்கு வேண்டியதில்லை. இனிச் சத்தானுவித்த சவிகற்பசமாதி சொல்லுகிறேம் கேட்பாயாக.

### (2) அந்தர் சத்தானுவித்தம்.

வினு:—சொல்லல்வேண்டும்.

விடை:—சுத்தசின்மாத்திரமாய்ச் சேடிக்கப்பட்ட சத்தத் தோடே கூடிக்கொண்டு நான் அசங்கன், நான் சுயம்பிரகாசன், நான் அத்தொய்த னென்கிற சத்தங்களைப் பொருந்தி அந்தச் சத்தங்க ளால் தானுகப் பாவித்த பாவனையெதுவோ அதுவே சவிகற்ப சத்தானுவித்த சமாதியென்று சொல்லப்படும்.

வினு:—இதற் கனுபவம் யாது?

விடை:—சுத்தன்நான், புத்தன்நான், பிரத்தியகான்ம சொருப மாயிருக்கிற நித்தியசித்தன் நான், சாந்தன் நான், ஆனந்தன் நான், சதாகாலமும் பரமானந்தக் கடலாயிருக்கிறவன் நான், ஆதியுமனு தியும் நான், வாக்குமனங்களால் சாதிக்கப்பட்ட வஸ்துவும் நான், வேதாந்தவாக்கியங்களினுல் அறியப்பட்டவன் நான், அளவில்லாத அகண்டபோதருபமே நான், அறிந்தேன் அறியே னென்கிறதற் கன்னியமானவன்நான், மாயாகாரியலேசங்களில்லாதவன்நான்,கேவ

லந்திருக்குரூபமானவன் நான், ஞானசொரூபன் நான், ஏகப்பிரகாசமாய் விளங்குகிறவன் நான், முன்பின்னென்கிற தில்லாதவன் நான், உள்ளும் புறம்பும் நிறைந்து பரிபூரணானந்தமாயிருக்கிற ஏகம் நான், செனனமரணமில்லாதவன் நான், நித்தியானந்தமான அத்துவைதமேநான், பிரத்தியகபின்னமென்றும் அகண்டமென்றுஞ்சச்சிதானந்தலட்சணமென்றுஞ் சுத்தமென்றுஞ் சுருதியினால் சொல்லப்பட்ட பரஞ்சோதியான பிரமமெதுவோ அதுவே நான் என்கிற சத்தாமாத்திரமாயிருக்கிற விருத்திகளுடன் கூடிச் சத்தாமாத்திரம் பொருந்தின சத்தங்களுடன்கூடி யோகியானவன் சஞ்சலமில்லாமலிந்தச்சத்தானுவித்தமான பாவனையைச்சாதிக்கவேண்டும். மேலும், காமாதிதிரிசியங்களைச் சொரூபத்திலே லயம்பண்ணிச் சுத்தோதக முதலாகிய சத்தங்களுடன்கூடித் திருக்கே பிரதானமான பாவனையைப்பொருந்தின தெதுவோ அது சத்தானுவித்த சவிகற்பசமாதியென்றுசொல்லப்படும்.

### (3) அந்தர் நிர்விகற்பம்.

வின:—அந்தர் நிர்விகற்பமாவது யாது?

விடை:—இந்தத் திரிசியானுவித்த சத்தானுவித்த மென்னும் சவிகற்ப மிரண்டும் விட்டொழிந்து மனதினுடைய தொழில்களையுங் கட்டோடே யொழித்துப்போடுகிறதே நிர்விகற்ப சமாதியென்று சொல்லப்படும். மேலும், முன்சொன்ன இருவகைச் சவிகற்ப சமாதிகளில் அன்புடனே யிடைவிடாமலெவனெடுநாட் பழகிவருகிறானோ அவனுக்கே இந்த நிர்விகற்பசமாதி சித்திக்கும். எவன் நிர்விகற்பசமாதி நிஷ்டையைப்பொருந்தியிருக்கிறானோ அவனுக்கே வாசனாட்சயமுஞ் சித்தலயமுந் தடையற்ற நிச்சலானந்தமுஞ் சித்திக்கும். இந்தலட்சணம் பொருந்தினவனே வித்துவான். அவன் யான் எனதென்று உள்ளும்புறம்புங்காணாமல் ஆனந்தாமிர்தக்கடலில் அழுந்தினவனாய்த் தன்னைவிட அன்னியமில்லாதவனாயிருப்பன். ஆதலால், நிர்விகற்பமாயும் பரப்பிரமமாயுமிருக்கிற பிரமத்தினிடத்தில் நிஷ்டையைப் பொருந்தினவரே முத்தர்; அவர்களே சீவத்தன்மை பொருந்தியும் பொருந்தாமலிருக்கிறவர்களென்றறி. அப்பா! முன்சொன்ன சவிகற்பத்தில் சத்ததிரிசியானுவித்தங்களிரண்டும் இப்போதுசொன்ன நிர்விகற்ப சமாதியொன்றும் ஆக மூன்றையும் யத்தனத்தினாலுள்ளே எப்படியெப்படி பழகு

கிறுனே அப்படி யப்படியே தனக்குவெளியிலுந் தொய்தநிவிர்த்தி யாகிறதின் பொருட்டு இம்மூன்று சமாதியுஞ் செய்யவேண்டும்.

(4) பாகிய திர்சியானுவித்தம்.

வினு:—அஃதெப்படி?

விடை:—அதிஷ்டானமாய்ச் சச்சிதானந்தமான பரப்பிரமவஸ்துவினிடத்திற் கற்பிதமான நாமரூபாதிசெகத்து விளங்குகின்றது. அவ்வாறு விளங்குவதில் சத்து சித்து ஆனந்தம் இம்மூன்றும் பிரமசொரூபம்; கற்பிதமான நாமரூபம் இவ்விரண்டுஞ் செகத்சொரூபம். இந்தச் சச்சிதானந்த நாமரூபாதிகளைந்தையு மொன்ருய்க்கூட்டி மூடர்கள் பிரமத்(மயக்கத்)தினல் பிரபஞ்சமென்று சொல்லுகிருர்கள்.

வினு:—அஃதெப்படி?

விடை:—குளிர்ச்சியும் வெண்மையும் நெகிழ்ச்சியும் நீட்சியும் தரங்கமென்கிறபெயரும் ஒன்ருய்க்கூடிய சலம் எப்படி அலையென்று சொல்லப்படுகின்றதோ அப்படிபோலென்றறி. இந்தச் சச்சிதானந்த மூன்றிலே ஆரோபிதமான நாமரூபமிரண்டையுந் தள்ளி அதிஷ்டானமான சச்சிதானந்தமாத்திரமாய்க் கிரகித்துக் கொண்டு அச்சச்சிதானந்தமாகப் பார்க்கிறதே பாகிய திர்சியானுவித்த சவிகற்பசமாதி. இன்னமும் சச்சிதானந்தமான பிரமத்தைத் தவிர நாமரூபங்களில்லையென்று அந்த நாமரூபங்களை வேறுபடுத்தி அதிஷ்டானத்தில் அந்தநாமரூபமான ஆரோபிதங்களைலயம்பண்ணி அதிஷ்டானமாகப்பார்க்கிறதுமாம். மேலும், சச்சிதானந்தமாகியும் அத்தொய்தமாகியும் அதிஷ்டானமாகியுமிருக்கிற பரப்பிரமசொரூபமெதுவோ அதுவே நானென்று சதாபாவனைபண்ணுகிறதுமாம்.

வினு:—இதற்கனுபவம் யாது?

விடை:—இந்தப் பிருதிவியாதி பஞ்சபூதங்களும் நானல்ல, இந்தப் பஞ்சபூதகாரியங்களும்நானல்ல இவற்றிற்கெல்லா மதிட்டானமாகியும் விசுத்தமாகியும் ஏகமாகியும் பரமாகியுஞ் சத்தாகியுமிருக்கிற யாதொருபரப்பிரமமுண்டோ அதுவே நானேனென்; நான் காணப்பட்ட பதார்த்தங்களுமல்ல, குணங்களுமல்ல, கிரியைகளுமல்ல, சாதியுமல்ல இவைகளுக்கெல்லாம் அதிஷ்டானமாகியும் விசுத்த

மாகியும் ஏகமாகியும் சத்தாகியுமிருக்கிற பரமாத்மாவே நானானேன்; நான் சத்த பரிச ரூப ரச கந்தங்களுமல்ல, இவற்றிற்கெல்லாம் அதிஷ்டானமாகியும் விசுத்தமாகியும் ஏகமாகியும்பரமாகியுமிருக்கின்ற வஸ்துவே நானானேன்; நான் தேகமுமல்ல, இந்திரியங்களுமல்ல, மனோ புத்திகளுமல்ல, அகங்காரமுமல்ல இவைகளுக்கெல்லாம் அதிஷ்டானமாகியும் ஏகமாகியும் விசுத்தமாகியும் சத்தாகியுமிருக்கிற பரமாத்மாவே நானானேன்; நான் தேசமுமல்ல, காலமுமல்ல, திக்குமல்ல, வஸ்துவுமல்ல, ஸ்தூலசூட்சும முதலானவையுமல்ல இவற்றிற்கெல்லாம் அதிஷ்டானமாகியும் விசுத்தமாகியும் ஏகமாகியும் பரமாகியுஞ் சத்தாகியுமிருக்கிற ஆன்மாவே நானானேன் என்றிப்படிகாணப்பட்ட நாமரூபாதிகளெல்லாம் பொய். இவற்றிற் கதிஷ்டானமான பிரமமே சதா சத்தியமென்றுபாவித்து நடக்கிறபோதும் இருக்கிறபோதுஞ் சயனித்துக்கொண்டிருக்கிறபோதுஞ் சதாகாலமுமிந்தப் பாகிய திரிசியானுவித்த சவிகற்பசமாதியே செய்யவேண்டும். இனி பாகிய சத்தானுவித்த சவிகற்ப சமாதியையுஞ் சொல்லுகிறோம். கேட்பாயாக.

### (5) பாகிய சத்தானுவித்தம்.

வினா:—சொல்லல்வேண்டும்?

விடை:—அதிஷ்டானமான சச்சிதானந்தத்திற் கற்பிதமான நாமரூபாதிகளை லயம்பண்ணி நிர்மலமாகியும் அத்துவைதமாகியும் பரமானந்தமாகியுமிருக்கிற பிரமமேநானென்று பாவனைசெய்வதே பாகிய சத்தானுவித்த சவிகற்பசமாதி.

வினா:—இதற்கனுபவம் யாது?

விடை:—நிர்விகாரமாகியும் நிராகாரமாகியும் நிரஞ்சனமாகியும் அனாமயமாகியும் ஆதியந்த மில்லாததாகியும் பூரணமாகியுமிருக்கிற பிரமமே நான்; சம்சயமில்லை. நிஷ்களங்கமாகியும் நிராபாசமாகியுந் திரிவிதபரிச்சேத சூன்னியமாகியும் ஆனந்தமாகியுஞ் சமமாகியும் அவ்வியத்தமாகியுமிருக்கிற பிரமமே நான்; சம்சயமில்லை. நிர்விசேஷமாகியும் நிர்விகாரமாகியும் நித்தியமுத்தமாகியும் நிஷ்கிரியமாகியும் பிரக்ஞானகனமாகியும் சத்தியமாகியுமிருக்கிற பிரமமே நான்; சந்தேகமில்லை. சுத்தமாகியும் ஆதியந்தஞ் சூட்சுமமாகியும் புத்திமாத்திரமாகியும் நிர்விகற்பமாகியும் சத்தாகியும் கேவலமாகியும் பரமாத்துவைதமாகியுமிருக்கின்ற பிரமமேநான்; சம்சயமில்லை.

சுத்தமாகியும் புத்தமாகியும் சுதசித்தமாகியும் பரமாகியும் பிரத்திய கான்மாவாகியும் அகண்டமாகியும் சொப்பிரகாசமாகியும் சிதாகாசமாகியுமிருக்கிற பிரமமே நான்; சந்தேகமில்லை என்று நிர்விகாராதி சத்தங்களுடன் கூடிக்கொண்டு கேவலமான வஸ்துலட்சியத்தில் மனத்தைநிறுத்தித் தியானம் பண்ணுகிறதே பாகிய சத்தானுவித்த சவிகற்ப சமாதியனுபவமாம்.

(6) பாகிய நிர்விகற்பம்.

வினா:—பாகிய நிர்விகற்பமாவது யாது?

விடை:—பிரம்மானந்தாச பரவசத்தினால் சொரூபத்தோடே யேகமாயொன்றிப் புறம்பில் சகல தொழில்களுமற்று நிச்சலமாயிருக்கிறதே பாகிய நிர்விகற்பசமாதியெனப்படும்.

யோகியானவன் எழுந்திருக்கிறபோதும் நடக்கிறபோதும் மறதியில்லாமல் இந்திரிய நிக்கிரகம்பண்ணிக்கொண்டு சர்வதா இந்த அறுவகைச் சமாதியும் சாவதானமாய்ச் செய்யவேண்டும். மேலும், விபரீத பாவனையானது கட்டோடே யெவ்வளவுகாலம்வரை நிவிர்த்தியாகவில்லையோ அவ்வளவு காலம்வரை இந்த அந்தர்பாகிய சமாதிகளைச்செய்யவேண்டும். தடையற்ற சொரூபானுபவப் பிரகாசமானது எதுபரியந்தஞ் சித்திக்கவில்லையோ அது பரியந்தமும் இந்த ஆறுவகைச் சமாதியினால் நிரந்தரம் பொழுதுபோக்கவேண்டும். மோட்சம் வேண்டுமென்னும் இச்சையுள்ளவன் சமாதியைமறந்து ஒருநாளுமிருத்தல்கூடாது. சமாதியை மறந்தானாகில் சூரியனில்லாதபோது இருளானது மூடுகிறதுபோல மாயையானது சொரூபமாய தன்னைமறைக்கும். ஆதலால், மகத்துக்கள் சுவானுபவத்தை விட்டு க்ஷணமாகிலும் இருக்கமாட்டார்கள். சுவானுபவத்தை மறந்திருக்கிறதே மிருத்தியுபயம், இதுவல்லாமல் நமன்வேறேயில்லையென்று சற்புருஷர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்போது நாம் சொன்னசமாதியில் எவன் பிரயாசைப்படுகிறானோ அவன் மனத்தில் ஒரு விகற்பமுந்தோன்றாது. இந்த அப்பியாசத்தினால் சர்வாத்தும பாவகஞ்சித்திக்கும்; சர்வாத்தும பாவகமே கைவல்லியம். மேலும், சர்வாத்தும பாவகம்பொருந்தினதே பிரமவித்தைக்குப் பலமென்று பெரியவர்களறிந்திருக்கிறார்கள். சீவன் முத்தனாயிருக்கிறவனுக்குச் சகலமுந் தானாயிருக்கிற ஆனந்தானுபவமே பலம். யான் எனது இஃது என்பது முதலாகிய பாசத்தைக் கிரகிக்கிறதே

இருதயக்கிரந்தி. இந்த இருதயக்கிரந்தியானது வாசனையோடே கூடச் சமாதியினால் தகிக்கப்படுகிறபோது பிரமமேதானாயிருக்கிற அனுபவம் தடையற்றுவிளங்கும். மோட்சத்துக்கு நிஷ்கண்டமாயிருக்கிறவழி பிரமமேதானாயிருக்கிற நிலையாம். இது சுத்தாந்தக்கரணமுடைய முமுட்சுக்களுக்குச் சதாகாலமுந்தோற்றும்; மற்றொருத்தருக்குந் தோற்றாது. ஆதலால், நீயும் மறதியில்லாம லிருந்துகொண்டு இவ்வாறுவகைச்சமாதிகளையும் நன்றாய் அப்பியாசஞ்செய்து இருதயக்கிரந்தியை ஞானாக்கினியினால் தகித்து நிரந்தரம் பிரமானந்தாமிர்த சமுத்திரத்தில் அமிழ்ந்திச் சந்தோஷமாயிரு. விருத்தி சஞ்சலமில்லாமல் நிச்சலமாயிருக்கிறதே நிர்விகற்பசமாதி; அந்த நிர்விகற்பசமாதியே யோகமென்று யோகசாத்திரார்த்தத்தை யறிந்தவர்கள் சொல்லுவார்கள். ஆதலால், இந்தயோகத்துக்கு அஷ்டாங்கங்களுமுண்டு.

## அஷ்டாங்கம்.

வினா:—அஷ்டாங்கங்கள் எவை?

விடை:—அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியெனப்பெரியவர்களால் சொல்லப்பட்டிருக்கின்றன.

வினா:—(1) இயமமாவது யாது?

விடை:—அஹிம்சை (கொல்லாமை), சத்தியம், அஸ்தேயம், (திருடாதிருத்தல்), பிரமசரியம், அபரிக்கிரகம், சவுசம்சமம், சந்தோஷம், தபசு, சுவாத்தியாயம், வணக்கமென்னு மிவைகளே இயமமென்று சொல்லப்படும்.

வினா:—(2) நியமமாவது யாது?

விடை:—ஆகாரநித்ராசேதம், இந்திரியசேதம், சீத வாத வருஷ உஷ்ணசேதம், அபிமான துக்கசேதம், சாந்தியென்னுமிவைகளே நியமமென்று சொல்லப்படும்.

வினா:—(3) ஆசனமாவது யாது?

விடை:—பதுமாசனஞ் சித்திராசன முதலாகிய ஆசனங்களில் தனக்கு எந்த ஆசனத்திலிருந்தால் மனதுக்கு ஆயாசந்தோன்றாதோ அந்தச் சுகாசனத்தில் இருக்கிறதே தியானசாதனமான ஆசனமென்று சொல்லப்படும்.

வினா:—(4) பிராணாயாமமாவது யாது?

விடை:—அபானனைப் பிராணனுடன்கூட்டி இருதயத்திலொன்றாய் நிறுத்திக்கொள்ளுகிறதே மனோநிச்சலமான பிராணாயாமமென்று சொல்லப்படும். மேலும், பிராணாபானன்களை யொன்றாக மனதிலே நிறுத்திக்கொண்டு கும்பகம்பண்ணினால் மனது நிச்சலமாகும். அப்படி பண்ணாதவரையில் மனது சஞ்சலப்பட்டிருக்கும். ஆதலால், மனது நிச்சலமாகும்பொருட்டுப் பிராணாயாமம் பண்ணவேண்டும். இந்தப்பிராணாயாமமாவது அகற்பப்பிராணாயாம மென்றும், சகற்பப்பிராணாயாமமென்று மிரண்டுவிதமாகவிருக்கும். இவற்றுள் பிரணவத்தின் உச்சாரணமின்றி வாயுவை நிறுத்துகிறதேஅகற்பப் பிராணாயாமமென்றும், பிரணவத்தின் உச்சாரணத்துடன்கூடி வாயுவை நிறுத்துகிறதே சகற்பப் பிராணாயாம மென்றுஞ்சொல்லப்படும். இப்படி நிறுத்துகிற பிராணாயாமம் இரேசக பூரக கும்பக மெனத் திரிவிதமாயிருக்கும்.

வினா:—அத்திரிவிதத்தையு மெடுத்துரைக்கவேண்டும்?

விடை:—பிரணவத்தை யுச்சரித்து முப்பத்திரண்டு மாத்திரை வரைக்கும் பூரிக்கிறது பூரகமென்றும், அறுபத்து நான்குமாத்திரை வரைக்கும் உள்ளொடுக்குகிறது கும்பகமென்றும், இந்தப்பூரக கும்பகங்களினால் நிறுத்தின வாயுவைப் பதினாறுமாத்திரைவரைக்கும் மெள்ள மெள்ள இரேசிக்கிறது ரேசகமென்றுஞ் சொல்லப்படும். இப்படி யிந்தப்பிராணாயாமத்தை யோகியானவன் பிராதக்காலத்திலும் மத்தியானகாலத்திலுஞ் சாயங்காலத்திலும் அஸ்தமன மானதின்பிறகும் அர்த்தராத்திரியிலும் விடியற்காலத்திலும் எழுபத்திரண்டு வீதம் ரேசக பூரக கும்பகங்களை அப்பியாசிக்கவேண்டும். இப்படி தினந்தோறுஞ் சர்வகாலத்திலும் பிராணாயாமத்திலே அப்பியாசிக்கிற யோகிக்கு மாசமொன்றிலே சுவாசஞ் ஜெயமாகும். பலன்சித்திக்கும். சுவாசஞ்ஜெயமானால் மனதுநிர்மலமாகும்; மனது நிர்மலமானால்,சொரூபானுபவஞ் சித்திக்கும். ஆதலால், இந்தப் பிராணாயாமத்தைப் பிரயத்தனம்பண்ணிச் சதாகாலமுமப்பியாசிக்க வேண்டும். இந்தப் பிராணாயாமத்தினால் தேகத்திலுண்டான வாத பித்த சிலேஷ்பம் சுரங் குன்மம் சூலை க்ஷயமுதலான வியாதிகளாகிய சகல பாவங்களும் நசிக்கும். இதுவேயுமன்றி ஆயுசு தேககாந்தி மூலாக்கினி இந்திரிய சத்திகளாகியவெல்லாம் விருத்தியடையும்; அவமிருத்துவும் பறந்தோடிப்போம். அப்பா! யோகசித்தியின்

பொருட்டுப் பிராணாயாமத்துக்குச் சமானமான சாதனம் வேறே யில்லை. ஆதலால், இந்தப் பிராணாயாமஞ் சதாகாலமுஞ் செய்ய வேண்டும்.

வினா:—(5) பிரத்தியாகாரமாவது யாது?

விடை:—புத்திவிருத்தியை இந்திரியங்களிற்போகாதபடி பிரமத்தினிடத்தில் நிறுத்துகிறதே பிரத்தியாகாரமென்று சொல்லப் படும்.

வினா:—(6) தாரணையாவது யாது?

விடை:—இப்படிப் பிரத்தியாகாரம்பண்ணின மனதைப் பிரத்தியகான்மாவினிடத்தில் நிறுத்தி வெளியிற் சஞ்சாரமாய்ப்போகாமல் லட்சியத்தில் திடம்பண்ணுவதே தாரணையென்று சொல்லப் படும்.

வினா:—(7) தியானமாவது யாது?

விடை:—விசாதிகமாயிருக்கிற அகங்காராதிவிருத்திகள் பிறவாமலொடுக்கிச் சுசாதிகமாயிருக்கிற அனுசந்தான லட்சணமான விருத்தியோடுகூடி நிற்பதே தியானமென்று சொல்லப்படும்.

வினா:—(8) சமாதியாவது யாது?

விடை:—இப்படி லட்சியம்வைத்த விருத்திகளெல்லாம் லட்சியமேயாகிச் சரீரமறந்திருப்பதே சமாதியென்று சொல்லப்படும்.

இவ்வாறு யோகத்தின் அஷ்டாங்கங்கள் சொல்லப்படுகின்றன. வாராய் சிஷனே! இயமநியமங்களுடன்கூடி நன்மையான சித்திராசனத்திலிருந்து சதாகாலமும் பிராணாயாமஞ்செய்துகொண்டு விடயங்களில் இந்திரியங்கள் நாடாமல் பிரத்தியாகாரஞ்செய்து அதனை விட்டகலாமல் தாரணைபண்ணி நிஷ்களமாயிருக்கிற பரமதத்துவத்தைத் தியானம்பண்ணி நிர்விகற்பசமாதியில் நின்று தன்தேகத்தை மறந்தயோகியானவன் பிறவியாகிற பந்தத்தைத்தகித்து' ஆனந்தமடைவன். இந்த நிர்விகற்பசமாதியில் இருக்கிறவன் குணத்திரயங்களையுங்கடப்பன். வித்துவானாயிருந்தாலும் நிர்விகற்ப சமாதியில்லாதவன் குணத்திரயங்களில் கட்டுப்பட்டுச் சம்சாரத்தில் அடிபடுவன். ஆனதால்,நேத்திரங் கண்ட இருதய ஸ்தானமானசாக்கிரசொப்பன சுழுத்திகளைக்கடக்கிறதே குணத்திரயங்களைக்கடந்த சுகசமாதி; இது ஞான நிஷ்டனாயிருக்கிற யோகிக்கன்றி பிறிதொருவருக்குஞ்

சித்திக்கிறதில்லை. ஆதலால், எந்த மனுஷன் அசத்தாயிருக்கிற விடயங்களை அனுசந்தானம் பண்ணுகிறானோ அவன் பந்தனுவான்; சத்தாயிருக்கிற அர்த்தத்தை எவன் அனுசந்தானம் பண்ணுகிறானோ அவன் முத்தனுவான் என்று வேதம் கோஷிக்கின்றதால் முமுட்சுவானவன் பிரயத்தனம்பண்ணியாகிலும் நிர்விகற்பசமாதியை அடையவேண்டும். நிர்விகற்பசமாதியை யடைந்தவனே பவபந்தத்தினின்றும் விடுபட்டு முத்தனுவான்.

வினு:—பவபந்தமாவது யாது?

விடை:—அவித்தியா காம தர்மங்களாகிய மூன்றுமே சீவசெந்துக்களுக்குப் பந்தங்களாம். இந்தப்பந்தங்களுக்கு முத்தி(விடுதி)நிர்விகற்ப சமாதியைத்தவிர வேறொன்றினுலும் வரமாட்டாது. ஆனால் இந்த நிர்விகற்பசமாதிக்கு விகாதங்கள் நான்குண்டு.

வினு:—அவை யாவை?

விடை:—அவை: லயம் விட்சேபம் கஷாயம் ரசாஸ்வாத மென்பனவாம். இவற்றுள் (1) அகண்டாகார விருத்தி தமோகுணத்தோடேகூடி அகண்ட வஸ்துவில் செல்லாமல் நித்திரையில் லயமடைகிறதே லயமென்றும், (2) அந்த விருத்தியைப் பரமதத்துவத்தில் நாட்டமாய் நிறுத்துகிறபோது ரசோகுணதோஷத்தினுல் அந்நாட்டத்தில் நிலையாமல் வேறே அன்னிய விஷயத்தில் போவதே விட்சேபமென்றும், (3) அகண்டாகாரவிருத்தியானது ராசததாமதங்களினுல் மூடப்பட்டு லட்சியப்பட்ட பரமதத்துவத்தையுமெட்டாமல் பாகியமாகிய பிரபஞ்சவிடயத்தையும் நாடாமல் ஸ்தம்பம்போல் சுத்தமூடமாயிருக்கிறதே கஷாயமென்றும், (4) விருத்தியானது தான்வைத்த நாட்டத்திலிராமல் பூர்வவாசனுவேகத்தினுல் சகல விகற்பமான விஷயரசங்களைப் புசிக்கப்போகின்றதே ரசாஸ்வாதமென்றுஞ் சொல்லப்படும்.

வினு:—ஆனுல், இந்தவிரோதங்களை நிவிர்த்திப்பதற்கு உபாயம் யாது?

விடை:—யோகியானவன் சமாதியில் இருக்கிறபோது அகண்டாகாரவிருத்தி தமோகுணத்தோடேகூடி அகண்டவஸ்துவில் செல்லாத லயாவஸ்தை வருமாகில், அவன் பிராணுயாமத்தினுல் லயத்தைப்போக்கி விருத்தியை நிர்மலம்பண்ணிப் பிரத்தியகாத்ம அபிமுகமாய் நாட்டவேண்டும். இந்தச் சமாதி நிட்டனுனயோகி விருத்தி

காட்டத்தில்நில்லாதபடி அன்னியவிடயத்தைக்கொண்டுவந்துவிடுகிற விட்சேப நிவிர்த்திக்கு விரத்தியினால் அந்த விடயங்களில் தோஷத்தையாரோபித்துப்பிரத்தியேகாத்தும அபிமுகமாய்அவ்விருத்தியை காட்டவேண்டும். சித்தவிருத்தியானது லட்சியத்திலும் நில்லாமல் விடயத்திலுஞ்செல்லாமல் சுத்த மூடமாயிருக்கிற கஷாயமென்னும் விரோதத்தைப்போக்குகிறதற்கு அகண்ட வஸ்துவினுடைய சுகத்தையும் அதனுடைய மகிமையையுஞ் சொல்லுகிறதாகவும் மனதுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறதாகவுந் திரிசியங்களெல்லாந் துச்சங்களென்று போதிக்கிறதாகவுமிருக்கிற வேதாந்தங்களை யடிக்கடி வாக்கினால் பஜனைபண்ணவேண்டும். மேலும், ரசாஸ்வாத மென்னும் விரோதத்தைப்போக்குகிறதற்கு யோகியானவன் வைராக்கியத்தினால் விடயங்களிற்சென்ற விருத்தியைத்திருப்பி ஏகாத்ம (ஜீவப்பிரம ஐக்கியத்தில்) அபிமுகமாய் நிறுத்தவேண்டும். இந்தச் சமாதிக்கு இந்த விரோதங்களில்லாமல் பின்னும் பலவிரோதங்கள் வந்தாலும் யோகியானவன் தியானத்தினாலும் சமாதியினாலும் விக்கினங்களைப் போக்கி நிர்விகற்பத்தை அப்பியாசிக்கவேண்டும். விடய சந்நிதியில் இந்திரியங்கள் போகாவாறு மனத்தை நிக்கிரகம்பண்ணுகிறவனே தீரன்; அந்தத்தீரனே தீவிரமோட்ச விச்சையுடைத்தானவனாயும் சீதோஷ்ணாதி துவந்துவங்களைச் சகிக்கிறதாயிருக்கின்ற திதிட்சையுடைத்தானவனாயுஞ் சகல விருப்பமுமற்றவனாயுமிருப்பன். இவனைக்கண்டமாத்திரத்தில் தாபத்திரயாதி விக்கினங்களெல்லாம் பறந்துபோய்விடும். சகல விக்கினங்களையுங்கெடுத்து இரட்சிக்கிறவராயிருக்கிற ஈசுரன் பரமானந்தியாயிருக்கிற ஞானியினால் உபாசிக்கப்பட்டு முன்னிற்பார். ஆனதால், முமுட்சுவாயிருக்கிறவன் சகல விக்கினபயங்களையுமொழித்து ஈசுவரனிடத்தில் பாரத்தைவைத்து நிர்விகற்பத்தைச் செய்வானாகில் அதற்கொருவிக்கினமு முண்டாகாது. முன்சொன்ன அகண்டாகாரவிருத்தி ரூபமான அப்பியாசயோகத்தினால் விருத்தியானது ஒருமை யடைந்ததாகவும் அலைவற்றதாகவும் பிரமாகாரமாகவுமிருக்கிற ஆனந்த சொரூபமான பரப்பிரமத்தினிடத்தில் அந்தவடிவமாகவேயிருக்கும். இப்படிக்கொத்த ராஜயோகியானவன் உள்ளும் புறம்புஞ்சொரூபமன்றி அன்னியமில்லாத பரப்பிரமந்தானேயாய்ச் சகல தொழிலுமற்றுச் சுகமாயிருப்பன். இந்த நிலையே முத்திக்குச் சகசமாயிருக்கிற அவத்தை. இந்த அவத்தையைக் கேவலமான வுன்மன்னியாவஸ்தையென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

வினா:—உன்மன்னியாவஸ்தையாவது யாது?

விடை:—நிர்விகற்பமாயிருக்கிற ஆன்மாவினிடத்தில் ஆத்துமாகாரமா யேகரூபமான அகண்டாகாரவிருத்தி நிலைபெற்றிருப்பதே உன்மன்னியாவஸ்தையென்று சொல்லப்படும். மேலும், அத்வைத பரப்பிரமப் பிரகாசத்தினால் அஞ்ஞானமாகிற அந்தகாரம் நிவிர்த்தியாய்ப் பரப்பிரமமாயிருக்கிற தன்னாலே தான் சாட்சாத்காரமாகிறபோது அனாத்மாவாயிருக்கிறதேகாதிகளை நானென்றென்றபிமானிக்க இருதயக்கிரந்தியும் சொரூபத்தைத் தெரியவொட்டாமல் மறைத்திருந்த சம்சயங்களும் சகல கர்மங்களுமாகிய அஞ்ஞான நாசமானவனே பிரமவித்துக்களில் சிரேஷ்டன்; அவனே அனாத்துமபதார்த்தங்களை யொழித்தவன்; இந்தப் பிரமநிஷ்டன் பிரமாகாரமான விருத்தியோடு கூடினவனாய்ச் சகலத்தையும் பிரமமாகக்கண்டு பிரமத்தினிடத்தில் சதாகாலமும் விளையாடி ரமித்துக்கொண்டு ஆனந்த பரவசனாயிருப்பான். இந்தப் பிரமநிஷ்டனுக்குக் கர்த்திருத்துவ காரண காரியமுதலான பாவனையெல்லா மொழிந்திருந்தலால் அவன் நானென்கிறது முதலிய சம்சாரபந்தத்தைக்காணான். பந்தத்தைக் கண்டவனுக்குச் சம்சாரமேயொழிய ஏகத்தைக் கண்டவனுக்குச் சம்சாரமில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—கர்த்தா யார்? செய்யவேண்டியதென்ன? செய்தால் அதற்குப் பலனென்ன? இதற்குச்சாதனமென்ன வென்னுமிந்நான்கும் கேவலமாயும் சத்தாயும் ஏகமாயும் பரப்பிரமமாயுமிருக்கிற சொரூபத்தைவிட்டு வேறாயிருக்கவில்லை. ஆதலால், பரமசுருதியினாலுஞ் சற்குருவினாலுஞ் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தானுசந்தானத்தினாலுண்டான சிவஞானப்பிரகாசனாய்ப் பிரத்தியகான்மாவென்றும் பிரமமென்றும் பேதமில்லாத ஏகரூபமான கேவலானந்தரூபத்தில் கர்த்தாயார்? செய்யவேண்டியதென்ன? சாதனம் யாது? பலமென்ன வென்னுமிந்நான்குமில்லை.

வினா:—அஃதெப்படி?

விடை:—ஆதாரமாயிருக்கிற பழுதையினிடத்திலுண்டாகிய அசத்தான பாம்பென்னுங்குணகற்பனையில் பாம்பென்னும்பேர்மாத்திரம் எப்படி மிச்சமாயிருக்கின்றதோ அப்படியே அதிஷ்டான சொரூபத்தினிடத்தில் நாமரூபசெகத்தென்னும் பேர்மாத்திரமிச்

சமாய் விளங்குகின்றது. இந்நாமரூபத்தைத்தள்ளி அதிஷ்டானமா யும் நிரவதிகமாயுமிருக்கிற சதானந்தாமிர்தக் கடலில் அழுந்தியிருக் கிறவனுக்குக் கர்த்திருத்துவ கரண பலமெங்கே யிருக்கின்றன? தொய்த சூனியமா(யொன்று)யிருக்கிற ஆகாசத்தில் கந்தருவ நகரந்தோன்றுதல்போன்று ஒன்றாய் அத்துவிதமாயிருக்கிற ஆன் மாவினிடத்தில் பிராந்தியினால் கர்த்தாவென்றுங் கன்மமென்றுங் கரணமென்றுஞ் சொல்லப்படுகின்றன. இப்படியுண்டானவெல்லாம் அழிந்துபோய்க் கேவலமாய்ப் போதமாத்திரமா யிருக்குமளவில் கர்த்தவ்விய கரண பலகர்த்தாவாகிய விவைகளெல்லா மெங்கேயிருக் கப்போகின்றன? பிரகதாரணிய உபநிடதம் சகலமும்ஆன்ம சொரூப மாகத்தானே பார்க்கிறவனுக்குக் கர்த்திருகரணாதி பேதமில்லை யென்று சொல்லுகிறதாலும், சுழுத்தியில் சர்வகரணமும் லயித் திருக்கிறபோது ஒருபேதமுந் தோன்றாதிருத்தலாலும் எவன்தான் பேதத்தைக்காண்பான். ஆதலால், நித்தியமாயும் நிர்க்குணமாயும் நிர்விகற்பமாயும் நிரவதிகமாயுமிருக்கிற ஆனந்த சமுத்திரத்தில் அழுந்தியிருக்கிறவனுக்குக் கர்த்தவ்விய கரண பலகர்த்தாவென்ப தொன்றுமில்லை. ஆதலால், புருஷனுக்கு விகிதமாயிருக்கிற சத்கர்ம துர்க்கர்மமிரண்டும் பிரமநிஷ்டைபொருந்தினவன் செய்யவேண்டிய தில்லை.

வினா:—அஃதேதன்?

விடை:—தேகமேநானென்று அபிமானித்தபுருஷன் சாதி வர்ணாச்சிரம கர்மங்களைச்செய்யவேண்டும். எல்லாம் ஆன்ம சொரூப மாயறிந்திருக்கிற பிரமநிஷ்டனுக்குச் செய்யவேண்டிய கரும மொன்றுமில்லை. ஆகையால், தேகத்தினிடத்தில் ஆத்தும புத்தியை வகிக்காதவன் சாதிவர்ணாச்சிரமங்களை யபிமானியான். சாதிவர்ணாச் சிரம அபிமானத்தைத்தவிர ஒருகர்மமுஞ் செய்யப்படுகிறதில்லை. ஆதலால், அனாத்துமாவாயிருக்கிற தேகத்தினிடத்தில் ஆத்துமபுத் தியை யொழித்து ஆன்மசொரூபமேசேடித்திருக்கிறவனுக்குச் சாதி யேது? வர்ணமேது? ஆச்சிரமமேது? கிரியையேது? எல்லாம் ஆன்ம சொரூபமென்றறி. கர்த்தாநான் போக்தாநான் என்று சொல்லப் பட்ட சம்சாரப்பிரமம் (மயக்கம்) எவனுக்கெதுவரைக்கு மிருக்கின் றதோ அவன் அதுவரைக்கும் திருஷ்டிதோஷ மிகுந்தவன்; சந்திர னிரண்டென்று கண்டாற்போன்று தொட்டவாசனையான பிரவிருத் தியிற்சுழலுவான். பிரவிர்த்திக்குக்காரணம் ஆசை; இந்த ஆசைக்குக்

காரணம் அஞ்ஞானம். ஆனதால், அஞ்ஞானியென்பதற்கடையாளம் ஆசை; ஞானியென்பதற்கடையாளம் நிராசையென்றறி. சொரூப சாட்சாத்காரமான ஞானியினிடத்தில்ஆசையொழிந்துபோமென்று சுருதிசொல்லுகின்றது. ஆதலால், ஆன்ம சாட்சாத்காரமுள்ள வித்துவான் ஆசையொழிந்திருப்பானென்றறி. பேததெரிசனமா யிருக்கிறவனுக்கு உலகவஸ்துக்கள் சத்தியமாகத்தோற்றும். இதற்கு மூலம் ஆசை; இந்த ஆசையினுடையதொழில் கர்மம். சகலத்தையும் ஆத்மாவாய்ப் பார்க்கிறவனுக்கு இவைகளொன்றுமில்லை. ஆதலால், சகலத்தையும் சந்தாமாத்திரமாயும் ஏகரூபமாயுங்காண்கிற கிருதார்த்தனான பிரமவித்துக்குச் செய்யவேண்டியதும்அடையவேண்டியதும் ஒன்றுமில்லை. வித்துவானாகவிருக்கிற பிரமநிஷ்டன் இது விதியென்று ஒருதொழிலுஞ்செய்யாமல் இது நிஷேதமென்றொரு தொழிலையும்விலக்காமல்இரண்டையுங்கடந்துநிஷ்கிரியனாகவேயிருப்பன். தேகேந்திரியங்களை நானென்று அபிமானத்தவனெவனோ அவனுக்கே விதிநிஷேதங்களன்றிப் பரதந்துவத்தைக் கண்டவனுக்கில்லை. ஆதலால், அவனுக்கு யதேசச சஞ்சாரமுமில்லை. யதேச்ச சஞ்சாரமுந் தேகேந்திரியாபிமானத்தோடு கூடினவனுக்கே யல்லாமல் ஞானிக்கில்லை.

வினா:—அஃதேன்?

விடை:—எவன்பேதமாகப்பார்க்கிறானோ அவனுக்கே யதேச்ச சஞ்சார (இஷ்டப்படி சஞ்சரித்தல்) தோஷமுண்டாம். அவனுக்கு ஞானவாசனை யணுமாத்திரமும்வாராது. தேகாத்தும புத்தியோடே கூடிப் பசுவாயிருக்கிறவனுக்கு யதேச்ச சஞ்சாரமானாற்போல ஞானிக்கும்யதேச்சசஞ்சாரமிருந்தால் இருவருக்கும் பேதமின்றாம்.

வினா:—அஃதெப்படி?

விடை:—அன்னியனால்விடப்பட்ட மலத்தைப் புசிக்கின்ற நாய், பன்றி கழுதைகளுள் யாதுயர்ந்தது? யாதுதாழ்ந்தது? அப்படி போலே ஞானியானவன் யதேச்சசஞ்சாரவானானால் அவன்தன்னால் விடப்பட்ட மலத்தைப்புசிக்கிற நாய் பன்றி கழுதைகளினும் கீழ்ப்பட்ட துன்மார்க்கனவனென்றறி.

வினா:—அஃதேன்?

விடை:—ஒருவன் வாந்திபண்ணின அசனத்தைத் திரும்பப் புசிக்கவேண்டுமென்றிச்சிப்பானோ? அதுபோல ஞானியானவன்

தன்னால் விடப்பட்ட விடயங்களைப் புசிக்கிறதற்கு இச்சிப்பானோ? ஞானியாகிய சீவன்முத்தனிச்சியான். மேலும், அனந்தகோடி செனமங்களிற்செய்தபுண்ணியபரிபாகத்தால்சந்தோஷித்தஈசுவரப் பிரசாதத்தினால் பிரமாதி தேவதைகளுக்குந் துர்லபமாயிருக்கிற பிரமானந்தரசத்தையடைந்தபின் துச்சமாகியும் பொய்யாகிய லட்சியத்தைப் பொருந்தினதாகியுமிருக்கிற விடயத்தைப்புசிக்கிறதற்கெவன் சந்தோஷிப்பான். ஆதலால், பிரவிருத்தியில் ஞானியானவன் சந்தோஷப்படான். அத்வைதியானவன் இச்சாமயமாயும் அசத்தாயுமிருக்கிற தேகாதிசகலப் பிரபஞ்சத்தையும் பொய்யென்றுகண்டபின் திரும்ப அவற்றைவிரும்பித்தொழில்செய்யான். மேலும், எவன் தேகாபிமானம் விடாமல் அதனோடுகூடி யதேச்சசஞ்சாரஞ்செய்கிறானோ அவன் மூடர்களுக்குள்ளே அதமனும் இரண்டு காலுடைய மாடென்று சொல்லப்படுவான். மகாத்துமாவாகவும் கிருதார்த்தனாகவும் ஆன்மானந்தரசத்தைப் பானம்பண்ணிக்கொண்டிருக்கிறவனாகவுமிருக்கிற பிரமநிஷ்டன் விடய யதேச்சசஞ்சாரத்திலொருகாலுங் கூடான். ஆத்தும ராமனாயிருக்கிற யோகிக்கு யதேச்சசஞ்சாரமானதுபோசனாதிகளிலும் மலமூத்திரவிரோசனங்களிடத்திலுந்தவிர அன்னியசஞ்சார அவசரமில்லையென்றறி.ஞானியின் தர்மமானது பிரமநிஷ்டையும் அஞ்ஞானியின் தர்மமானது தேகாபிமானத்தோடுகூடின விடயபோகமுமென்று சொல்லப்படும். சீதோஷ்ணம்போல விபரீதலட்சணமான தொழில்கள் ஒருபுருஷனிடத்திலொருகாலுங்கூடா.

வினா:—அஃதெப்படி?

விடை:—ஒன்றற்கொன்றுபிரிந் திரண்டதிகாரங்களைப்பொருந்தினதாயிருக்கிற சாம்பிராச்சிய பட்டாபிஷேகமும் பிட்சாடனமும் ஒன்றாய்ப்பொருந்தமாட்டா. ஆனதால், ஞானியானவன் அனந்த புண்ணியம்பொருந்திய மகிமையுடைத்தானவனாய் ஆன்ம சாம்பிராச்சியத்தை யனுபவித்துக்கொண்டிருப்பன். மூடனானவன் சித்தத்திலுண்டான தோஷத்தினால் சகல விடயங்களையும் பிராந்தியினால் அனுபவித்து அபேட்சையாயிருப்பன். ஆன்மானந்த ரசத்தைச் சுகமாய்ப் பானம்பண்ணிக்கொண்டு பிரத்தியகான்மாவாயிருக்கிற தன்னைச்சகல நாமரூபப்பிரபஞ்சத்துக்கும் அதிஷ்டானமாயிருக்கிற சச்சிதானந்த பிரமமாகக்கண்டுகொண்டு அந்தர்முகமான அகண்டாகாரவிருத்தியினால் இந்திரியவிடய ரூபமான கூட்டங்களைக்

கெடுக்கிறவனுகியும பிரவிர்த்தியிற் பொறுமையடைந்தவனுகியு மிருககிற சர்வத்தியாகியான பிரம நிஷ்டனுக்குச் சொப்பனத்தி லாகிலும யதேசச சஞ்சாரபாவனை வரமாட்டாது.

வினு:—அஃதேன்?

விடை:—நற்புத்தியுள்ள தாயுமபாலைப்பானமபண்ணிக்கொண்டு தேவதா சமபநதமாயுமிருக்கிற அம்சமானது சலத்தைப்பானம் பண்ண எப்படியிசசிககாதோ அபபடியே பிரமநிஷ்டனும் யதேச்ச சஞ்சாரமிச்சியான். மேலும, பிரமசரியாதி சாதனங்கள் வெகுகால மனுசரித்ததால் பரிபக்குவமான பிரமநிஷ்டனை இயமாதிகுணங்கள் அனுசரித்திருக்கும.

வினு:—அஃதெப்படி?

விடை:—அக்கினியை யூசிகாநதமுதலானவை யெப்படி அனு சரித்திருக்கின்றனவோ அபபடியே பிரமநிஷ்டனை இயமாதிகளனு சரித்திருக்கும. சூரனுகவும சத்துரு செயமுள்ளவனுகவும யுத்த முகத்தில் மகாநேர்ப்புள்ளவனுகவுமிருககிற சுத்தவீரனுக்கு யுத்தத் தில் காயம்பட்டதழும்புகளெப்படி பூஷணங்களாயினவோ அப படியே ஆத்துமஞான நிஷ்டையைப் பொருநதியிருக்கிற ஞானிக்கு இயமாதிகுணங்களே பூஷணமாம. இந்தப்பிரம நிஷ்டனுன சந்நியாசி யானவன் பசியைப்போக்கடிக்கிற தொழிலான பிட்சாடன முத லானவைகளில் பிரவிர்த்தித்தபோதும பிரபஞ்சமாய்ப் பாராதபடி செகத்துப் பொய்யென்றுதள்ளிச சதா ஆத்தும பாவனையாயிருந்து கொண்டு சுரோத்திராதிபஞ்சேநதிரிய அந்தக்கரணமுதலானவை களினுற்செய்யப்பட்ட தொழில்களெல்லாவற்றையும் ஒருவர்க் கொருவர் எதிர்த்து அடித்துக்கொள்ளுகிறதைப் புறமபாக நின்று சாட்சிககாரன் பார்த்திருப்பதுபோல் பந்தமுத்தனுகச் சகலபந்தங் களையுமொழித்துத் திடசித்தனுகப்பார்த்துக் கொண்டிருப்பன். ஆதலால், இப்படிப்பட்ட சிரேஷ்டமான பிரமவித்தானவன் கண் ணில்லாத அந்தகனுனுலுங் கண்டெரிந்தவன்போலச் சகல சனங்க ளினுலும் காணப்படுவன்; காதில்லாதவனுனுலுங் காதுடையவன் போல் விளங்குவன்; வாக்கில்லாதவனுனுலும் வாக்குள்ளவன்போல் விளங்குவன்; பிராணனில்லாதவனுனுலும் பிராணனுள்ளவனுவன்; மனமில்லாதவனுனுலும் மனமுள்ளவனுவன்; சதா காலமும் பிரம மாகவேயிருப்பன்.

வினு:—இன்னமுமிந்த ஆத்துமஞானியானவன் எப்படியிருப்பான்?

விடை:—ஆத்துமதரிசனனுகவும், ஆன்மாநீத (பாவனுநீத) னுகவும், சந்துஷ்டனுகவும், ஆத்மராமனுகவும், ஆத்துமானந்தனுகவும், ஆத்தும சொரூபமே நாட்டமாகவும், தன்னைவிடவேறே யன்னியமில்லையென்கிற நாட்டம் பொருந்தினவனுகவுமிருப்பன். மதவகங்காரங்களில்லாதவனுகவும், சாந்தனுகவும், நிர்விகற்பனுகவும், நிர்ச்சிந்தனுகவும், நிஷ்கிரியனுகவும் சும்மாயிருப்பன். இந்த மகா விவேகியான பிரமநிஷ்டன் அஞ்ஞானத்தினுல் கற்பிக்கப்பட்டிருக்கிற தேகாதிப்பிரபஞ்சங்களைச் சிதாபாசன் தன்னிடத்தில் விளங்கப்பண்ணுவித்துவருகிருனென்றுஆரோபிதம்பண்ணிப்பூரணுனந்த ஏகாகாசமான தன்னிடத்தில் தானேரமித்துக்கொண்டிருப்பனென்றறி. அப்பா! சிரேஷ்டப்பிரமவித்தான சீவன்முத்தனுனவன் வெகுமானம்வந்தாலும் அவமானம்வந்தாலும் சுகம்வந்தாலும் துக்கம்வந்தாலும் இதமகிதமானுலும், உயர்வு தாழ்வு என்கிற புத்தியில்லாமல் சமமாயேகரூபமானமனதோடுகூடப்பொறுமையை யடைந்தவனுய் அந்தர்முகமான ஆத்துமசுகத்தில் நிலைத்தவனுய் விடயமுத்தனுய் இருப்பன். சீவன் முத்தனுனவன்பிராரத்தகர்மமாகிறபெருங்காற்றினுல் ஏவப்பட்டு விடயத்தில் பிரவிர்த்தித்தாலும் அந்த விடயங்களில் போகாமல் மனதையொடுக்கித் தேகேந்திரியங்களாகக்காணுமல் ஆத்மானுபவமென்கிற அமிர்த ரசத்தைப் பானம்பண்ணினவனுய் அதனுலுண்டான லகரிபாவ சச்சிதானந்தமாயிருப்பன். அன்னியனுடைய இச்சையினுல் கற்பிக்கப்பட்டிருக்கிற தேகவிருத்திகளோடு கூடினவனுகவும் நித்திரைபோகிறவனைப் போலவும் குழந்தையைப்போலத் தொழில்செய்பவனுகவும் போதிக்கப்பட்டவனுகவும் இந்தத் தொம்பதலட்சியார்த்த ஐக்கியத்தைப் பிரயத்தனத்தினுல் பாவனைபண்ணி அதனுலுண்டான விசேட ஞானப்பிரகாசனுய்ச் சிரேஷ்டப் பிரமவித்தாகவே யிருப்பன். இதுவன்றியும் அந்தர் பாகிய மிரண்டுவிடயங்களையும் ஆன்மசொரூபமாகக் கண்டு கொண்டு அன்னியனுல் கற்பிக்கப்பட்ட தேகபாவத்தையுடைத்தானவனுகியும் ஏகாத்துமானுசந்தானத்தினுல் மூடவிர்த்தியொழிந்தவனுகியு மிருப்பன். கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கென்கிறபிரிவும் தான் வேறு பிரத்தியகான்மா வேறென்கிற பாவமும், தன்னுடைய சாக்கிர சொப்பனங்களினுலுண்டான அவிவேகப்பிரிவான புத்தியுமறந்து கேவலம் சித்துரூபனுகவிருந்துகொண்டு

சஞ்சரிப்பன். தர்ம கர்ம விகர்ம மார்க்கங்களைத் தள்ளினவனும்ச் சர்வகாலமும சன்மார்க்கத்தில் சஞ்சரிக்கிறவனுய்ச் *சம்பிரஞ்ஞாத சமாதியில் அடையப்பட்டிருக்கிற பிராரத்த சேஷத்தை யுடைத் தானவனுகி மிகவுஞ் சுத்தா சொரூப மனனசிலனுய் மனோமாருதங் கள் பிரமத்தினிடத்தி லிருக்கிறபோது பிரமமேதானுகிய பிரமவித் தானவன் பிரமத்தையே யடைவன்.

வினு:—அஃதெப்படி?

விடை:—கடோபாதியினுல் வளைபட்ட கடாகாசமானது கடோபாதி நீங்குகிறபோது கடாகாசமும் மகாகாசமு மொன்ருன வாறுபோலச் சீவன்முத்தனும் பிரமத்தி லொன்றியிருப்பான். இந்தப்பிரமநிஷ்டனுனவன் முன்னமே கட்டுப்படாதவனுதலால் இப் போது முத்தனுமாகான், பந்தனுனுல்முத்தனுமாவான். இந்தபந்த முத்திகளிரண்டும் மனதினுடைய தொழிலானபடியினுல் அந்த மன தை நாசம்பண்ணினவனே பந்தமோட்சங்களை நாசம்பண்ணின வன். இந்த மனதினுடைய பிரவிர்த்தியே புருடனுக்குப் பந்தம். இந்த மனதை யான்மாவினிடத்தில லயமபண்ணுகிறதே முத்தி; ஆதலால், இந்தத் தத்துவத்தை நன்ருயறிந்தவனே முமுட்சுவானவ னுகையால் மனதைக் கெடுக்கிறதற்கெத்தனம பண்ணவேண்டும்.

வினு:—மனதென்பது யாது?

விடை:—ஒன்ருன ஆன்மசொரூபத்தை விட்டுப் பலவாகிய பிரபஞ்ச கற்பனைகளைக் கற்பித்தது மனது. இப்படிக்கொத்த மனத் தையிருத்திச்சொரூபானுபாவாக்கினியில் தகிக்கிறவனெவனே அவ னே தீரன். அவனே சூராபுருஷன். அப்பா! இந்தமனோநாசம்பண்ணு கிறதற் குபாயம் சமாதியைத் தவிர வேறேயொரு சாதனமுங் காணேம். ஆதலால், சமாதியினுல் சூட்சுமசரீரம் நாசமாய்ப்போகிற போது யோகியானவன் விமுத்தனுவான். ஆகையால், நீயும் அனுத் துமாவான தேகாதி வியாபாரங்களைவிட்டுப் பிரயத்தனம பண்ணிச் சமாதியைச்செய்து இந்தச் சமாதியினுல்மனதைக்கெடுத்துச் சீவன் முத்தனுயழியாமலிரு. பிராணிகளுக்குப் பிராரத்தகர்மத்தினுடைய

*சமாதி: சம்பிரஞ்ஞாதம் அசம்பிரஞ்ஞாத மென்றிருவகையாம். அவற் றுள் விசாதீயப்பிரத்தியயவிருத்திகளின் அந்தராயமி (மறைப்பி) ன்றிய தைலதாரைபோன்று இடையில்லாத சஜாதீயப்பிரமாகாரவிருத்திப் பிர வாகம் சம்பிரஞ்ஞாத சமாதியாம். சகல விருத்திகளின் நிரோதத்தோடு சித் தம் நிர்விகற்ப பிரமாகாரமாக நிலைத்தல் அசம்பிரஞ்ஞாத சமாதியாம்.

வியல்பு ஆபாச சுகாசுகங்களைக்கூட்டுவிக்கிறதேதவிர அதனால்அன்னியமாக வொருபலமுஞ்சித்தியாது. ஆதலால்,பிராரத்த கர்மத்துக்குச்சரீரத்தையொப்புவித்து அல்லும்பகலுஞ் சரீரசிந்தையைவிட்டு நிச்சலமாய் வெகுகாலஞ் சமாதியைச்செய்துகொண்டு ஒருவிடத்திலும் நிலைக்கடையாயிராமல் சுகமாயிரு. பிரமநிஷ்டர்களாயிருக்கிறவர்கள் ஒருவிடத்திலேயே வாசம்பண்ணல்கூடாது.

வினா:—அஃதேன்?

விடை:—ஒருவிடத்திலேயே வாசஞ்செய்தால் ராகத்துவேஷாதிகள் வந்துகூடும்; கூடினால் அவற்றாலுண்டான மோகத்தினால் அடிபட்ட மனதோடேகூடித் தத்துவ நிஷ்டையை மறந்து சம்சாரமாகிற பாழ்ங்கிணற்றில் குருடனைப்போல் விழுவன். ஆனால்,ராகத்துவேஷங்களைப் போக்கடிக்கும்படி யத்தனம் பண்ணுகிற சற்புருஷர்கள் ராகத்துவேஷங்களுண்டாகிற விடத்தில்வாசம்பண்ணல் கூடாது. ஆகையால், நன்மையாவது தீமையாவது எவ்வெவ்விடத்திருந்தால் அவற்றின் சிநேகமொட்டாதோ எவ்வெவ்விடத்தில் மனது பிரசன்னமாகுமோ அவ்வவ்விடத்தில் இருக்கவேண்டும். சீவன்முக்தனானவன் மானாபமானங்களிலும் லாபநஷ்டங்களிலும் தோத்திர நிந்தைகளிலும் பிரியாப்பிரியங்களிலும் நித்தியஞ் சமபுத்தியாயிருந்துகொண்டு சஞ்சரிப்பன்; இதுவன்றியும் ஒருவிடத்திலிருக்கப் புத்திகொள்ளாமல் எவ்வெவ்வளவு கிடைக்கின்றதோ அவ்வவ்வளவில் திருப்தியடைந்தவனாய் ஞான அயிஸ்வரியம் பொருந்தினவனாகவும் அசங்கனாகவும் சமதெரிசியாகவுமிருப்பன்; பசிதீருகிற நிமித்தம் போசனமும் சீதநிவிர்த்தியின்பொருட்டு வஸ்திரமும் வியாபாரமொழிவதனிமித்தம் மவுனமும் ராகத்துவேஷங் கெடுக்கிறதற்குச் சஞ்சாரமுஞ் செய்துகொண்டிருப்பன். அப்பா! விடயங்களை அமேத்தியம்போல் தோஷமாக விசாரிப்பதும் மோட்ச இச்சையினால் சகலதுச்சங்களை விட்டொழிகிறதும் விடய நினைப்பு வாராததும் ராகத்துவேஷங்களில்லாதபடிக் கிருக்கிறதும் மனதினுடைய நிர்மலமுமாகிய இவையெல்லாம் சம்பிரஞ்ஞாத சமாதியுள்ளவனுக்கே தவிர மற்றவர்களுக் குண்டாகமாட்டா. மனோநிர்மலத்தின்பொருட்டு ஒடுங்கின சித்தவிருத்தியோடு கூடினவனாய்ப் பகிர்முகவாசனைகளையெல்லாம் நன்றாய் விட்டொழிந்தவனாய்ச் சாந்தனாய்ச் சர்வத்தையும் பிரமமாகக்கண்டுகொண்டு மனோமயமான நாமரூபப் பிரபஞ்சந்தோற்றினாலும் கானற்சலம்போல் பொய்யென்றெண்ணிச் சொரூபநிஷ்டனாய்ச் சுகமாயிரு. அப்பா!

உள்ளடங்கிய சமாதி நிஷ்டனுடைய ஆன்மானந்தமும் விசாலம்; அவன் சஞ்சரிக்கிறதேசமும் விசாலம்; புண்ணியநதிகளும் விசாலம்; ரட்சிக்கிறதில் தேவதாகடாட்சமும் விசாலம்; சாந்தமும் விசாலம்; சொரூபானுபவமும் விசாலம். ஆனதால், சமாதியினால் ஞானமானது நன்றாய்ப்பிறக்கும். அதனால், நீ புத்திமோகமாகிற அழுக்கைக்கழுவிப்பிரமத்தைத் தவிர அன்னியமில்லாதபடி பிரமமாகவே சகலப்பிரதிபந்த சூனியனாய்ச் சுகத்திலேயிரு. தேகமென்ன, பிராணனென்ன, இந்திரியமென்ன, மனமென்ன, புத்தியென்ன, அகங்காரமென்ன இவைமுதலான திரிசியங்களையெல்லாம் ஞானக்கினியினால் தகித்து நிர்க்குணமாயும் அத்வைதமாயும் பூரணமாயுமிருக்கிற பிரமத்தினிடத்திலே லயம்பண்ணிச் சுத்தமாய் அகண்டசச்சிதானந்த சொரூபமாகவேயிருந்துகொண்டு வேறொன்றும் நினையாமல் சுகமாயிரு. சத்ரூபமாகியும் சித்ரூபமாகியுமிருக்கிற என்னிடத்தில் இந்த நாமரூபப்பிரபஞ்சம் பிராந்தியினால் விவர்த்தமாய்த் தோன்றுகின்றது. ஆதலால், என்னைக்காட்டிலும் இந்தவிவர்த்தமான பிரபஞ்சம் பரமார்த்தமா யென்னைவிட்டு வேறாகவிருத்தலின்றி என்னாலேயே வியாபிக்கப்பட்டிருக்கிறதென்று நிரவதிகமாயிருக்கிற ஆனந்தாமிர்தக்கடலில் அழுந்தினமனதுடனே கூடினவனாய்ப் பிராரத்தத்துக்குத் தேகவிருத்திகளை அல்லும் பகலும் ஒப்புவித்தவனாய் ஊமைபோல் பேசாமல் சுகமாயிரு. வாராய் சிஷனே! உனக்கும் பிரமத்திற்கும்பேதமில்லை; பிரமமே நீ; நீயே பிரமம். இப்படி பிரமமாய்ச் சத்தாயிருக்கிறவுனக்கு வொருகாலு மிருத்திய பயமில்லை. அத்வைதனாய்ப் பிரமமாயிருக்கிற வுனக்கு மிருத்திய பயம் எப்படிவரப்போகின்றது? ஆனதால், மிருத்தியுவென்கிற பயத்தையொழித்து அகம்பிரமாஸ்மி யென்று ஏகநிஷ்டையோடு கூடினவனாய் ஆனந்தாமிர்த ரசத்தைப் பானம்பண்ணிக்கொண்டு நிர்விகற்பனாய்ச் சுவஸ்சொரூபமான ஆத்மானந்தத்தில் விளையாடிக்கொண்டுசுகமாயிரு.

## அனுபவமகிழ்ச்சி.

என்றிப்படி சொன்ன குருவசனத்தைக்கேட்டுச் சிஷனானவன் அந்தக்கரணப் பிரம(மயக்க)ங்களெல்லாந்தீர்ந்தவனாய் ஆன்ம லாபம் பெற்றசந்தோஷத்தினால்பக்தியுடன்குருவுக்கு நமஸ்காரம்பண்ணிச் சொல்லுகிறான்:—ஸ்ரீகுருசுவாமி! தேவரீருடைய கடாக்ஷத்தினால் என்னுடைய அவித்தியாரூபமான இருதயக்கிரந்தியானது ஒழிந்து

போயிற்று. சகல சம்சயங்களும் சகலதடைகளும் தீர்ந்தன. தேவரீருடைய வாக்கியார்த்த உபதேசங்களினாலுண்டான ஞானமாகிற சூரியப்பிரகாசத்தினால் அஞ்ஞானாந்தகாரமொழிந்ததால் அதன் காரியமான விபரீதபாவனைகள் முதலான சித்தவிகற்பங்களெல்லாந் தீர்ந்து நிர்ச்சிந்தனானேன்; சகல கவலையு மொழிந்தவனானேன்; சகல சம்சாரபந்தங்களுந் தீர்ந்தவனானேன்; நிர்க்குணமாகியும் கேவலமாகியும் சத்தியமாகியுமிருக்கிற பரப்பிரமமே நானானேன்; உண்மையில் சாக்கிர சொப்பன சுழுத்தியிலுண்டான வேறுபாதியு மெனக்கில்லை; சம்சாரதாபமுமெனக்கில்லை; சதாகாலமும் அத்வைதமாகவும் ஆனந்தமாகவும் சத்தாகவுமிருக்கிற சொரூபமே நானானேன்.

இப்படியிருக்கிற சீவன் முத்தனான எனக்குச் சாயாரூபமாகவேனும் பிரதிபிம்பமாகவேனும் தேகாதிவுபாதிக ளிருக்கட்டும்; அந்தவுபாதிகளினாலுண்டான தொழில்களெல்லாஞ் சாட்சியாய் உபாதிவிலட்சணமான என்னைத்தொடரமாட்டா. ஆதலால், விகிதமாய்ச் செய்கிறதொழிலும் நிமித்தம்பற்றிச் செய்கிறதொழிலும் அவசியஞ்செய்தாலும் நான் செய்தவனல்ல; சொப்பனத்தில் ஒரு புருஷன் செய்ததொழில் விழித்தவுடன் எப்படிப் பொய்யாய்ப் போகுமோ அப்படியே ஞானசாக்கிரத்தில் சர்வமுமித்தையே. இந்தச்சராசரமான பிரபஞ்சம் ஆன்ம சொரூபமாயிருக்கிற என்னால் வியாபிக்கப்பட்டிருப்பதால் சர்வாவத்தைகளிலும் நான் சாட்சியாகவேயிருக்கிறேன். இந்தத் தேகமென்பது அகங்காரத்துக்கேதவிரச் சாட்சியாயிருக்கிறவெனக்கில்லை. சுகதுக்கமும் பந்தமோட்சமுமாயிருக்கிற சம்சாரமானது இந்தஅகங்காரத்துக்கென்றே யறிந்தேன். மலமாம்ச பூரிதமாயும் ஞானத்தினால் ரட்சிக்கப்படுவதாயும் நாய் நரிகளால் பட்சிக்கப்படுவதாயுமிருக்கிற சரீரத்தினிடத்தில் அத்வைதமாகியும்அகண்டமாகியுமிருக்கிற ஆனந்தபோதரூபமான நான் அகங்காரமமகாரங்களை(யானெனதென்பதை)யேன் பண்ணுவேன்?

நான் வெகுகாலமாய் இந்த அகங்காரமென்னும் பிசாசத்தினால் பிடிக்கப்பட்டுச் சுயசொரூபம் மறைபட்டிருந்தேன். இப்போதிந்த அகங்காரமான சத்துருவைத் தேடித்தேடி நன்றாயறிந்து சமாதியாகிற அக்கினியில் வாசனைகளோடுகூடத் தகித்துப் போட்டேன்.

சச்சிதானந்த சொரூபமாயிருந்து *மைத்திரிமுதலான குணங்களைப் பொருந்தியிருக்கிறவென்னை இத்தனை நாளும் அகங்காரவாசனைகள் வருஷாகாலத்தில் மேகமானது சூரியனையெப்படி மறைத்ததோ அப்படியே மறைத்தன.

இப்படி மறைத்ததே பிரத்தியகாத்மாவுக்கு உபாதி; இந்த வுபாதியாகிய வகங்காரமே அதற்கு விரோதி. இந்த அகங் காரத்தினின்று எவன் விடுபடுகிறானோ அவனே முத்தனென்றும், எவன் இவ்வகங்காரத்தினாற் கட்டுப்படுகிறானோ அவனே பந்த னென்றும் அறிந்தேன். இந்த அகங்காரபாவனையை நன்றாய் நாசம் ண்ணினாலன்றி அகண்ட சச்சிதானந்தப் பிரகாசம் பிறக்கமாட் ாது. ஆனதால், இந்த அகங்காரபாவத்தைச் சமாதிநிஷ்டையினால் சம் பண்ணுகிறேன். காமக்குரோதாதிகளாய பரிவாரங்களோடு டிய அகங்காரவடிவ சத்துருவைச் சித்ரூபமாகிற அக்கினிக்குப் ாணுகுதிகொடுத்துச் சொரூபத்தை யடைந்தேன். பிரம நிஷ்டை ர லட்சணம் சகல விருத்திகளுமொழிந்த மகாமௌனமாதலால் அந்த ௌனத்தையே யாசிரயித்து உங்கள் கடாட்சத்தினால் சுகசீவனம் ண்ணுகிறேன். ஜன்ம ஸ்திதி லயங்களைக்கெடுக்கிறதற்குக் காரண கியும் ஒருகாரணங்களும்அல்லாததாகியும் கேவல போதலட்சண கியும் ஆனந்தகனமாகியும் நிரஞ்சனமாகியுமிருக்கிற பிரமமே னேனென்று மௌனத்தையடைந்தேன். எந்தச் சொரூபத்தி த்தில் வாக்குச்செல்லாதோ மனதுசெல்லாதோ புத்தி செல் தோ அப்படிப்பட்ட சத்த பரிச ரூப ரச கந்தங்களில்லாத பிரம துவோ அதுவேநானானேன். சொரூபத்தைவிடக் காதிருந்தால் ட்பேன்; கண்ணிருந்தால் காண்பேன்; வாக்கிருந்தால் வசனிப் ன்; மனதிருந்தா லறிவேன்; இவைகளின்றி ஆனந்தமாயும் வைதமாயும் ஏகமாயும் அப்பிரமேயமாயு மிருக்கிற சொரூ ம நானானேன்; எந்தச் சொரூபம் மேலும் கீழும் தெற்கும் க்கும் மேற்கும் கிழக்குமெங்கு நிறைந்திருக்கின்றதோ அந்தப்

* முதலான என்பதனால் கருணை, முதிதை, உபேட்சை என்னும் மூன் ு கொள்க.

ற்புருஷ சிநேகமே மைத்திரி; துக்கிகளிடத்துண்டாகும் இரக்கமே ணை; புண்ணியாதிகாரிகளிடத்துண்டாகும் சந்தோஷமே முதிதை; ளிடத் திராகத்துவேஷமின்றி யிருத்தலே உபேட்சை.

பரிபூரண அகண்டசச்சிதானந்தசொரூபமே நானானேன். நான்வாக்கினால் வசனிக்கப்படாத பிரமமானதால் வாக்குடைய பிரவிர்த்தியெனக்கெப்படி யுண்டாகப்போகின்றது? நான் மனதினால் அறியப்படாதபிரமமானதால் புத்திவிருத்திகள் பிரவிர்த்திக்கிறதற்கு மிடமில்லை. ஆதலால், சர்வகாலமும் அத்வைதப் பிரமமாயிருந்துகொண்டு மௌனத்துடனேகூடிச் சொரூபானுபவ சித்தியடைந்திருக்கிறேனென்றிப்படி விண்ணப்பஞ்செய்து சற்குருவை அடிக்கடி நமஸ்காரம்பண்ணி வணங்குகிற சிஷனைப்பார்த்துச் சற்குருவானவர் திருவுளங்கனிந்து சந்தோஷித்தவராய் அடிக்கடி கருணைகண்ணால் வீட்சித்து இவன் நன்றாயறிந்து பக்குவப்பட்டானென்றுதாமும் பகிர்முகமான விருத்தியையொழித்து அந்தர்முகப்பட்டு சச்சிதானந்தப் பிரமமாயிருந்து விளங்கினார்.

குருசீஷ சம்வாத தாற்பரியமாய இவ்வேதாந்தசாரம் மோக்ஷவிருப்புள்ள சற்புருஷர்களினிமித்தம் சொல்லப்பட்டது.

ஆதலால், (இந்நூல் விக்கினமின்றி நிறைவேறுதற்குக் காரணபூதராயிருந்த) அத்வைதானந்த குருசுவாமிகளைக் குறித்தும் அவர்களுடைய ஆசாரியராகிய சதானந்த குருசுவாமிகளைக்குறித்தும் அவர்களுடைய ஆசாரியராகிய சங்கரானந்த குருசுவாமிகளைக் குறித்தும் அடிக்கடி நமஸ்காரம்பண்ணுகிறேன்.

முற்றிற்று.

குருவேதுணை.